வெளியீடு 26-6-2002 Issued 26-6-2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

சனிக்கிழமை, ஆகஸ்ட் 25, 2001 – தொகுதி 6 – எண் 2

**Saturday the 25th August, 2001 – Volume 6 – No. 2**

ப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

e Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

[Price Rs. 3.00

27/2003

**25–08–2001**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்–விடைகள்–** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 173 - 189 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (முதல் பட்டியல்) | 189 - 212 |
| **2. தகவல் கோரல்–** | |
| உறுப்பினரின் முன்னறிவிப்பு | 213 |
| **3. சிறப்புக் கவன ஈர்ப்பு–** | |
| சென்னையில் நிலவும் குடிநீர்த் தட்டுப்பாடு | 213 - 219 |
| * திரு. துரைமுருகன் | 213 -214, 215 |
| திரு. சி. ஞானசேகரன் | 214, 215, 216 - 217 |
| திரு. ஐ. கணேசன் | 217 |
| * திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் | 218 |
| * மாண்புமிகு திரு. சி. துரைராஜ் | 218 - 219 |
| **4. கவன ஈர்ப்பு–** | |
| கடலூர் சிப்காட் தொழிற்பேட்டை தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுகளால் நிலத்தடி நீர் விஷத்தன்மையாகி நோய்கள் ஏற்படுதல் மற்றும் கடலில் கலப்பதால் மீன்கள் இறத்தல் | 220 - 226 |

| | பக்கங்கள் |
|---|---|
| **திருத்திய வரவு செலவுத் திட்டம், 2001–2002,** **பொது விவாதம்**–தொடர்ச்சி | 226-320, 321-385 |
| திரு. ஜி.கே. மணி | 228-254, 255-256 |
| * திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் | 255, 256-258, 260-266, 267-288, 371-372, 373 |
| * பேராசிரியர் க. அன்பழகன் | 266-267, 268, 289-301, 303-320, 344-345, 362, 370, 371, 372-373, 381-382, |
| மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 236, 254, 297, 312-313, 314, 316-317, 321-362, 364-385 |
| **6. அறிவிப்பு–** | |
| சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கல் | 321 |
| **7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 386 |

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
223949.
சென்னை-600 008
நூலகம்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆவணி 9, விசு – திருவள்ளுவர் ஆண்டு 2032

## 2001 ஆகஸ்ட் 25, சனிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்"

என் குடியை உயரச் செய்வேன் என்று முயலும் ஒருவருக்கு ஊழ், ஆடையை இறுகக் கட்டிக்கொண்டு தானே முன்வந்து துணை செய்யும்.

### 1. வினாக்கள்–விடைகள்

#### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா எண் 11, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு மின் துறை அமைச்சர்.

11–

**மின் கம்பங்கள்**

***1044–திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

கோயம்புத்தூர் மாநகராட்சியில் 18–வது வார்டில் உள்ள அண்ணா நகர் – ஜவஹர் நகர் பகுதியில் பழுதடைந்துள்ள தெருவிளக்கு மின் கம்பங்களை மாற்றி புதிய கம்பங்கள் அமைத்து அரசு முன்வருமா?

[2001 ஆகஸ்ட் 25

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மின் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது கோயம்புத்தூர் மாநகராட்சியில் 18-வது வார்டில் உள்ள அண்ணா நகர்-ஜவஹர் நகர் பகுதியில் பழுதடைந்துள்ள தெருவிளக்கு மின் கம்பங்களை மாற்றி புதிய மின் கம்பங்கள் அமைக்கும் பணி இன்று முதல் தொடங்கப்படும்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 18-வது Division-ல் உள்ள அண்ணா நகர் – ஜவஹர் நகர் பகுதியில் இருக்கும் பழுதடைந்த மின் கம்பங்களைப் பற்றி 4-12-2000 அன்று நான் தலைமைப் பொறியாளர் கவனத்திற்குக் கொண்டு வந்து அவர்கள் உடனே மதிப்பீடு தயார் செய்து அனுப்பியும்கூட இந்தப் பணி நடைபெறுவதற்கு ஏறத்தாழ 8 மாதம் ஆகியிருக்கிறது என்பதை நான் மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இதற்கு என்ன காரணம் என்று சொன்னால், இந்தப் பணி செய்வதற்கு முதலிலே மாநகராட்சி மறுத்துவிட்டது. மாநகராட்சி நாங்கள் இதற்குப் பணம் செலவழிக்க முடியாது என்று சொல்லிவிட்டது. அதற்குப் பின்பு சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலேயிருந்து 19 ஆயிரம் ரூபாய் அதற்கு ஒதுக்கியும்கூட, அந்தப் பணி உடனடியாகத் தொடங்கப்படவில்லை. காலம் தாழ்த்திய காரணத்தினாலே அதை மறுமதிப்பீடு செய்து 20 ஆயிரம் ரூபாய் என்று முதன்மைப் பொறியாளர் தெரிவித்தார். அப்படித் தெரிவித்த பின்னாலும், 20 ஆயிரம் ரூபாய் கொடுத்துவிடலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கடிதம் எழுதி, ஏறத்தாழ நான்கு மாத காலம் ஆகியும்கூட அந்தப் பணி உடனடியாகத் தொடங்கப்படவில்லை. ஆனால், அமைச்சர் அவெர்கள் இன்று தொடங்குவதாக அறிவித்திருப்பதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 4-12-2000 அன்றைக்கே நான் இதைத் தெரிவித்தேன், நடவடிக்கை எதுவும் இல்லையென்று சொன்னார்கள். 4-12-2000 அன்று யாருடைய ஆட்சி இருந்தது என்று உங்களுக்குத் தெரியும். இதுவும் ஒரு உதாரணம் அந்த ஆட்சி எந்த அளவிற்கு மெத்தனமாக இருந்தது என்பதற்கு. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, எங்களைப் பொறுத்தவரை, அதாவது பேரூராட்சி, ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி இந்தப் பகுதிகளுக்குட்பட்ட மின் கம்பங்களை



2001 ஆகஸ்ட் 25]

மாற்றி அமைக்க வேண்டுமென்றால், அந்த மின் கம்பங்கள் மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்பதற்குரிய கருத்துரு மின்சார வாரியத்தால் பெறப்பட்டு, அந்தப் பணம் மின்சார வாரியத்திற்கு செலுத்தப்பட்டு, deposit work-ஆக எடுக்கின்ற பட்சத்தில் அது செய்யப்படும். எனவே, 20 ஆயிரம் ரூபாய் நம்முடைய எம்.எல்.ஏ நிதியிலிருந்து எங்களுக்கு வராததால் இந்தப் பணி தாமதமாகியது. எனவே, இப்போது இந்தப் பணி தொடங்கப்படும்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதிக்கு liaison agency-ஆக மாநகராட்சியை நியமித்திருக்கின்ற காரணத்தினாலே நேரடியாக மின்சார வாரியம் சட்டமன்ற உறுப்பினரிடமிருந்து பணத்தைப் பெற முடியவில்லை. எது செய்தாலும் மாவட்ட ஆட்சித் தலைவருக்குச் சொல்லி, மாவட்ட ஆட்சித் தலைவர் மாநகராட்சிக்குச் சொல்லி, மாநகராட்சிதான் அவர்களுக்கு காசோலை அனுப்ப வேண்டியிருக்கிறதேயொழிய, நேரடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் மின்சார வாரியத்திற்கு காசோலை அனுப்ப முடியாத ஒரு சூழ்நிலை இருந்த காரணத்தினாலே இது இவ்வளவு காலதாமதம் ஆகியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, நேரடியாக காசோலை அனுப்புவதற்கு இனிமேலாவது வகை செய்யப்படும் என்று சொன்னால், இதுபோன்ற காலதாமதத்தைத் தவிர்க்க முடியும் என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலதாமதம் ஏன் ஆகிறது என்ற கருத்தைச் சொல்லும்போது, அதிலே கோயம்புத்தூர் மாநகராட்சி ஒரு Nodal Agency ஆக இருக்கின்ற காரணத்தினால் பணம் மின்சார வாரியம் பெறுவதிலே சிரமம் இருப்பதாகச் சொன்னார்கள். எனவே, எதிர்காலத்திலே இதுபோன்ற சிக்கல்கள் இருக்காத வண்ணம் அரசு அவருடைய கருத்தை ஆராயும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 12, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

12–

## குடிநீர் குழாய்

***1456– திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

*(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, வடக்கு பொன்னிரை கிராமத்திற்கு குடிநீர் குழாய் அமைத்து குடிநீர் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தில், திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட ஆலத்தம்பாடி ஊராட்சிக்கு உட்பட்ட வடக்கு பொன்னிரை என்ற சிறு உட்பகுதி வல்லம் தெற்கு குடியிருப்பின் ஒரு பகுதியாகும். வல்லம் தெற்கு குடியிருப்பின் தற்போதைய மக்கள் தொகை 588. அந்தப் பகுதியில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளது. இக்குடிநீர்த் தொட்டியிலிருந்து குழாய்கள் மூலம் தினமும் நபர் ஒன்றுக்கு 55 லிட்டர் வீதம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்திலுள்ள 5 பொதுக்குழாய் மேடைகளில், இரண்டு பொதுக்குழாய் மேடைகள் வடக்கு பொன்னிரையில் உள்ளன. இத்திட்டம் முடிக்கப்பட்டு 2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலே ஊராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்ற தகவலை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 55 லிட்டர் வீதம் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய 500–க்கும் மேற்பட்ட மக்களுக்கு குடிநீர் வழங்கப்படுவதாகவும், மேல்நிலைத் தொட்டியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுவதாகவும் இந்த நேரத்தில் அறிவித்துள்ளார்கள். மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி என்பது பாதுகாக்கப்பட்ட தண்ணீர்த் தொட்டி, 2000–த்திலே கட்டப்பட்டிருந்தது. அநேகமாக அந்தக் கேள்வி கேட்டதற்குப்



பின்னால் வேண்டுமானால் supply செய்திருக்கலாம். இதுவரையில் கிடைக்காத காரணத்தால் அந்தக் கேள்வியை நான் முதலிலே கேட்டேன். ஆகையால் நடைமுறையில் இருந்தால் நன்றி. அந்த வகையில் ஏற்கெனவே கேள்வி கேட்டதற்கு முன்பாக அந்தப் பகுதி மக்கள் தண்ணீர் இல்லாமல் மிகவும் சிரமப்பட்ட காரணத்தினால்தான் அந்தக் கேள்வியைப் கேட்டேன். அமைச்சர் பதில் சொல்லியிருக்கிறார்கள். நான் பார்த்து, அடுத்தமுறை அதைப் பற்றிச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 13, டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

13–

## பதவி உயர்வு

***989 – டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

*(அ) கிராம நிர்வாக அலுவலர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கிராம நிர்வாக அலுவலர்கள் பதவி உயர்வு பெறும் பொருட்டு அவர்கள் இளநிலை உதவியாளர்களாக பணி மாறுதல் பெற வழிவகையுள்ளது. கிராம நிர்வாக அலுவலர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பளிக்கும் பொருட்டு, கிராம நிர்வாக அலுவலர் நிலையில் ஐந்து ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு அந்தந்த மாவட்டங்களில் ஆண்டுதோறும் எழக்கூடிய இளநிலை உதவியாளர் பணியிடங்களில் 20 விழுக்காட்டினை அவர்களின் பணி முதுநிலை அடிப்படையில் இளநிலை உதவியாளர்களாக பணி மாறுதல் மூலம் பதவி உயர்வு அளிக்க 1985 ஆம் வருடத்திலேயே உரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். அதற்கு மேல் அவர்களுக்கு பதவி உயர்வு அளிக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இதுவரை பதவி உயர்வு அளிக்கப்பட்டு 399 கிராம நிர்வாக அலுவலர்கள் இளநிலை உதவியாளர்களாகப் பணிமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 68 நபர்கள் உதவியாளர் களாகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர் என்பதை மன்றத்திற்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம நிர்வாக அலுவலர்கள் எதிர்பார்த்த அளவுக்கு அவர்கள் பதவி உயர்வு பெறாவிட்டாலும்கூட, இட மாற்றம் அவர்களுக்கு இப்போது கிடைத்தால் போதும் என்கிற எண்ணத்திற்கு அவர்கள் வந்து, எற்கெனவே முறையிட்டு, நான்கூட கவர்னர் உரையிலே இந்த மாமன்றத்திலே கோரிக்கை வைத்தேன். இதற்கு முன்னால் இருந்த அரசு, சென்ற ஆண்டு இவர்களுக்குப் பணி மாற்றம் செய்தால் T.A. கொடுக்க வேண்டும் என்கிறதொரு நிலை இருக்கிற காரணத்தினால், இனிமேல் இவர்களுக்கு transfer–ஏ கூடாது என்ற ban order–ஐ போட்டிருக்கிறார்கள். Ban order–ஐ உடனடியாக lift செய்ய வேண்டுமென்று இந்த மாமன்றத்திலே நான் கோரிக்கை வைத்தேன். அது மாண்புமிகு முதல்வர் அவர்களால் பரிசீலிக்கப்பட்டு, சென்ற 21–ஆம் தேதி அந்த ban order lift செய்யப்பட்டதாகவும், 23–ஆம் தேதி ஆணை வழங்கப்பட்டு, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டதாகவும் சொல் கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலே இந்த ban order–ஐ lift செய்திருந்தால்கூட 'A' மற்றும் 'B' என்று நாங்கள் எல்லாம் தரம் பிரித்துப் பார்ப்பதற்கே எங்களுக்கு, ஒரு மாத காலத்திற்கு மேலாகும். ஆகவே, இப்போது இதை எடுத்துக்கொண்டால் நிறைய நாட்கள் ஆகும். அந்த 15–9–2001–க்குள்ளே transfer order–களை எல்லாம் போட்டு முடிக்கவேண்டும். 15–9–2001–க்குள் இந்த V.A.O.–க்களுக்கு நிச்சயமாக எங்களாலே transfer order போட்டுத் தரமுடியாது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களிலே இருக்கக்கூடியவர்கள் சொல்கின்ற காரணத்தாலே, இப்போது V.A.O–க்கள் எல்லோருமே பெரும் ஏமாற்றத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆகவே, நான் மாண்புமிகு





பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புவது எல்லாம் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்தத் துறைக்குச் சொல்லி, அவர்கள் போட்டிருக்கக்கூடிய அந்த G.O.–க்கு உடனடியாகச் செயல்வடிவம் கொடுத்து, V.A.O.–க்கள் உடனடியாக மாற்றப்படுவதற்கு ஆவன செய் வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–10

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் அந்தப் பணியை எவ்வளவு விரைவாகச் செயல்படுத்த முடியுமோ அவ்வளவு விரைவாகச் செயல்படுத்துவதற்கு அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்களிடம் வலியுறுத்தப்படும் என்பதனை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம நிர்வாக அலுவலர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் கல்வித் தகுதி அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டவர்கள். பட்டதாரிகள், முதுகலைப் பட்டதாரிகள் எல்லாம் நியமனம் செய்யப்பட்டு, 5 ஆண்டு, 10 ஆண்டுகாலம் பணியாற்றி வருகின்றார்கள். இந்தச் சூழ்நிலையிலே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வினாவிற்கான பதிலுரையில் 5 ஆண்டுகள் முடித்தவர்களுக்குப் பணிமாறுதல் வழங்கப் படுகிறது, அதுவும் இளநிலை உதவியாளராகப் பணிமாறுதல் வழங்கப்படுகிறது என்ற கருத்தை இங்கே சொன்னார்கள். 68 பேருக்கு உதவியாளராகப் பணி உயர்வும் வழங்கப்பட்டதாக இங்கே சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே 5 ஆண்டு பணி முடித்தவர்களுக்குக் கட்டாயமாக மாறுதல் என்ற அடிப்படையிலே பணி உயர்வு வழங்கப்படுகிறதா அல்லது விரும்பிக் கேட்டால்தான் வழங்கப் படுகிறதா? அவர்கள் தகுதியின் அடிப்படையிலே, Seniority அடிப்படையிலே உதவியாளர்கள் பணிக்கு மேலேயும் பதவி உயர்வு பெறுவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்கள் விரும்பி இளநிலை உதவியாளர் பணியை ஏற்றுக்கொள்கிறார்களா இல்லையென்றால்

[2001 ஆகஸ்ட் 25

கட்டாயமாக இளநிலை உதவியாளராகப் பணியமர்த்தப்படுகிறார்களா என்ற வினாவினை எழுப்பினார்கள். அவர்கள் விருப்பத்திற்குத் தகுந்தாற்போல் பதவி உயர்வு அளிக்கப்படுகின்றது என்பதையும் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு கிராம நிர்வாக அதிகாரிகளுடைய பணியிலே பதவி உயர்வு சம்பந்தமாக 20 விழுக்காடு ஒவ்வொரு ஆண்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்கிற நிலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கிராம நிர்வாக அதிகாரிகளினுடைய நிலையிலே, பழைய காலத்திலேயிருந்த வாரிசு அடிப்படையிலே இடம் பெற்ற V.A.O-க்களும் இருக்கிறார்கள்; கல்வித் தகுதி அடிப்டையிலே அவர்களுக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது, புதியதாகவும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பழைய கிராம நிர்வாக அதிகாரிகளுக்கு ஏதாவது முன்னுரிமை கொடுத்து, அவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்கப்படுகிறதா? ஏனென்றால் அவர்கள் எல்லாம் ஏறக்குறைய வயதானவர்களாக இருப்பார்கள். அவர்களுக்கு ஏதும் முன்னுரிமை கொடுத்து பதவி உயர்வு அளிக்கப்படுகிறதா? அப்படியில்லையென்றால் இனிமேலாவது அப்படிப்பட்டவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களுக்குப் பதவி உயர்வு அளிப்பதற்கு அரசு முன் வருமா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு முன்னாள் கிராம அலுவலர்கள் பதவி ஒழிப்புச் சட்டம் 3-ன்படி பகுதிநேர கிராம நிர்வாக அலுவலர்களாக இருந்த பணியிடங்களை நீக்கிய பின்னர், கிராம நிர்வாக அலுவலர்கள் பணியிடம் ஏற்படுத்தப்பட்டது. அது தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணைக் குழுவின் வரம்பிற்குள் கொண்டு வரப்பட்டது. அந்த நேரத்திலே தகுதி இருக்கின்ற அத்தனை பேர்களும் கிராம நிர்வாக அலுவலர்களாக நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் 5 ஆண்டுகாலம் பணியாற்றிய பின்னர் இளநிலை உதவியாளராக ஆவதற்கு உண்டான வாய்ப்பு இதில் இருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திற்கு தெரியப்படுத்திக்கொள்கிறேன்.



2001 ஆகஸ்ட் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கிராம நிர்வாக அலுவலர்களின் பதவி உயர்வு பற்றி பேசுகின்றபோது ஆண்டிற்கு 20 விழுக்காடு பதவி உயர்வு கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். ஆண்டிற்கு 20 விழுக்காடு பதவி உயர்வை இதுவரை அவர்கள் முறையாகப் பெற்றிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் அந்தந்த மாவட்டங்களில் இருக்கக்கூடிய இளநிலை உதவியாளர்களில் ஏற்படக்கூடிய காலி பணியிடங்களில் 20 சதவிகிதத்திற்குத்தான் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு நாம் பதவி உயர்வு அளிக்கின்றோம். அந்த வகையில் அந்தந்த மாவட்டங்களில் இளநிலை உதவியாளர்களாகப் பதவி உயர்வு பெறுவதற்கு அந்தந்த மாவட்டங்களிலுள்ள தகுதியுள்ள கிராம நிர்வாக அலுவலர்களுக்குப் பதவி உயர்வு அளிக்கப்பட்டு வந்திருக்கின்றன என்பதனை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம நிர்வாக அலுவலர்களுக்குப் பதவி உயர்வு மற்றும் இடமாறுதல் சம்பந்தமான வினாக்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளித்து வருகிறார்கள். அதை ஏற்றுக்கொள்கிறோம். ஜனங்களுடன் நேரடியாகத் தொடர்புடைய கீழ்நிலை ஊழியர்களான இவர்கள் மீது மக்களுக்கு அவ்வளவு திருப்தி இல்லை. கடுமையான நெருக்கடியை எல்லா சந்தர்ப்பங்களிலும் இவர்கள் தருகிறார்கள். சாதாரணமாக சான்றிதழ்கள் பெறுவதற்குச் சாதாரணப்பட்ட ஜனங்கள் அல்லல்படுகிறார்கள். பணம் வசூலிக்கிறார்கள் என்கிற புகார்களெல்லாம் இருக்கின்றன. ஆகவே, இந்த கிராம நிர்வாக அலுவலர்கள் செயல்பட வேண்டிய வரைமுறையைச் செய்து, வழிகாட்டும் நெறிமுறையை இந்த அரசு அறிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கென்று சில வழிமுறைகளும் நெறிபாடுகளும் இருக்கின்றன. அவையும் நம்முடைய கிராம நிர்வாக அலுவலர்களுக்குப் பொருந்தும் என்பதனை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். கிராம நிர்வாக அலுவலர்கள் என்று பொதுவாகச் சொல்லாமல் குறிப்பிடும்படியான ஏதாவது ஒருவர் மீது அவர்கள் குற்றச்சாட்டுக்களை ஆதாரத்துடன் சொல்வார்களேயானால் அதற்கு இலாகாபூர்வமான நடவடிக்கைகளை உறுதியாக எடுப்போம் என்பதனை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம நிர்வாக அலுவலர்கள் வாக்காளர் பட்டியலிலும் சரியாகச் செயல்படவில்லை; வேட்டி சேலை தருவதிலும் அவர்களுடைய புள்ளி விவரங்கள் சரியாக இல்லை என்கிற பல குறைபாடுகள் இருக்கின்ற காரணத்தால், எப்படி போலீஸ் அதிகாரிகளுக்கு நல்லொழுக்கப் பயிற்சி அளிக்கிறீர்களோ அதுபோல இந்த V.A.O.-க்களுக்கும் நல்லொழுக்கப் பயிற்சி தர அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்லொழுக்கப் பயிற்சி என்பது அவரவர்கள் மனச்சாட்சிப்படி ஏற்படும் ஒன்று. அது முந்தைய ஆட்சிக்காலத்தில் வேண்டுமானால் இல்லாமல் இருந்திருக்கலாம். இப்போதைய ஆட்சியில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி டாக்டர் அம்மா அவர்களுடைய ஆட்சியில் அவர்களின் நல்லொழுக்கத்தையும் அதன்மீது அரசு ஊழியர்கள் எடுக்கின்ற நடவடிக்கைகளையும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். அதுபோன்ற தவறுகள் நடக்காத வண்ணம் நாங்கள் பார்த்துக்கொள்வோம் என்பதனை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம நிர்வாக அலுவலர்கள் பரம்பரையாக சமுதாயத்தை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்த அந்த நிலையை மாற்றி மாண்புமிகு முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் அதைச் செய்து முடித்தார்கள். இது ஒரு



புரட்சி என்றுதான் சொல்லவேண்டும். ஆனால், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் 20 சதவிகிதம் கிராம நிர்வாக அலுவலர்களை இளநிலை உதவியாளர்களாக மாற்றுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இதுவரை எனக்குக் கிடைத்த தகவலின்படி அந்த நிலை ஏற்படவில்லை என்றுதான் நான் நினைக்கின்றேன். அப்படி நியமனம் செய்யப்பட்டிருந்தால் கடந்த 15 ஆண்டுகளில் இதுவரை கிராம நிர்வாக அலுவலர்களாக இருந்தவர்களில் எவ்வளவு பேர்கள் இளநிலை உதவியாளர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரத்தை அறிவிக்க இயலுமா என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1985 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை, நான் ஏற்கெனவே இந்த அவைக்குத் தெரிவித்துள்ளபடி, இதுவரை 399 கிராம நிர்வாக அலுவலர்கள் இளநிலை உதவியாளர்களாகப் பணிமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. போளூர் வரதன்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம நிர்வாக அதிகாரிகள் பதவி உயர்வு பற்றிச் சொல்கின்றபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்ட வாரியாக ஏற்படுகின்ற காலியிடங்களில் 20 விழுக்காடுகள் அவர்களுக்கென்று நிரப்பப்படுகிறது என்று சொன்னார்கள். அது மாவட்ட வருவாய்த் துறையில் ஏற்படுகின்ற காலியிடமா? அல்லது மாவட்ட வாரியாக இருக்கின்ற எல்லா துறைகளிலும் ஏற்படுகின்ற காலியிடங்களை நிரப்புகிறீர்களா? அத்துடன் 20 விழுக்காடுகள் முறை பின்பற்றப் படுகிறபோது Reservation முறை பின்பற்றப்படுகிறதா? அப்படி என்று வருகின்றபோது, அந்த விழுக்காடுகள் சாதி வாரியாக எத்தனை பின்பற்றப்படுகிறது என்று சொன்னால், சோர்வு மனப்பான்மை, சதவிகிதம் பின்பற்றப்படுகிறது. வருகின்றபோது, இந்த படித்தவர்களுக்கு வேலை இல்லை என்று எல்லாம் வருகிறார்கள். V.A.O. வேலைக்கு B.A., M.A., படித்தவர்கள் அவர்களுக்கு பதவி உயர்வு 10, 15 ஆண்டு காலமாகியும் வருகின்றவர்கள், S.S.L.C. கிடைப்பதில்லை. Rank promotee என்று வருகிறார்கள். B.A., M.A., படித்தவர்களே D.R.O.-வாக வந்துவிடுகிறார்கள். படித்தவர்கள் ...

[2001 ஆகஸ்ட் 25

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதன், இரண்டு கேள்வி கேட்டிருக்கிறீர்கள், அத்துடன் முடியுங்கள். அவர் அதற்குப் பதில் சொன்னாலே போதும்.

**திரு. போளூர் வரதன்:** மனச் சோர்வின் காரணமாகத்தான் உறுப்பினர்கள் சொன்னது போன்று குறைகள் ஏற்படுகின்றன. அவற்றை நீக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வேலை வாய்ப்பிற்கும் ஒவ்வொரு அடிப்படைக் கல்வித் தகுதி என்றிருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், நடத்துநர் பணிக்கு ப்ளஸ்-2 தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆனால், அந்த வேலைக்கு B.A., M.A., படித்தவர்கள்கூட அவர்களாக முன்வந்து அந்தப் பணியினை ஏற்றுக்கொள்கின்றார்கள். வேலைக்குச் சேர்ந்தவுடன் நானும் முதுகலையில் பட்டம் படித்திருக்கின்றேன். அங்கேயிருக்கின்ற உயர் அதிகாரிகளும் அதே அளவிற்கு பட்டம் படித்திருக்கின்றார்கள். எனக்கும் அந்த வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று கூறுவதில் எந்தவித நியாயமும் இல்லை என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். அடுத்தபடியாக, மாவட்டங்களில் வருவாய்த் துறையில் ஆண்டுதோறும் ஏற்படக்கூடிய மொத்த பணியிடங்களில் 20 விழுக்காடுகள் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு என்று ஒதுக்கப்பட்டு, அவர்கள் இளநிலை உதவியாளராக பணிமாற்றம் செய்யப் படுகிறார்கள் என்பதை மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.கு. தமிழரசன்.

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவராகவும், மாவட்ட காவல் துறை அலுவலராகவும்கூட ஒரு தலித் வரமுடியும். ஆனால், கிராமங்களிலே மணியக்காரராக வர முடியாது என்ற நிலையை மாற்றி ஒரு புரட்சிகர நோக்கோடு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அந்த கிராம நிர்வாக அலுவலர்களை உருவாக்கினார்கள். அவர் பணி நியமனம் செய்த காலத்தில் மட்டுமே தலித்துகளுக்கு இடஒதுக்கீடு வழங்கப்பட்டது.



2001 ஆகஸ்ட் 25]

அதற்குப் பிறகு ஏறக்குறைய 3,000 V.A.O-க்களை இப்போது புதிது புதிதாக அவ்வப்போது காலியிடங்களில் போட்டிருக்கிறார்கள். ஆனால், அதிலே தலித்துகளுக்கு வரவேண்டிய 19 சதவிகிதம் இட ஒதுக்கீடு பின்பற்றப்படவே இல்லை. இப்போதாவது அது பின்பற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு முன்னாள் கிராம அலுவலர்கள் பதவி ஒழிப்புச் சட்டம் 3-ன்படி பகுதி நேர கிராம அலுவலர்கள் பணியிடங்களை நீக்கி கிராம நிர்வாக பணியிடம் ஏற்படுத்தப்பட்டு, அது தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணைக் குழுவின் வரம்பில் கொண்டுவரப்பட்டுள்ளது. அதில் இருக்கின்ற சட்டங்கள் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பொருந்தும் என்பதையும் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 14, திரு. ப. பொன்னம்பலம், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**14-**

### கால்நடை மருத்துவமனை

***2712- திரு. ப. பொன்னம்பலம்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) மதுரை மேற்கு ஒன்றியம், கருவனூர் பஞ்சாயத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை மேற்கு ஒன்றியம், கருவனூர் பஞ்சாயத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்ற கேள்விக்கு தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2001 ஆகஸ்ட் 25

முற்பகல் 10–25

**திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருவனூர் பஞ்சாயத்தில் சுமார் 1,000 கால்நடைகள் உள்ளன. பக்கத்து கிராமங்கள் அடுத்தடுத்து உள்ளன. ஆகவே, எங்கள் ஊரிலிருந்து மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமென்றால் சுமார் 7 கிலோ மீட்டர் தூரம் சென்று வரவேண்டும். சத்திரப்பட்டி கிராம கால்நடை மருத்துவ மனைக்குச் செல்ல வேண்டுமென்றால் 8 கிலோ மீட்டர் தொலைவு செல்லவேண்டும். ஆகவே, விவசாயிகளுடைய நலனைக் கருதி, கால்நடை வளர்ப்போருடைய நலனைக் கருதி, எங்கள் ஊரிலே ஒரு கால்நடை மருத்துவமனை அமைத்துத் தரவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு கால்நடை மருந்தகத்திற்கும் புதிதாக கால்நடை மருந்தகம் தொடங்கக் கோரும் கிராமத்திற்கும் இடையில் சுமார் 8 கிலோ மீட்டர் இடைவெளி இருத்தல் வேண்டும். கருவனூர் கிராமம் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் ஒரு கால்நடை மருத்துவமனையும் 2 கால்நடை மருந்தகங்களும் மற்றும் 9 கிளை நிலையங்களும் உள்ளன. 5 அல்லது 6 கிலோ மீட்டர் தூரத்தில் இந்தக் கால்நடை நிலையங்கள் அமைந்திருப்பதாலும், கருவனூர் கிராமத்தில் உள்ள கால்நடைகளுக்கு அந்தக் கால்நடை நிலையங்கள் மூலமாகவும், சத்திரப்பட்டி கால்நடை மருந்தகம் மூலமாகவும் சிகிச்சை அளிக்கக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாலும், கருவனூர் மற்றும் இதனைச் சுற்றி சுமார் 5,000–க்கும் குறைவான கால்நடைகள் இருப்பதாலும், மதுரை மேற்கு ஒன்றியம், கருவனூர் கிராமத்தில் புதிய கால்நடை நிலையம் தொடங்குவதற்குரிய சாத்தியக்கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் பார்வதிபுரம் பகுதியிலே ஏற்கெனவே இயங்கிவந்த... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின், உறுப்பினர் சமயநல்லூர் தொகுதியில் கேட்டிருக்கிறார். உங்கள் ஊருக்கும்



2001 ஆகஸ்ட் 25]

வேண்டுமென்று கேட்டீர்களென்றால் தனிக் கேள்வி போட்டால்தான் அவரால் பதில் சொல்லமுடியும். திரு. ஆஸ்டின், உட்காருங்கள். திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை சம்பந்தமான கேள்விக்கு அமைச்சர் பதில் சொன்னார். 2001–2002, நடப்பு ஆண்டிலே மாநிலத்திலே எத்தனை கால்நடை மருத்துவமனைகள் அமைப்பதற்கு அரசு திட்டம் போட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா? எந்தெந்த மாவட்டங்களில் அவை அமைக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கையின்போது அதுபற்றிக் கூறுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 15, திரு. ஜி.கே. மணி. மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்.

**15–**

### கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கட்டடம்

***1255 – திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கட்டடம் இல்லாத பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சொந்தக் கட்டடம் விரைவில் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கட்டடம் இல்லாத பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சொந்தக் கட்டடம் விரைவில் கட்ட அரசு ஆவன செய்யுமா என்று கேட்டுள்ளார்கள். அரசு ஆவன செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறுசுவை உணவு என்று சொல்லக்கூடிய பால் என்பது குழந்தைகள் முதல் முதியவர்கள் வரையிலே குடிக்கக்கூடிய ஒன்று. இப்படி எல்லோருக்கும் பாலைக் கொடுக்கக்கூடிய பால் உற்பத்தியாளர்கள் இன்றைய சூழ்நிலையிலே பால் கொள்முதல் விலை மிகவும் குறைக்கப்பட்டு, பால் பட்டுவாடா ஆகாத நிலையிலே மிகவும் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். புதிதாக பொறுப்பேற்றுள்ள அரசு, பால் உற்பத்தியாளர்கள் வயிற்றிலே பால் வார்க்குமா என்ற கேள்வியை எழுப்பிக் கொண்டு இருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையிலே கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய பால் உற்பத்தியாளர்கள் ஏதோ சின்ன கூரை வீடுகளிலே அல்லது கொட்டகைகளிலே சங்கங்களைப் புதிதாகத் தொடங்கி அதிலே நடத்தி வருகிறார்கள். இன்னும் கிராமங்களில் பார்த்தால், இந்தத் தெருவிலிருந்து மற்ற தெருவிற்குச் செல்வது கடினம். அங்கே வைத்துக் கொண்டிருந்தால் அவர்கள் வீட்டிலே பால் ஊற்ற மாட்டோம் என்ற கோரிக்கைகள், உள்ளூர் பிணக்குகள் எல்லாம் அங்கே இருக்கிற காரணத்தினாலே, ஒரு நிரந்தரக் கட்டடம், பாதுகாப்பான கட்டடம் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்களுடைய தொகுதியிலே, மிகுந்த பின் தங்கிய, வறண்ட, மலை, காடுகள் நிறைந்த பகுதியான பெண்ணாகரம் தொகுதியிலே உள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு நிரந்தரக் கட்டடம் இல்லாத அந்தப் பகுதிக்கு முன்னுரிமை கொடுத்து நிரந்தரக் கட்டடம் இல்லாத சங்கங்களுக்கு உடனடியாக கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் மாநிலத்தில் 10,041 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் 1,196 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. 8,845 சங்கங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு சங்கத்தின் நிகர இலாபத்திலிருந்து தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க சட்டப் பிரிவு 72 மற்றும் சங்கத்தின் துணை விதிகளின்படி 10 சதவீதம் கட்டட நிதியாக ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அடிமனை மற்றும் கட்டடம் கட்ட பிரேரணை அனுப்பியவுடன் மேற்படி பிரேரணைகள் பரிசீலனை செய்யப்பட்டு, அடிமனை, கட்டடம் கட்ட கட்டட நிதியைப் பயன்படுத்தி தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதி எண் 78-ன்படி அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கட்டடம் கட்டுவதற்கு ரூ.1.5 இலட்சம் மானிய அடிப்படையில் அரசினால் உதவி வழங்கப்படுகிறது. இதுதவிர, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதித் திட்டம், வேலைவாய்ப்பு உறுதியளிப்பு மற்றும் மாவட்ட ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி முகமை மூலமாகவும் பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கட்டடம் கட்ட நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், கட்டட நிதி ஒதுக்கீடு இல்லாத சங்கங்களுக்கு பொது நிதியிலிருந்து செலவு செய்து சொந்தக் கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படுகிறது.



மேலும், சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்தும் அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்கள் இதற்கு நிதியை பயன்படுத்திக்கொள்ளலாம். எனவே, கட்டடம் இல்லாத பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விரைவில் சொந்தக் கட்டடம் கட்டிட அரசு மேற்சொன்ன வழிகளில் ஆவன செய்து வருகிறது.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் விளக்கமாக பதில் சொல்லிவிட்டார். அதனால் துணை வினாக்களுக்கு இடமில்லை.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் @

## (முதல் பட்டியல்)

1—

### சேலம் மாவட்டத்தில் வீட்டு உபயோகத்திற்கு மின் இணைப்பு

**வினா 290— திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*2000–2001 ஆம் ஆண்டு* தமிழக அரசு கொண்டு வந்த உடனடி மின் இணைப்புத் திட்டத்தின்படி எவ்வளவு பேர் சேலம் மாவட்டத்தில் வீட்டு உபயோகத்திற்காக மின் இணைப்பு பெற்றனர்?

---

@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதலளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[2001 ஆகஸ்ட் 25

**விடை–**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மின் துறை அமைச்சர்:**

2000–2001 ஆம் ஆண்டு தமிழக அரசு கொண்டுவந்த உடனடி மின் இணைப்புத் திட்டத்தின்படி, சேலம் மாவட்டத்தில் வீட்டு உபயோகத்திற்காக மின் இணைப்பு பெற்றவர்கள் எண்ணிக்கை 21,075 (1—8—2000 முதல் இத்திட்டம் நடைமுறைக்கு வந்தது).

**2–**

**வைப்புத் தொகை கட்டமுடியாத விவசாயிகளுக்கு மின் இணைப்பு**

**வினா 538 – திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

தருமபுரி மாவட்டத்திலுள்ள வைப்புத் தொகை கட்ட முடியாத சிறு விவசாயிகளுக்கு மின் இணைப்பு உடனே வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை–**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மின் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டத்தில் திருத்தப்பட்ட சுயநிதித் திட்டத்தின்கீழ் ரூ.10,000 அல்லது ரூ.25,000 செலுத்த இயலாத சிறு விவசாயிகளுக்கு, சாதாரண முன்னுரிமையில் வரிசைக்கிரமப்படி 2001–2002 ஆம் ஆண்டின் குறியீட்டிற்குட்பட்டு, மின் இணைப்பு வழங்கப்படும்.

**3–**

**அருள்மிகு அரங்கநாதர் ஆலய வருமானம்**

**வினா 340 – திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

ஸ்ரீரங்கத்தில் உள்ள அருள்மிகு அரங்கநாதர் ஆலயத்திற்கு 2001–ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரை உண்டியல் மற்றும் சிறப்புக் கட்டணம் மூலம் வசூல் தொகை எவ்வளவு?



2001 ஆகஸ்ட் 25]

**விடை–**

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

ஸ்ரீரங்கத்தில் உள்ள அருள்மிகு அரங்கநாதர் ஆலயத்திற்கு 2001 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரை உண்டியல் மற்றும் சிறப்புக் கட்டணம் மூலம் வசூலான தொகை:–

| | |
|---|---|
| ஜனவரி 2001 மற்றும் பிப்ரவரி 2001 இரு மாதங்கள் உண்டியல் வசூல் | ரூ.19,30,391–00 |
| (மார்ச் 2001 மற்றும் ஏப்ரல் 2001 ஆகிய மாதங்களில் 15–3–2001–ல் நடைபெற்ற சம்ப்ரோட்சணத்தை முன்னிட்டு உண்டியல் திறப்பு நடைபெறவில்லை) | |
| ஜனவரி 2001 முதல் ஏப்ரல் 2001 வரை சிறப்புக் கட்டணம் வசூல் | ரூ.33,47,180–00 |

**4–**

**அருள்மிகு சமயபுரம் மாரியம்மன் கோயில் வருமானம்**

**வினா 343 – திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

சமயபுரத்தில் உள்ள மாரியம்மன் கோயிலில் 2001 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் முடிய உண்டியல் மற்றும் சிறப்புக் கட்டணம் மூலம் வசூலான தொகை எவ்வளவு?

**விடை–**

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

சமயபுரத்தில் உள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் 2001 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரை உண்டியல் மற்றும் சிறப்புக் கட்டணம் மூலம் வசூலான தொகை விவரம் பின்வருமாறு:–

[2001 ஆகஸ்ட் 25

உண்டியல் வசூல் விவரம்

| | ரூ. பை. |
|---|---|
| 2001 ஜனவரி | 17,21,201–80 |
| 2001 பிப்ரவரி | 19,77,313–15 |
| 2001 மார்ச் | 28,30,223–50 |
| 2001 ஏப்ரல் | 14,69,823–60 |
| மொத்தம் | 79,98,562–05 |

சிறப்புக் கட்டணம் வசூல் விவரம்

| | |
|---|---|
| 2001 ஜனவரி | 10,21,345–00 |
| 2001 பிப்ரவரி | 5,78,200–00 |
| 2001 மார்ச் | 6,01,020–00 |
| 2001 ஏப்ரல் | 9,81,675–00 |
| மொத்தம் | 31,82,540–00 |

5–

## பழனி திருக்கோயிலின் ஊழியர்கள்

**வினா 350 – திரு. இ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) பழனி திருக்கோயிலில் எத்தனை ஊழியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்?

(ஆ) அவர்களுக்கு ஊதியம் வழங்குவது யார்?

**விடை–**

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் தற்போது 576 ஊழியர்கள் பணிபுரிகிறார்கள்.



2001 ஆகஸ்ட் 25]

(ஆ) அவர்களுக்கு ஊதியம் அத்திருக்கோயிலின் வருமானத்திலிருந்து வழங்கப்படுகிறது.

6–

## கோயில்களில் உள்ள ஆபரணங்களின் மதிப்பு

**வினா 352 – திரு. இ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) தமிழ்நாட்டில் உள்ள கோயில்களில் உள்ள விலை உயர்ந்த வைரம், தங்க ஆபரண பொருள்கள் மதிப்பு எவ்வளவு?

(ஆ) அவற்றைப் பாதுகாக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கை என்ன?

**விடை–**

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) 1. தமிழகத் திருக்கோயில்களில் உள்ள விலை மதிப்புள்ள கற்கள், வைரம் உட்பட எண்ணிக்கை 16,11,386. இதன் மதிப்பு ரூ.10,91,69,365/–

2. பல மாற்றுப் பொன் இனங்களின் எடை அளவு 7,628.505 கிலோ. கிலோ ஒன்றுக்கு ரூ.4 இலட்சம் மதிப்பின்படி தங்க ஆபரணங்களின் மதிப்பு ரூ.305,14,02,000/–.

3. பல மாற்று வெள்ளி இனங்களின் எடை அளவு 83,306.811 கிலோ. கிலோ 1–க்கு ரூ.7000/– வீதம் வெள்ளி ஆபரணங்களின் மதிப்பு ரூ.58,31,47,670/

(ஆ) 1. பொன், வெள்ளி மற்றும் விலை மதிப்பு மிக்க கற்கள் ஆகியவற்றைப் பாதுகாக்கும் நடவடிக்கையாக பாதுகாப்புப் பெட்டகம் தீ மற்றும் இயற்கை இடையூறுகளால் சேதப்படாத வகையில் செய்து இரட்டைப்பூட்டு முறை அமல்படுத்தப்பட்டு உள்ளது. அதற்கு இரட்டைப்பூட்டு பாதுகாப்புப் பெட்டகத்தில் ஒரு செட் சாவிகள் சம்பந்தப்பட்ட திருக்கோயில் செயல் அலுவலரிடம் இருக்கும். மற்றொரு செட் இரட்டை பூட்டு அலுவலர் (பிற துறை அரசு அதிகாரி) ஒருவரிடம் இருக்கும். பாதுகாப்புப் பெட்டகத்தில் உள்ள ஆபரணங்களை சுவாமிக்கு அணிவிக்க வேண்டியிருந்தால் முன்னதாக இரட்டைப்பூட்டு அலுவலருக்குத் தெரிவித்து இருவரும் இதற்காக தனியாகப் பேணப்படும் இயக்கப்

பதிவேடுகளில் பதிவு செய்து எடுத்துக் கொடுத்து மீண்டும் பாதுகாப்புப் பெட்டகத்தில் வைக்கும் போதும் முறையாகச் செயல்பட்டு பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

2. ஒவ்வோர் இணை ஆணையர் அலுவலகத்திலும் உதவி ஆணையர் நிலையில் நகை சரிபார்க்கும் அதிகாரி அலுவலகம் ஏற்படுத்தி, நகை சரிபார்க்கும் அதிகாரியுடன், வைர நுண்ணறிஞர் பதவி ஒன்றும் தொழிற்நுட்ப உதவியாளர் பதவி ஒன்றும் ஏற்படுத்தி அவர்களைக் கொண்டு அனைத்து திருக்கோயில் ஆபரணங்களை மதிப்பிட்டும், அதன் அளவீடுகள் மற்றும் சுத்தத்தன்மை (மாற்று) குறித்தும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

3. நகை காப்பீட்டு திட்டத்தின்படி விலையுயர்ந்த பொருட்கள் காப்பீடு செய்து ஆண்டு பிரிமியம் சந்தா தொகை திருக்கோயில் மூலம் செலுத்தப்பட்டு வருகிறது.

4. சுத்தம் செய்யப்பட்ட தங்கக் கட்டிகளை தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில், அதிக வட்டி தரும் வங்கியில் தங்க முதலீடு திட்டத்தில் முதலீடு செய்யப்பட்டும் வருகிறது.

**7–**

## பழனி முருகன் தேவஸ்தானம் சார்பில் நடைபெறும் கல்லூரிகள்

**வினா 354 – திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

பழனி முருகன் கோயிலுக்குச் சொந்தமாக எத்தனை கல்லூரிகள், கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள் உள்ளன?

**விடை–**

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

பழனி முருகன் திருக்கோயில் சார்பில் நடைபெறும் கல்லூரிகள் விவரங்கள் பின்வருமாறு:–



1. அருள்மிகு பழனியாண்டவர் கலை-பண்பாட்டுக் கல்லூரி, பழனி:

1963 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இக்கல்லூரியில் தற்போது 87 ஆசிரியர்களும், 39 ஆசிரியரல்லாத அலுவலர்களும் பணிபுரிகின்றனர். 2000–2001 கல்வியாண்டில் 1491 மாணவர்கள் கல்வி பயின்றார்கள். மேலும், இக்கல்லூரியில் பல்வேறு பாடங்கள் இளங்கலை, முதுகலை பட்டப்படிப்பு பிரிவிலும், எம்.பில் பட்டப்படிப்பும் போதிக்கப்படுகின்றன.

மேலும், கல்லூரியில் சுயநிதி பாடவகுப்பில் கீழ்க்காணும் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன:

1. காந்தியச் சிந்தனை சான்றிதழ் வகுப்பு
2. காந்தியச் சிந்தனை பட்ட வகுப்பு
3. கணிப்பொறி சான்றிதழ் வகுப்பு
4. கணிப்பொறி பட்டய வகுப்பு
5. கணிப்பொறி பட்ட வகுப்பு
6. முதுநிலைக் கணிப்பொறி பட்டய வகுப்பு

2. பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி:

1970 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இக்கல்லூரியில் தற்போது 67 ஆசிரியர்கள் மற்றும் 33 ஆசிரியரல்லாத அலுவலர்களும் பணிபுரிகிறார்கள். இக்கல்லூரியில் சென்ற கல்வி ஆண்டில் 1720 மாணவியர்கள் கல்வி பயின்றார்கள். கல்லூரியில் இளங்கலை பட்டப்படிப்பில் பல பாடங்களும் முதுகலை பட்டப்படிப்பில் சில பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன.

மேலும் கல்லூரியில் சுயநிதி பாட வகுப்பில் கீழ்க்காணும் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன:

1. பி.எஸ்ஸி., கணிப்பொறி அறிவியல்
2. முதுகலை கணிப்பொறி பட்டய வகுப்பு
3. எம்.காம்.,

3. அருள்மிகு பழனியாண்டவர் ஆண்கள் தொழில்நுட்பக் கல்லூரி:

1982 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு இக்கல்லூரியில் 24 ஆசிரியர்கள் 24 தொழில்நுட்ப உதவியாளர்கள் மற்றும் 14 அமைச்சுப் பணியாளர்கள் பணிபுரிகின்றனர். சென்ற கல்வியாண்டில் 540 மாணவர்கள் கல்வி பயின்றனர்.

இத்தொழில்நுட்பக் கல்லூரியில் 1) அமைப்பியல் 2) இயந்திரவியல் 3) மின்னணுவியல் 4) தொடர்பியல் ஆகிய பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

4. அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் தொழில்நுட்பக் கல்லூரி:

1981 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இக்கல்லூரியில் தற்போது 22 ஆசிரியர்கள், 9 தொழில்நுட்ப உதவியாளர்கள் மற்றும் 13 அமைச்சுப் பணியாளர்களும் பணிபுரிகிறார்கள். சென்ற கல்வியாண்டில் 143 மாணவிகள் பயின்றனர்.

5. பழனியாண்டவர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி:

1972 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இப்பள்ளியில் 33 ஆசிரியைகள், 7 அமைச்சுப் பணியாளர்கள் பணிபுரிகின்றனர். எல்.கே.ஜி. முதல் ப்ளஸ் 2 வரையில் வகுப்புகள் நடைபெறுகின்றன. சென்ற நிதியாண்டில் 780 மாணவ, மாணவிகள் கல்வி பயின்றனர். ஆங்கிலம் பயிற்றுமொழியாக உள்ள இப்பள்ளி அரசு உதவி இல்லாமல் திருக்கோயில் நிதியிலிருந்து நடத்தப்படுகிறது.

6. பழனியாண்டவர் காதுகேளாதோர் பள்ளி:

1972 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இப்பள்ளியில் 6 ஆசிரியைகள், ஒரு காப்பாளர் மற்றும் இரண்டு அமைச்சுப் பணியாளர்கள் உள்ளனர். காது கேளாதோர் மற்றும் வாய் பேசாதோர் பயிலும் இப்பள்ளியில் மாணவர்களுக்கு 5 ஆம் வகுப்பு வரை கல்வி கற்பிக்கப்படுகிறது. மாணவ மற்றும் மாணவிகளுக்கு கல்வி, உணவு, மருத்துவம் மற்றும் உறைவிடம் இலவசம். சென்ற கல்வியாண்டில் 54 மாணவர்கள் கல்வி பயின்றனர்.

7. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி உதவி பெறும் தொடக்கப் பள்ளி, பழனி:

1982 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இப்பள்ளியில் 6 ஆசிரியைகள் மற்றும் இரண்டு அமைச்சுப் பணியாளர்கள் பணிபுரிகின்றனர். 5 ஆம்



வகுப்பு வரை பாடங்கள் கற்பிக்கப்படும் இப்பள்ளியில் 279 மாணவ, மாணவிகள் சென்ற நிதியாண்டில் கல்வி பயின்றனர்.

8. நாதஸ்வரம் மற்றும் தவில் பள்ளி, பழனி:

1957 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இப்பள்ளியில் மாணவர்களுக்கு நாதஸ்வரம் மற்றும் தவில் பயிற்சி அளிக்கப்படுகிறது. 5 முதல் 8 ஆம் வகுப்பு வரையில் படித்த மாணவர்கள் சேர்க்கப்பட்டு 3 ஆண்டுகள் பயிற்சி அளிக்கப்படுகிறது. சென்ற கல்வியாண்டில் இப்பள்ளியில் 52 மாணவர்கள் கல்வி பயின்றனர். மாணவர்களுக்கு உணவு, உறைவிடம் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகிறது.

9. வேதசிவாகம பள்ளி, பழனி:

1955 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இப்பள்ளியில் ஒரு ஆசிரியர் பணிபுரிகிறார். பள்ளியில் பூஜை முறைகளும், தேவாரம், திருவாசகம் மற்றும் தமிழ் அர்ச்சனை முறையும் கற்பிக்கப்படுகிறது. பள்ளியில் சாதி, இன உட்பிரிவு வேறுபாடின்றி அனைத்து வகுப்பினரும் சேர்த்துக் கொள்ளப்பட்டு 5 ஆண்டுகள் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. தற்போது இப்பள்ளியில் 11 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். உணவு, உறைவிடம், மருத்துவம் இலவசமாக வழங்கப்படுகிறது.

10. ஆங்கிலமுறை மருத்துவமனை, பழனி:

1972 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இம்மருத்துவமனையில் நான்கு மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் தொடர்பான தொழில்நுட்ப ஊழியர்கள் பணிபுரிகின்றனர். 24 படுக்கைகள் உள்ளன. மருத்துவமனையில் திருக்கோயில் ஊழியர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர், கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியரல்லாத பணியாளர்கள், திருக்கோயில் குருக்கள், பண்டாரங்கள் மற்றும் முடியிறக்கும் பணியாளர்களுக்கு இலவச சிகிச்சை அளிக்கப்படுகிறது. மற்ற வெளி நோயாளிகளுக்கு ஆலோசனைக் கட்டணம் நபர் ஒன்றுக்கு ரூ.1/– பெற்றுக்கொண்டு மருந்துகளுக்கான தொகை மட்டும் வசூலிக்கப்படுகிறது. தரமான நிறுவனங்களிலிருந்து மருந்துகள் கொள்முதல் செய்யப்படுகின்றன.

11. சித்த மருத்துவமனை, பழனி:

1964 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இம்மருத்துவமனையில் ஒரு சித்த மருத்துவரும் ஓர் உதவியாளரும் பணியாற்றுகிறார்கள்.

தினம் 150 புறநோயாளிகள் சிகிச்சை பெறுகின்றனர். ஆண்டு ஒன்றுக்கு ரூ.60,000/-க்கு மருந்துகள் கொள்முதல் செய்யப்பட்டு, இலவச சிகிச்சை மற்றும் மருந்துகள் வழங்கப்படுகின்றன.

**8–**

## பழனி முருகன் கோயில் தங்கரதத் தேர்

**வினா 359 – திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) 2001 ஆம் ஆண்டு மே மாதம் முடிய பழனி முருகன் கோயிலில் தங்கரதத் தேர் இழுக்க எத்தனை பக்தர்கள் பணம் கட்டினார்கள்?

(ஆ) இதன் மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு?

**விடை–**

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) 2001 ஆம் ஆண்டு ஜனவரி முதல் மே வரையிலான காலத்தில் தங்கரதத்தில் சுவாமி புறப்பாடு செய்ய பணம் செலுத்திய பக்தர்களின் எண்ணிக்கை:

| | |
|---|---|
| ஜனவரி | 852 |
| பிப்ரவரி | 736 |
| மார்ச் | 892 |
| ஏப்ரல் | 1147 |
| மே | 1707 |
| மொத்தம் | 5334 ஆகும் |

(ஆ) சாதாரண நாட்களில் தங்கரத புறப்பாடு வருமானம் 5113 x ரூ.1500 — ரூ.77,14,500-00

கார்த்திகை நாளில் தங்கரத புறப்பாடு வருமானம் ரூ.2000 x ரூ.191 — ரூ.3,82,000-00

(ரூபாய் எண்பது இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து ஐநூறு மட்டும்) — ரூ.80,96,500-00



**9–**

## பழனி திருக்கோயிலில் நடந்த பஞ்சாமிர்தம் விற்பனை

**வினா 363 – திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் கடந்த 2000–2001 ஆம் ஆண்டு பஞ்சாமிர்தம் விற்பனைமூலம் கிடைத்த தொகை எவ்வளவு?

**விடை–**

**மாண்புமிகு திரு. பி.சி இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் 2000–2001 ஆம் ஆண்டு (ஏப்ரல் 2000 முதல் மார்ச் 2001 முடிய) பஞ்சாமிர்தம் விற்பனை மூலம் ரூ.4,36,14,700/– (ரூபாய் நான்கு கோடியே முப்பத்தாறு இலட்சத்து பதினான்காயிரத்து எழுநூறு மட்டும்) வருமானமாகக் கிடைத்துள்ளது.

**10–**

## பழனி திருக்கோயிலில் கழிப்பறை வசதிகள்

**வினா 364 – திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் அதிகரிப்பதால், அதற்குத் தகுந்தபடி கழிப்பறை வசதிகள் செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

[2001 ஆகஸ்ட் 25

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழனி மலைக்கோயிலில் ஆண்களுக்கென்று 20 நவீன கழிப்பறைகளும், பெண்களுக்கென்று 12 நவீன கழிப்பறைகளும், 10 சிறுநீர் கழிப்பிடங்களும் உள்ளன. திருவிழாக் காலங்களில் பக்தர்கள் உபயோகிக்கும் வகையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மலைக்கோயிலைச் சுற்றியுள்ள அடிவாரம் கிரிவீதியில் 10 நவீனக் கழிப்பறைகளும், 10 குளியலறைகளும் கட்டண அடிப்படையில் இயங்குகின்றன. மேலும், கிரிவீதியில் 12 நவீன கழிப்பறைகளும், 12 குளியலறைகளும் மற்றும் வடக்கு கிரிவீதியில் 12 நவீன கழிப்பறைகளும் இயங்குகின்றன. மேலும், இலவச அடிப்படையில் வடக்கு கிரிவீதியில் 4 நவீன கழிப்பறை மற்றும் 6 சிறுநீர் கழிப்பறைகள், குடமுழுக்கு நினைவரங்கில் 6 நவீன கழிப்பறைகள், 6 சிறுநீர் கழிப்பறைகள் இயங்குகின்றன. கீழ் விஞ்ச் நிலையத்தில் இரண்டு நவீன கழிப்பறைகளும், விஞ்ச் எதிர்ப்புறமுள்ள கோசாலா வளாகத்தில் 10 நவீன கழிப்பறைகளும், குளிக்குமிடமும், வரக்கூடிய பக்தர்களுக்காக வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பழனி திருக்கோயிலுக்கு நாளுக்குநாள் அதிகமாக வரும் பக்தர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவகையில் நிரந்தர வசதிகள் செய்யப் பட்டுள்ளன. தைப்பூசம், பங்குனி உத்திரம் போன்ற திருவிழாக் காலங்களில், திருக்கோயிலிலிருந்து வழங்கும் உதவித் தொகையிலிருந்து நகராட்சி மூலம் தற்காலிகக் கழிப்பறைகள் ஏற்பாடு செய்து தரப்படுகின்றன.

**11—**

## பழனி திருக்கோயில் சார்பாக ஊனமுற்றோருக்கான பள்ளி

**வினா 365 — திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பாக ஊனமுற்ற சிறுவர்களுக்கான பள்ளி ஆரம்பிக்க அரசு முன்வருமா?



2001 ஆகஸ்ட் 25]

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பாக வாய் பேசாதோர் மற்றும் காது கேளாதோருக்கு பள்ளி 14-2-1972 முதல் நடைபெற்று வருகிறது. 2000-2001 கல்வி ஆண்டில் மேற்படி பள்ளியில் 42 மாணவர்கள் பயின்று வருகின்றனர். பள்ளியில் ஆறு ஆசிரியைகளும், காப்பாளர் ஒருவரும் பணிபுரிந்து வருகின்றனர். மேற்படி பள்ளியில் 1 முதல் 5 வகுப்புகள் வரை கல்வி கற்பிக்கப்படுகிறது. பயிலும் மாணவர்களுக்கு பாடப் புத்தகங்களும், எழுதுபொருட்கள், உணவு, தங்குமிடம், மருத்துவம் ஆகியவை இலவசமாக திருக்கோயில் மூலம் வழங்கப்படுகின்றன. மேலும் பழனி திருக்கோயில் சார்பாக வேறு ஊனமுற்றோர் பள்ளி ஆரம்பிக்கும் உத்தேசமில்லை.

**12—**

## திருக்கோயில்களில் பணியாற்றும் தமிழ் ஓதுவார்கள் எண்ணிக்கை

**வினா 369 — திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ)தமிழ்நாடு அரசு கோயில்களில் தமிழ் ஓதுவார்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அவர்களது மாதச் சம்பளத்திற்கு அரசு ஒதுக்கிய நிதி எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு அரசு திருக்கோயில்களில் தமிழ் ஓதுவார்களின் எண்ணிக்கை 154.

(ஆ) தமிழ்நாடு திருக்கோயில்களில் பணிபுரியும் ஓதுவார்களுடைய மாத ஊதியத்திற்கு அரசு நிதி எதுவும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. ஓதுவார்களுக்கு அந்தந்தத் திருக்கோயில் நிதி ஆதாரங்களிலிருந்து மாத ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. சில திருக்கோயில்களில் தொகுப்பூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

**13–**

## கோயில் நிலம் ஆக்கிரமிப்பு

**வினா 1379 – திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

தமிழ்நாடு அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள கோயில் நிலங்களை ஆக்கிரமிப்பு செய்துள்ள தனியார் எத்தனை பேர் மீது நடவடிக்கை 2000–2001–ல் எடுக்கப்பட்டது?

**விடை–**

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களை ஆக்கிரமிப்பு செய்துள்ள நபர்கள் மீது அறநிலையத் துறை மூலம் சட்டப்பிரிவு 78 மற்றும் 79–ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 2000–2001ல் மொத்தம் 191 திருக்கோயில்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்களில் ஆக்கிரமிப்பு செய்துள்ள 2440 நபர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. இதில் 226 நபர்களை வெளியேற்றுவதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 2214 இனங்களுக்கு விசாரணை இன்னும் முடிவு பெறவில்லை.

**14–**

## நகராட்சி துப்புரவுப் பணியாளர்கள்

**வினா 1366 – திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

நகராட்சிகளில் துப்புரவுப் பணியாளர்கள் விகிதம் எதை வைத்து நிர்ணயம் செய்யப்படுகிறது?



**விடை–**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நகராட்சிகளில் துப்புரவுப் பணியாளர் நியமனத்திற்கு பின்வருமாறு அளவுகோல் நிர்ணயம் செய்து அரசாணை நிலை எண் 101, ந.நி.கு.வ. துறை, நாள் 30–4–1997–ல் உத்தரவிடப்பட்டுள்ளது.

| எண். | வேலை வகைப்பாடு | துப்புரவுப் பணியாளர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1) | 250 குடியிருப்புகளுக்கு (அல்லது) 3 கிலோமீட்டர் சாலைக்கு | 3 பேர் கொண்ட குழு |
| 2) | பெரிய லாரிக்கு | 4 |
| 3) | சிறிய லாரிக்கு | 3 |
| 4) | டிராக்டர் வாகனத்திற்கு | 3 |
| 5) | டில்லர் வாகனத்திற்கு | 1 |
| 6) | உரக்கிடங்கு பராமரிப்புக்கு (நாள்தோறும் 20 மெட்ரிக் டன் குப்பை சேருமிடத்திற்கு) | 2 |
| 7) | பேருந்து நிலையத்திலும் மற்றும் அங்காடியில் உள்ள கட்டணக் கழிப்பிடத்தை பராமரிக்க | 1 |
| 8) | கழிவுநீர்ப் பண்ணை பராமரிக்க: | |
| | 20 ஏக்கர் வரை | 2 |
| | 20 ஏக்கருக்கு மேல் | 4 |
| 9) | பேருந்து நிலைய கழிப்பறையைப் பராமரிக்க | 1 ஆண்<br>1 பெண் |
| 10) | பேருந்து நிலையத்திற்கு சுத்தம் செய்ய: | |
| | "ஏ" மற்றும் "டி" பேருந்து நிலையத்திற்கு | 2 |

"ஏ" மற்றும் "பி" பேருந்து நிலையத்திற்கு 4

11) பத்து இலட்சம் வரை வருமானம் வரக் கூடிய நகராட்சி அங்காடியையும் மற்றும் அங்குள்ள கழிப்பறையை சுத்தம் செய்யவும் 2

கூடுதல் வருமானம் ஒவ்வொரு பத்து இலட்சத்திற்கும் கூடுதல் பணியாளர்கள் 4

12) கழிவுநீர் ஊர்திக்கு 2

13) குப்பை வண்டிக்கு 2

14) கழிவுநீர் வண்டிக்கு 1

15) மாடுகளைப் பராமரிக்க:

20 மாடுகளுக்கு 1

20 மாடுகளுக்கு அதிகமாயிருப்பின் 2

16) 20 துப்புரவுப் பணியாளர்களுக்கு 1 துப்புரவுப்பணி மேற்பார்வையாளர்

17) 2 துப்புரவுப் பணி மேற்பார்வையாளருக்கு 1 துப்புரவு ஆய்வாளர்

**15–**

**வி.எம். சத்திரம் வீட்டு வசதி வாரிய மக்களுக்கு குடிதண்ணீர் வழங்குதல்**

**வினா 1523 – திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) திருநெல்வேலி மாவட்டம், வி.எம். சத்திரம் வீட்டு வசதி வாரிய குடியிருப்பு மக்களுக்கு லாரி மூலம் குடிதண்ணீர் வழங்க மாநகராட்சி நிர்வாகம் மறுத்து வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ)ஆம் எனில், குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா?



**விடை–**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாநகராட்சி பகுதியிலுள்ள வி.எம். சத்திரம் வீட்டு வசதி வாரிய குடியிருப்பு மக்களுக்கு லாரி மூலம் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், அப்பகுதி மக்களுக்கும், அதனைச் சார்ந்த பகுதிகளுக்கும், பாளையங்கோட்டை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க உத்தேச மதிப்பீடு ரூ.1–00 கோடி மதிப்பில் தயார் செய்து மாமன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. திட்டம் செயல்படுத்த தேவையான மதிப்பீடு, வரைபடம், சர்வே போன்ற பூர்வாங்க பணிகள் நடைபெற்று வருகின்றன.

**16–**

**நுகர்வோர் பாதுகாப்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளை விரைவாக முடித்தல்**

**வினா 431– திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) நுகர்வோர் பாதுகாப்பு நீதிமன்றத்தில் 2000–2001 வரை நிலுவையிலுள்ள வழக்குகள் எத்தனை?

(ஆ) அவற்றை விரைவில் முடிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை–**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) அனைத்து மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களிலும் 31–3–2001 வரை நிலுவையிலுள்ள வழக்குகள் – 6,730.

(ஆ) மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களிலும் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பணியிடங்கள் அவ்வப்போது காலியாகும்போது அரசு உடனடி நடவடிக்கை மேற்கொண்டு அப்பணியிடங்களை நிரப்ப தக்க நடவடிக்கைகள் மேற்கொள்கிறது. மாநில

நுகர்வோர் குறைதீர் ஆணையத் தலைவர் அவர்கள் அடிக்கடி மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களை ஆய்வு செய்து வழக்குகளை விரைவில் முடிக்க தக்க அறிவுரைகளை வழங்குகிறார். வழக்குகளின் தன்மையினைப் பொறுத்து அனைத்து மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத் தலைவர்களும், வழக்குகளை விரைவில் முடிக்கத் தேவையான தக்க நடவடிக்கையினை மேற்கொள்கின்றனர்.

**17–**

## மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் பதிவான வழக்குகள்

**வினா 432– திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) கடந்த 2000–2001ல் மாநில நுகர்வோர் சென்னை குறைதீர் ஆணையத்தில் பதிவாகியுள்ள வழக்குகள் எத்தனை?

(ஆ) இதில் தீர்வு செய்யப்பட்ட வழக்குகள் எத்தனை?

(இ) நிலுவையிலுள்ள வழக்குகள் எத்தனை?

**விடை–**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் கடந்த 2000–2001–ல் பதிவாகியுள்ள மொத்த வழக்குகள்:–

| | |
|---|---|
| அசல் வழக்குகள் | 264 |
| மேல்முறையீடு வழக்குகள் | 945 |
| மொத்தம் பதிவான வழக்குகள் | 1,209 |

(ஆ) தீர்வு செய்யப்பட்ட வழக்குகள்:–

| | |
|---|---|
| அசல் வழக்குகள் | 246 |
| மேல்முறையீடு வழக்குகள் | 764 |
| மொத்தம் தீர்வு செய்யப்பட்ட வழக்குகள் | 1,010 |

(இ) நிலுவையிலுள்ள வழக்குகள் 199





**8–**

## சேலம் மாவட்ட சார்பதிவாளர் அலுவலகங்களுக்குக் கட்டட வசதி

**வினா 157– திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) சேலம் மாவட்டத்தில் மொத்தம் எத்தனை சார்பதிவாளர் அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன?

(ஆ) அவை அரசு கட்டடங்களில் இயங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை–**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) சேலம் வருவாய் மாவட்டத்தில் 2 பதிவு மாவட்டங்கள் உள்ளன. அவற்றின் கீழ் உள்ள 21 சார்பதிவாளர் அலுவலகங்களில், 12 சார்பதிவாளர் அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

(ஆ) ஒரு ஆண்டில் பதியப்படும் ஆவணங்களின் எண்ணிக்கை, அவற்றின் ஆண்டு வருமானம், கட்டடம் கட்டத் தேவையான இடவசதி ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, அரசின் நிதிநிலைக்கேற்ப வாடகைக் கட்டடங்களில் இயங்கும் சார்பதிவாளர் அலுவலகங்கள் அரசுக் கட்டடங்களில் இயங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**19–**

## நீலகிரி மாவட்டத்தில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

**வினா 80– திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு செய்தி–விளம்பரம் வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) நீலகிரி மாவட்டத்தில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், இதன்கீழ் என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன?

[2001 ஆகஸ்ட் 25

(இ) 1998-99 மற்றும் 1999-2000 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

**விடை-**

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு, செய்தி-விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டத்தில் உள்ள தரங்குன்றிய சோலா காடுகளை மேம்பாடு செய்து, தரத்தினை உயர்த்தவும், இயற்கையான காப்புக் காடுகளைப் பாதுகாக்கவும், ஜீன்பூல் தோட்டங்கள் போன்ற பாரம்பரிய தோட்டங்களை பிரத்யேக திட்டங்களின் மூலம் பாதுகாத்தல் மற்றும் விழிப்புணர்வு முகாம் நடத்துதல் போன்ற திட்டப்பணிகள் துறையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. மேலும், தரங்குன்றிய வனப் பகுதிகளில் சிறு வனப் பொருட்களுக்காக மரக்கன்றுகள் நடுதல், சோலைக் காடுகளைச் சுற்றி கம்பி வேலி அமைத்தல், மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு பணி செய்து மண் அரிப்பினை தடுத்தல் மற்றும் காடுகளைச் சுற்றி தீ தடுப்புக் கோடுகள் அமைத்து தீயிலிருந்து காடுகளைப் பாதுகாத்தல் போன்ற பணிகள் துறையினால் நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

(இ) இத்திட்டத்திற்கென 1998-99ஆம் ஆண்டில் ரூ.355-60 இலட்சமும், 1999-2000-ல் ரூ.390-00 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**20-**

## மிருகங்களால் விவசாய நிலங்களுக்கு ஏற்படும் சேதத்திற்கு நிவாரணம்

**வினா 325- திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி-விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) காட்டுப்பன்றி, யானை ஆகிய மிருகங்களால் விவசாய நிலங்களுக்கு ஏற்படும் சேதத்திற்கு நிவாரணம் வழங்கப்படுகிறதா?

(ஆ) 2000-2001ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட நிவாரணத் தொகை எவ்வளவு?



2001 ஆகஸ்ட் 25]

**விடை-**

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு, செய்தி-விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) அரசாணை எண் 205, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை (வ.5) நாள் 12.9.2000-ன்படி விவசாய நிலங்களுக்கு யானைகளால் ஏற்படும் பயிர் சேதத்திற்கு, யானைகள் திட்டத்தின்கீழ் சேதத்திற்கேற்பவோ அல்லது குறைந்தபட்சமாக ரூ.15,000/- வரை வழங்க வழிவகை உள்ளது. காட்டுப்பன்றியால் ஏற்படும் சேதத்திற்கு நிவாரணம் வழங்க அவ்வாணையில் வழிவகை ஏதுமில்லை.

(ஆ) 2000-2001 ஆம் ஆண்டில் பயிர் சேதத்திற்காக ரூ.3,15,880/- நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

**21-**

## புகையிலை பயிர்

**வினா 248- திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) தமிழ்நாட்டில் எந்தெந்த மாவட்டங்களில் அதிகமாக புகையிலை பயிரிடப்பட்டு வருகிறது?

(ஆ) எவ்வளவு பரப்புள்ள நிலத்தில் புகையிலை பயிரிடப்படுகிறது?

**விடை-**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஈரோடு, திண்டுக்கல், கோயம்புத்தூர், சேலம், நாகப்பட்டினம் மற்றும் திருவண்ணாமலை.

(ஆ)

| | மாவட்டம் | புகையிலை பயிரிடும் பரப்பு (எக்.) |
|---|---|---|
| 1. | ஈரோடு | 4905 |
| 2. | திண்டுக்கல் | 864 |
| 3. | கோயம்புத்தூர் | 779 |

| | | |
|---|---|---|
| 4. | சேலம் | 360 |
| 5. | நாகப்பட்டினம் | 325 |
| 6. | திருவண்ணாமலை | 135 |

**22-**

**எடப்பாடி ஒன்றியத்தில் கரும்பு உற்பத்தி**

**வினா 254- திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

*(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியத்தில் எத்தனை ஏக்கரில் கரும்பு உற்பத்தி செய்யப்படுகிறது?*

*(ஆ) அவ்வாறு உற்பத்தி செய்யப்படும் கரும்பு அளவு எவ்வளவு?*

**விடை-**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) 2000-2001 ஆம் ஆண்டு, சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியத்தில் 882 ஏக்கர் (357 எக்டேர்) பரப்பில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டது.*

*(ஆ) மேற்கண்ட 357 எக்டேர் பரப்பில் இருந்து 42,840 மெட்ரிக் டன் கரும்பு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.*

**23-**

**எடப்பாடி ஒன்றியத்தில் நெல் உற்பத்தி**

**வினா 257- திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

*(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியத்தில் எத்தனை ஏக்கரில் நெல் உற்பத்தி செய்யப்படுகிறது?*

*(ஆ) அவ்வாறு உற்பத்தி செய்யப்படும் நெல் அளவு எவ்வளவு?*



**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) எடப்பாடி ஒன்றியத்தில் 2000-2001 ஆம் ஆண்டில் 6215 ஏக்கர் பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டது.*

*(ஆ) எடப்பாடி ஒன்றியத்தில் கடந்த ஆண்டில் சாகுபடி செய்யப்பட்ட நெற்பயிரில் சராசரியாக ஒரு ஏக்கருக்கு 2,620 கிலோ என்ற அளவில் மொத்தம் 16,283 மெட்ரிக் டன் நெல் உற்பத்தி செய்யப்பட்டது.*

**24-**

**தோட்டக்கலை படித்த மாணவர்களை அரசுப் பணியிடங்களில் நிரப்புதல்**

**வினா 1877-திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

*(அ) தோட்டக்கலை பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு படித்த மாணவர்கள் கடந்த 5 ஆண்டுகளில் எத்தனை பேர் அரசுப் பணியிடங்களில் அமர்த்தப்பட்டனர்?*

*(ஆ) இவர்களுக்கான பணியிடங்கள் இன்னும் நிரப்பப்படாமல் காலியாக உள்ளதா?*

*(இ) ஆம் எனில், அப்பணியிடங்கள் நிரப்பப்படுமா?*

**விடை-**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) கடந்த ஐந்து ஆண்டுகளில் தோட்டக்கலை பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு படித்த மாணவர்கள் யாரும் தோட்டக்கலைத் துறை மூலம் பணியமர்த்தப்படவில்லை.*

*(ஆ) இதனால் நிரப்பப்படாத காலிப் பணியிடங்கள் ஏதும் இல்லை.*

*(இ) இவ்வினா எழவில்லை.*

**25–**

## வணிக வரித் துறை மூலம் அரசுக்கு வருமானம்

**வினா 2387– திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) தமிழகத்தில் தர்மபுரி, சேலம், ஈரோடு, நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் கடந்த 1999–2000 ஆம் ஆண்டில் வணிகவரித் துறை மூலம் அரசுக்கு வந்த வருமானம் எவ்வளவு?

(ஆ) கடந்த 2000–2001 ஆம் ஆண்டில் வந்த வருமானம் எவ்வளவு?

**விடை–**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் தர்மபுரி, சேலம், ஈரோடு, நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் 1999–2000 ஆம் ஆண்டில் வணிக வரித் துறை மூலம் அரசுக்கு வந்த வருமானம்

| | |
|---|---|
| சேலம் வணிக வரி மாவட்டம் | 9162–55 |
| நாமக்கல் வணிக வரி மாவட்டம் | 5996–30 |
| ஈரோடு வணிக வரி மாவட்டம் | 5804–68 |
| தர்மபுரி வணிக வரி மாவட்டம் | 8622–41 |
| சேலம் வணிக வரிக் கோட்டம் மொத்தம் | 29585–94 |

2000–2001ஆம் ஆண்டில் மேற்படி மாவட்டங்களில் வந்த வருமானம்

| | |
|---|---|
| சேலம் வணிக வரி மாவட்டம் | 10398–33 |
| நாமக்கல் வணிக வரி மாவட்டம் | 7670–66 |
| ஈரோடு வணிக வரி மாவட்டம் | 5533–15 |
| தருமபுரி வணிக வரி மாவட்டம் | 9244–78 |
| சேலம் வணிக வரிக் கோட்டம் மொத்தம் | 32846–92 |

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]





## 2. தகவல் கோரல்

### உறுப்பினரின் முன்னறிவிப்பு

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்திருந்த கவன ஈர்ப்பு என்னவாயிற்று?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வைதியலிங்கம், அது ஆய்வில் இருக்கிறது.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### சென்னையில் நிலவும் குடிநீர்த் தட்டுப்பாடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, சென்னையில் நிலவிவரும் குடிநீர்த் தட்டுப்பாடு குறித்து ஒத்திவைப்புத் தீர்மானமாக திரு. துரைமுருகன் அவர்களும், ஒத்திவைப்புத் தீர்மானம் மற்றும் கவன ஈர்ப்பாக திரு. சி. ஞானசேகரன் அவர்களும், சிறப்புக் கவன ஈர்ப்பாக திரு. ஐ. கணேசன் அவர்களும் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்வதற்கு அனுமதி அளிக்கிறேன். தீர்மானத்தை மட்டும் சுருக்கமாக எடுத்துக் கூறுமாறு அழைக்கிறேன். முதலில் திரு. துரைமுருகன்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் ஏற்பட்டிருக்கின்ற குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்த அரசு ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததிலே இருந்து பல்வேறு முயற்சிகளை எடுத்திருக்கிறோம் என்று தெரிவித்திருக்கிறது. பத்திரிகைகளிலேயும் பக்கம் பக்கமாக அது குறித்து செய்திகள் வருகின்றன. ஆனால், நிலைமையை நோக்குகிறபோது அதற்கு எந்தவிதமான பரிகாரத்தையும் இதுவரையில் கண்டதாக இல்லை. ஒரு நாள் பார்த்தால் கிருஷ்ணா தண்ணீர் வருகிறது என்று சொன்னார்கள். ஆனால், இப்போது கிருஷ்ணா தண்ணீர் முழுவதுமாக நின்றுவிட்டது என்ற செய்தி வந்திருக்கிறது. மறுநாள் பார்த்தால் பள்ளிப்பாளையத்திலிருந்து தண்ணீர் கொண்டு வருகிறோம், தாமிரபரணியிலிருந்து தண்ணீர் கொண்டு வருகிறோம், மேட்டூரிலிருந்து வருகிறது, ஈரோட்டிலிருந்து வருகிறது என்று எத்தனையோ இடங்களைச் சுட்டிக்காட்டிக் கொண்டு இருந்தாலும் நிலைமை இங்கு மோசமாகப் போய்க்கொண்டிருக்கிறது. இதற்கு தனிக்

[திரு. துரைமுருகன்] [2001 ஆகஸ்ட் 25

கவனம் செலுத்தி, சென்னை மாநகரத்தினுடைய குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்த அரசு முயற்சி எடுக்கவில்லை என்பது தான் என்னுடைய எண்ணம். கிருஷ்ணா தண்ணீரைப் பொறுத்த வரையில் இதுவரையில் இந்த அரசு.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், பிரச்சினையைச் சொல்லி, அமைச்சர் அதற்கு என்ன விளக்கம் சொல்லுகிறார் என்று கேளுங்கள்.

**திரு. துரைமுருகன்:** முனைப்பாக இதிலே ஈடுபட்டிருந்தால் இன்னும் கொஞ்சம் தண்ணீரைக்கூட பெற்றிருக்கமுடியும். மற்ற இடங்களிலிருந்து தண்ணீர் கொண்டு வருவது என்றால் லாரிகள் மூலமாகத்தான் கொண்டுவர முடியும். அதற்கும், கால்வாய் மூலமாக வருவதற்கும் வித்தியாசம் உண்டு. எனவே, சென்னை மாநகரத்தினுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்த அரசு முழுமையாக நடவடிக்கை எடுக்கவில்லை. அப்படி முழுமையாக நடவடிக்கை எடுக்கிற எண்ணம் உண்டா? எடுத்து இருக்கிறதா என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை பகுதியிலே இப்போது குடிநீர்ப் பிரச்சினை கோரத் தாண்டவம் ஆடிக்கொண்டிருக்கிறது. குறிப்பாக எந்தத் தெருவுக்குப் போனாலும், பல வண்ணங்களில் இருக்கக்கூடிய பிளாஸ்டிக் குடங்கள் அடுக்கி வைக்கப்பட்டு அதுவும் எப்போது லாரி வரும், எப்போது பிடிக்கமுடியும் என்கின்ற ஒரு நிலைமை இருக்கின்றது. ஒரு குடும்பத்திற்கு 3 குடங்கள்தான் அளிக்கப்படுகிறது. சென்னைக்கு குடிநீர் கொண்டு வருவதற்கு ஒரு தொலைநோக்குப் பார்வையோடு உடனடியாக போர்க்கால அடிப்படையிலே அரசு நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

குறிப்பாக, எனக்கு முன்னால் பேசிய முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கிருஷ்ணா நதிநீரை சென்னைக்குக் கொண்டு வந்ததாக அப்போது சொன்னார்கள். தண்ணீர் வந்தது என்று சொன்னார்கள். உண்மையிலேயே அப்போது தண்ணீர் வந்திருக்குமானால் இன்று பிரச்சினை இந்த அளவுக்கு கடுமையாக போய் இருக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது நாங்கள் இந்த மன்றத்திலே பலமுறை சொன்னோம். பிறகு One hour discussion-ஐயும் கொண்டுவந்தோம்.



2001 ஆகஸ்ட் 25]

**திரு. துரைமுருகன்:** Point of order, Sir. கிருஷ்ணா தண்ணீர் வரவில்லை என்று அவர் மீண்டும் சொல்லுகிறார். இப்போதும் சொல்லுகிறேன். நான் அழுத்திச் சொல்லுகிறேன், கிருஷ்ணா தண்ணீர் வந்தது உண்மை; கிருஷ்ணா தண்ணீர் வருகிறது என்று முதலமைச்சரே சொல்லியிருக்கிறார். ஆனால், தண்ணீர் வரவில்லை என்றார்கள். பத்திரிகைக்காரர்கள்கூடக் கேட்டார்கள். நீங்கள் 13 கிலோ மீட்டர் கால்வாய் வெட்டப்படவில்லை, தண்ணீர் வரவில்லை என்று சொன்னீர்களே, இப்போது கிருஷ்ணா தண்ணீர் வருகிறதே எப்படி என்று கேட்டார்கள். இதற்கெல்லாம் பதில் சொல்லத் தேவையில்லை என்று சொல்லிவிட்டு முதலமைச்சர் போய்விட்டார். ஆகையால்தான் நான் challenge பண்ணுகிறேன். கிருஷ்ணா தண்ணீர் வரவில்லை என்பதை நிரூபிக்கமுடியுமா?

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி வந்திருப்பது உண்மையானால், இப்போதுதானே மாண்புமிகு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், நீங்கள் சென்னையிலே நிலவுகின்ற... (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லிவிட்டு, உங்களுக்குக் கட்டுப்பட்டு உட்கார்ந்துவிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்போது challenge செய்கிறேன், உண்மையிலேயே அவர்கள் அப்போது நடவடிக்கை எடுத்திருப்பார்களேயானால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன் அவர்களே, தற்போது சென்னையிலே நிலவி வரக்கூடிய குடிதண்ணீர்ப் பிரச்சினையைப் பற்றி மட்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவாருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே தண்ணீர் வந்தது என்றார்கள். இப்போது அவருடைய திருவாயாலேயே சொன்னார்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், இப்போதுள்ள பிரச்சினைக்கு வாருங்கள். கடந்த காலத்தை விட்டுவிடுவோம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இப்போது நின்றுவிட்டது என்று அவரே சொல்கிறார். அவைக் குறிப்பைப் பாருங்கள். (குறுக்கீடு) நின்றுவிட்டது என்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. சென்னையிலே நிலவி வரக்கூடிய குடி தண்ணீர்ப் பற்றாக்குறையைப் பற்றி மட்டும் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த அரசு சென்னையிலே உள்ள குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக லாரிகளிலே தண்ணீர் கொண்டுவருவதற்கும், இரயிலிலே தண்ணீர் கொண்டுவருவதற்கும் ரூ.75.00 கோடி ஒதுக்கியிருப்பதாக நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இப்போது இரயிலிலே தொடர்ந்து தண்ணீர் கொண்டு வரப்படுகிறதா என்பதை இந்த அவைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாக்க வேண்டும். போதிய அளவிற்கு, நாம் எதிர்பார்த்த அளவிற்குத் தண்ணீர் வரவில்லை. ஒவ்வொரு குடும்பத்திற்கும் போதிய அளவு தண்ணீர் கொடுக்கக்கூடிய ஒரு நிலையை இந்த அரசு உடனடியாக – இன்னும் 75.00 கோடி ரூபாய் செலவானாலும்கூட–அதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். ஏனென்றால், நம்முடைய M.L.A. Hostel–ஐச் சுற்றியிருக்கக்கூடிய இடங்களில்கூட தண்ணீர் வரவில்லை. அதேபோன்று, பல இடங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் தனியாக ஆங்காங்கே குடியிருப்பவர்களுக்கும் போதிய அளவு தண்ணீர் இல்லை. இவர்களுக்கே தண்ணீர் இல்லையென்று சொன்னால், சாதாரண மக்களுக்குத் தண்ணீர் என்பது ஓர் அரிய பொருளாக மாறிக் கொண்டிருக்கிற நிலையைத் தவிர்ப்பதற்காக, இந்த அரசு இப்போதைக்கு உடனடியாக லாரிகள் மூலமாகவோ, இரயில் மூலமாகவோ தொடர்ந்து கொண்டுவந்து, ஒவ்வொரு வீட்டிற்கும் போய்ச் சேருவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இப்போது பாலாற்றிலே தடுப்பணை கட்டுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதேபோல கொறட்டலையாறு, கூவம், அடையாறு போன்ற பகுதிகளில் எல்லாம் தடுப்பணைகள்...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் சொல்ல வேண்டிய பதிலையெல்லாம் நீங்கள் சொல்லாதீர்கள். குடிதண்ணீர்ப் பற்றாக்குறையைப்பற்றி மட்டும் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஆகவே, எந்த அளவிற்கு தண்ணீர் வருகிறது, இன்னும் எவ்வளவு தண்ணீர் இருந்தால், சென்னையைப் பொறுத்த அளவிலே தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க முடியும், அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய தலைநகரம் சென்னையிலே மிக அதிகமான அளவில் குடிநீர்ப் பற்றாக்குறை உள்ளது. சென்னையிலே எந்த இடத்திற்குச் சென்று பார்த்தாலும், தாய்மார்களும், மாணவர்களும் வரிசையிலே நின்று, தண்ணீருக்காக சைக்கிள்களிலும், வண்டிகளிலும் அலைந்து கொண்டிருப்பது இங்கே மாமன்றத்திலே இருக்கக்கூடிய அத்தனை உறுப்பினர்களும் நேரடியாக, கண்கூடாகக் கண்ட விஷயம். இதிலே அரசியல் தேவையில்லை. சென்னை மாநகரத்திலே இருக்கக்கூடிய பல இலட்சக்கணக்கான மக்களுக்கு எந்தவகையிலாவது, இந்த அரசு போர்க்கால அடிப்படையிலே தண்ணீர் கொடுக்க வேண்டும். பல Tank–களை பகுதி பகுதியாக வைத்திருக்கிறார்கள். ஆனால், எதிலுமே தண்ணீர் சரியாகக் கிடைக்காமல் மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள்.

அதேபோல, வடபழனி பகுதியிலேயிருந்து இன்று காலை ஒருவர் பாட்டிலிலே தண்ணீரைப் பிடித்துக்கொண்டுவந்து காட்டினார். அதிலே க்ளோரின் கலக்காமல், மிகவும் அசுத்தமாக அந்தத் தண்ணீர் இருந்தது. அந்தத் தண்ணீர் அரசு மூலம் சப்ளை செய்யப்பட்டதா? நிறையப் பேர் பிரைவேட்டாக சொந்தக் கிணற்றிலேயிருந்து தண்ணீரைக் கொண்டுவந்து சப்ளை பண்ணுகிறார்கள். அதுமாதிரி வந்த தண்ணீரா என்பது எனக்குத் தெரியாது. எது எப்படியிருந்தாலும், மக்களுக்கு உடல்நிலை கெடாமல் இருக்கக்கூடிய அளவிலே நம்முடைய அரசு குடிநீரை இரயிலிலும் மற்றும் லாரிகளின் மூலமும் கொண்டுவந்து, அதைச் சுத்திகரித்து, தமிழகத்திற்கும், குறிப்பாக, சென்னை மாநகருக்கும் வழங்க போர்க்கால நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்.

*முற்பகல் 10-40*

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு clarification. சென்னையினுடைய குடிநீர்ப் பஞ்சத்தைத் தீர்க்க பல்வேறு நடவடிக்கைகள் எடுத்திருப்பதாக நண்பர்கள் இங்கே சொன்னார்கள். கண்டலேறிலிருந்து, நெய்வேலியிலிருந்து, மேட்டூரிலேயிருந்து, ஈரோட்டிலேயிருந்து, பள்ளிப்பாளையத்திலிருந்து தண்ணீர் வருகிறது. மெத்த மகிழ்ச்சி. அதுமட்டுமல்ல, சென்னையைச் சுற்றியுள்ள பல்வேறு பகுதிகளில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு லாரிகள் மூலமாக சென்னை நகரத்திற்குத் தண்ணீர் விநியோகிக்கப் படுகிறது. இதிலே பிரச்சினை என்னவென்று சொன்னால், தண்ணீர் நன்றாக வருகின்ற காலங்களிலேகூட, சென்னையின் தென்பகுதியிலே, நீலாங்கரையிலே அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய்க் கிணறுகளிலேயிருந்து, ராட்ஷச போர்வெல்லிலிருந்து தண்ணீர் பம்ப் செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வந்தது. இப்போது அந்த ஆழ்குழாய்க் கிணறுகளிலே கிடைக்கிற தண்ணீரை லாரிகளிலே ஏற்றி சென்னையின் வேறு பகுதிகளுக்குக் கொண்டு வந்துவிடுகிறார்கள். எனவே, திருவான்மியூர், அடையாறு விரிவாக்கப்பட்ட பகுதிகளுக்குத் தண்ணீர் விநியோகிக்கப் படவில்லை என்கிற புகார் இப்போது வந்துகொண்டிருக்கிறது. அதையும் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதற்கு அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார் என்பதையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் பருவமழை பொய்த்ததன் காரணமாக முன் எப்போதும் இல்லாத அளவிற்குக் கடும் குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டுள்ள நிலைமையை நாம் எல்லோரும் நன்கு அறிவோம். இக்கடும் நெருக்கடியைச் சமாளிக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து பல்வேறு முறைகளிலே தண்ணீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு நல்ல பல ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார்கள். முதல்வர் அவர்களது முதற்கட்டத் திட்டத்தின்படி ஈரோடு மற்றும் மேட்டூர் பகுதிகளிலிருந்து இரயில்கள் மூலமாக தினமும் தண்ணீர் கொண்டுவருவதற்கு வேண்டிய முன் ஏற்பாட்டைச் செய்து, இன்றுவரை தொடர்ந்து இரயில்கள் மூலமாகத் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

கடந்த 2000 ஆம் ஆண்டில் பூண்டி ஏரியில் தண்ணீர் அளவு 5 மில்லியன் கன அடி இருந்தது. ஆனால், இப்போது அங்கே தண்ணீர்



சுத்தமாக இல்லாத நிலை. அதேமாதிரி, சோழவரம் ஏரியில் கடந்த 2000 ஆம் ஆண்டு தண்ணீர் இருந்தது. இன்றைக்கு அங்கே தண்ணீர் இல்லை. செங்குன்றம் ஏரியில் இதேகாலத்தில், 2000 ஆம் ஆண்டு 583 மில்லியன் கன அடி தண்ணீர் இருப்பு இருந்திருக்கிறது. ஆனால், 2001-ல் இன்றைய தேதியில் 248 மில்லியன் கன அடி தண்ணீரே இருக்கிறது. அவற்றைக் கொண்டும், பல்வேறு தனியார் கிணறுகளிலேயிருந்து லாரிகள் மூலமாக, சென்னையைச் சுற்றியுள்ள பல்வேறு கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய தனியார் விவசாயிகளிடமிருந்து தண்ணீரைப் பெற்றும், சென்னை மாநகர மக்களுக்கு ஓரளவு தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க முடிகிறது. நெய்வேலியிலிருந்து லாரிகள் மூலமாகவும் தண்ணீர் கொண்டுவந்து பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. கடந்த காலங்களில் மழை இருந்த காரணத்தினால், போதுமான அளவிற்குத் தண்ணீர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இன்றைய சூழ்நிலையில் பருவ மழை பொய்த்ததன் காரணமாக, மக்களுடைய தேவையின் அளவிற்குக் கொடுக்க முடியாவிட்டாலும், முடிந்த அளவிற்கு குடிதண்ணீர்ப் பிரச்சினையைப் போக்குவதற்கு, குறைந்த அளவாவது தண்ணீர் கொடுக்க வேண்டுமென்ற அக்கறையோடு இந்த அரசு நல்ல பல முயற்சிகளை மேற்கொண்டு பல்வேறு வழிகளிலே–அவர்களுக்குத் தேவையான, குறைந்த அளவு தேவையான–குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வருகிறது என்பதை இந்தநேரத்திலே நான் மிக்க பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், குடிசைப் பகுதி மற்றும் குடிசை மாற்றுக் கட்டடப் பகுதியிலே வாழ்கிற மக்களுக்கு சுமார் 75 இலட்சம் ரூபாய் செலவில் 100 இடங்களிலே ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து, குறைந்த அழுத்த மின்சார மோட்டார் அமைத்து 3,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட சின்டெக்ஸ் தொட்டிகளை அமைக்க 100 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, அந்த 100 இடங்களிலே பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தப் பணி விரைவில் முடிக்கப்படும் என்பதையும் இந்த மாமன்றத்திற்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், நிரந்தரத் திட்டமாக சென்னை நகரின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வீராணம் ஏரித் திட்டம் போன்ற பல்வேறு வகையான திட்டங்களெல்லாம் நம்முடைய நிதிநிலை அறிக்கையில் அளிக்கப்பட்டிருப்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். எனவே, இப்போது இந்த அரசு எல்லாவகையிலும் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வருகிறது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

## 4. கவன ஈர்ப்பு

### கடலூர் சிப்காட் தொழிற்பேட்டை தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுகளால் நிலத்தடி நீர் விஷத்தன்மையாகி நோய்கள் ஏற்படுதல் மற்றும் கடலில் கலப்பதால் மீன்கள் இறத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 55-ன்கீழ் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து திரு. ஜி.கே. மணி, திரு. தி. வேல் முருகன் ஆகியோரில் ஒருவர், மாண்புமிகு செய்தி-விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்ப்பார்கள். திரு. தி. வேல் முருகன். நிகழ்ச்சி நிரலில் இருப்பதை வாசித்தால் போதும்.

*முற்பகல் 10–45*

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் சிப்காட் தொழிற்பேட்டையில் உள்ள தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுகளால் நிலத்தடி நீர் விஷத்தன்மையாகி பல்வேறு நோய்கள் ஏற்படுதல் மற்றும் கடலில் கலப்பதால் மீன்கள் இறத்தல் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி-விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

***மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

#### அறிக்கை

கடலூர் மாவட்டம், குடிக்காடு கிராமத்தில் அமைந்துள்ள சிப்காட் தொழில் வளாகம் கடலூர் நகரத்திலிருந்து 15 கி.மீ. தூரத்திலுள்ளது. இவ்வளாகம் 1984 ஆம் ஆண்டு தமிழக அரசால் இரசாயனத் தொழிற்சாலைக்கென அமைக்கப்பட்டது. தற்போது இத்தொழில் வளாகத்தில் 25 தொழிற்சாலைகள் இயக்கத்தில் உள்ளன. இத் தொழிற்சாலைகள் அனைத்தும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்து இயங்கிவருகின்றன.



முன்பு, சுத்திகரிக்கப்பட்ட தொழிற்சாலைக் கழிவுநீர் சிப்காட் வடிகால் வழியாகவும், உப்பனார் ஆற்றிலும், ஆவியாக்குதல் மூலமும் தொழிற்சாலையில் உள்ள தோட்டங்களிலும் வெளியேற்றப்பட்டு வந்ததால் நிலத்தடிநீர் மாசு ஏற்படுவதாக பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்தன. கடலூர் சமூக நீதிப் பிரிவு கொடுத்த மனுவின்மீது மாநில மனித உரிமை ஆணையம் 1998 ஆம் வருடம் சிப்காட் வளாகத்தையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும் பார்வையிட்டு சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரினை பாதுகாப்பான முறையில் குழாயின்மூலம் எடுத்துச்சென்று கடலில் விடவேண்டும் என்று பரிந்துரை செய்தது. மேலும், சிப்காட் வளாகத்தில் புதிதாக இரசாயனத் தொழிற்சாலைகள் அனுமதிக்கக்கூடாது என்றும் பரிந்துரை செய்தது. அதன்படி சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை, கடலில் வெளியேற்றுவதற்காக திருவாளர்கள் கடலூர் சிப்காட் தொழிற்சாலைகள் பொது உபயோக நிறுவனம் (M/s. Cuddalore SIPCOT Industries Common Utilities Limited) ஏற்படுத்தப்பட்டது. இந்த நிறுவனம் சிப்காட் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை குழாய்மூலம் எடுத்துச்சென்று கடலில் வெளியேற்றத் திட்டமிட்டு கோவாவில் உள்ள தேசிய கடல் ஆராய்ச்சி நிறுவனம் (National Institute of Oceanography) மூலம் ஆய்வு மேற்கொண்டது. National Institute of Oceanography-யின் பரிந்துரைப்படி, கடலுக்குள் சுமார் 2000 மீட்டர் குழாய் பதித்து சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர், கடல்நீருடன் கலக்கப்படுகிறது. இத்திட்டம் ஜனவரி 2000-த்திலிருந்து செயல்பட்டு வருகிறது. கடலில் வெளியேற்றப்படும் நீரின் தரத்தை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஆய்வு செய்து வருகின்றது. நீரின் தரம், வாரியம் நிர்ணயித்துள்ள தரத்திற்கு உட்பட்டுள்ளது. மேலும் தொழிற்சாலைகள் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை சரிவர இயக்கி வருகின்றனவா என்பதைக் கண்காணிக்கும்வண்ணம் வாரியம் கழிவுநீர் மாதிரி எடுத்து ஆய்வு செய்தும் வருகிறது. நிலத்தடிநீரின் தன்மையை அறிய சிப்காட் வளாகத்தைச் சுற்றி ஐந்து இடங்களில் கிணற்று நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு நீரின் தன்மை கண்காணிக்கப்படுகிறது. உப்பனார் ஆற்றின் தரத்தையும் வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகின்றது. மேற்படி தொழிற்சாலைகளின் கழிவுநீரினை கடலில் வெளியேற்றத் தொடங்கியதிலிருந்து உப்பனார் ஆற்று நீரின் தரத்தில் முன்னேற்றம் காணப்படுகின்றது. மாநில மனித உரிமை ஆணையத்தின் பரிந்துரையின்படி தற்போது இயங்கிக்கொண்டிருக்கும் கடலூர் சிப்காட் வளாகத்தில் புதிதாக இரசாயனத் தொழிற்சாலைகள் ஏதும்

அனுமதிக்கப்படவில்லை. சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் முழுவதும் முறைப்படி கடலில் வெளியேற்றப்படுவதால் நிலத்தடி நீரும் மற்றும் உப்பனார் ஆற்று நீரின் தரமும் முன்னேற வாய்ப்புள்ளது.

கடலில் கழிவுநீர் வெளியேற்றப்படுவதால் மீன்கள் இறப்பதாக புகார்கள் ஏதும் வாரியத்தால் இந்நாள்வரை பெறப்படவில்லை. மேலும் சிப்காட் தொழிற்சாலைக் கழிவுகளினால் பெண்கள் மலட்டுத் தன்மை அடைதல், பொதுமக்களுக்கு நோய்கள் வருவதாக தற்போது புகார்கள் ஏதும் வாரியத்திற்கு வரவில்லை. இருப்பினும் இதுசம்பந்தமாக தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறையுடன் இணைந்து ஆய்வு மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே, அவையிலே இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற அந்த அறிக்கையில், கடலூர் மாவட்டம் குடிக்காடு கிராமத்தில் அமைந்துள்ள சிப்காட் தொழில் வளாகம் கடலூர் நகரிலிருந்து 15 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்கள். கடலூர் நகராட்சியில் கடலூர் பழைய நகர் என்ற ஒன்று இருக்கிறது. கடலூரிலிருந்து சிப்காட் வளாகம் அதிகபட்சமாக இரண்டு கிலோமீட்டர் தூரத்தில்தான் அமைந்திருக்கின்றது என்பதை பேரவைத் தலைவர் மூலமாக அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இரண்டாவதாக, தற்போதைய தொழில் வளாகத்தில் 25 தொழிற்சாலைகள் இயக்கத்தில் உள்ளன என்று அரசு அறிவித்துள்ளது. நான் கடலூர் மாவட்டத்திலே இருக்கின்றேன். நான் அங்கே இருக்கக்கூடிய பல்வேறு தொழிற்சங்கங்களில் பொறுப்பு வகிக்கின்றேன். தற்போது, அங்கு 33 தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல 25 தொழிற்சாலைகள் இயக்கத்தில் உள்ளது என்ற...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல் முருகன், உங்களுடைய கேள்வியைத்தான் கேட்கவேண்டும். இந்த அவையிலே வைத்திருக்கிற அறிக்கையிலே உங்களுடைய கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்விக்குத்தான் வருகிறேன். ஆக, 25 தொழிற்சாலைகள் என்றால், மீதமுள்ள தொழிற்சாலைகள் அரசின் கவனத்திற்கு வந்துள்ளனவா என்பதை அறிய விரும்புகிறேன்.



அடுத்தபடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1998 ஆம் ஆண்டு மனித உரிமை ஆணையம் அந்தப் பகுதிக்கு விசாரணை செய்ய வந்து, சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை பாதுகாப்பான முறையில் குழாய்மூலம் எடுத்துச் சென்று கடலில் விடவேண்டுமென்று பரிந்துரை செய்தது என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதே பகுதியில் மனித உரிமை ஆணையம், குடிக்காடு என்னும் ஒரு கிராமத்தில், அது மக்கள் வாழ்வதற்கு தகுதியற்ற இடம் என்று அந்த அறிக்கையிலும் தந்திருக்கிறார்கள். ஆக, கடலூர் சிப்காட் வளாகத்தைச் சுற்றியுள்ள நூற்றுக்கணக்கான கிராமங்களில், இன்றைக்கு மனித இனம் வாழ்வதற்கான சாத்தியக்கூறுகள், காலப்போக்கில் அழிவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்று பல்வேறு தொண்டு நிறுவனங்களும், மனித உரிமை ஆணையமும் அறிவிப்புகள் தந்திருக்கின்றன. கடலூர் சிப்காட்டைப் பொறுத்தவரையில் அங்கே இருக்கக்கூடிய ஒவ்வொரு தொழிற்சாலையும் பல்வேறு வகையான கழிவுநீரினை அந்தப் பகுதியிலே உண்டாக்கி அங்கே இருக்கக்கூடிய மக்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல் முருகன், இதில் சொற்பொழிவு இல்லை. கேள்வி மட்டும்தான் கேட்கவேண்டும்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கக்கூடிய அந்தக் கம்பெனிகளால் பல்வேறு கழிவுகள் ஏற்படுத்தப்பட்டு, இப்போது பல்வேறு உயிரினங்கள் - கடந்த ஆண்டுகூட இரண்டு உயிர்கள் - அங்கு மடிந்து போய் இருக்கின்றன. இந்தப் பேரவையின் மூலமாக நான் சிப்காட் வளாகத்தைப்பற்றி தெரிந்துகொள்வதற்கு விருப்பப்படுகின்றேன். ஆகவே ஒரு முழுமையான வெள்ளை அறிக்கையை வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள், அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த சிப்காட் வளாகம் அமைந்துள்ள இடம் கடலூர் நகரத்திலேயிருந்து 15 கிலோ மீட்டர் தூரத்தில் அல்ல, இரண்டு கிலோ மீட்டர் தூரத்திலேதான் இருக்கிறது என்று சொன்னார்கள். தூரம் என்பது முக்கியத்துவம் அல்ல. அந்தக் கழிவுநீர் சுத்தப்படுத்தப்பட்டதா; அந்தக் கழிவுநீர் கடலில் கலப்பதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்பட்டதா; என்பதுதான் இந்தக் கவன ஈர்ப்பின் மிக முக்கியமான நோக்கம்.

[திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு] [2001 ஆகஸ்ட் 25

அடுத்ததாக இந்தத் தொழில் வளாகத்திலே 25 தொழிற்சாலைகள் இருக்கின்றன என்று நாங்கள் பேரவையிலே அறிக்கை வைத்துள்ளோம். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 33 தொழிற்சாலைகள் அங்கே அமைந்துள்ளதாகச் சொன்னார்கள். ஆனால், எங்களுக்கு அதிகாரப்பூர்வமாக கிடைத்த தகவலின்படி 25 தொழிற்சாலைகள்தான் அங்கே இயக்கத்திலே உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற தொழிற்சாலைகள் மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல் இயக்கத்தில் இல்லாமல் இருக்கலாம். பலகாலமாக அவை நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கலாம்.

*முற்பகல் 10-50*

மாநில மனித உரிமைகள் ஆணையம் 1998 ஆம் ஆண்டு சிப்காட் வளாகத்தையும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும் பார்வையிட்டு, சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரினைப் பாதுகாப்பான முறையில் குழாயின்மூலம் எடுத்துச்சென்று கடலில் விடவேண்டும் என்று பரிந்துரை செய்தது. சிப்காட் வளாகத்தில் புதிதாக இரசாயனத் தொழிற்சாலைகள் அமைக்கக்கூடாது என்றும் பரிந்துரை செய்தது. அதன்படி, அந்தப் பரிந்துரையின்பேரில், சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை கடலில் வெளியேற்றுவதற்காக திருவாளர்கள் கடலூர் சிப்காட் தொழிற்சாலைகள் பொது உபயோக நிறுவனம்— M/s. Cuddalore SIPCOT Industries Common Utilities Limited—ஏற்படுத்தப்பட்டது. இந்த நிறுவனம் சிப்காட் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை குழாய் மூலம் எடுத்துச்சென்று கடலில் வெளியேற்றத் திட்டமிட்டு, கோவாவில் உள்ள தேசிய கடல் ஆராய்ச்சி நிறுவனம் National Institute of Oceanography மூலம் ஆய்வு மேற்கொண்டது. மேற்படி ஆய்வின் பரிந்துரையின்படி.(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவையில் வைக்கப்பட்ட அறிக்கையை வாசிக்க வேண்டிய அவசியம் இல்லை. அதை உறுப்பினர் தெரிந்துகொள்வார்.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** சுமார் 2000 மீட்டர் குழாய் பதித்து, அனைத்து கழிவுநீரும் கடலிலே விடப்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தன்னுடைய தொகுதிக்கு உட்பட்ட காரணத்தால், இதிலே தன்னையும் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று கடலூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. புகழேந்தி அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அவர்கள் ஒரு கேள்வி கேட்பார்கள்.



2001 ஆகஸ்ட் 25]

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் சிப்காட் வளாகத்தில், 1984 ஆம் ஆண்டு அப்போது இருந்த அண்ணா தி.மு.க.-வினுடைய அரசால் இரசாயனத் தொழிற்சாலையாக அவை அங்கே நிர்மாணிக்கப்பட்டன. அதற்குப் பிறகு, இரசாயனத் தொழிற்சாலையின் மூலமாக வருகின்ற அந்தக் கழிவுநீரினால், பெண்கள் மலட்டுத் தன்மை அடைதல், அதுமட்டுமல்லாது, பொது மக்களுக்குப் பல நோய்கள் வருதல் ஆகிய நிலைகள் எல்லாமும், குடிநீர்கூட விஷத்தன்மையுடையதாக மாறுகின்ற நிலைமையும், கடலில் இருக்கின்ற, உப்பனாற்றிலே இருக்கின்ற மீன்கள் எல்லாம் இறந்துவிடுகின்ற ஒரு சூழ்நிலையுமாக, புகார்கள் தொடர்ந்து வந்ததன் காரணமாகத்தான் மாநில மனித உரிமைகள் ஆணையம் அங்கு வந்ததும், பிறகு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில், நானே சட்டமன்ற உறுப்பினராக அப்போது இருந்த சூழ்நிலையில், இரண்டு முறை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவை எல்லாம் அமைச்சர் அளித்த அறிக்கையில் வந்துவிட்டன. நீங்கள் கேட்கவேண்டிய கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** அதற்குப் பிறகு, கடலிலே 2000 மீட்டருக்கு மேலாக, குழாய் மூலமாக அந்த சுத்திகரிக்கப்பட்ட நீர் போவதற்கான நிலையை வகுத்து, 2000 ஆம் ஆண்டிலே முடிவு செய்யப்பட்டது. ஆனால், நான் கேட்க விரும்புவது, பொது மக்களிடமிருந்து, இப்போது வருகின்ற புகார்கள் எவ்வளவு? அல்லது மீண்டும் அங்கே ஆய்வு நடத்தப்படுகிறதா? அதற்கு அடுத்ததாக தொடர்ந்து உப்பனாற்றினுடைய தரத்தையும், அங்கே வெளியேற்றப்படுகின்ற கழிவுநீர் - 25 தொழிற்சாலைகள் என்கிறீர்கள், உறுப்பினர் 35 தொழிற்சாலைகள் என்பதால், அவை சரியாகக் கண்காணிக்கப்பட்டு, வெளியேறுகின்ற கழிவு நீரால் பொதுமக்கள் கிராமத்திலே பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறதா என்பதைக் கண்காணிப்பதற்கான குழு, தரத்தையும், அங்கு இருக்கின்ற நிலத்தையும், நீரின் அளவையும் மற்றவற்றையும் பார்வையிடுவதற்கும், மாதத்திற்கு ஒருமுறையாவது தொடர்ந்து கண்காணித்து, அரசுக்கு அறிவித்து, அது மக்களுக்குத் தெரிவிக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலமாக தொடர்ந்து உப்பனாற்றின் தரம் கண்காணிக்கப்பட்டு வருகின்றது. மற்றும்

[திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு] [2001 ஆகஸ்ட் 25

கடலில் அந்தக் கழிவுநீர் கலப்பதினால் அங்கே மீன்கள் இறந்து விடுகின்றன. அதனால் அந்த உப்பனாற்றின் ஓரத்தில் இருக்கின்ற பெண்களுக்கு எல்லாம் மலட்டுத் தன்மை ஏற்படுகின்ற வாய்ப்பு இருக்கிறது என்று எங்களுடைய கவனத்திற்கு எந்தவிதமான புகாரும் வரவில்லை. அப்படி வந்தால், நிச்சயமாக அதன்மீது நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

## 5. திருத்திய வரவு செலவுத் திட்டம், 2001-2002, பொது விவாதம்-தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம்.*

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு ஒரு விண்ணப்பம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்களுடைய கவனத்திற்கு நான் ஒரு செய்தியைக் கொண்டுவர விரும்புகிறேன். எதிர்க்கட்சியிலே அமர்ந்திருக்கின்ற எங்களுக்கு, எதிர்க்கட்சியினுடைய உரிமையையும், அவர்களுடைய வாய்ப்பும் முடக்கப்படாமல் பார்த்துக்கொள்கிற பொறுப்பு மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு உண்டு. உங்களை முழுக்க முழுக்க நம்பித்தான், உங்கள்மீது மதிப்பு வைத்துத்தான் இந்த அவையிலே நாங்கள் பணியாற்றுகிறோம். அப்படி இருந்தால்தான் பணியாற்ற முடியும். அதுதான் ஜனநாயகமும்கூட. ஆனால்-இரண்டு நாட்களாக நான் தங்களிடத்திலே கேட்டும், நேற்று மாலை வெளிநடப்பு செய்ய வேண்டிய நிலைமை வந்ததற்காக வேறு வழியில்லாமல் அதைச் செய்ய வேண்டி வந்தது. காரணம் 3 தினங்களாக ஒவ்வொரு முறையும் எங்கள் இயக்கத்தைச் சேர்ந்த அருமைச் சகோதரர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். பெயர் பட்டியலில் இருக்கும். ஆனால் வந்து பார்த்துக்கொண்டே போனால், இரயிலில் ஏறுகிறவர்கள், கொஞ்சம் கொஞ்சமாக உட்கார்ந்திருப்பவர்களைத் தள்ளு, தள்ளு என்று சொல்லி மற்றவர்களைத் தள்ளி, கடைசியில் அவரை வழியனுப்புவதைப்போல, ஒவ்வொரு நாளும் அவருக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், நான் சொல்கிறேன்.



2001 ஆகஸ்ட் 25]

**திரு. துரைமுருகன்:** நான் பேரவைத் தலைவரை கேட்டபோதுகூட, நீங்கள் நேற்று சொன்னீர்கள், இன்றைக்கு மாலை 6-00 மணிக்கு அவர் பேசுவார் என்று சொன்னீர்கள். தங்கள் வார்த்தையை நான் முழுக்க முழுக்க நம்பி அவரிடத்திலே சொல்லியிருந்தேன். பேரவைத் தலைவருடைய வார்த்தைகூட நேற்று இங்கே செயல்படாமல் போனதிலே, அதனாலே எனக்கு ஒன்றும் இல்லை. தங்கள் சொல்லுக்கு மதிப்பு இல்லாமல் போய்விட்டதே என்றுதான் எனக்கிருக்கிற கவலை. ஆகையினாலே அதை நிரூபிக்கிறவகையிலே இன்று அவருக்கு 5 நிமிடங்கள் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்காமலேயே அதற்கான பதிலை நான் சொல்லவேண்டுமென்று நினைத்திருந்தேன். எதிர்க்கட்சிகளுடைய குரலை ஒடுக்கவேண்டுமென்பதல்ல நோக்கம். எல்லா உறுப்பினர்களுக்குமே பேசவேண்டுமென்ற ஆர்வம் இருக்கிறது, விருப்பம் இருக்கிறது. தாங்கள் இங்கே வெளிப்படையாகத் தெரிவித்திருக்கிறீர்கள், நேற்று வெளிநடப்பும் செய்தீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், என்னுடைய அறையிலே வந்து தர்ணா பண்ணாத குறையாக அவருடைய உறுப்பினர்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பில்லை என்று சொன்னார்கள். திருமதி யசோதா அவர்கள், போளூர் வரதன் அவர்கள், டாக்டர் ஜெயக்குமார் அவர்கள் ஆகியோருக்குப் பேச வாய்ப்பு இல்லையே என்று வருத்தப்பட்டுக் கொண்டு போய்விட்டார்கள். ஆளும்கட்சி உறுப்பினர்களுடைய வரிசையிலே 30, 40 பேர்களுடைய பெயர்கள் கொடுக்கப்பட்டன. அதிலே 11 பேர்தான் தேர்ந்தெடுக்கப்பட்டு பேசியிருக்கிறார்கள். நான் ஒரு புள்ளிவிவரத்தை வாசிக்கிறேன். விவாதத்திலே கலந்துகொண்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் 11 பேர். 136 பேர்கள் கொண்ட ஆளும் கட்சியில் 11 பேர்களுக்குத்தான் அனுமதி கொடுக்கப்பட்டது. அவர்கள் பேசிய நேரம் 2 மணி 50 மணித் துளிகள். தி.மு.க. சார்பாகப் பேசியவர்கள் 5 பேர். பேசிய நேரம் 2 மணி 41 மணித் துளிகள். தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக 5 பேர், பேசிய நேரம் 1 மணி 52 மணித் துளிகள். பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் 4 பேர், பேசிய நேரம் 1 மணி 13 மணித் துளிகள். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பில் 3 பேர், பேசிய நேரம் 1 மணி 3 மணித் துளிகள். மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் 3 பேர். பேசிய நேரம் 58 மணித் துளிகள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் 3 பேர். பேசிய நேரம் 1 மணி நேரம் 11*

மணித் துளிகள். பாரதிய ஜனதா கட்சியில் 2 பேர். பேசிய நேரம் 29 மணித் துளிகள். எம்.ஜி.ஆர்.அண்ணா தி.மு.க. சார்பில் ஒருவர். பேசிய நேரம் 25 மணித் துளிகள். ஃபார்வார்டு பிளாக் சார்பில் ஒருவர். பேசிய நேரம் 27 மணித் துளிகள். இந்திய தேசிய லீக்கில் ஒருவர், பேசிய நேரம் 49 மணித் துளிகள். ஆக, இவ்வளவுதான் பேசப்பட்டிருக்கிறது. ஆக, எதிர்க்கட்சிகளுடைய குரலை ஒடுக்க வேண்டுமென்பதல்ல. தாங்கள் என்மீது வைத்திருக்கிற மதிப்புக்கும், மரியாதைக்கும் நான் நன்றி செலுத்துகிறேன். எனக்கும் விருப்பம், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆரைப் பேசவிட வேண்டுமென்று எனக்கும் விருப்பம். எங்களுக்குத் தெரியாத கே.கே.எஸ்.எஸ்.ஆரா? (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே அவர் பேசவேண்டுமென்று எனக்கு விருப்பம். அதுவும் அவர் பேசினால் எனது சொந்தப் பகுதியைப்பற்றிப் பேசுவார். அதிலே எனக்கும்கூட நன்மை உண்டு. ஆனால் என்னுடைய விருப்பம் நிறைவேற முடியவில்லை. ஏனென்றால், பேசுகின்ற உறுப்பினர்கள் மணி அடித்தவுடனே பேச்சை முடித்துவிடுவதாக வாக்களித்தால் நான் எல்லா உறுப்பினர்களையும் பேச அனுமதிப்பதற்கு, என்னால் வாய்ப்பு வழங்க முடியும். அது முடியாத காரணத்தால்தான் சில சிக்கலினால்தான் இப்படி ஆகிவிட்டதே தவிர, வேறல்ல. இன்றைக்கு தலைவர்கள் வரிசைக்கு வந்ததற்குப் பிறகு இனிமேல் எடுப்பது முறையல்ல. மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள். (குறுக்கீடு)

**திரு. ஆஸ்டின்:** Point of order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே முன்னாள் முதல்வர் கைது செய்யப்பட்டது தொடர்பாகவும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஆஸ்டின் அவர்களை அனுமதிக்கவில்லை, உட்காருங்கள். நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001–2002 ஆம் ஆண்டுக்கான மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வகுத்தளித்த நிதிநிலை அறிக்கையின்மீது பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே பேசுவதற்கு வாய்ப்பினைக் கொடுத்த தங்களுக்கு நன்றி கலந்த வணக்கத்தை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கை மீது சொல்லும்போது,

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி"



என்பதற்கேற்ப, பாட்டாளி மக்கள் கட்சி நடுநிலையோடு சில ஆக்கபூர்வமான கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறது என்பதை நான் முதலிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விருப்பு வெறுப்பு இல்லாமல் வரவேற்கக்கூடிய அம்சங்கள் இடம் பெற்றிருக்கக்கூடிய அதே சூழ்நிலையில், ஆலோசனைகளாகச் சொல்லவேண்டிய கருத்துக்களையும் சொல்லக்கூடிய நிலையிலே இருக்கிறது என்பதைத் தெரிவித்து, ஓர் அரசு என்பது எப்படிப்பட்ட பண்புகளைக் கொண்டிருக்கவேண்டும் என்று வள்ளுவப் பெருந்தகை அழகாகச் சொல்லியிருக்கிறார்.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"

என்று சொல்லியிருக்கிறார்கள். அரசினுடைய பண்புகளைச் சொல்லுகிறநேரத்தில், பொருள் வரும் வழிகளை உண்டாக்குதல், அதைச் சேமித்தல், காத்து வைத்தல், மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையிலே பிரித்துக்கொடுத்தல் போன்ற நல்ல பண்புகளை உள்ளடக்கியதுதான் ஒரு சிறந்த அரசாகும் என்று வள்ளுவப் பெருந்தகை அவர்கள் அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அந்தவகையிலே இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கின்ற நேரத்திலே—ஒரு நாட்டினுடைய பொருளாதார முன்னேற்றத்திற்கு—சமூக வளர்ச்சியையும், பொருளாதார முன்னேற்றத்தையும் ஒருங்கிணைத்து சமூக நீதியை உருவாக்க வேண்டும் என்பதுதான் தலையாய கடமையாக இருக்கிறது என்பதை இந்த அறிக்கையிலேயிருந்து நான் படித்துப் பார்த்துத் தெரிந்துகொண்டேன்.

முற்பகல் 11-00

அதிலும் இன்னொன்றை குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் நம்முடைய தமிழகம் எல்லா வளத்தையும் பெற்றிருக்கிறது. எனக்கு ஒரு சினிமாப் பாடல் நினைவுக்கு வருகிறது. ஏதோ சினிமாப் பாட்டு என்று சொல்வதற்காக இல்லை. அமரர் எம்.ஜி.ஆர். அவர்கள் படத்திலே வந்த பாடல்; பொருள் பொதிந்த பாடல்;

'என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்,
ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்,
ஒழுங்காய்ப் பாடுபடு வயல்காட்டில்,
உயரும் உன் மதிப்பு வெளிநாட்டில்'

இது சினிமாப் பாடல் வரிகளாக இருந்தாலும்கூட தமிழகத்திற்குப் பெருமை சேர்ப்பது மாத்திரமல்ல, இந்த நாட்டினுடைய

பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு, நம்முடைய பெருமையை உயர்த்துவதற்கு வழிகாட்டக்கூடிய பாடலாக அமைந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டக்கூடிய அதே நேரத்திலே, நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையிலே பரந்த நிலம் இருக்கிறது. இங்கே வரலாற்றுச் சிறப்புமிக்க ஆறுகளை தன்னகத்தே கொண்டு நீர்வளம் இருக்கக்கூடிய இந்தத் தமிழகத்திலே இப்பொழுது நீர்வளம் குறைந்துகொண்டிருக்கக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

அதைப்போலவே பரந்து விரிந்த காட்டுவளம் இருக்கிறது. மிகப் பெரிய நீண்ட எல்லையைக் கொண்ட கடல்வளம் இருக்கிறது. இதற்கும் மேலாக மனித வளம் மிகுதியாக இருக்கிறது. ஆகவே இத்தனை வளங்களையும் கொண்ட தமிழகத்திலே நல்ல பொருளாதார நிலைமையை உருவாக்குகின்ற ஒரு வாய்ப்பிலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக பொருளாதாரக் கொள்கைக்கான ஒரு கொள்கையைத் தொடர்ந்து சொல்லிவருகிறோம். அந்தக் கோட்பாடு என்னவென்று சொன்னால் ஒரு நாட்டினுடைய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு Primary sector என்று சொல்லக்கூடிய ஆதாரத் துறை அதாவது வேளாண்மைத் துறை. இந்த வேளாண்மைத் துறையிலே முக்கிய இடம் பெறுவது விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன் வளம், கனிமவளம். இவையெல்லாம் முதலாவது துறை என்று சொல்லக்கூடிய Primary sector-லே இடம் பெறுகின்றன. ஆக இப்படி முதலாவது துறையிலே இடம்பெறக் கூடிய இந்தத் துறையிலே நாட்டிலே இருக்கக்கூடிய 80% மக்கள் தொகை இதைத் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். இந்த 80%–லே 60% பேர் விவசாயத்தையே நம்பி வாழக்கூடியவர்கள். 20% பேர் மீனவர்கள், மற்ற தொழிலைச் செய்யக்கூடியவர்கள். ஆக, இப்படி கிராமப்புறங்களை நம்பியிருக்கிற காரணத்தினாலேதான் அண்ணல் காந்தியடிகள் போன்றவர்கள், நாட்டின் முதுகெலும்பு கிராமங்கள் என்று சொல்லி, இந்த நாட்டினுடைய இதயத் துடிப்பு கிராமங்கள் என்றெல்லாம் சொன்னார்கள். ஆகவே இப்படிப்பட்ட துறைக்கு என்ன முக்கியத்துவம் என்று பார்க்கவேண்டும்.

அதை அடுத்து இரண்டாவதாக இருக்கக்கூடிய Secondary sector என்று சொல்லக்கூடிய உற்பத்தி செய்யக்கூடிய தொழில் துறை. இந்தத் தொழில் துறையிலே பெரும் தொழில், பெரும் தொழிற்சாலைகள், நடுத்தரத் தொழில், சிறு தொழிற்சாலைகள் இவற்றோடு குடிசைத் தொழிலும் சேர்ந்து அடங்கும். இதிலே மின்சாரம், குடிநீர் வசதி, எரிசக்தி போன்ற அம்சங்களும் இடம்பெறுகின்றன.



இதையடுத்து இருக்கக்கூடியது மூன்றாவது துறை என்று சொல்லக்கூடிய Service sector. அதாவது அரசாங்கத்தினுடைய சேவைத் துறை. சேவைப் பணிகள் அத்தனையும் அடங்கக்கூடிய காரணத்தாலே இதிலே அடங்குவது கல்வி, வர்த்தகம், கப்பல் போக்குவரத்து, மருத்துவம் போன்ற அரசினுடைய அனைத்து சேவைகளும் இதில் அடங்குகின்ற காரணத்தால்தான் இவற்றையெல்லாம் மையமாக வைத்து பொருளாதாரத்தை உருவாக்க வேண்டும் என்று சொல்லி பாட்டாளி மக்கள் கட்சி கொள்கையாகவே தன்னகத்தே கொண்டிருக்கிறது. ஆகவே இப்படி கொள்கையைக் கொண்டிருக்கக்கூடிய பாட்டாளி மக்கள் கட்சி இந்த நிதிநிலை அறிக்கையைப் படித்துப் பார்த்தவுடனே நாங்கள் மகிழ்ச்சியுற்றோம். ஆகையால் நாம் எதை வலியுறுத்துகிறோமோ அந்த அம்சங்கள் எல்லாம் இடம் பெற்றிருக்கின்ற காரணத்தாலேதான் முதலாவது எடுத்த எடுப்பிலே இதைப் படித்தவுடனே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களாலே கொண்டுவரப்பட்ட நிதிநிலை அறிக்கை என்பது மிகுந்த எச்சரிக்கையோடு தயாரிக்கப்பட்டிருக்கிறது; அவர் விவசாயக் குடும்பத்திலே பிறந்தவர் என்ற காரணத்தாலே ஒரு நல்ல முனைப்போடு கொண்டுவந்த நிதிநிலை அறிக்கை என்று சொல்லி பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நான் இதை மனதார வரவேற்கிறேன். பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே இப்படி இவற்றையெல்லாம் வரவேற்கக்கூடிய நேரத்திலே இதை உள்ளார்ந்து பார்க்கின்ற நேரத்திலே இதற்கு சில முழுமையான விரிவுரைகள் இருக்கின்றன; திட்டங்கள் இருக்கின்றன. ஆனால் சில இடங்களிலே குறைபாடுகளும் இருக்கின்றன. அதை ஆலோசனையாகவும் சொல்லவும் விரும்புகிறேன் என்பதை இங்கே சுட்டிக்காட்டுகிறேன்.

*முற்பகல் 11-05*

அதைப்போலவே பாராட்டக்கூடிய அம்சங்கள் என்று சொல்லுகிற நேரத்திலே பல்வேறு கட்சிகள், கம்யூனிஸ்ட் கட்சியும் சொல்லிவருகிறது. பாட்டாளி மக்கள் கட்சி இயக்கத்தினர் தொடங்கிய காலத்திலேயிருந்து இன்றையவரையிலும் சொல்லுகிறோம். இந்த மாமன்றத்திலே தொடர்ந்து பேசினோம். இந்த நாட்டிற்கு மிக முக்கியமானது உழவுத் தொழில். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்று சொல்லுகிறோம். உழுவார் உலகத்துக்கு அச்சாணி என்று சொல்லுகின்றோம். இப்படி எத்தனைதான் சொன்னாலும்கூட எல்லோருக்கும் சோறு போடுவது உழவுத் தொழில். விவசாயிகள் சேற்றிலே கை வைக்கவில்லை என்று சொன்னால் நாம் சோற்றிலே கை வைக்க முடியாது. ஆகவே, இப்படி

முக்கியத்துவம் வாய்ந்த இந்த உழவுத் தொழிலுக்கு, விவசாயத் தொழிலுக்கு தொழில் துறை அந்தஸ்து வேண்டுமென்று சொல்லி நாங்கள் பலமுறை தொடர்ந்து பேசினோம். ஈடேறவில்லை என்று சொன்னாலும்கூட, இந்த நிதிநிலை அறிக்கையிலே தொழில் துறை அந்தஸ்து வழங்கப் பட்டிருக்கிறது என்று சொன்ன விதத்தை நாங்கள் மனதாரப் பாராட்டுகிறோம், வரவேற்கிறோம். அதேநேரத்திலே இந்த வேளாண்மையிலே உற்பத்தி செய்யக்கூடிய பொருளுக்கு விற்பனை வேண்டும். இந்த விற்பனையைச் செய்வதற்கு விவசாயிகளுக்கு உரிய விலை கிடைப்பதில்லை. இந்த நாட்டிலே நாம் பார்க்கிறோம். குண்டூசி, சோப்பு, கண்ணாடி, சீப்பு அல்லது மை, எந்தப் பொருளை உற்பத்தி செய்தாலும்கூட, உற்பத்தி செய்யக்கூடியவனுக்கே விலையை நிர்ணயம் செய்யக்கூடிய அதிகாரம் இருக்கிறது. ஆனால் விவசாயி உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்ய முடியவில்லை. தக்காளி பயிரிடுகிறான்; கத்தரிக்காய் பயிரிடுகிறான்; வாழைக்காய் பயிரிடுகிறான். இப்படிப் பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்தாலும்கூட, மார்க்கெட்டுக்குச் சென்றால், இன்றைக்கு ஒரு விலை, நாளைக்கு ஒரு விலை, விலையில்லாமல் எடுத்து வரக்கூடிய நிலையெல்லாம்கூட இருக்கிறது. ஆகவே, இந்த நிலையை மாற்ற வேண்டுமென்று சொல்லக்கூடிய வகையிலே, விவசாயிகளுக்குச் சொல்வது மாத்திரம் அல்ல, நுகர்வோரும் பயன்படக்கூடிய வகையிலே பாட்டாளி மக்கள் கட்சி ஒரு கருத்தைச் சொல்லி வந்தது. ஆகவே, உரிய பொருட்களுக்கு, உற்பத்திச் செய்யக்கூடிய பொருட்களுக்கு உரிய விலை வேண்டுமென்று சொல்லக்கூடிய வகையிலே விவசாயிகளை உள்ளடக்கிய ஒரு குழு அமைக்க வேண்டும்; அந்தக் குழுவிலே விவசாயிகள் இருக்க வேண்டும்; நுகர்வோர் இருக்க வேண்டும்; இவர்களை நிர்வாகம் செய்யக்கூடிய அரசு அதிகாரிகள் இருக்க வேண்டும்; இவற்றையெல்லாம் அமைத்து, விவசாயிகள் கட்டுப்படியான விலை வேண்டுமென்று சொல்கிற நேரத்திலே நுகர்வோரையும் மையப்படுத்தி சரியான விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை இங்கே நான் முன்வைக்கிறேன். இப்படி விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கின்ற நேரத்திலே, நுகர்வோருக்கும் கட்டுப்படியான விலையிலே உணவுப் பொருட்கள் கிடைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

உதாரணத்திற்கு, இந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் தேதியிலே இருந்து அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் இறுதித் தேதி வரையிலே என்று



சொன்னால் இந்த ஆண்டிலே பொன்னி நெல் ஒரு குவிண்டாலுக்கு இந்த விலை, புளி ஒரு கிலோ இவ்வளவு விலை; அரிசி இவ்வளவு விலை; பருப்பு இவ்வளவு விலை என்று எல்லா பொருட்களுக்கும் விலையை அரசு நிர்ணயிக்கின்ற நேரத்திலே, நுகர்வோருக்கு அடக்கமான விலையிலே உணவுப் பொருட்கள் கிடைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கும் என்ற காரணத்தினாலே இந்த அரசு இதை நிறைவேற்ற வேண்டுமென்று இங்கே நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே வேளாண் வணிகத் துறை என்ற ஒரு துறையை நீங்கள் அறிமுகம் செய்வதாகச் சொல்லியிருக்கிறீர்கள். உண்மையிலேயே மனதார வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய கோரிக்கைக்கு புத்துயிர் கிடைத்திருக்கிறது. இதற்குக்கூட கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே, கடந்த ஆண்டுகளிலே நான் பேசியபொழுது, அண்டை மாநிலங்களிலே இதைப்போல, கர்நாடகத்திலேகூட இந்தத் துறை ஒன்று இருக்கிறது. அந்தத் துறையினுடைய அமைச்சர் என்னுடைய நண்பர். ஆகவே, அப்படியெல்லாம் இருக்கிறது என்று சொல்லி நான் வலியுறுத்திப் பேசியும்கூட நிறைவேறாத நேரத்திலே இந்த அரசு இந்த அறிவிப்பு செய்ததை நான் மீண்டும் ஒருமுறை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலவே, தரிசு நில மேம்பாட்டுத் திட்டம். தமிழ்நாடு நீர்வரத்து பொது மேம்பாட்டு முகவர் அமைப்பு, நீர்வளப் பாதுகாப்புத் துறை, சொட்டுநீர்ப் பாசனத் திட்டம், மண்வளப் பாதுகாப்புப் பணிகள், நீர்வள ஆதாரத் திட்டம், வெளிநாட்டில் வாழும் இந்தியர்களின் தொழில் முனைவோர் கூட்டமைப்பு, சிறுதொழில்களை ஊக்குவிக்க அரசு ஆணை எண்75–ஐத் திரும்பப்பெறுதல், மத்திய அரசு கூறியுள்ளவாறு அனைவருக்கும் கல்வித் திட்டம், தருமபுரி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து கிருஷ்ணகிரியைத் தலைநகராகக் கொண்ட புதிய மாவட்டம் உருவாக்குதல்; இப்படிப் பல்வேறு நல்ல திட்டங்களெல்லாம் இடம் பெற்றிருக்கின்ற காரணத்தினாலே, இதை விரிவாகப் பேச வேண்டுமென்று சொன்னாலும்கூட காலத்தினுடைய அருமை கருதி, நல்ல அம்சங்களெல்லாம் இடம் பெற்றிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டி வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலவே, இன்னொன்று. ஷெட்யூல்டு இன பழங்குடி மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கும் திட்டம் வரவேற்கக்கூடிய அம்சம். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போலவே, அந்த

மாணவிகளுக்கு பட்டமேற்படிப்பு வரை இலவசக் கல்வி வழங்குதல் வரவேற்கக்கூடியது, மனதார வரவேற்கிறோம். அதேநேரத்திலே, வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடிய ஏழையெளிய குடும்பங்களிலே வாழக்கூடிய மிகவும் பின்தங்கியவர், சீர்மரபினர் குழந்தைகளுக்கும் இந்தத் திட்டத்தை நிச்சயமாக விரிவாக்க வேண்டும். அது ஏற்புடையதாக இருக்கும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கையோடு இதை நான் இங்கே முன்வைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆக இப்படிப் பல்வேறு அம்சங்கள் இடம் பெற்று இருக்கின்றன.

*முற்பகல் 11-10*

அதைப்போலவே, மகளிருக்கான நல்ல திட்டங்கள் சொல்லப்பட்டு இருக்கின்றன. நிறைய திட்டங்கள் சொல்லப்பட்டு இருக்கின்றன. அதையும் நான் வரவேற்கிறேன். வயதான பிறகு தாய்மார்களுடைய வாழ்க்கை கேள்விக்குரியதாக ஆகிவிடுகிறது. ஆக, இப்படிக் கேள்விக்குரியதாக இருக்கின்ற காரணத்தினாலே பெற்றவர்களுக்கு, மாமியாருக்கு மருமகள் வந்துவிட்டால் சோறு போடுவதில்லை; கஷ்டமான சூழ்நிலை, பராமரிப்பு இல்லாத சூழ்நிலையாக இருந்து கொண்டிருக்கிறது. வயது முதிர்ந்த தாய்மார்களைப் பராமரிக்க வேண்டும் என்பதை நினைவூட்டுகின்ற வகையிலே பாட்டாளி மக்கள் கட்சியினுடைய கொள்கை திட்டத்தில், பாட்டாளி மகளிர் சங்கத்தின் சார்பில் ஒரு கோரிக்கையை நாங்கள் வைத்து தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். அதை எல்லா நிலைகளிலும் எடுத்துச் சொல்கிறோம். ஆண்டுக்கு ஒரு முறை 'அன்னையர் தினம்' என்று கொண்டாட வேண்டும். 'அன்னையர் தினம்' என்று சொல்கின்ற நேரத்திலே தன்னுடைய மகன் எந்த நாட்டில் எந்தப் பகுதியில் வாழ்ந்து கொண்டிருந்தாலும்கூட ஆண்டுக்கு ஒரு நாள் தன்னுடைய தாயிடத்திலே அமர்ந்து புத்தாடை அணிவித்து வணங்கி பராமரிக்கக்கூடிய எல்லா நிலைகளும் அங்கே உருவாக்கப்படுகின்றன. அப்படி உருவாக்குகின்ற நேரத்திலே மகனாக இருந்தாலும், மருமகளாக இருந்தாலும், பேரக் குழந்தைகளாக இருந்தாலும்கூட ஆண்டுக்கு ஒருமுறை ஈன்றெடுத்த தாயை வணங்கி உபசரித்து தொடர்ந்து பணிவிடை செய்ய வேண்டுமென்ற அந்த எண்ணம் வர வேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் ஆண்டுக்கு ஒரு முறை 'அன்னையர் தினம்' என்று கொண்டாடுவதை அரசே அறிவிக்க வேண்டும்; அது ஒரு பெண் முதலமைச்சராக இருக்கக்கூடிய



மிழ்நாட்டிலே தமிழ் மண்ணுக்குப் பெருமை சேர்க்கக்கூடிய வகையிலே மைய வேண்டும் என்று சொல்லி அதை நான் இங்கே கோரிக்கையாக வக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, வெள்ளை அறிக்கை. வெள்ளை அறிக்கையின்மீது–

**திரு. கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ராமச்சந்திரன், ட்காருங்கள். திரு. ஜி.கே. மணி தொடர்ந்து பேசுங்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வள்ளை அறிக்கையிலே விவாதம் செய்வதற்கான ஒரு வாய்ப்பினைக் காடுக்க வேண்டுமென்று கேட்டிருந்தேன். அவகாசம் இல்லை என்று சான்ன காரணத்தினால் இதிலே பேச வேண்டியிருக்கின்றது. நிறைய பச வேண்டுமென்று இருந்தாலும்கூட, சுருக்கமாக நான் இங்கே சால்லிக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக, கடந்த 10 ஆண்டுகளாக 91–லேயிருந்து நிதிநிலை மிக மோசமாக இருக்கிறது என்றெல்லாம் சால்லப்பட்டு இருக்கிறது. அதிலும் குறிப்பாக கடந்த 2,3 ஆண்டுகளிலே திநிலை மிகவும் சீரழிந்துவிட்டது; தமிழ்நாட்டின் பொருளாதாரமே க்கலாகிவிட்டது என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. 10 ஆண்டுகளைச் சொல்கின்ற நேரத்திலே, 5 ஆண்டுகளைப் பிரித்துச் சால்வது என்பது எங்களுக்கெல்லாம் வருத்தத்தை அளிக்கக்கூடியதாக ருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நிதிநிலையைச் ட்டிக்காட்டுகின்ற நேரத்திலே எதையெல்லாம் பார்க்க வேண்டுமென்று சான்னால் வருவாய்க் கணக்கில் வரவு, வருவாய்க் கணக்கில் செலவு, வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை, மூலதன வருவாய், மூலதனப் பற்றாக்குறை, வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை ஆகிய 7 அம்சங்களையும் தொகுத்துப் பார்க்கின்றபோதுதான், அதிலே இருக்கக்கூடிய எல்லா குறைபாடுகளையும் சொல்ல முடியும். [illegible] வெள்ளை அறிக்கையிலே வருவாய்க் கணக்கிலே வரவு, வருவாய்க் கணக்கிலே செலவு, வருவாய்ப் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை ஆகிய அம்சங்களை மட்டும் சொல்லிவிட்டு, எஞ்சி இருக்கக்கூடிய அம்சங்களைச் சொல்லாமல் இருப்பது சரியல்ல. அதேநேரத்தில் நிதிச்

சுமையின் காரணத்தாலே அரசினுடைய அவல நிலையைக் குறித்து ரிசர்வ் வங்கியிலே மிகைப் பற்றுக் கடன் வாங்க வேண்டி இருக்கிறது என்பது பற்றி எல்லாம் சொல்லப்பட்டு இருக்கிறது. ஆகவே, இப்படி நிதிச் சுமைக்குக் காரணம் என்னவென்று சொன்னால் அதாவது மூலதன வரவு, மூலதனப் பற்றாக்குறை, வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை இந்த மூன்றையும் சொல்லாமல் இருக்கின்ற காரணத்தினாலே, நான் நினைத்துப் பார்க்கிறேன், கடந்த அரசு அதிக மூலதனம் செய்து இருக்கின்ற காரணத்தினாலும் தொழில் துறையிலே பொருளாதார மேம்பாட்டிற்கு நிறைய மூலதனம் செய்திருக்கின்ற காரணத்தினாலேதான் இப்படிப்பட்ட பற்றாக்குறை வந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையிலே வைத்திருக்கின்ற நிதிநிலைக் குறிப்பு பகுதி 1-ஐப் பார்த்தால், அதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு விடை கிடைக்கும். Capital expenditure was not to that extent provided in the previous Government. முன்னாள் ஆட்சியிலே மூலதனச் செலவு அந்த அளவுக்குப் போடவில்லை என்பதை அதிலே நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. இந்த மூன்று அம்சங்களும் இடம்பெறவில்லை என்பதைத்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சொல்லி இருந்தால் அது விளக்கமாக இருந்திருக்கும்; அதைப் புரிந்துகொள்வதற்கும் வாய்ப்பாக இருந்திருக்கும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டுகிறேன்.

*முற்பகல் 11-15*

அதைப்போலவே உள்ளாட்சி. உள்ளாட்சியைப் பொறுத்தவரையிலே மக்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவது உள்ளாட்சி. இங்கே உள்ளாட்சி மன்றங்களுக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது வரையறுத்துச் சொல்லப்படவில்லை. இன்னும்கூட சொல்கிறேன், இந்த நிதிநிலை அறிக்கையிலே...

**திரு. துரைமுருகன்:** Point of order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் capital expenditure, previous Government-ல் அவ்வளவு இல்லை என்று சொன்னார்கள். அதற்கு முன்னாலே 1991-லே capital expenditure எவ்வளவு



இருந்தது, அவர்கள் வரிசையாகச் சொல்வார்களா என்று உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பதில் சொல்வார் இல்லையா, அப்போது அவர் வரிசையாகச் சொல்வார்.

**திரு. துரைமுருகன்:** அப்போது அதையும் அதே பதிலிலே சொல்லியிருக்கலாமே, இப்போது ஏன் குறுக்கே சொன்னார்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி கேட்டதற்குப் பதில் சொன்னார்கள். திரு. மணி பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டிலே இருக்கக்கூடிய அனைத்துத் தரப்பு மக்களுக்கும் எங்கும், எதிலும், எல்லா நிலைகளிலும் சமூக நீதி வேண்டும் என்பது தந்தை பெரியார் அவர்களுடைய கோட்பாடு. ஆகவே, தந்தை பெரியார் அவர்களுடைய கொள்கையை உள்ளடக்கிய பாட்டாளி மக்கள் கட்சியும் அதை வழிநடத்திச் செல்லக்கூடிய சமூகநீதிக் காவலர் டாக்டர் ஐயா அவர்களும் இந்தச் சமூக நீதிக்காக, இட ஒதுக்கீட்டிற்காக எவ்வளவு குரல் கொடுத்து வருகிறார்கள், போராடி வருகிறார்கள் என்பதெல்லாம் உங்களுக்குத் தெரியும். உதாரணத்திற்கு, கடந்த காலங்களிலே 7 நாட்கள் தொடர் சாலை மறியல் போராட்டம் நடந்தது. இதிலே உயிர் இழந்தவர்களுடைய எண்ணிக்கை 27 ஆகும். இப்படித் தொடர்ந்து போராட்டங்கள். தமிழ் மண்ணிலே, தந்தை பெரியார் பிறந்த மண்ணிலே சமூக நீதி வேண்டும் என்று சொல்லக்கூடிய நாம், முழுமையாக சமூக நீதியைப் பெறவில்லை என்பதை நான் மிகுந்த வருத்தத்தோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய சூழ்நிலையிலே சமூக நீதி என்று சொல்லக்கூடிய இட ஒதுக்கீடு பட்டியலைப் பார்க்கின்றபோது, O.C.-யிலே 31 சதவிகிதம், B.C. என்று சொல்லக்கூடிய பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 30 சதவிகிதம், மிகவும் பிற்படுத்தப் பட்டவர்கள், சீர்மரபினருக்கு 20 சதவிகிதம், அதைப்போல தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவிகிதம், பழங்குடியினருக்கு 1 சதவிகிதம் என்று இருக்கிறது. இப்படி இருந்தாலும்கூட தந்தை பெரியார் பிறந்த மண்ணிலே இட ஒதுக்கீட்டிலே முழுமையாக தன்னிறைவு பெறவில்லை. உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். அண்டை மாநிலங்களான கர்நாடகத்திலே, ஆந்திரத்திலே, கேரளாவிலே இந்த இட ஒதுக்கீடு முறை சரியாக இருக்கிறது. துல்லியமாக இருக்கிறது. அங்கெல்லாம் போராட்டம் நடைபெறவில்லை. தந்தை பெரியார் அங்கே பிறக்கவில்லை. எப்படி

இருக்கிறது என்று சொன்னால், உதாரணத்திற்கு ஆந்திரத்திலே ஷெட்யூல்டு இன மக்களுக்கு 15 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. அதை 4 தொகுப்புகளாகப் பிரித்துக் கொடுத்திருக்கிறார்கள். அந்த ஷெட்யூல்டு இன மக்களிலே பல்வேறு சமுதாயங்கள், உட்பிரிவுகள் இருந்தாலும்கூட அவர்களுக்கும் சமூக நீதி வழங்க வேண்டும் என்று சொல்லக்கூடிய வகையிலே அதைப் பிரித்துக் கொடுத்திருக்கிறார்கள். கர்நாடக மாநிலத்திலே பிற்படுத்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள். அங்கேயும் compartmental reservation என்று சொல்லக்கூடிய அந்தத் தொகுப்பு இட ஒதுக்கீடு முறை வழங்கப்பட்டிருக்கிறது. கேரள மாநிலத்தை எடுத்துக்கொண்டோமேயானால், அங்கே ஈழவர்கள் என்று சொல்லக்கூடிய ஒரு தனிப் பெரும்பான்மை மக்கள்தொகை கொண்ட சமுதாயத்திற்கும் தனி இட ஒதுக்கீடு வழங்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே தமிழ்நாட்டிலேயும் தனி இட ஒதுக்கீடு மட்டுமல்லாமல் மக்கள்தொகையின் அடிப்படையிலே இட ஒதுக்கீடு வழங்கப்படுவது என்பது பொருத்தமுடையதாக இருக்கும் என்று நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தலித் மக்கள், ஷெட்யூல்டு இன மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஷெட்யூல்டு இன மக்களுக்கு இருக்கக்கூடிய 18 சதவிகித இட ஒதுக்கீடு என்பது போதாது. பற்றாக்குறையாக இருக்கிறது. மக்கள்தொகை அடிப்படையிலே அவர்களுக்கு 22 சதவிகிதமாக உயர்த்த வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். பாட்டாளி மக்கள் கட்சி தொடங்கிய காலத்திலேயிருந்து இன்றையவரையிலும் அதை சொல்லிக் கொண்டிருக்கிறது. ஆகவே, இப்படி ஷெட்யூல்டு இன மக்களுக்குக் கொடுக்க வேண்டும். அதைப்போலவே மிகவும் பின்தங்கிய மக்களுக்கு இருக்கக்கூடிய அந்த 20 சதவிகித இட ஒதுக்கீடு என்பது 108 சமுதாய மக்களுக்குப் போதாது. இந்த 20 சதவிகிதம் சில நேரங்களிலே ஒரு சில சமுதாயங்களுக்குப் பலன் கிடைக்கும். ஒரு சில இடங்களிலே ஒரு சில காலகட்டங்களிலே அவர்களுக்குப் பெருத்த ஏமாற்றத்தையும் அளிக்கிறது. ஆகவே, இந்த 20 சதவிகித இட ஒதுக்கீடு என்பதை மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் மற்றும் சீர்மரபினருக்கு 20 சதவிகிதத்தை 30 சதவிகிதமாக உயர்த்த வேண்டும் என்றும் இதையும் தொகுப்பு இட ஒதுக்கீட்டு அடிப்படையிலே 3 அல்லது 4 என்ற வரிசையிலே அளிக்க வேண்டுமென்று இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போலவே பிற்படுத்தப் பட்டவர்களுக்கு...



**மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியிலேகூட ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில் இருப்பதைப் போல நான்கு பிரிவுகளாக, நான்கு தொகுப்புகளாகப் பிரித்து இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்கிற கோரிக்கை எழுப்பப்பட்டிருக்கிறது என்பதை நான் படித்தேன். கடந்த ஆட்சியிலேயே நிராகரிக்கப்பட்டது. இருந்தாலும்கூட இதையெல்லாம ஆய்வு செய்வதற்காக நம்முடைய தமிழகத்திலே எத்தனை சதவிகித மக்கள் பொருளாதாரத்திலே பின்தங்கியிருக்கிறார்கள், சமூகத்திலே பின்தங்கியிருக்கிறார்கள் என்பதையெல்லாம் ஆய்வு செய்வதற்காக ஒரு திட்டம் வகுக்கப்பட்டு அதற்கு 5 கோடி ரூபாய் செலவாகும் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. எனவே அதனை விரைவிலே ஆய்வு செய்து எந்தெந்த சமுதாயத்தினருக்கு எப்படிப்பட்ட நிலைமை வகுக்கப்பட வேண்டும் என்பதை அந்த ஆய்வு மேற்கொண்டதற்குப் பிறகு முடிவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-20*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியிலே குரல் கொடுத்தோம். அவர்கள் செய்யவில்லை என்று சொல்லி நான் இட ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையிலே மிகக் கடுமையாக குறை சொல்லவில்லை. அப்போதுகூட மிகவும் பின்தங்கியவர்களுக்கு இருந்த இட ஒதுக்கீட்டிலே 10 இடங்கள் இருந்தது என்று சொன்னால் ஒன்றாக வழங்கப்பட்டது. அது முறைப்படி இரண்டாக வழங்கப்பட வேண்டும் என்று சொல்லி கோரிக்கை வைத்த நேரத்திலே இரண்டாக உயர்த்திக் கொடுத்தார்கள். அதைப்போலவே இட ஒதுக்கீட்டிலே குறைகள் இருக்கின்றன. அதை வெளிப் படுத்துவதற்காக ஒரு வெள்ளை அறிக்கை வேண்டுமென்று சொன்னோம். வெள்ளை அறிக்கை வைத்தார்கள். வெள்ளை அறிக்கைக்குப்பிறகு ஒரு குழுவினை நியமித்து அந்தக் குழுவில் என்னையும் உட்படுத்தி அதை ஆய்வு செய்து தமிழ்நாட்டிலே மொத்தம் இருக்கக்கூடிய அரசு ஊழியர்கள் எவ்வளவு பேர், அதிலே நாங்கள் சொல்லக்கூடிய O.C., B.C., M.B.C., S.C., S.T., என்று சொல்லக்கூடிய வகையிலே ஒவ்வொரு அரசுத் துறைகளிலேயும் ஒவ்வொரு பிரிவுகளிலேயும் எவ்வளவு பேர் பணியாற்றுகிறார்கள் என்ற நிலையை உருவாக்கி, அதில் பின்னடைவு காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு ஒரு வழியும் செய்தார்கள். அதையெல்லாம் நான் பிறகு சொல்ல இருக்கிறேன். ஆகவே இது

தொடர்ந்து தந்தை பெரியார் காலத்திலிருந்து, அண்ணா காலத்திலிருந்து, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலந்தொட்டு இன்றும் நிறைவேறுகிறது. இது படிப்படியாக வளர்ந்துகொண்டிருக்கிறது; முழுமை பெறவில்லை என்பதற்காக நான் இதைச் சுட்டிக்காட்டுகிறேன்.

எவ்வளவுதான் பேசிக் கொண்டிருந்தாலும்கூட இதை வகுத்துக் கொடுப்பது மத்திய அரசு. மத்திய அரசுக்கு இதுகுறித்து நாங்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறோம். நாங்கள் கூட்டணியிலே இருந்தாலும்கூட கடந்த முறை டெல்லியிலே சமூகநீதி என்றவொரு மிகப் பெரிய மாநாட்டை நடத்தி, அப்போது மத்திய அமைச்சரவையிலே இருந்த அமைச்சர்கள், பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்தவர்கள், திரு. முலாயம்சிங் யாதவ், திரு. சரத் யாதவ், திரு. ராம்விலாஸ் பஸ்வான், சகோதரி உமாபாரதி, இப்போது மக்களவைச் சபாநாயகராக இருக்கின்ற திரு. பாலயோகி அவர்கள், தமிழ்நாட்டுத் தலைவர்கள், இந்தியாவிலே இருக்கக்கூடிய எல்லா மாநில கட்சிகளுடைய தலைவர்களை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து மிகப் பெரிய மாநாட்டை நடத்தினோம். பெருமைக்காகச் சொல்லவில்லை, அந்த மாநாட்டின் இறுதியில், வந்த தலைவர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தார்கள். அந்தத் தீர்மானம் என்னவென்று சொன்னால், இந்தியத் திருநாட்டிலே சமூக நீதி வேண்டும் என்று சொல்லி மறைந்தவர்கள், தென்னகத்திலே தந்தை பெரியார், வடபுலத்திலே மகாத்மா, பூலே. இந்த இரண்டு தலைவர்களுக்குப் பிறகு, சமூக நீதி வேண்டும் என்று சொல்லக்கூடியவர்கள், அதே நேரத்திலே, எனக்கு எந்தப் பதவியும் வேண்டாம், நான் சமூக நீதிக்காகப் பாடுபடுவேன் என்று சொல்லக்கூடிய, தமிழ்நாட்டிலேயிருந்து டெல்லி வரை எல்லா மாநிலங்களுக்கும் சென்று வந்த டாக்டர் இராமதாஸ் அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) சமூக நீதி காத்த தலைவர் என்று சொல்லி தீர்மானம் கொண்டுவந்தார்கள்.

அதைப்போலவே அகில இந்திய பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப் பட்டோர் நலக் கூட்டமைப்பு என்று ஓர் அமைப்பை உருவாக்கி, அந்த அமைப்புக்கு அகில இந்தியத் தலைவராக இருக்க வேண்டும் என்று சொல்லி எங்களுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் ஐயா அவர்களை இந்த மாநாட்டிலே தேர்ந்தெடுத்தார்கள். இதை நாங்கள் செய்யவில்லை. இந்தியத் திருநாட்டிலே எல்லா மாநிலங்களிலிருந்து வந்த தலைவர்கள், அனைத்துக் கட்சித் தலைவர்கள், காங்கிரஸ் கட்சியிலே இருந்துகூட, மறைந்த மரியாதைக்குரிய, பெருமைக்குரிய தலைவர்கள், திரு. ராஜேஷ் பைலட் அவர்களும், திரு. சீதாராம் கேசரி போன்றவர்கள் எல்லாம் கலந்து கொண்டார்கள். இப்படி ஏதோ ஒரு சமுதாயத்திற்காக



மாத்திரமல்ல, இன்னும் முன்னேறிய சமுதாயத்திற்கு இட ஒதுக்கீடு வேண்டும் என்று சொல்லக்கூடியதுதான் பாட்டாளி மக்கள் கட்சி, இப்படி இருக்கக்கூடிய நேரத்திலே, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய 69 சதவிகித இட ஒதுக்கீடு என்பது கேள்விக்குறியாகவே இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே கடந்த முறை, 1991–லிருந்து 1996 வரையில் இருந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அப்போதும் முதலமைச்சராக இருந்த, இன்றைய முதலமைச்சர் அவர்கள் இந்த இட ஒதுக்கீட்டை எப்படியாவது நிறைவு செய்ய வேண்டுமென்று சொல்லி அந்த மாநாட்டிலே ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி அங்கே 9–வது அட்டவணையிலே சேர்த்தார்கள். அதை நாங்கள் மறுக்கவில்லை. அதேநேரத்தில் அதற்கு அரசியல் சட்டத்திருத்தம் வேண்டும் என்று சொல்கிற நேரத்தில் நீதி மன்றத்தினுடைய தீர்ப்பைக் காட்டி இதுவரையிலே நிறுத்தி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதையெல்லாம் முறியடிக்க வேண்டும் என்று சொல்கிற வகையிலே நம்முடைய தமிழக அரசு என்ன செய்யப் போகிறது என்பதை இங்கே நான் கேள்வியாக முன்வைக்கிறேன். இன்னொன்றையும் சொல்கிறேன். அப்படிக் கேள்வியாக முன்வைக்கிற அதேநேரத்தில் அந்த 69 சதவிகித இட ஒதுக்கீட்டை 9–வது அட்டவணையிலே சேர்த்து முழுமையாக அரசியல் சட்டத்திலே திருத்தம் பெறவில்லை. ஆக, இப்படி ஒன்பதாவது அட்டவணையில் சேர்த்து சட்டத்திருத்தம் கொண்டுவரவில்லை என்று சொன்னாலும்கூட, அதற்கு நிகரான இடத்தைக் கொடுப்பேன் என்று சொல்லி அன்றைக்கு முதலமைச்சராக இருந்த இன்றைய முதலமைச்சர், 69 சதவிகித இட ஒதுக்கீட்டிற்கு வழி வகுத்த பெருமை அவர்களுக்கு இருக்கின்றது என்கிற காரணத்தினாலேதான், இன்றும் நான் அவர்களை மனதாரப் பாராட்டுகின்றேன், இந்த மாமன்றத்திலே வரவேற்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி அது தொடர்ந்து இன்று இருந்து கொண்டிருக்கிறது. அரசியல் சட்டத்திலே சட்டத்திருத்தம் பெறாமல் இருக்கிறது. ஆகவே. அரசியல் சட்டத்திருத்தம் கொண்டு வருவதற்கு நம்முடைய தமிழக அரசு என்ன செய்யப் போகிறது? அதற்கு நீங்கள் தொடர்ந்து குரல் கொடுக்க வேண்டும், போராட வேண்டும். அதற்கு பாட்டாளி மக்கள் கட்சி துணையாக இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

முற்பகல் 11-25

நான் நேற்று இந்த அவையிலே சொன்னது மாதிரி, இப்படி நல்ல திட்டங்களுக்கு, நல்ல காரியங்களுக்கு, தமிழகத்திலே இருக்கக்கூடிய எல்லா அரசியல் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும். உதாரணத்திற்கு, காவிரி

நீர்ப் பிரச்சினை இருக்கிறது, சேது சமுத்திரத் திட்டம் இருக்கிறது, 69 சதவிகித இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை இருக்கிறது, தமிழ் ஆட்சிமொழித் திட்டம் இருக்கிறது, இவற்றிற்கெல்லாம் இந்தியத் திருநாட்டிலே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக இருக்கக்கூடிய வகையிலே, தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் எல்லா அரசியல் கட்சிகளையும் ஒருங்கிணைத்து இதற்காகக் குரல் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்திலே அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும், அனைத்துக் கட்சித் தலைவர்களையும் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, தமிழகத்திலிருந்து செல்லக்கூடிய 39 நாடாளுமன்ற உறுப்பினர்கள், புதுவையைச் சேர்த்து 40 பேர்கள் ஒன்றாகச் சேர்ந்து அங்கு செயல்பட வேண்டும். தமிழகத்தினுடைய உரிமையைப் பெறுவதற்காகப் போராட வேண்டும். அப்படிப்பட்ட நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கேகூட மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிற நேரத்தில் 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அறிவிப்பதாகச் சொன்னார்கள். அது நல்லதாக இருந்தால் நிச்சயமாக வரவேற்போம். அதைக் கொண்டு வருவதற்கு சாதி வாரி கணக்கெடுப்பு நிச்சயமாகச் செய்ய வேண்டும். அப்போதுதான் முழுமையான சமூக நீதி கிடைக்கும் என்ற வகையிலே அதற்கும் வழிவகை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த அரசில் நல்ல காரியங்கள் செய்ததை நாங்கள் வரவேற்றோம். அன்றும் வரவேற்றோம். பாட்டாளி மக்கள் கட்சியைப் பொறுத்தவரையில், நல்லதை யார் செய்தாலும் நன்றி சொல்வதற்கு, பாராட்டுவதற்குத் தவறமாட்டோம். அந்த வகையிலே இட ஒதுக்கீட்டிலே இருக்கக்கூடிய குறைகளைக் களைவதற்கு நாங்கள் கேட்ட ஒரு கோரிக்கையின் அடிப்படையிலே, வெள்ளை அறிக்கை வைத்து, அந்த வெள்ளை அறிக்கையின் அடிப்படையிலே இட ஒதுக்கீட்டிலே இருக்கக்கூடிய பின்னடைவுக் காலி இடங்களைக் கண்டறிந்தது. காலி இடங்களை நிரப்புவதற்காக சொல்லிய நேரத்தில், இடையிலே ஆட்சி மாற்றம் ஏற்பட்ட காரணத்தினாலே, அது நிறைவு பெறாமல் போய்விட்டது. அந்த அளவிலே இருக்கக்கூடிய அந்தக் காலி இடங்களை – அதிலும் நிறைய வந்திருக்க வேண்டும், 1989–லே இருந்து கணக்கெடுப்பதாக அன்றைய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது போதாது. முழுமையாக, வேலை வாய்ப்பிலே இருக்கக்கூடிய பின்னடைவு இடங்களைக் காலி இடங்களாகக்



கண்டறிய வேண்டும். அப்போது கண்டறியப்பட்ட இடங்கள் மிகக் குறைவான எண்ணிக்கை. குறைவான எண்ணிக்கை என்று சொல்லக்கூடிய வகையிலே பழங்குடியினருக்கு நிரப்பப்பட வேண்டிய இடங்கள் 1094. ஷெட்யூல்டு இன மக்களுக்கு 4907. மிகவும் பின்தங்கியவர்களுக்கு 5263. இவை எல்லாம் காலியிடங்கள். இவற்றையெல்லாம் நிரப்ப வேண்டும் என்று சொல்லி, வெள்ளை அறிக்கையிலே சொல்லி, இந்த மாமன்றத்திலே வைத்து ஆராயப்பட்டது. அந்தக் காலி பின்னடைவு இடங்களை முன் கொணர்ந்து Carry forward என்று சொல்லக்கூடிய வகையிலே நம்முடைய அரசு குறுகிய காலத்திலே விரைந்து அதை நிறைவேற்ற வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இதை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லக்கூடிய அதேநேரத்தில், இன சுழற்சி அடிப்படையிலே roaster system முறையிலே நியமனம் செய்யக்கூடிய நேரத்திலே நிறைய குறைகள் இருந்து வருகின்றன. அரசு அன்றைய நேரத்திலே ஒரு சட்டம் கொண்டு வந்தது. இதைச் சரியாகப் பின்பற்றாத அரசு அதிகாரிகள்மீது முறையாக நடவடிக்கை எடுக்கப்படும், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னாலும்கூட, இதுவரையிலே அப்படி எதுவும் செய்யப்படவில்லை. அதையும் உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

அதேநேரத்திலே பதவி உயர்விலும் இட ஒதுக்கீட்டு முறை 4 துறைகளிலே முன்பு இருந்தது. அதுவும் இப்போது இல்லாமல் இருக்கிறது. எல்லாத் துறைகளிலும் அந்த இட ஒதுக்கீட்டு முறை, பதவி உயர்விலும் கொண்டுவர வேண்டும் என்ற கோரிக்கையை வைக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன். இட ஒதுக்கீடு பற்றிப் பேச வேண்டுமென்றால் நிறையப் பேசலாம். ஆனால், அதற்குக் கால அவகாசம் இல்லை.

அடுத்து உள்ளாட்சி. தமிழகத்தினுடைய கிராமப்புற, நகர்ப்புறங்களுடைய அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவது, கட்டமைப்பது, உள்ளாட்சி மன்றங்கள். ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையில் சில இடங்களிலே, இத்தனை கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது, நிறைவேற்ற வேண்டும் என்று வரையறுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது, சில இடங்களில் உத்தேசிக்கப்படுகிறது, நம்பப்படுகிறது, நிறைவேற்றப்பட இருக்கிறது என்று சொல்லி, வார்த்தைகள் முற்றுப் பெறாமல், தொக்கி நிற்கின்றன. இதை நான் குறையாகச் சொல்லவில்லை. அது கொள்கை விளக்கக் குறிப்பிலே நிச்சயமாக இருக்கும் என்று எதிர்பார்க்கிறேன், நம்புகிறேன்.

இருந்தாலும்கூட, இதிலே சொல்லியிருப்பீர்கள் என்று சொன்னால், இன்னும் நல்லதாக அமைந்திருக்கும். அந்தவகையிலே, உள்ளாட்சி மன்றங்களுக்கு எவ்வளவு நிதி என்று சொல்லி ஒதுக்கப்படவில்லை. என்னதிட்டங்கள் என்று சொல்லப்படவில்லை. உள்ளாட்சி மன்றங்களுக்கு என்ன கூடுதல் அதிகாரம் என்று சொல்லப்படவில்லை. நாம், மத்தியிலே கூட்டாட்சி, மாநிலத்திலே சுயாட்சி என்று சொல்கிறோம். இப்படி மாநில அரசுக்கு சுயாட்சி கேட்கக்கூடிய நாம், ஊராட்சி என்று சொல்லக்கூடிய, ஊருக்கு ஆட்சியைக் கொடுப்பது எந்த அதிகாரத்தின் அடிப்படையிலே? அதை வழங்க வேண்டுமா? வேண்டாமா? ஆகவே, ஊராட்சிகள் என்று சொல்லக்கூடிய, அந்த ஊரை ஆட்சி செய்யக்கூடியவர்களுக்கு மாநில சுயாட்சியைப்போல, ஊராட்சிகளுக்குக் கூடுதலான அதிகாரம் வழங்க வேண்டும்; பகிர்வு அளிக்க வேண்டும்; கூடுதல் நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த காலத்திலேகூட, 2000–2001 ஆம் ஆண்டிலே உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2,401 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. நல்ல காரியங்கள் எல்லாம் நடந்தன. இல்லை என்று சொல்லவில்லை. இன்றைக்கு கிராமப்புறங்களிலே பார்த்தால், கான்கிரீட் சாலை, எங்கு பார்த்தாலும் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, மினி பஸ் திட்டம், இப்படி நல்ல விஷயங்கள். ஆகவே, அந்த அளவிலே அதைவிடக் கூடுதலாக நீங்கள் நிதி ஒதுக்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-30*

அதைப்போலவே, வரி வருவாயில் 16,250 கோடி, இதிலே 94 சதவிகிதம் அரசு ஊழியர்களுக்குச் சம்பளமாகவும், ஓய்வூதியமாகவும் போய்விட்டது என்று சொல்லி, மீதமிருக்கக்கூடிய 6 சதவிகிதம் அதிலே 11,110 கோடி ரூபாய்தான் மானியங்களுக்காகவும், சமூக நலப் பணிகளுக்காகவும், நலத் திட்டங்களுக்காகவும் வழங்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நேரத்திலே, புதிதாகப் பொறுப்பேற்றுள்ள இந்த அரசு, இந்தத் திட்டங்களைவிட வேறு எவ்விதமான திட்டங்களை கொண்டுவரப் போகிறது? இதைவிட குறைக்கப் போகிறீர்களா, கூடுதலாக்கப் போகிறீர்களா, எந்த முறையிலே அதை நிறைவேற்றப் போகிறீர்கள், அமலாக்க இருக்கிறீர்கள் என்பதை இங்கே தெளிவுபடச் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாயத்தைப் பொறுத்தவரையிலே, நான் முன்பு சொன்னமாதிரி அந்த விலை நிர்ணயக் கொள்கையை இங்கே கொண்டுவர வேண்டும். விவசாயிகள் நீண்ட நெடுங்காலமாக, 30, 40



ஆண்டு காலம் விளை நிலங்களிலே பட்டா இல்லாமல் பயிர் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலங்களையெல்லாம் தேர்வு செய்து, தமிழ்நாடு முழுவதும் அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்க வேண்டும். அதேநேரத்திலே, பட்டா இருந்தாலும்கூட, பத்திரங்கள் இருந்தாலும்கூட, கிராமத்திலே இருக்கக்கூடிய ஏழைக் குடும்பத்திலே, அண்ணன், தம்பிகளுக்கிடையே பாகப் பிரிவினை என்றால், அதைப் பத்திரப் பதிவு செய்கிற நேரத்திலே பத்திரக் கட்டணம் அதிகமாக இருக்கிற காரணத்தினால், ஏராளமான குடும்பங்களிலே அந்த முத்திரைத் தாள் வாங்க இயலாமல், அப்படிப்பட்ட பாகப் பிரிவினைப் பத்திரங்கள் எல்லாம் எழுதப்படாமல் இருக்கின்றன. ஆகவே, ஒரே குடும்பம் என்று சொல்லி வருகிற நேரத்திலே, பாகப் பிரிவினை பத்திரத்திற்கு முத்திரைத் தாள் கட்டணத்தைக் குறைத்துப் பதிவு செய்வதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மின்சாரத் துறை அமைச்சருக்கு ஒரு கோரிக்கை. இப்போது, மின் துறை மிகுந்த கடனிலே, நிதிச் சுமையிலே இருப்பதாகச் சொல்கிறார்கள். நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். இருந்தாலும்கூட, நம்மிடத்திலேயிருந்து கர்நாடகம், மின்சாரத்தைக் கடன் வாங்குகிறது. அப்படி கடன் வாங்கக்கூடிய கர்நாடக அரசு, விவசாயத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய வகையிலே, விவசாயி, பம்ப் செட்டுக்கு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்த ஒருவார காலத்துக்குள்ளே, அவர்கள் முக்கியத்துவத்தின் அடிப்படையிலே முன்னுரிமை கொடுத்து, இணைப்பு வழங்குகிறார்கள். ஆகவே, கடன் வாங்கக்கூடிய அரசு, அதைச் செய்கின்ற நேரத்திலே, நம்முடைய அரசு சற்று கடன் சுமை வந்தாலும்கூட, ஏழை விவசாயிகளினுடைய வயிற்றிலே பால் வார்க்கக்கூடிய வகையிலே விண்ணப்பித்தவுடனே கட்டணம் இல்லாமல் மின் இணைப்பு வழங்குவதற்கு விவசாயிகளுக்கு–

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னோடியான ஒரு மாநிலம் என்கிறவகையில்–பஞ்சாப்பிலே இலவச மின்சாரத்தை விவசாயிகளுக்குக் கொடுக்கிறார்கள்–அடுத்து, தமிழ்நாட்டிலேதான் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கொடுக்கின்றார்கள். விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுப்பதன் மூலம் மட்டும் ஆண்டுக்கு 3,200 கோடி ரூபாய் அளவிற்குக் கூடுதல் சுமை. அதேபோன்று, நாம் power purchase என்று சொல்லக்கூடிய அளவிற்கு மின்சாரத்தை வாங்குகிற அளவிற்கு என்று சொல்லும்போது, கிட்டத்தட்ட மூன்று ரூபாயிலிருந்து ரூபாய் 4.50 அளவிற்கு வாங்குகிறோம்.

ஆனால், வீடுகளுக்கு மின்சாரத்தை நாம் விநியோகம் செய்யும்போது, ரூபாய் 1.57-க்கு மட்டும்தான் கொடுக்கிறோம். எனவே, அதிலே கிட்டத்தட்ட 1200 கோடி ரூபாய்க்கு பெரும் சுமையும் மின் வாரியத்திற்கு ஏற்படுகிறது என்கிற ஒரு நிலையைத் தெரிவித்து, கர்நாடகத்திலே இலவச மின்சாரத் திட்டம் கிடையாது என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

முற்பகல் 11-35

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்கள் இங்கே கடன் சுமை, நிதிச் சுமை பற்றி எல்லாம் சொன்னார்கள். நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். அது இருக்கிறது. இருந்தாலும்கூட, விவசாயிகளுக்கு அந்த நல்ல காரியம் நடைபெற வேண்டும் என்ற அந்த எண்ணத்தின் அடிப்படையிலே சொன்னேனே தவிர, அரசுக்குச் சுமையை உண்டாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அல்ல.

விவசாயி கிணறு வெட்டுகிறான். கிணற்றிலே தண்ணீர் இருக்கிறது. அதை இறைப்பதற்கு பம்பு செட்டுக்கு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பிக்கிற நேரத்திலே, இது புறம்போக்கு நிலம்; இதற்கு N.O.C. வாங்க வேண்டும் என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆகவே, அந்த இடம் அரசுக்குத் தேவை என்று சொன்னால், தேவைப்படுகின்ற நேரத்திலே எடுத்துக்கொள்வதாக ஒரு condition போட்டு, அதை உடனடியாக வழங்கலாம். வெவ்வேறு சான்று பெறுகிற நேரத்திலே, அதற்கு நிறைய செலவு ஆகிறது. அது முடியாத நிலை எல்லாம் ஏற்படும்போது, விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, கிணறு வெட்டும் இடம் புறம்போக்காக இருந்தாலும், பட்டாவாக இருந்தாலும், அரசுக்குத் தேவையில்லை என்று கருதுகிறபோது உடனடியாக மின்னிணைப்பு வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத் துறையை மேம்படுத்துவதற்காக, மத்திய அரசு நல்ல திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. சமீபத்திலே, மத்திய அரசு அறிவித்தது. பஞ்சாயத்து அளவிலே, கிராமப்புறங்களிலே, Agricultural clinic என்று சொல்லக்கூடிய வகையிலே ஒரு அமைப்பை உருவாக்கி, அதிலே பி.எஸ்சி. படித்த பட்டதாரிகளை அதிகாரியாக நியமித்து வேளாண் புதிய தொழில் நுட்பத்தை அங்கே அறிவித்தல், விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல், நல்ல விதைகளைக் கொடுத்தல் இப்படிப் பல்வேறு நல்ல அம்சங்களை எல்லாம் விவசாயிகளை ஊக்குவிப்பதற்கு, கிராம அளவிலே ஒரு திட்டத்தைக் கொண்டு



வந்துள்ளது. அந்த நவீன விவசாயப் பயிற்சி முறையை தமிழக அரசு உடனடியாக நிறைவேற்றுவதற்கு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, விவசாயத்திற்காக மத்திய அரசு 27 திட்டங்களை அறிவித்திருக்கிறது. அந்த 27 திட்டங்களில், ஒவ்வொரு மாநில அரசும் அவரவர்களுடைய விருப்பத்திற்கேற்ப அந்தத் திட்டங்களை அமலாக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, தமிழ் நாட்டினுடைய பூகோள சூழ்நிலை, இயற்கைச் சூழ்நிலைக்கேற்ப அந்தத் திட்டங்களில் எது பொருத்தமுடையதாக இருக்குமோ அதைத் தேர்ந்தெடுத்து, மத்திய அரசினுடைய கூடுதலான நிதியைப் பெற்று உடனடியாக அதை நிறைவேற்றுவதற்கு முன்வர வேண்டும் என்றும், அதற்கு வல்லுநர் குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

Kisan Credit Card-ஐ மத்திய அரசு வழங்குகிறது. மற்ற மாநிலங்களில் எல்லாம் அதை விரைந்து செய்து கொண்டிருக்கிறார்கள். 2002-லே அந்தத் திட்டம் முடிவடைய இருக்கிறது. உடனடியாக எல்லா விவசாயிகளையும் அது சென்றடைவதற்கு, அதைப் பெற்றுத் தருவதற்கு, தமிழ்நாடு அரசு முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலையைப் பார்த்தவுடனே, எங்களுக்கெல்லாம் ஒரு மிகப் பெரிய பயம் வந்துவிட்டது. நமது கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களுக்கும் சேர்த்துதான். நில உச்சவரம்புச் சட்டத்தைத் தளர்த்துவதாக சொல்லப் பட்டிருக்கிறது. பண்ணைத் தொழிலை ஊக்குவிப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். பண்ணைத் தொழிலை ஊக்குவிப்பதை நாங்கள் வரவேற்கிறோம். இந்த நில உச்சவரம்புச் சட்டத்தைத் தளர்த்துகிற நேரத்திலே மீண்டும் இங்கே முதலாளித்துவம் நிச்சயமாக தலைதூக்கும் என்பதைக் கருத்திலே கொண்டு, நாங்கள் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே, இதைக் கடுமையாக எதிர்க்கவும் கடமைப்பட்டிருக்கிறோம். இன்று பண்ணைத் தொழிலை ஊக்குவிக்கிறீர்கள். அதேநேரத்திலே பன்னாட்டு நிறுவனங்கள் எல்லாம் வந்து கொண்டிருக்கின்றன. பன்னாட்டு நிறுவனங்கள் என்ன செய்வார்கள்? (மணியடிக்கப்பெற்றது) வெளிநாட்டிலிருந்து-

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஐந்து மணித்துளிகளில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைய subjects இருக்கின்றன. முடித்துவிடுகிறேன். ஆகவே, இப்படி பன்னாட்டு முதலாளிகள் இங்கே வந்துவிடுவார்கள். இன்னும் தமிழ்நாட்டிலே மிகப்பெரிய தொழிற்சாலைகளை நடத்தக்கூடிய தொழில் அதிபர்கள் எல்லாம் அதை விட்டுவிட்டு, இந்தப் பண்ணைத் தொழில் சுலபமாயிற்றே, இலாபம் சம்பாதிக்கலாமே என்று இதற்கு வந்துவிடுவார்கள். அப்படி வருகிற நேரத்திலே சிறு விவசாயிகள், மிகச் சிறு விவசாயிகள் எல்லாம், நடுத்தர விவசாயிகள் எல்லாம்கூட பாதிக்கப்படக்கூடிய நிலை ஏற்பட்டு, இருக்கக்கூடிய நிலங்களை எல்லாம் விற்றுவிட்டு ஓடக்கூடிய சூழ்நிலை வந்துவிடும். இந்த முதலாளிகள் அவற்றை அபகரித்துக் கொள்ளக்கூடிய நிலை உருவாகிவிடும். அந்தக் காரணத்தினாலே, இந்த நில உச்சவரம்புச் சட்டத்தை நிச்சயமாகத் தளர்த்தக்கூடாது. அதேநேரத்திலே சிறு விவசாயிகள், மிகச் சிறு விவசாயிகள், நடுத்தர விவசாயிகள் தங்கள் நிலங்களை எல்லாம் ஒருங்கிணைத்து கூட்டுறவு முறையிலே பண்ணை அமைக்கலாம். அது வாய்ப்புள்ளதாக இருக்கும் என்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

பிறகு, பொது விநியோகத் திட்டம். இந்தப் பொது விநியோகத் திட்டம் நாட்டிலே இருக்கக்கூடிய மிக அதிகப்படியான மக்களைச் சென்றடையக்கூடிய திட்டம். நல்ல திட்டம். ஆகவே, அதிலே இப்போது அரிசி, மண்ணெண்ணெய், சர்க்கரை எல்லாம் வழங்கப்படுகின்றன. இருந்தாலும்கூட, ஏழையெளிய மக்கள் கிராமப்புறங்களில் மேட்டு நிலங்களையே நம்பி வாழக்கூடிய விவசாயிகூட, நெல் அரிசி உணவு சாப்பிடுவது கஷ்டம். நவதானியங்கள் என்று சொல்லக்கூடிய பிற தானிய உணவு வகைகளைச் சாப்பிட்டு வருகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் நல்ல சத்துள்ள உணவைச் சாப்பிடவில்லை என்று சொன்னாலும்கூட, அரிசி, பருப்பு, எண்ணெய் மற்ற எல்லா உணவுப் பொருட்களும் பொது விநியோக முறையிலே முழுவதுமாக அவர்கள் பெறுவதற்கு அரசு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அமைப்பு சாரா தொழிலாளர்கள் பற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லவில்லை. ஆகவே, அவர்களுடைய வாழ்க்கைத் தரமே கேள்விக்குறியாகிக் கொண்டிருக்கிறது. அதற்கான ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டு வரவேண்டும்.

அதைப்போலவே, கொத்தடிமைத் தொழிலாளர்கள், குழந்தைத் தொழிலாளர்களைப் பற்றியும் குறிப்பிடப்படவில்லை. கோலப்பன் தலைமையிலான கமிட்டியினுடைய பரிந்துரை நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. அதையும் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



முற்பகல் 11-40

பொதுத் துறை நிறுவனங்கள் எல்லாம் நலிவடைந்து கொண்டிருக்கின்றன. இப்படி நலிவடைந்து போகின்ற நேரத்திலே அரசுக்கு இழப்புகள் அதிகமாக இருந்தாலும்கூட, அதை ஊக்குவிப்பதற்கு மேலும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இப்போது பொதுத் துறை நிறுவனங்கள் நலிவடைந்ததாலும், அரசுத் துறையிலும் வேலைவாய்ப்பு குறைவதாலும். இந்த நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது; வறுமை பெருகிக் கொண்டிருக்கிறது. அதற்கான அரசுத் திட்டங்கள் என்ன என்று சொல்லப்படவில்லை. அதை வரையறுத்துச் சொல்ல வேண்டும். அதே நேரத்திலே, இன்று எங்கு பார்த்தாலும், எல்லா நிலைகளிலும் தனியார்மயமாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, தனியார்மயம் ஊக்கவிக்கப்பட்டு வரக்கூடிய இந்தச் சூழ்நிலையிலே, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்குத் தனியார் நிறுவனங்களிலேயும் இட ஒதுக்கீடு வேண்டும். இப்போது தனியார் நிறுவனங்கள் பெருகி வருகின்றன. தாழ்த்தப்பட்ட மக்கள், மிகவும் பின்தங்கியவர்கள், பிற்படுத்தப் பட்டவர்கள் வேலைக்குச் செல்ல முடியாது. தனியார் நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். வேலை அளிக்க மாட்டார்கள். அந்தக் காரணத்தினாலே இன்று வேலைவாய்ப்பு என்று சொல்கிறபோதுகூட, மத்திய அரசுத் துறையிலே ஒரு சதவீதம், மாநில அரசுத் துறையிலே இருக்கக்கூடிய வேலைவாய்ப்பு மூன்று சதவீதம். ஆக, அரசு வேலைவாய்ப்பு என்பது நான்கு சதவீதம். எஞ்சி இருக்கக்கூடிய 96 சதவீதம் வேலைவாய்ப்பு என்பது தனியார் நிறுவனங்களிலே இருக்கின்ற காரணத்தினாலேதான் தனியார் நிறுவனங்களிலேயும் இட ஒதுக்கீடு வேண்டுமென்று சொல்லக்கூடிய அந்த நிலை இருக்கிறது. இன்று முதலமைச்சராக இருக்கக்கூடிய, சமூகநீதி காத்த வீராங்கனை என்ற பட்டத்தைப் பெற்ற மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தனியார் துறையிலே இட ஒதுக்கீடு கொண்டு வரப்படுமா என்ற கேள்வியை வைத்து, உங்களை நான் வற்புறுத்தவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, மிக முக்கியமான பிரச்சினை, பத்திரிகையாளர்கள் பிரச்சினை. பத்திரிகையாளர்கள் ஓர் இடத்திற்குச் சென்றால், மீண்டும் பாதுகாப்போடு வீட்டிற்குத் திரும்புவார்களா என்று சொல்லி, பத்திரிகையாளர்களுடைய துணைவியார்கள் எல்லாம் கேள்வி கேட்கக்கூடிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். நான் யாரையும் குறை சொல்வதற்காகச் சொல்லவில்லை. எந்த நிலைகளிலும், எந்த

நேரத்திலும், எல்லா நிலைகளிலும், பத்திரிகையாளர்கள் கட்டாயம் பாதுகாக்கப்பட வேண்டும். நினைத்துப் பார்க்க வேண்டும். அரசாங்கத்தினுடைய திட்டங்கள், அரசினுடைய நோக்கங்கள், அரசியல் கட்சிப் பிரச்சினை, நாட்டு நடப்புகளையெல்லாம் எடுத்துச் சொல்லக் கூடியவர்கள் அவர்கள். அவர்கள் செல்கின்ற நேரத்திலே, உயிரைப் பணயம் வைத்துச் சென்று வரக்கூடிய நிலையிருக்கிறது. ஆகவே, எல்லா நேரங்களிலும் அரசும், எல்லா அரசியல் கட்சிகளும் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்க முன்வர வேண்டும். அப்படிப்பட்ட ஒரு நிலையை, நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். இப்போதுகூட, பத்திரிகையாளர்களுக்குக் குடும்ப நல நிதி இரண்டு இலட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது; வரவேற்கிறேன். இருந்தாலும்கூட, இதை ஐந்து இலட்சமாக உயர்த்தினால்கூடப் பொருத்தமுடையதாக இருக்குமென்ற கோரிக்கையை வைக்கிறேன். பத்திரிகையாளர்களுடைய நலனைப் பாதுகாப்பதற்கு ஆந்திர மாநிலத்திலேகூட Press Academy என்று ஓர் அமைப்பைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, அதைப் போலவே தமிழ்நாட்டிலேயும் கொண்டு வருவது பொருத்தமுடையதாக இருக்கும். அதையும் கொண்டு வர வேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)* ஐந்து நிமிடம் கொடுங்கள்.

பத்திரிகையாளர்களுக்கு வீடு கட்டுவதற்கு மானியத்துடன்கூடிய கடன் வழங்க வேண்டும். அவர்களுடைய படித்த குழந்தைகளுக்கும் வேலைவாய்ப்பு வழங்குவதற்கு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்சினை. இப்போது Engineering College-ல் எல்லாம் admission முடிந்த நேரம். நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு மீண்டும் ஒரு கவுன்சிலிங் கொண்டு வரப்பட்டிருக்கிறது. வரவேற்கிறோம். அதேநேரத்திலே, மருத்துவப் பல்கலைக்கழகங்களிலே தேர்வு செய்யப்பட்டு, நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களிலே மாணவர்கள் எல்லாம் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். தூத்துக்குடியிலே கல்லூரி மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன செய்யப் போகிறீர்கள் என்று இதுவரை தெரியவில்லை. ஆகவே, மீண்டும் அவர்களுக்கு கவுன்சிலிங் கொண்டு வரவேண்டும் என்று சொல்லி, அந்தக் கோரிக்கையை வைக்கிறேன்.

மத்திய அரசு, நீதித் துறையிலும் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. வழக்குகள் எல்லாம் நீண்ட காலமாக நிலுவையிலே



இருக்கின்றன. அவற்றை விரைந்து முடிக்க வேண்டும் என்று Fast Track Courts என்று சொல்லக்கூடிய விரைவு நீதிமன்றத்தை அமைப்பதற்காக எல்லா மாநிலங்களுக்கும் நிதி வழங்கி, அந்தப் பணிகளை வேகமாகச் செய்துகொண்டிருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, நீதிமன்றக் கட்டடங்கள் தேர்வு செய்யப்பட்டு, எல்லா வேலைகளும் முடிக்கப்பட்டுவிட்டன. சாப்பாடு தயார், இலை போடப்பட்டுவிட்டது. சாப்பாடு மட்டும் பரிமாறப்படவில்லையென்று சொல்லக்கூடிய வகையிலே இங்கே நீதிபதிகள் நியமனம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களை விரைந்து நியமனம் செய்து அந்த வழக்குகளையெல்லாம் விரைவாக முடிப்பதற்கு அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வி, மிக முக்கியமான பிரச்சினை. ஒரு நாடு முன்னேறுவதற்கும், தனி மனிதன் குடும்பம் முன்னேறுவதற்கும் கல்வி மிக அவசியம். கல்வித் தரம் மிக மோசமாகிக் கொண்டே இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திங்கட்கிழமை கல்வி மானியம். அதிலேயும் பேசலாம்.

**திரு. ஜி.கே. மணி:** சுருக்கமாகப் பேசி முடித்து விடுகிறேன். ஆகவே, அந்தவகையிலே 1964–லே கோத்தாரி கமிஷனில் சொல்லப்பட்டது. கல்வி நலனிலே அக்கறை கொண்டு, வருவாயிலே 6 சதவிகிதம் ஒதுக்கப்பட வேண்டும் என்று சொல்லியும்கூட, இதுவரையிலே தொடர்ந்து வந்த அரசுகள் எல்லாம் 6 சதவிகிதம் ஒதுக்கவில்லை. அது ஒதுக்கப்பட வேண்டும். இன்று அமெரிக்க நாடுகூட வேகமாக முன்னேறியிருப்பதாக மேலை நாட்டவர்கள் எல்லாம் சொல்கிறார்கள். சமுதாயக் கல்லூரி – Community College–என்று சொல்லக்கூடிய அந்தச் சமுதாயக் கல்லூரி வந்ததுதான் மிகப் பெரிய வளர்ச்சி என்று சொல்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட Community College என்று சொல்லக்கூடிய சமுதாயக் கல்லூரி இந்தியத் துணைக் கண்டத்திலே தமிழ்நாட்டிலே வரவேண்டும். பொருளாதாரத்தை மேம்படுத்துவதாகச் சொல்கிறோமே, விவசாயத் துறை, உற்பத்தி என்று சொல்லக்கூடிய தொழில் துறை, சேவைத் துறை என்று சொல்கிறோமே, இவற்றையெல்லாம் உள்ளடக்கி அவர்களுக்குத் தொழில் நுட்ப உதவியோடு பயிற்சி கொடுக்கக்கூடிய மிகப் பெரிய கல்லூரி இது மாவட்டந்தோறும் வந்தாலும்கூட நன்றாக இருக்கும். நிதிச் சுமை அதிகமாக இருக்காது. அதையும் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

வறுமை ஒழிப்பு, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காக, ஒரு தனி துறையைக் கொண்டு வரவேண்டும். தனியொரு அமைச்சர், தனியொரு செயலாளர் ஆகியோரைக் கொண்டுவந்து, கிராம அளவிலே Rural Employment Exchange என்று சொல்லக்கூடிய அளவிலே கிராமப்புற வேலைவாய்ப்பு மையத்தை உருவாக்கியாக வேண்டும். ஆண்டுக்கொரு முறை அரசு நல்ல திட்டங்களை எல்லாம் அறிவிக்கிறது. அந்தத் திட்டங்கள் என்னென்ன, மத்திய அரசுத் திட்டம், மாநில அரசுத் திட்டம், இந்தத் திட்டங்களையெல்லாம் ஒருங்கிணைத்து, அந்தத் திட்டங்களுடைய தொகையை மதிப்பீடு செய்து, கிராமப்புறத்திலே ஒரு குடும்பத்திலே வேலையிலிருக்கும் ஒருவர், இருவர், மூவர், முழுவதும் வேலையில்லாத குடும்பங்கள் ஆகியவர்களைக் கணக்கிலே எடுத்து, அந்த வேலையில்லாத குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய வகையிலே, "வறுமை, வேலையின்மை ஒழிப்புத் துறை" என்ற ஒரு துறையை உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். இதற்குச் சொல்லக்கூடிய உதாரணம், குன்னக்குடி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, உரையை முடித்துக்கொள்ளுங்கள். நிறைய தலைவர்கள் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. ஜி.கே. மணி:** முடித்து விடுகிறேன். பான் மசாலா, குட்கா போன்ற பொருள்களுக்கு தடையை இங்கே கொண்டு வந்திருக்கக்கூடியதை நான் மனதார வரவேற்கிறேன். பொது இடங்களில் புகை பிடித்தல், இதற்குத் தடை சட்டத்தைக் கொண்டு வந்ததற்கு மனதார வரவேற்கிறேன். நல்ல திட்டம். பிறகு, நெல் கொள்முதலைப் பற்றிச் சொன்னார்கள். நெல் கொள்முதலை நான்கூடப் பார்க்கிறேன். முன்பும் சரி, பின்பும் சரி, பல இடங்களில் நெல் எல்லாம் முளைத்து, பயிராக வந்த நிலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. அதையும் பாதுகாக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். அப்புறம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்புறம், அப்புறம் பேசலாம்.

**திரு. ஜி.கே. மணி:** முடித்து விடுகிறேன். ஒரேயொரு பிரச்சினை. இலவச பஸ் பாஸ் திட்டம். இந்த இலவச பஸ் பாஸ் திட்டத்தை, கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில், 1996 ஆம் ஆண்டு இந்த மன்றத்திலே முதல் நாள் பேசுகின்ற நேரத்திலே நான் ஒரு கோரிக்கையை



வைத்தேன். முதன்முதலில், கல்லூரி மாணவர்களுக்குப் பாதியளவு கட்டணமும், மேல்நிலைப் பள்ளி, ஐ.டி.ஐ., பாலிடெக்னிக் படிப்பு வரையிலான மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வேண்டுமென்றும் சொல்லி சட்டமன்றத்திலே முதலிலே பேசியவன், சட்டமன்றத்திலே வெட்டுத் தீர்மானத்தையும் கொண்டு வந்தவன் நான். ஆனால், அன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அறிவிக்கின்ற நேரத்திலே, இன்றைய மாநகர மேயராக இருக்கக்கூடிய மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினராக இருக்கக்கூடிய திரு. ஸ்டாலின் வேண்டுகோள் வைத்ததாகச் சொல்லி, அதை அறிவித்தார்கள். யார் சொன்னாலும் வரவேற்கிறோம். அப்படிப் பட்ட அந்தத் திட்டத்தை இன்று இந்த அரசு விரிவுபடுத்த வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. பொன்முடி, அவர் குற்றச்சாட்டு ஒன்றும் சொல்லவில்லை.

**டாக்டர் க. பொன்முடி:** Point of order. மாண்புமிகு மேயர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் எல்லோரும் கேட்டுக் கொண்டதன் அடிப்படையிலேதான் அன்றைக்குக்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதனை அறிவித்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் ஒன்றும் குற்றச்சாட்டு சொல்லவில்லை. நான் முதலிலே பேசினேன் என்றுதான் சொல்கிறார்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்றுகூடச் சொல்கிறேன்; வருத்தத்துடன் சொல்கிறேன்; எங்கள் பெயர் எல்லாம் குறிப்பிடப்படவில்லை; எந்தக் கட்சி என்றும் சொல்லப்படவில்லை. வருத்தம்; ஏனென்றால், முதலில் நாங்கள்தான் பேசினோம். இதில் யாருக்கும் பெரிய வெற்றி இல்லை. வேறொன்றும் இல்லை என்று சொல்லி மினி பஸ் எல்லாம் வழங்கியிருக்கிறார்க்ள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மினி பஸ் திட்டம், கிராமங்களிலே பேருந்து செல்லாத இடங்களிலே செல்கிறது. அங்கேயிருக்கிற குழந்தைகள் படிக்க வருகிறார்கள். அங்கே நகரப் பேருந்து கிடையாது. குழந்தைகள் மினி பஸ்ஸில் வருவதற்கு அரசு மானியம் வழங்க வேண்டும். அந்தக் குழந்தைகளுக்கும் அதை விஸ்தரிப்புச் செய்ய வேண்டுமென்று சொல்லி, இறுதியாக ஒரேயொரு பிரச்சினை. என்னுடைய தொகுதி, மாவட்டப் பிரச்சினை. ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம். அது ப்ளோரைடால்

முழுவதுமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்த மாவட்டத்தில், கடந்த வாரம் நாங்கள் மனிதச் சங்கிலிப் போராட்டம்கூடச் செய்தோம். இந்த நிதிநிலை அறிக்கையிலே ரூ. 10 கோடி ஒதுக்கியிருப்பதாகச் சொல்கிறார்கள். இது கண்துடைப்பு என்ற சந்தேகம் எங்களுக்கு வந்திருக்கிறது. அதை முழுமையாக நிறைவேற்ற வேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், குடிநீர்ப் பிரச்சினையை 5 ஆண்டு காலத்திற்குள் தமிழகத்தில் முழுவதுமாகத் தீர்க்க வேண்டுமென்ற தீவிர திட்டங்களை மேற்கொண்டிருக்கிறார்கள். பிற நாட்டு உதவிகளோடும், திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. This is only a token allocation, positively this scheme will be taken up.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம் முழுவதும் பயன்படக்கூடிய வகையிலே, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். எங்களுடைய தொகுதியைப் பொறுத்தவரை, ஒரேயொரு பிரச்சினை. பஞ்சப்பள்ளி வாய்க்கால் பிரச்சினை. நீண்டகாலப் பிரச்சினை. கடந்தகால ஆட்சியிலேகூட, estimate போட்டு tender விடக்கூடிய நிலையில் இருக்கிறது. அதை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். அதைப்போலவே, அங்கே தொழிற்சாலை தொடங்குவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று சொல்லி, பல்வேறு கோரிக்கைகளை வைக்க வேண்டியிருந்தாலும், இன்னும் நிறைய பேச வேண்டியிருந்தாலும்கூட, காலத்தின் அருமை கருதி, பல்வேறு கோரிக்கைகளை முதல் அமைச்சர் அவர்களிடத்திலும், சம்பந்தப்பட்ட துறையினுடைய அமைச்சர்களிடத்திலும் வழங்குவேன் என்று சொல்லி, இவ்வளவு நேரம் பேச வாய்ப்பளித்த நம்முடைய நல்கூறும் தமிழகம் என்று சொல்லக்கூடிய வகையிலே தமிழே ஆட்சி அரியணையில் இருந்து கொண்டிருக்கக்கூடிய நல்ல தமிழ், நலமிக்க தமிழாக இருக்கக்கூடிய பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

*முற்பகல் 11-50*

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்னால் பேசிய திரு. மணி அவர்கள்—



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அப்புறம் பேசலாம். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதிநிலை அறிக்கையின்மீது, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில் கருத்துகளைத் தொகுத்துச் சொல்வதற்கு—

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, One minute Sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்பாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பல தலைவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, சமூக நீதிக்காகப் போராடினார்கள் என்று குறிப்பிட்டார். வடக்கே பூலே அவர்களின் பெயரையும், தெற்கே தந்தை பெரியார் அவர்களின் பெயரையும் குறிப்பிட்டார். அதற்கு அடுத்ததாக அவருடைய கட்சியின் தலைவர் அவர்கள், சமூகப் புரட்சி செய்து கொண்டிருக்கிறார் என்று குறிப்பிட்டார். தந்தை பெரியார் அவர்களை தனக்குத் தலைவர் என்று கூறிக்கொண்டே, அறிவுலகக் கோமான், அரசியல் மாமேதை, ஈனப் பிறவி என்ற இழிநிலை போக்கிட்ட ஈடற்ற செம்மல், அஞ்சாநெஞ்சினன், ஆடுகளாக வாழாதீர்கள்; சிங்கங்களாக வாழுங்கள் என்று சொல்லிச் சென்ற டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களுடைய பெயரை ஏன் குறிப்பிடாமல் விட்டுவிட்டார் என்று எனக்குத் தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சேர்த்துக்கொள்ளச் சொல்கிறேன்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் பேசுகின்றபோது, இட ஒதுக்கீடு பற்றிப் பேசினார்கள்.

**திரு. ஜி.கே. மணி:** ஒரேயொரு கருத்து.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை. ஆளாளுக்குப் பேசிக் கொண்டேயிருந்தால் எப்படி?

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய திருவுருவப் படத்தை, எங்களுடைய கட்சியினுடைய உறுப்பினர் படிவத்திலே, ஒவ்வொரு

உறுப்பினர் அட்டையிலேயும் பொறித்து வழங்கக்கூடிய இயக்கப் [illegible] பாட்டாளி மக்கள் கட்சி. அவருடைய சமூக நீதிக்காகப் பாடுப[illegible] கொண்டு வருகிறோம் என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதிநிலை அறிக்கையின்மீது தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில் எங்களுடைய கருத்துகளைத் தொகுத்து சொல்வதற்காக நான் உங்கள் முன்னாலே நிற்கின்றேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் ஒரு முக்கியமான சிறப்பு அம்சம் என்பது, நிதிநிலை அறிக்கையோடு ஒரு வெள்ளை அறிக்கையும் இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. மாநிலத்தின் நிதிநிலையைத் தெளிவுபடுத்தும் வகையில் தயாரித்து அளிக்கப்பட்டுள்ள வெள்ளை அறிக்கை மிகவும் பயனுள்ளதாக அமைந்திருக்கிறது. நோய் என்ன என்பதைத் தெரிந்துகொண்டால்தான் அதைத் தீர்ப்பதற்குரிய சிகிச்சை அளிக்க முற்பட முடியும். கடந்த ஐந்து ஆண்டுகளில் நாம் எல்லாத் துறைகளிலேயும் பின்தங்கி விட்டோம் என்ற அதிர்ச்சிதரும் உண்மையை, வெள்ளை அறிக்கை வெளிப்படுத்தியிருக்கிறது. பொற்கால ஆட்சி என்றும், வாழ்வில் வசந்த காலம் வந்துவிட்டது என்றும், செவிகளால் கேட்டதும், கண்ணால் கண்டதும் எந்த அளவிற்கு யதார்த்தத்திற்குப் புறம்பானது என்பதை இன்று உணர முடிகிறது.

"பொய்யுடையொருவன் சொல்வன்மையினால்
மெய்போலும்மே, மெய்போலும்மே"

என்று கூறுவார்கள். அந்த வகையில் ஒரு பொய்மையும், மெய்போலத் தோற்றம் அளிக்கலாம். ஆனால், அதுவே மெய்யாகிவிட முடியாது. இந்தக் கசப்பான உண்மையைக் கருத்திலே கொண்டு, நிதிநிலை அறிக்கையை எடைபோட்டுப் பார்க்க வேண்டும்.

'மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு' என்பது, எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் உண்மையாகிவிட்டது. அதிலும், மக்கள் தொகையில் பெரும்பான்மையாக விளங்கும் அடித்தளத்து மக்களைப் பொறுத்தவரையில், அவர்களை உயர்த்துவதில்தான் இந்த நாட்டினுடைய உயர்வே அடங்கியிருக்கிறது. எனவேதான், பொருளாதார உயர்விற்குத் திட்டமிடும்போது, அடித்தளத்திலுள்ள அத்தகைய மக்களின் உயர்வைக் கருத்தில் கொண்டே திட்டங்களைத் தீட்ட வேண்டியிருக்கிறது.



புதிய பாரதத்தின் சிற்பியாகத் திகழ்ந்த ஜவஹர்லால் நேரு அவர்கள், சோசலிஸப் பொருளாதாரத்தின் மையமாக விளங்கும் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிக்கு ஐந்தாண்டுத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தினார். தற்போது ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியாண்டில் நாம் பயணம் செய்து கொண்டிருக்கிறோம்.

மறைந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள், யாருக்காகத் திட்டமிடப்பட வேண்டும் என்பதிலும், யாருக்காக இந்த ஆட்சிச் சக்கரம் சுழல வேண்டும் என்பதிலும் எல்லோரும் வியக்கும் வகையிலே ஓங்கிக் குரல் கொடுத்தார்.

"நான் ஆணையிட்டால் அது நடந்துவிட்டால்
இங்கு ஏழைகள் வேதனை படமாட்டார்"

என்றார். ஆட்சி அதிகாரம் தன்னையோ, தன்னைச் சார்ந்தவர்களையோ உயர்த்துவதற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை எம்.ஜி.ஆர். ஒருபோதும் ஏற்றுக் கொண்டதில்லை. மாறாக, தன் கைக்கு அதிகாரம் வந்தால், ஏழைகள் வேதனைப்பட மாட்டார்கள் என்பதைத் தான் பிரகடனப்படுத்தினார். அத்தகைய மனப்போக்கு படைத்தவராக விளங்கிய காரணத்தினால்தான் அவர் ஏழைகளைப் பற்றியே எப்போதும் சிந்தித்தார். அந்தவகையில், அவர் ஏழைகளின் சிரிப்பிலே இறைவனைக் காண விரும்பினார். எல்லாக் குழந்தைகளும் கல்வியறிவு பெற வேண்டும் என்று பெருந்தலைவர் காமராஜர் கொண்டிருந்த அக்கறை, எம்.ஜி.ஆர். அவர்களைப் பெரிதும் கவர்ந்தது. பசிப் பிணியால் பச்சிளங் குழந்தைகளின் படிப்பிற்குப் பங்கம் வரக்கூடாது என்று காமராஜர் கவலைப்பட்டார். அதன் விளைவாக உருவானதுதான் மதிய உணவுத் திட்டம். பள்ளிகள் இல்லாத ஊரே இல்லை என்ற நிலையை உருவாக்க அவர் அரும்பாடுபட்டார். அதன் விளைவாக இன்று ஊர்தோறும் பள்ளிகளைக் காண்கிறோம்; படித்தவர்களைப் பார்க்கிறோம். எம்.ஜி.ஆர். அவர்களும், காமராஜர் அவர்களின் வழியைப் பின்பற்றி, சத்துணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தி சரித்திரம் படைத்துவிட்டார். இன்று இந்த ஆட்சியிலேயும், அந்தத் திட்டம் வலிவும் பொலிவும் பெற்று செயல்படுத்தப்பட்டு வருவதைக் காண்கிறோம்.

முற்பகல் 11-55

ஒரு நாட்டின் பொருளாதாரம் அந்த நாட்டு மக்கள் கல்வியிலும், சுகாதாரத்தில் . எட்டும் வளர்ச்சியிலும் ஏற்படும் வளர்ச்சியைப்

பொறுத்துதான் அமையும் என்பதைப் பொருளாதார நிபுணரான அமர்த்தியா சென் அவர்கள் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். அதற்காக அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. அவருடைய கருத்தைப் பின்பற்றி கல்வியில் முன்னேற வேண்டுமென்று நாம் கவனம் செலுத்தி வருகிறோம்.

இந்த அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், வெள்ளை அறிக்கையில், மாநிலத்தின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துதல், வறுமையையும், பிற்பட்ட நிலையினையும் அறவே ஒழித்தல் மற்றும் மக்களின் நல்வாழ்வை உறுதிப்படுத்துதல் ஆகியவையே ஓர் அரசின் தலையாய கடமையாக இருக்க முடியும் என்பதை அழுத்தந்திருத்தமாக முதல் பாராவிலேயே வெளியிட்டிருக்கிறது. இதைத்தான் அன்னை இந்திராகாந்தி அவர்களும் பிரதமராக இருந்தபோது, வறுமையை விரட்டுவோம்; 'Garibi Hatao' என்பதை முழக்கமாக அன்றையதினம் முன்வைத்தார்கள். ஆயினும், இத்தகைய எண்ணம் ஈடேற வேண்டுமானால், அந்த எண்ணத்தை அமல்படுத்துபவர்கள் திண்ணியராக இருக்க வேண்டும் என்றார் திருவள்ளுவப் பேராசான்.

கடந்த காலத்தில் நடைபெற்ற திட்டங்களின் வேகத்தைப் பார்க்கும்போது நமக்கு வேதனையே மிஞ்சுகிறது. 1991–96 ஆம் ஆண்டுகளில் ஆண்டொன்றுக்கு 6.66 சதவீதமாக இருந்த உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு 1996–2001 ஆம் ஆண்டுகளில் 6.22 சதவீதமாகக் குறைந்து விட்டது. அதாவது 0.44 சதவீதம் குறைந்திருக்கிறது. நம்முடைய முதன்மைத் தொழிலான வேளாண்மையிலிருந்து கிடைக்கும் வருவாய் 1991–லேயிருந்து 1996 வரையிலான காலகட்டத்தில் ஆண்டொன்றுக்கு 4.33 சதவீதமாக இருந்தது, 1996–2001–லே அது 2.66 சதவீதமாக வீழ்ச்சி அடைந்துள்ளது. அதாவது 2 சதவீதம் குறைந்திருக்கிறது. அதேபோன்று நமது தொழில் பிரிவுகள் மூலம் கிடைத்த வருவாய் 1991–96 ஆம் ஆண்டுகளில் ஆண்டொன்றுக்கு 6.92 சதவீதமாக இருந்தது. 1996–2001 ஆம் ஆண்டுகளில் 4.17 சதவீதமாகக் குறைந்துள்ளது. அதாவது, 2.75 சதவீதம், இரண்டே முக்கால் சதவீதம் குறைந்திருக்கிறது. ஆனால், சேவைப் பிரிவில் மட்டும் வளர்ச்சி அதிகரிக்கப்பட்டுள்ளது. மாநில அரசின் ஒட்டுமொத்த நிதிப் பற்றாக்குறை...

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே...

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நிதிப் பற்றாக்குறை 1990–91–ல்...



**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, கேளுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் இந்த மன்றத்தின் நீண்டகால உறுப்பினர். நம்முடைய Assembly Rules Book–லேயும் இருக்கிறது. பொதுவாக, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிற உறுப்பினர்கள்தான் சில நேரங்களில் அவையினுடைய நடுக்கத்தில் படிப்பார்கள். ஆனால், நம்முடைய வழக்கறிஞர் நண்பர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள், ஒரு ஆற்றல் மிக்க பேச்சாளர்; அருமையான சொற்பொழிவாளர். அவர்களே, வரிக்கு வரி முன் வரிசையிலேயிருந்து இப்படிப் படிப்பது இந்த மன்றத்தினுடைய மரபுக்கு ஏற்றதா, சட்டத்திற்குட்பட்டு இருக்கிறதா என்பதைத் தாங்கள்தான் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை; குறிப்புகளை வைத்துக்கொண்டுதான் பேசுகிறார்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** தலைவர் அவர்களே, குறிப்புகளை வைத்துக்கொண்டுதான்...

**திரு. துரைமுருகன்:** இல்லை, இல்லை; Verbatim, word by word.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** இல்லை, இல்லை. நீங்கள் சொல்லிவிட்டீர்கள். அவர்கள் குறிப்பை வைத்துக்கொண்டுதான்...

**திரு. துரைமுருகன்:** இல்லை, இல்லை; அவரிடமிருந்தே வாங்கிக் கொள்ளலாம்; இல்லையென்றால், நடவடிக்கைக் குறிப்புகளிலேயிருந்து வாங்கிக்கொள்ளலாம். I can challenge.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** திரு. துரைமுருகன், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் பேசிக் கொண்டுதான் இருக்கிறார். அந்தக் குறிப்பை வைத்துக்கொண்டுதான் பேசுகிறார். சில statistics–ஐப் படித்துத்தான் ஆகவேண்டும். புள்ளி விவரங்களை அப்படியே சொல்வதற்கு நாம் எல்லோரும் Computer

கிடையாது. (குறுக்கீடு) ஆகவே, அவர் பேசும்போது குறிப்பை வைத்து சிலவற்றைச் சொல்கின்றாரே தவிர, அப்படியே படிக்கவில்லை. (குறுக்கீடு) திரு. துரைமுருகன், அவர் நன்றாகப் பேசுபவர்தான். ஆனால், அவருடைய (குறுக்கீடு) பேச்சு படிப்பது மாதிரிதான் இருக்கிறது. ஆனால், பேச்சுதான் அது. ஆனால், அவர் பேசுவது உங்களுக்குப் படிப்பது மாதிரி தெரிகிறது.

**திரு. துரைமுருகன்:** இல்லை, இல்லை, please.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** தலைவர் அவர்களே, திரு. துரைமுருகன் அவர்களும் குறிப்பை வைத்துக்கொண்டுதானே நேற்று படித்தார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன் அவர்களே, திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் ஒரு சிறந்த பேச்சாளர்; மிகச் சிறந்த சொற்பொழிவாளர்; ஆற்றல் மிக்க பேச்சாளர் என்று தாங்களே சொன்னீர்கள். என்னதான் திறமையான பேச்சாளராக இருந்தாலும், சில குறிப்புகள் தேவை. (குறுக்கீடுகள்) சில குறிப்புகள் தேவை. அந்தக் குறிப்புகளைத்தான் பயன்படுத்துகிறார்கள். இதிலே வேறு ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) வேண்டாம், வேண்டாம்.

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, குறிப்புகள் வைத்துக் கொண்டிருப்பதிலே எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

நண்பகல் 12-00

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சரி, நான் பதில் சொல்கிறேன். விடுங்கள். தயவுசெய்து விடுங்கள். முழுக்க முழுக்க புள்ளிவிவரங்களைத் தான் நான் படித்துக் கொண்டிருக்கிறேன். நான் முதலிலே படித்தது நிதிநிலை அறிக்கையிலே இருக்கிற முதல் பாராவிலே, 1.1 பாராவிலே இருந்த விஷயத்தை அப்படியே படித்தேன். மீதி அத்தனையும் இந்த வெள்ளை அறிக்கையிலேயும், நிதிநிலை அறிக்கையிலேயும் கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளிவிவரங்கள். நானாக எந்தப் புள்ளிவிவரங்களையும் எடுத்துச் சொல்லவில்லை. அத்தனை புள்ளிவிவரங்களையும் நினைவிலே இருந்துதான் சொல்ல வேண்டும்; கையிலே குறிப்புகளே இருக்கக்கூடாது என்று நான் கேள்விப்பட்டதே கிடையாது. நான் இந்த அவையிலே பணியாற்றியிருக்கிறேன். இந்த அவையிலே அமைச்சர்கள் பேசியதை நான் பார்த்திருக்கிறேன். மக்களவையிலே பணியாற்றியிருக்கிறேன். அங்கேயும் அமைச்சராக இருந்திருக்கிறேன். யாரும் இந்த மாதிரி குற்றச்சாட்டு சொல்லி, இப்படிப்



[illegible] கூடாது என்று நான் கேள்விப்பட்டதே கிடையாது. ஏன் இந்தமாதிரி [illegible] தூறுக்கே நிற்கிறார் என்று தெரியவில்லை. (மேசையைத் தட்டும் [illegible] எப்படி இதெல்லாம் சொல்ல முடியும்? மாநில அரசின் [illegible] மொத்த நிதிப் பற்றாக்குறை, 1990–91–ல், ரூ.1126 கோடியாக இருந்தது [illegible] நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்களே, இதைப் [illegible]துபடுத்த வேண்டாம். ஒரு கலகலப்பு உண்டாக்க வேண்டும் என்று [illegible]ல்கிறார்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** I am leaving it at that, Sir. 1990 91–ல் ரூபாய் 1126 கோடியாக இருந்தது, 1995–96–ல் ரூபாய் 1255 கோடி என்ற நிலைக்கு மட்டுமே உயர்ந்தது. ஆனால், 2000–2001–ல் நிதிப் பற்றாக்குறை, ரூபாய் 5,781 கோடியை எட்டி இருக்கிறது. அதேபோல, வருவாய்ப் பற்றாக்குறை, 1990–91–ல் 533 கோடியாக இருந்தது, 1995–96–ல், 311 கோடி ரூபாயாகக் குறைந்தது. ஆயினும், கடந்த 5 ஆண்டு காலத்தில் அது மிக மோசமாக உயர்ந்து, 2000–2001–ல் ரூபாய் 3,922 கோடியாக அதிகரித்துவிட்டது. 1991–92 வரவு–செலவுத் திட்டத்திலே, வளர்ச்சிப் பணிக்காக 77.9 சதவிகிதம் செலவிடப்பட்டது. ஆனால், 2000–2001–லே இது 57.8 சதவிகிதமாகக் குறைந்து விட்டது. அதேபோன்று, 1995–96 ஆம் ஆண்டு இறுதியில் அரசிடம் 649 கோடி ரொக்க இருப்பு இருந்தது. ஆனால், கடந்த 5 ஆண்டுகளில் இது முற்றிலுமாகக் குறைந்து, இருப்பு அறவே இல்லாத நிலையில் இந்திய ரிசர்வ் வங்கியிடம் ரூ.242 கோடி கடன் பெறும் நிலை உருவாகியிருக்கிறது. இன்னும், பல இனங்களில் அரசாங்கம் கொடுக்க வேண்டிய ரூபாய் 700 கோடி கொடுக்கப் படாமலேயே இருக்கிறது. இந்தப் பின்னணியிலேதான் இந்த ஆண்டிற்குரிய நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதை முதலிலே நாம் கருத்தில் கொள்ள வேண்டும். அதற்குத்தான் சொல்ல வந்தேனே தவிர, வேறு ஒன்றும் பிரச்சினை கிடையாது.

இன்னும் சொல்லப்போனால், நமது போக்குவரத்துக் கழகங்களுக்கு, உதிரிப் பாகங்கள் வாங்கிய வகையில், ரூ.2,000 கோடியும், மின்சார வாரியத்திற்கு உதிரிப் பாகங்கள் வாங்கிய வகையில் ரூ.4,000 கோடியும் கூறப்பட்டிருக்கிறது. மின் வாரியத்திற்கு இழப்பு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. மின் வாரியத்திற்கு இந்த ஆண்டு மட்டும் அரசு நிதியிலேயிருந்து 500 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. இத்தகைய அரசு நிறுவனங்களுக்கு உதிரிப் பாகங்கள் வாங்குவதில், இங்குள்ள சிறு தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு இருந்த முன்னுரிமை, கடந்த கால அரசால் ரத்து

செய்யப்பட்டுவிட்டது. குறைந்த விலையில் தரமான பொருட்களைக் கொள்முதல் செய்வதற்கு இத்தகைய ஆணை அவசியம் என்று அன்றைய அரசு அதிகாரிகள் ஆலோசனை வழங்கியதாகவும், அதனை ஏற்று அதற்குரிய ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

அரசாங்கத்தினுடைய இத்தகைய நடவடிக்கையால் மாநிலத்தினுடைய ஏராளமான சிறு தொழில்கள் பாதிக்கப்படவும், பல்வேறு முறைகேடுகள், இலஞ்ச ஊழல்கள் இடம்பெறவும் வழி ஏற்பட்டுவிட்டது. மாநிலத்திற்கு ஏராளமான நஷ்டத்தையும், சிறு தொழில்களுக்குப் பாதிப்பையும் ஏற்படுத்திய இந்த அரசு ஆணைக்குப் பொறுப்பானவர்கள்மீது இலஞ்ச ஊழல் வழக்குப் போடுமாறு நான் கேட்டுக்கொள்ளப் போவதில்லை. ஆனால், எதிர்காலத்தில் இத்தகைய நிகழ்வுகள் இருக்கக்கூடாது; தொடரக் கூடாது. எனவே, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கருதுகிறேன். எனவே, இதன் பின்னணியை ஆய்ந்து அரசுக்கு உரிய பரிந்துரைகளை வழங்குவதற்கு ஓர் உயர்மட்டக் குழுவையும் அமைக்க வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய U.T.I. நிதி நிறுவனத்தில் முதலீடு செய்த 2 கோடிக்கு மேற்பட்ட சிறு முதலீட்டாளர்கள் ஏமாற்றப்பட்டு, தெருவிற்கு வந்து விட்டார்கள். மத்திய அரசை நம்பினோர் கெட்டுப் போய்விட்டார்கள். பிரதமரே பொறுப்பேற்று ராஜினாமா செய்தாலும், பாதிக்கப் பட்டவர்களுக்குப் பரிகாரம் கிடைக்கப் போவதில்லை. நிதியமைச்சர் மாண்புமிகு யஷ்வந்த் சின்ஹா மீது... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மத்திய அரசு பேசுகிறது. (சிரிப்பு) திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த U.T.I. விவகாரம், 1998–லே பூதாகரமாக வெளியிலே வந்தது. அதை விசாரிப்பதற்காக தீபக் பரேக் கமிட்டி நியமிக்கப்பட்டது. அதனுடைய ஸ்கோப் 1998 வரை. 1,400–க்கும் மேற்பட்ட fake company–யிலே U.T.I., invest செய்தபோது, இப்போதிருக்கின்ற பாரதிய ஜனதா கட்சித் தலைமையிலான அரசு இல்லை. மேலும், U.T.I.–யினுடைய reserve–ஐ corode பண்ணியது 1994–95, 1995–96, 1996–97 ஆகிய 3 ஆண்டுகளிலே ஆண்டிற்கு 25 சதவிகிதம், 26 சதவிகிதம் divident reserve–லே இருந்து கொடுத்தபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசு பொறுப்பிலே அவருடைய கட்சியும் இருந்தது என்பதை நான் இங்கே கூற விரும்புகிறேன்.



**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைக்கு முற்றிலும் தவறான தகவலைக் கொடுக்கிறார். இந்த அவையிலே மாத்திரம் தவறான தகவலைக் கொடுக்கிறார் என்று நினைக்காதீர்கள். டெல்லியிலேயே மாநிலங்கள் அவையிலேயே அங்கே இருக்கிற நிதியமைச்சர் தவறான தகவலைக் கொடுத்து அவருக்கு எதிராக ஓர் உரிமை மீறல் பிரச்சினை இதிலே கொண்டு வரப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்களே, பாராளுமன்றமே இதிலே கலகலத்துக் கொண்டிருக்கிறது. இந்தப் பிரச்சினையை விட்டுவிடுங்கள்.

பிற்பகல் 12-05

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதற்கு அடுத்த பிரச்சினைக்கு வந்துவிட்டேன். ஒருவேளை உரிமை மீறல் பிரச்சினை எடுப்பதினாலேயே அந்தப் பிரச்சினை தீரப் போகிறதா? கிடையாது. நிவாரணம் கொடுக்கப் போகிறார்களா? அதைத்தான் நான் சொல்கிறேன். நிவாரணம் கிடைக்கப் போவதில்லை. ஆனால், இந்த சங்பரிவார் இருக்கிறதே, அது உத்தரப்பிரதேச தேர்தலிலே வெற்றி பெற வேண்டுமென்பதற்காக எந்த எல்லைக்கு வேண்டுமானாலும் போவார்கள் என்பதற்கு இதுதான் ஓர் எடுத்துக்காட்டு. அங்கு வகுப்புக் கலவரம் நிகழலாம் என்று எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, வாழ்நாள் முழுவதும் கடுமையாக உழைத்து, வயிற்றையும் வாயையும் கட்டி, சிறுகச் சிறுகச் சேமித்து வைத்த தொகை முழுவதையும் நிதி நிறுவன மோசடி விளம்பரங்களிலும், மோடி மஸ்தான் வேலைகளிலும் ஏமாந்து, கிட்டத்தட்ட 20 இலட்சம் பேருக்கும் மேற்பட்ட ஏழையெளிய, நடுத்தர மக்கள் தெருவுக்கு வந்திருக்கிறார்கள். அவர்களுக்குக் கைகொடுத்துக் காப்பாற்றும் நிலையில் நம்முடைய காவல் துறை இல்லை. வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. வழக்கம்போல் நடந்து வருகின்றன. நிதி நிறுவனங்கள், மோசடி விளம்பரங்கள் செய்தபோது, மத்திய, மாநில அரசுகள் மௌனம் காத்தன. அந்த வழக்குகளை விசாரிப்பதற்குக் கூடுதலாக ஒரு நீதிமன்றம் அமைக்கப்படும் என்று நிதியமைச்சர் அறிவித்திருக்கிறார். இதை நான் வரவேற்கிறேன். எனினும், வழக்குகளைப் பதிவு செய்வதினாலோ, தனி நீதிமன்றங்கள் அமைப்பதனாலோ, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்க முடியாது. தாய்மார்களின் கண்ணீரைத் துடைப்பதற்கு நம்முடைய முதலமைச்சர்தான் இதற்கு ஒரு

தீர்வு காண வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த அவையிலே ஓர் உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, முதலமைச்சரை வழிபடு தெய்வமாகக் கருதிக் கொண்டிருக்கிற இலட்சக்கணக்கான தாய்மார்களின் கண்ணீரைத் துடைக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநிலத்திலே உள்ள 20 இலட்சம் எக்டேர் தரிசு நிலங்களை மேம்படுத்துவதற்காக அறிவிக்கப்பட்டிருக்கும் திட்டம் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கிறது. எத்தனையோ நிலச் சீர்திருத்தச் சட்டங்களை நிறைவேற்றிய பிறகும், உழுபவனுக்கே நிலம் என்ற உன்னதமான கோட்பாட்டை எட்ட முடியாமலேயே இருந்து வருகிறது. தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் அந்தக் குறைகளை மாற்றியமைக்கும் வகையில் அமையுமானால் எல்லோருக்கும் பலன் அளிக்கும். மொத்த விவசாய நிலத்திலே மூன்றில் ஒரு பகுதி கோயில்களுக்குச் சொந்தமாக இருக்கிறது. அந்த நிலங்களிலிருந்து கோயில்களுக்கு வரவேண்டிய குறைந்தபட்சக் கட்டணம்கூட வந்து சேருவதில்லை. நகர்ப்புறங்களிலே கோயில்களுக்குச் சொந்தமான விலைமதிப்பற்ற வணிக வளாகங்கள்கூட குறைந்த வாடகைக்கே விடப்பட்டிருக்கின்றன. அந்த வாடகையும் கோயில்களுக்கு ஒழுங்காகச் சேருவதில்லை. செல்வாக்கு மிக்க பலரும் அடாவடி மூலம் இத்தகைய இடங்களை ஆக்கிரமித்துக் கொண்டு, உள் குத்தகைக்கு விட்டு, கொள்ளை இலாபம் சம்பாதித்துக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. அடையாறு போன்ற பகுதிகளிலே, கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் பல இருக்கின்றன. பத்திரிகைகளிலே செய்தி வந்திருக்கிறது. நான் ஒன்றும் புதிதாகச் சொல்லவில்லை. ஒரு கிரவுண்டுக்கு வாடகை என்ன தெரியுமா? 30-க்கு 40 இடமில்லை, 50-க்கு 40 இடமில்லை, ஒரு கிரவுண்ட் – ஐந்தரை சென்ட் – ஐந்தரை சென்டுக்கும் கொஞ்சம் மேலே. ஒரு கிரவுண்டுக்கு 10 ரூபாய்தான் வாடகையாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அந்த வாடகையை வசூலிப்பதற்கும், முறைப்படுத்துவதற்கும் கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்திலே பல ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. அவற்றை நடைமுறைப்படுத்த முடியவில்லை. எல்லா ஆணைகளையும் இரத்து செய்து, ஆக்கிரமிப்பாளர்களை சுதந்திரமாக விட்டுவிட்டதாக முன்னாள் முதலமைச்சர்மீது இப்போது ஒரு குற்றச்சாட்டு எழுப்பப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் விசாரித்து, தெளிவான அறிக்கை ஒன்றை, அரசு இந்த அவைக்கு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டாட்சி அமைப்பு முறைக்கே ஒரு சவால் எழுந்திருக்கின்றது. அதிலும் மத்தியிலே நடைபெறும் கூட்டணி ஆட்சியாலே நிலைமை



மிகவும் மோசமடைந்திருக்கிறது. கொள்கை, கோட்பாடு, எதிலும் உடன்பாடு காணமுடியாத சக்திகள் எல்லாம் ஒன்று சேர்ந்து மத்தியிலே அதிகாரத்தைக் கைப்பற்றுவதையும் பகிர்ந்துகொள்வதையும் மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு ஓர் ஆட்சி அமைந்திருக்கிறது. இது உலக அதிசயங்களிலே ஒன்றாகத்தான் விளங்கிக் கொண்டிருக்கிறது. மத்திய அமைச்சர்கள்மீது குற்றச்சாட்டு எழுந்து, அவர்கள் பதவியை விட்டு விலக வேண்டுமென்று நிர்பந்தம் கொடுக்கப்படுகிதறது. சிலர் பதவியை விட்டும் விலக நேரிடுகிறது. குற்றச்சாட்டுகள் மீது நீதி விசாரணைக் கமிஷனும் அமைக்கப்படுகிறது. நிதியமைச்சர், உள் துறை அமைச்சர் போன்றவர்கள் பதவி விலக வேண்டுமென்ற நிர்பந்தம் கொடுக்கப்படுகிறது. பிரதமருக்கு எதிராகவும் குற்றச்சாட்டுகள் கூறப்படுகின்றன. அவரே தன்னுடைய ஆற்றாமையை ஒப்புக்கொண்டு, பதவியை விட்டு விலகுவதாகவும் அறிவிக்க நேரிடுகிறது. இத்தனைக்கும் பிறகு வேறு வழி ஏதும் இல்லாமையால் மத்தியிலே ஓர் ஆட்சி, மக்களவை கலைக்கப்பட்டாலும், மந்திரி சபை இருந்தே ஆக வேண்டுமென்ற அரசமைப்புச் சட்டத்தின் கட்டாயத்தின்பேரில் அங்கே மந்திரி சபை நாட்களை நகர்த்திக் கொண்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்த வரையிலே, மக்கள் ஆதரவை, மகத்தான ஆதரவைப் பெற்ற ஒரு கட்சியினுடைய ஆட்சி, அரசமைப்புச் சட்டப்படி செயல்பட்டு வருகிறது. ஆனால், இந்த ஆட்சியை அகற்றுவதற்கும், மத்திய அரசின் மறைமுக ஆட்சியை இங்கே செயல்படுத்துவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. தன் அதிகார வரம்பை மீறி, மத்திய அரசு மாநில அரசின் விவகாரங்களில் தலையிட வேண்டுமென்று நிர்பந்தம் கொடுக்கப்படுகிறது. அதிலும், சட்டமன்றத் தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்ட கட்சிகளே மத்திய அரசில் இருந்துகொண்டு, இந்த வேலைகளைச் செய்கின்றன. சாதாரண அதிகாரிகள் மாறுதல்களில்கூட, மத்திய அரசின் கைதான் ஓங்கியிருக்க வேண்டுமென்று ஓலமிடுகின்றன. நடைமுறைகளையும், மரபுகளையும், விதிமுறைகளையும் துச்சமென மதித்து, தூக்கியெறியவும் துணிந்துவிட்டன. ஒரு காலத்திலே தனி நாடு கோரிக்கையை முன்வைத்து, பிறகு ஒன்றுபட்ட இந்தியாவிலே சுய அதிகாரம் படைத்த மாநில அரசு வேண்டுமென்று கொள்கை முழக்கமிட்டவர்களே இன்றையதினம் திசை மாறிய பறவைகளாகத் திரிய நேரிட்டிருக்கிறது.

பிற்பகல் 12-10

மாநில அரசுகளை நீக்குவதற்கு, மத்திய அரசுக்கு அதிகாரம் அளிக்கும் அரசமைப்புச் சட்டப் பிரிவு 356-ஐ அகற்ற வேண்டுமென்று வாதாடினார்கள். அந்தப் பிரிவுக்குத் தீயிட்டுக் கொளுத்துவதையே ஓர்

அறப்போராட்டம் என்று அறிவித்தார்கள். தாங்கள் விரும்பும் மாநில சுயாட்சி எப்படி இருக்க வேண்டுமென்று எடுத்துரைப்பதற்காக, சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி பி.வி. இராஜமன்னார் தலைமையில் ஓர் உயர்மட்ட ஆணையத்தையே அமைத்தார்கள். அவர் அளித்த பரிந்துரைகளின் அடிப்படையிலே ஒரு மாநில சுயாட்சித் தீர்மானத்தை 1974–லே இதே சட்டமன்றத்திலே நிறைவேற்றி இருக்கிறார்கள். தங்களுடைய கோரிக்கைக்கு ஆதரவாக இந்திய நாடு முழுவதும் உள்ள எதிர்க்கட்சித் தலைவர்களை அணுகினார்கள். சிறப்பு மாநாடுகளை நடத்தினார்கள். ஆனால், இன்று அவையெல்லாம் பொய்யாய், பழங்கதையாய்ப் போய்விட்டன. நிலையற்ற ஒரு நீர்க்குமிழி ஆட்சியில், தங்களுக்கும் பங்கு கிடைத்துவிட்டது என்ற ஆனந்தக் களிப்பில், மாநில சுயாட்சி என்ற வார்த்தையையே மறந்து விட்டார்கள்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள், தன் கட்சியின் சார்பாக வாதாடுகின்ற முறையில், திராவிட முன்னேற்றக் கழகம், மாநில சுயாட்சிக் கோரிக்கையை வைத்து, அதற்காகப் பல்வேறு வகைகளில் அந்தக் கொள்கையை வெற்றிபெறச் செய்வதற்காகப் பாடுபட்ட அந்த வரலாற்றைச் சொல்லி, இப்போது அதற்கு மாறாக தி.மு.க. மத்திய அரசாங்கத்தைப் பயன்படுத்தி இந்த ஆட்சிக்கு எதிராகச் செயல்படுவதாக ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள்.

மாநில சுயாட்சிக் கொள்கையை வலியுறுத்திய திராவிட முன்னேற்றக் கழகம், இன்றைக்கும் தொடர்ந்து வலியுறுத்துகிறது. அந்த முறையில் மத்திய அரசு 356–வது பிரிவைப் பயன்படுத்தக் கூடாது என்ற கொள்கையிலிருந்து இன்றும் நாங்கள் பின்னடைவு கொள்ளவில்லை. அந்தக் கொள்கையை நாங்கள் வலியுறுத்த வேண்டுமானால், அல்லது அந்தக் கொள்கையுடன் தொடர்ந்து செயல்பட வேண்டுமென்று விரும்புகிறவர்கள், அப்படி எங்களிடத்திலே வாதாட வேண்டுமானால், அவர்கள் அந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டு, நாங்களும் ஏற்றுக்கொண்டோம் என்ற அந்த அடிப்படையில், தி.மு.க. அந்தக் கொள்கையை விட்டுவிடக் கூடாது என்று சொல்வார்களேயானால், நான் ஏற்றுக்கொண்டு, அதற்குரிய மதிப்பு அளித்து, அந்தக் கருத்தை நான் பரிசீலிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், அவர்கள் 356–வது பிரிவை அரசியல் சாசனத்திலிருந்து நீக்க அனுமதிக்கமாட்டார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் சொன்னது என்று மட்டும் சொல்லுவார்களானால், அது நியாயம் அல்ல. நான் இப்போதும்



சொல்கிறேன்; எல்லோரும் ஒத்துக்கொண்டு வருவார்களானால், 356–வது பிரிவை நீக்குவதற்கும் தி.மு.க. தயார்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியர் அவர்களுடைய விளக்கத்திற்கு நான் நன்றி சொல்கிறேன். ஆனால், வெளியே பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். அண்மைக் காலத்தில், இந்த ஒரு மாத காலத்திற்குள்ளாக எப்படிப்பட்ட விளக்கங்கள் தரப்பட்டன? அவர்களுடைய தலைவர் சொன்னார்; ஏன் நான் 356–வது பிரிவைக் கேட்கக்கூடாது; 356–வது பிரிவு, சட்டப் புத்தகத்தில் இருக்கின்ற வரையில் நான் 356–வது பிரிவை அமல்படுத்தக் கேட்பேன். இது என்ன காங்கிரசுக்கு மட்டும் சொந்தமா என்று கேட்டாரா, இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி)

என்னுடைய மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியர் அவர்கள் சொன்னார்கள். இரண்டு நாட்களுக்கு முன்னாலேகூடச் சொன்னார்கள், நான் சொன்னது உண்மைதான்; 356–வது பிரிவைப் பயன்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டது உண்மைதான்; சர்வ கட்சிக் கூட்டத்திலே கேட்டுக்கொண்டது உண்மைதான் என்று அவர்களே சொன்னார்கள். அதோடு, அதற்குப் பிறகு அவர் கொடுத்த விளக்கத்தை ஏற்றுக்கொண்டு அவருடைய கட்சிக்காரர்கள் பேசாமல் இருந்திருந்தால் நான் இதற்கு வந்திருக்க மாட்டேன். டெல்லியில் நாடாளுமன்றத்தில் என்ன சத்தம் போட்டார்கள்? Dismiss Jaya Government, Dismiss Jaya Government என்று சத்தம் போட்டார்களா? இல்லையா? ஆனால், இப்போதும் நாங்கள் 356–வது பிரிவைப் பயன்படுத்தக் கேட்கவில்லை என்று சொன்னால் எது உண்மை? 356 பிரிவே இருக்கக்கூடாது என்பது இராஜமன்னார் கமிஷன் ரிப்போர்ட். இங்கே நிறைவேற்றி இருக்கிறீர்கள். நீங்கள் நிறைவேற்றிய எந்தத் தீர்மானத்தை அமல்படுத்தத் தயாராக இருக்கிறீர்கள்? தயவுசெய்து எனக்குச் சொல்லுங்கள். அந்த ரிப்போர்ட், பெரிய ரிப்போர்ட். இரண்டு வால்யூம்கள். ஒரு வால்யூம்–ஐக் காணவில்லை. யாரோ தூக்கிக் கொண்டு போய்விட்டார்கள். இங்கே Library–யில் நானே தேடிப் பார்த்தேன், கிடைக்கவில்லை. எனக்குப் பழைய ஞாபகம். நல்லகாலம், நானே சட்டமன்றத்தில் பேசி, அப்போது பேராசிரியர் அவர்கள் அன்றையதினம் அவை முன்னவராக இருந்தார்கள். Article 263–ஐப் பற்றி நான் நிறைய நேரம் பேசியிருக்கிறேன். Article 263 will be ineffective and will not serve any purpose என்று கூறிவிட்டு, இன்று Article 263–ன் கீழே வருகின்ற Inter–State Council–ஐ வரவேற்கிறீர்களே என்று

நான் கேட்டபோது, நிறைய நேரம் என்னோடு வாதாடினார்கள். பேராசிரியர் வாதாடவில்லை. அன்றையதினம் முதலமைச்சராக இருந்தவர் என்னிடத்தில் நிறைய நேரம் வாதாடினார். அன்று சொன்ன கருத்தை நான் இன்றும் சொல்கிறேன். தெளிவாக இருங்கள். எது உங்களுக்கு வேண்டும்? சுயாட்சிதான் என்றால், மாநில சுயாட்சிதான் எங்கள் கொள்கை என்று தைரியமாகச் சொல்லுங்கள். நான் குறுக்கே நிற்கமாட்டேன். 356 வேண்டாம் என்று சொன்னால், வேண்டாம் என்று இந்த அவையிலே சொல்லிவிட்டு, அங்கேபோய் 356-ஐப் பயன்படுத்துங்கள், பயன்படுத்துங்கள் என்று கூறுவதை நான் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டேன். அதை எதிர்த்து நிச்சயமாகக் குரல் கொடுக்க வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. நாங்கள் உட்கார்ந்து கொண்டிருக்க முடியாது. எதை நீங்கள் சரியாகச் செய்கிறீர்கள்?

*பிற்பகல் 12-15*

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இயக்கத்தினுடைய சார்பில் ஒரு கொள்கையை எடுத்து வைக்கிறபோது, அந்தக் கொள்கையும், அந்தத் திட்டமும் அனைவருக்கும் உடன்பாடாகி, அது நிறைவேற்றப்பட்டால்தான், அதற்குப் பின்னர் அந்த நிலையிலே நின்று பேசமுடியும். அந்தக் கொள்கையை, பலரும் ஏற்றுக்கொள்ளாமல், தங்களுடைய வசதிக்கு 356-வது பிரிவை காங்கிரஸ் பயன்படுத்தும்; வேறு கட்சி பயன்படுத்தும்; டெல்லியில் ஆட்சிக்கு வருபவர்கள் பயன்படுத்துவார்கள் என்றால், அப்படிப் பயன்படும் அந்த விதியைப் பயன்படுத்துங்கள் என்று ஒரு சாரார் கேட்கும் நிலைமையும் இயல்பாக இருக்கத்தான் செய்யும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, The cat is out of the bag. அவரே இப்போது சொல்லிவிட்டார். அந்த விதி இருக்கும்வரை கேட்போம் என்கிறார். அதைத்தான் சொல்கிறேன், அந்தப் பிரிவு இருந்தாலும் நீங்கள் அதைக் கேட்கக் கூடாது என்பதுதான் உங்களுடைய கொள்கை. அந்தப் பிரிவைப் பயன்படுத்த வேண்டும் என்று சொல்வோம், பயன்படுத்தக் கூடாது என்று சொல்லவில்லை. எதற்குப் பயன்படுத்த வேண்டும்? நாட்டிற்கு விரோதமாக, தேசத்திற்கு விரோதமாகச் செயல்படுபவர்கள், அரசியல் சட்டப்படி ஒரு அரசாங்கமே இயங்க முடியாத சூழ்நிலை ஏற்படுகின்ற நேரத்தில், நிச்சயமாக அந்தப் பிரிவைப் பயன்படுத்துவதற்கு நான் தடையாக இருக்கமாட்டேன். தேசத்திற்கு விரோதமாகப் போனால், அதை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று சொல்லக்கூடிய அளவிற்கு நான் போகமாட்டேன்.



ஆனால், முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட, மக்களாலே பெரும்பான்மையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசாங்கம் இங்கே இயங்கிக் கொண்டிருக்கிறது. ஒரு சின்ன நடவடிக்கை வந்தவுடனேயே என்ன சொல்கிறீர்கள்? உடனே இந்த அரசாங்கத்தை டிஸ்மிஸ் செய்ய வேண்டும், 2 நாட்கள்தான் நேரம் கொடுப்போம் என்று சொல்கிறீர்கள், என்ன நியாயம்? (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் சொல்லியிருக்கிற ஏதாவது ஒன்றை, Article 311 வேண்டாம்; 312 வேண்டாம் என்று அன்றைக்குச் சொன்னபோதே, நான் சொன்னேன்; இது சரியல்ல; Article 311 வேண்டாமென்று சொன்னால், Article 312 வேண்டாமென்று சொன்னால், I.A.S. இருக்காது; I.P.S. இருக்காது. ஏனென்றால், இராஜமன்னார் என்ன சொல்லியிருக்கிறார் என்றால், மாநிலங்களுக்குத் தேவையான அதிகாரிகளை மத்திய அரசு தேர்வு செய்து ஒதுக்குவதற்குப் பதிலாக, மாநில அரசுகளே அவர்களைத் தேர்வு செய்துகொள்ளலாம் என்று இராஜமன்னார் அவர்கள் பரிந்துரை செய்திருக்கிறார்கள். இவர்கள் அதை இந்த அவையில் நிறைவேற்றி இருக்கிறார்கள்; அதை இல்லை என்ற சொல்லச் சொல்லுங்கள். ஆனால், இன்றைக்கு என்ன சொல்கிறார்கள்? இன்றைக்கு சில அதிகாரிகளை மத்திய அரசாங்கம் தன்னுடைய அதிகார வரம்பை மீறி எடுத்துக்கொள்வதற்கு இவர்கள் நிர்பந்தம் கொடுக்கிறார்கள். உண்டா, இல்லையா? தைரியமிருந்தால் இல்லை என்று சொல்லச் சொல்லுங்கள்; பேராசிரியர் அவர்களைச் சொல்லச் சொல்லுங்கள்; நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. இந்த அவையிலே பேசுவதும், வெளியிலே பேசுவதும் ஒன்றாக இருக்க வேண்டும். இரண்டும் ஒன்றாகத்தான் இருக்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்று ராஜாக்களாக மாறிவிட்ட இந்த மன்னர்கள், மாநில அதிகாரிகள், மத்திய அரசின் கட்டுப்பாட்டில்தான் இயங்க வேண்டுமென்று மாற்றிக் குரல் கொடுக்கிறார்கள் என்பதுதான் உண்மை. அதில் எந்த சந்தேகமும் வேண்டாம். அதற்கு அதிகாரம் இருக்கிறதா, இல்லையா? அது சரியா, தவறா? எந்த அவையிலே வேண்டுமானாலும் நான் அதுகுறித்து விவாதிக்கத் தயாராக இருக்கிறேன். இதைவிட ஒரு பெரிய அவை-யாரோ பெரிய வக்கீல் அங்கே பேசிக் கொண்டிருக்கிறாரே, அவரோடு வேண்டுமானாலும் நான் விவாதிக்கத் தயாராக இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தேவையென்றால், நான் அதையும் கொண்டு வந்திருக்கிறேன். உடனே, துரைமுருகன் அவர்கள் படிக்கவில்லையா என்பார். அதையும் கொண்டு வந்திருக்கிறேன். இல்லையென்று சொல்ல வில்லை. It is there. I got the copy of Rajamannar Committee discussions also.

அதனாலே தயவுசெய்து நீங்கள் இதுபோலச் சொல்வது சரியில்லை. உங்கள் கொள்கையையே மாற்றிக் கொள்கிறீர்களே என்பதற்காகத்தான் நான் வருத்தப்படுகிறேன். வேறு ஒன்றும் இல்லை. கொள்கையை மாற்றிக் கொள்வதிலே நான் குறை காணவில்லை, வருத்தப்படுகிறேன். வருத்தப்படக் கூடாது என்று சொன்னால், அது சரியில்லை. ஏனென்றால், அண்ணா என்ன சொன்னார்? மேல்துண்டைப் பதவியாகவும், வேஷ்டியைக் கொள்கையாகவும் வர்ணித்தவர் அறிஞர் அண்ணா. ஆனால், பதவி என்னும் மேல்துண்டை இறுகப் பற்றிக்கொண்டு, கொள்கை என்னும் வேஷ்டியைக் காற்றிலே பறக்கவிடத் துணிந்து விட்டார்கள் (மேசையைத் தட்டும் ஒலி). காற்றிலே பறக்க விடுவதற்கு அவர்கள் துணிந்து விட்டார்கள். விசித்திரப் பறவைகளாக வீதியிலே வலம் வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனினும் மாநில அரசின் உரிமைகளைக் காப்பதிலும், காமராஜர், அண்ணா போன்றவர்களின் வழியில் நடப்பதிலும் உறுதி பூண்டிருக்கும் தமிழகத்து மக்களை இவர்களால் ஒருபோதும் தவறான திசைக்கு இட்டுச் செல்ல முடியாது என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) முக்கியமான பிரச்சினைகள் சிலவற்றை இந்த அரசாங்கம் தீர்த்துவைத்திருக்கிறது. இன்னும் சிலவற்றைத் தீர்த்துவைக்க வேண்டியிருக்கிறது.

ஜீவாதாரப் பிரச்சினையைப் பற்றி நான் பேசலாம் என்று நினைக்கிறேன். குறிப்பாக, தேயிலையினுடைய விலை மிகவும் வீழ்ச்சி அடைந்தது. அதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அதன்மூலமாகப் பரிகாரம் காண வேண்டுமென்று போராட்டம் நடத்தினார்கள். நீலகிரி, அது ஒரு குளிர்ப் பிரதேசம். அரை நிர்வாணப் போராட்டம் நடத்தினார்கள். வீதிகளில் எல்லாம் வேஷ்டி கட்டிக்கொண்டு. பேண்ட் போட்டுக்கொண்டு போனார்கள். நீ அரை நிர்வாணப் போராட்டமா நடத்துகிறாய், நான் உன்னை முழு நிர்வாணமாக்கிக் காட்டுகிறேன் பார் என்று கடந்த காலத்தில், அரசு அவர்களை முழு நிர்வாணமாக நிறுத்தியது. ஆனால், இந்த ஆட்சி என்ன செய்திருக்கிறது என்றால், அவர்களுக்கெல்லாம் நஷ்டஈடு கொடுத்திருக்கிறது, அதற்காக அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று அனைத்து வழக்குகளையும் வாபஸ் வாங்கியிருக்கிறார்கள். அதற்காகவும் நான் நன்றி சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



நான் பல்வேறு சமயங்களில் இந்த அவையிலே வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றியிருக்கிறார்கள். அதாவது, இரண்டு மூன்று கோரிக்கைகளை வைத்தேன். மத்திய சர்க்கார் சிலவற்றையெல்லாம் செய்யலாம் என்று சொன்னேன். தேயிலையை ஏற்றுமதி செய்யலாம் என்று சொன்னேன். அதற்கெல்லாம் ஏற்பாடு செய்ததாக எனக்குத் தெரியவில்லை. மத்திய சர்க்காரின் பாதுகாப்புத் துறைக்கு வாங்கலாம் என்று சொன்னேன், செய்யவில்லை. அதேபோல வேறு சில சலுகைகளைக் கொடுக்கலாம் என்று சொன்னேன், செய்யவில்லை. ஆனால், இந்த அரசாங்கத்தை நான் கேட்டுக்கொண்டது, நீங்களாகத் தேயிலையை வாங்குங்கள், வாங்கி அதை பொட்டலங்களாக்கி குறைந்த விலைக்கு பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக விநியோகம் செய்யுங்கள் என்று சொன்னேன். பொது விநியோகத் திட்டம் என்ன, கடை வீதிகளிலேயே விற்கிறோம் என்று வந்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன், அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன், பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, அரிசியும், நெல்லும் நிறைய கையிருப்பு இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்னாலே குறிப்பிட்டார்கள். அரிசியிலும், நெல்லிலும் ஈரப்பதம் இருந்தால் கெட்டுப் போவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அதனால், அரிசியையும், நெல்லையும் முழுமையாகப் பயன்படுத்த வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதை வீணாக்க வேண்டாம். ஏனென்றால், மீண்டும் நாம் கொள்முதல் செய்ய வேண்டிய காலம் வந்துவிட்டது. குறுவை வந்துவிடும், சம்பா வந்து விடும். கொள்முதல் செய்ய வேண்டும். அப்படியானால், இந்த அரிசியையும் நெல்லையும் என்ன செய்வது, இந்த அரிசியையெல்லாம் வேலைக்கு உணவு, Food for work அதற்காக நீங்கள் பயன்படுத்த வேண்டும். Infrastructure நிறைய கட்டலாமே., சாலைகள் போடலாம். கட்டடங்கள் கட்டலாம்., பாலங்கள் கட்டலாம். அதற்கெல்லாம் பாதி அரிசியாகவும், பாதி ஊதியமாகவும் கொடுத்தால் மகிழ்ச்சியோடு ஏழை மக்கள் அதை ஏற்றுக்கொள்வார்கள். நீங்கள் நிச்சயமாக, இந்த அரிசியையும் நெல்லையும் நல்ல முறையிலே அதற்காகப் பயன்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, இந்த ஆண்டும் பருவத்திலே இணைக் கொள்முதலை, என்றும் போலச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதற்கான நிதியை ஒதுக்கியிருக்கிறீர்கள். மிக்க மகிழ்ச்சி. அதற்காக சந்தோஷப்படுகிறேன்.

*பிற்பகல் 12-20*

அதேபோல, கரும்பு. கரும்புக்கு 1000 ரூபாய் என்று பலர் பேசியாச்சு. அதை பின்பு பார்க்கலாம். 1000 ரூபாய் கொடுத்தால் அதில் எனக்கு மகிழ்ச்சி. ஆனால், அதைவிட முக்கியமான பிரச்சினை என்னவென்றால், கரும்பைப் பொறுத்தவரைக்கும் தமிழகத்தில் 19 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும், 16 தனியார் சர்க்கரை ஆலைகளும் உள்ளன. மத்திய அரசு ஆண்டுதோறும் குறைந்தபட்ச ஆதார விலை Statutory Minimum Price அகில இந்திய அளவிலே நிர்ணயிக்கிறது. அதற்கு மேல், மாநில அரசு பரிந்துரை விலையை நிர்ணயிக்கிறது. State Advisory Price மாநில அரசினுடைய பரிந்துரை விலை எப்பொழுதுமே மைய அரசைவிட அதிகமாகத்தான் இருக்கும். மாநில அரசின் பரிந்துரை விலையின் அடிப்படையில்தான் தமிழக சர்க்கரை ஆலைகள், கரும்பு விவசாயிகளுக்கு பணம் கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுக்கப்படவில்லை. அதனால் பாக்கி நிறைய நிற்கிறது. மாநில அரசின் பரிந்துரை விலையின் அடிப்படையில், சென்ற ஆண்டு அரைவைப் பருவம் வரை, முடிந்தவரையில் பெரும்பாலான கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் பணம் கொடுத்துவிட்டார்கள். ஆனால், 16 தனியார் சர்க்கரை ஆலைகள், கடந்த மூன்றாண்டுகளில் அரைவைப் பருவத்திற்கான கரும்பு அரைவைப் பணத்தை, மாநில அரசின் பரிந்துரை விலைப்படி வழங்கவில்லை. இந்த நிலை தமிழ்நாடு முழுவதும் மேற்படி 16 ஆலைகளிடம் மொத்தம் 300 கோடி ரூபாய்க்கு மேலே, விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய பணம் பாக்கி நிற்கிறது. தமிழ்நாட்டில் 50 சதவிகித விவசாயிகள் தனியார் ஆலைகளுக்குத்தான் கரும்பு கொடுக்கிறார்கள். அந்தத் தனியார் ஆலைகளில் கடந்த மூன்று ஆண்டுகளாக உயர் நீதிமன்றத்தில் stay வாங்கி பணம் கொடுக்காமல் இருக்கிறார்கள். நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வது, நீதிமன்றத் தடையாணையை விரைவில் நீக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்னொன்று, தனியார் முதலாளிகளை அழைத்துப் பேசி அரைவைப் பணப் பாக்கியை விவசாயிகளுக்கு வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மிக முக்கியமானதொரு பிரச்சினை, ஜீவாதாரமானதொரு பிரச்சினை, தென்னை, தேங்காய், கொப்பரை. ஏனென்றால், எல்லோரும் என்னிடம், ஆரம்பித்த நாளிலிருந்து, "சொல்லுங்கள், விட்டுவிடாதீர்கள், கொஞ்சம் பேசுங்கள், பேசுங்கள்" என்று பல எம்.எல்.ஏ.–க்கள் வந்து என்னிடம் சொல்லிவிட்டார்கள். நான் கண்டிப்பாகப் பேசுகிறேன் என்று



சொன்னேன். அதைப்போல, இந்த அவையிலே அது அதிகமாக எடுத்து வைக்கப்படாவிட்டாலும்கூட, இன்றையதினம் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. தென்னை என்பது ஒரு நீண்ட காலப் பயிர். கிராமத்திலே பழமொழி சொல்வார்கள். "பனை வைத்தால் பேரனுக்கு, தென்னை வைத்தால் பிள்ளைக்கு" என்பார்கள். அதற்கு என்ன அர்த்தம் என்றால், தென்னை ஒரு தலைமுறைப் பயிர் அல்லது இரண்டு தலைமுறைப் பயிர். குறைந்தபட்சம் இரண்டு அல்லது மூன்று தலைமுறைக்குக்கூட நிற்கும். அதை நாம் வைத்தால் உடனே அதிலே ஆதாயம் பார்க்க முடியாது. 4 வருடம், 5 வருடம் கழித்து பாளை விடும். 7–வது வருடத்திலேயிருந்து காய்க்க ஆரம்பிக்கும். 10–வது வருடத்திலேயிருந்து ஓரளவு நன்றாகக் காய்க்கும். இப்பொழுது நம்க்கு என்ன கஷ்டம் என்றால், ஒரு பக்கம் நாவாய் பூச்சிகள். ஒரு பக்கம் கருஞ்சிலந்திகள். இத்தனை தாக்குதலையும் மீறி தேங்காய் விளைவித்தால், திடீரென்று விலை குறைந்து போய்விடுகிறது. யாருக்குமே, என்ன காரணம் என்று சொல்லவே முடியவில்லை. import பண்ணுகிறீர்களா? பண்ணுகிறோம். பாமோலின் பண்ணுகிறோம் என்கிறார்கள். அங்கேயிருந்து தேங்காய் import ஆகவில்லையா; இல்லை. அதற்கு ஏனோ தானோ என்றுதான் பதில் வருகிறது. சரியான பதில் வரவில்லை. சரி, அவர்கள் import பண்ணினாலும், பண்ணவில்லையென்றாலும், நாங்கள் கடந்த ஆட்சியின்போது, எங்கள் தலைவர் மூப்பனார் இடத்திலே பேசினோம். இந்தமாதிரி மிகவும் சிரமமாக இருக்கிறது என்று. என்னதான் வழி என்றார். முன்பு ஒரு தடவை, திரு. பல்ராம் ஜாக்கர், வேளாண்மைத் துறை அமைச்சராக இருந்தபோது, நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அவர் அன்றையதினம் நேரடியாக NAFED மூலமாகக் கொள்முதல் செய்தார்கள். அதேபோல், கொள்முதல் பண்ணினாலும் விலை ஏறும்; அதனால் கொள்முதல் செய்வதற்கு நீங்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்றேன். நான் என்ன பண்ண வேண்டும் என்று கேட்டார். நீங்கள் ஒன்றும் பண்ண வேண்டாம்; என்னுடன் ஜனாதிபதியிடம் வாருங்கள்; மீதியெல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன் என்று சொன்னேன். அதேபோல, நாங்கள் இரண்டு பேரும் ஜனாதிபதியைப் பார்த்தோம். ஜனாதிபதி நமது பக்கத்து ஊர்க்காரர் என்பதாலே அவர் நன்றாகப் புரிந்துகொண்டார். அதை அவர் எந்தவகையிலே அறிவுறுத்த வேண்டுமோ அந்த வகையிலே அறிவுறுத்தியும் இருந்தார். நான் மறுநாளே வந்து, அன்றையதினம் வேளாண்மைத் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு சுந்தர்லால் பட்வா அவர்களைச் சந்தித்து, இதையெல்லாம் விளக்கினேன். இருக்கிற சிரமங்களைச்

சொன்னேன். NAFED மூலமாகக் கொஞ்சம் அதிக விலை, *41* ரூபாய் கேட்டேன். *41* ரூபாய் கொடுக்கவில்லையென்றாலும், *32.50* பைசா முதலில் கொடுத்தார்கள். இன்றைக்கு அது *33* ரூபாயாக உயர்ந்திருக்கிறது. மிக்க மகிழ்ச்சி. இந்த *33* ரூபாய்க்காவது கொள்முதல் பண்ண வேண்டும் என்பது என்னுடைய ஆசை. அதேமாதிரி coconut ball. நம் ஊரிலே coconut ball எல்லாம் நாம் எடுப்பதில்லை. கேரளாவிலே எடுக்கிறார்கள். அதை *35* ரூபாய்க்கு வாங்குகிறார்கள். அந்த விலைக்காவது இந்த வருடம் வாங்க வேண்டும். ஆனால், இப்போது இங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

கடந்தகால ஆட்சியிலே தவறுகள் நடந்திருக்குமேயானால், கொள்முதலிலே குறைபாடுகள் இருக்குமேயானால், விசாரணை நடத்துங்கள். அதற்கு நான் தடையாக நிற்க மாட்டேன். ஆனால், விசாரணை நடத்துகிற காரணத்தினாலே கொள்முதலை நிறுத்தி வைத்திருப்பது சரியாக இருக்காது. ஏனென்றால், NAFED தயாராக இருக்கிறார்களா என்று கேட்டால், NAFED தயாராக இருக்கிறது என்ற தகவல் வந்திருக்கிறது. ஆகவே, உடனடியாக கொள்முதல் செய்யுங்கள். குறைபாட்டை எப்படி நீக்குவது என்று நீங்கள் கேட்கலாம். சென்ற தடவை விவசாயிகள் பெயரிலே வியாபாரிகள் இலாபம் அடைந்தார்கள் என்ற பெரிய குற்றச்சாட்டு ஒன்று இருக்கிறது. அதைப் போக்குவதற்கு ஒன்று செய்யலாம். வெறும் crossed cheque கொடுப்பதற்குப் பதிலாக Account Payee Cheque கொடுக்கலாம். விவசாயியின் பெயரிலேயே, அந்த ஊரிலேயே, எந்த ஊரிலிருந்து வருகிறானோ அந்த ஊரிலோ அல்லது பக்கத்து ஊரிலோ Account open பண்ணச் சொல்லி crossed cheque-கிற்குப் பதிலாக வெறும் '& Co.' என்று போட்டால் யார் Account-ல் வேண்டுமானாலும் போட்டு எடுத்துக் கொள்ளலாம். எனவே, Account Payee Cheque கொடுக்கலாம். அது பயனுள்ளதாக இருக்கும்.

*பிற்பகல் 12-25*

அதுமட்டுமல்ல. தேங்காயைப் பொறுத்தவரைக்கும், ஒரு தவறான எண்ணம். வெறும் எண்ணெய் வித்து என்று நினைக்கிறார்கள். தவறு. சமையல் எண்ணெய்யாக நம்முடைய நாட்டிற்குத் தேவை என்பது 7% தேங்காய். அதாவது, நம்முடைய நாட்டிலே விளைகின்ற தேங்காயிலே 7% தான் சமையல் எண்ணெய்க்குத் தேவை. மீதியெல்லாம் வேறு பல வேலைகளுக்குப் போகிறது. கிளிசரின் தயாரிக்கப் போகிறது. கோவிலுக்குப் போகிறது. வேறு பல காரியங்களுக்கும் போகிறது. இளநீராகக்



குடிக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், அதை ஏற்றுமதி செய்வதற்கு பல பக்குவங்கள் செய்யப்படுகின்றன. அந்தப் பக்குவத்தைப் பொறுத்தவரையில் Nettadi de coco gel தயாரிக்கலாம். இந்த Gel தயாரித்தல் என்னவென்றால், அதிலேயிருந்து சுவையான பானம் தயாரிக்கலாம் என்று சொல்கிறார்கள். அதனால், அதையெல்லாம் செய்வதற்கு அரசாங்கம் முயற்சி செய்ய வேண்டும். Vinegar தயாரிக்கலாம். தாய்ப்பாலுக்கு அடுத்தபடியாக, நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாக உள்ளது தேங்காய்ப் பால் என்று சொல்கிறார்கள். தேங்காய்ப் பால் எடுத்து பக்குவமாக அடைத்து அதை விற்கலாம். பவுடர் எடுக்கலாம். இதையெல்லாம் ஏற்றுமதி செய்யலாம். மற்ற நாடுகளில் எல்லாம் அப்படி ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறார்கள். நாமும் ஏற்றுமதி செய்யலாம். அப்படி ஏற்றுமதி செய்தால் நல்ல விலை கிடைக்கும். ஜாம் தயாரிக்கலாம். சிப்ஸ் தயாரிக்கலாம். வடநாட்டிலே இதனை ஓர் ஊட்டச்சத்து மிக்க உணவாக தனியாக வாங்கி சாப்பிடுகிறார்கள். டெல்லியிலே எல்லாம் இதனை நீங்கள் பார்க்கலாம். கார் எங்காவது traffic நெரிசலில் நின்றால், உடனே ஓடி வந்து தேங்காயை விற்பனைக்குக் காட்டுவார்கள். அந்தத் தேங்காய் பத்தையை வாங்கி அப்படியே சாப்பிடுவார்கள். அதையெல்லாம் இன்னும் பக்குவமாகப் பதப்படுத்தி விற்பீர்களேயானால், நல்ல விலை கிடைக்கும். அதற்கெல்லாம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, G.O.168. *10* ஆண்டு காலம், *20* ஆண்டு காலம், *30* ஆண்டு காலம் என்று ஒரே இடத்திலே வாழ்ந்து கொண்டிருப்பார்கள். அது நத்தமாகக்கூட இருக்கும். ஆனால், அவர்களுக்கு பட்டா இருக்காது. அவர்களுக்கெல்லாம் பட்டா வழங்க வேண்டும். அடுத்து, போன தடவை ஒரு அரசாணை கொண்டு வந்தார்கள், *168* என்ற அரசாணை வந்தது. ஆனால், அந்த அரசாணையை நிறுத்திவிட்டார்கள். நீண்ட நாட்களுக்கு முன்னாலே நிறுத்தி வைத்துவிட்டார்கள். அந்த அரசாணையின்படி *10* ஆண்டுகளுக்கு மேலாக யாராவது ஒரு கோவில், மசூதி, தேவாலயம் போன்ற இடங்களைத் தவிர வேறு ஏதாவது இடத்திலே குடியிருந்தார்கள் என்றால், அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்கலாம். அது இன்றையதினம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதை உடனடியாக நடைமுறைப்படுத்த ஏற்பாடு செய்தால், அங்கேயே லோக்கலிலேயே கொடுத்துவிடலாம். யாரும் அதிலே தலையிட வேண்டிய அவசியமில்லை. போன தடவை அதற்கு ஒரு G.O. கூட போட்டார்கள். அந்தக் காப்பிகூட என்னிடம் இருக்கிறது. அதைச் செய்யலாம் என்று

நான் கேட்டுக்கொள்கிறேன். அதை நிச்சயமாக நிறைவேற்ற வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, M.M.D.A. அதுகுறித்து பலரும் பேசிவிட்டார்கள். எனவே, அதிகமாக நான் அதனைத் திருப்பிப் பேச வேண்டியதில்லை. கட்டடங்களை regularise செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். Regularise செய்ய வேண்டுமென்று நானும் கேட்டுக்கொள்கிறேன். ஆந்திராவைப் போல regularise செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதனை சென்னையோடு நிறுத்திவிடாமல் வேறு மாநகராட்சிகள், வேறு நகராட்சிப் பகுதிகளுக்கும் அதனை விஸ்தரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பல நகராட்சிகளிலே, மாநகராட்சிகளிலே அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைகள் என்று நிறைய இருக்கின்றன. என்னுடைய தொகுதியிலே எடுத்துக்கொண்டால் கோயம்புத்தூரிலே வளர்ச்சியுறாத பகுதி மாநகராட்சி எல்லைக்குள்ளே இருக்கிறது. திரு. புகழேந்தி தொகுதியில் இருக்கிறது. உடனே, திரு. கருணாகரன் கோபித்துக்கொள்வார். உங்களுக்கும் இருக்கிறது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். இருக்கலாம், திரு. வி.கே. லட்சுமணன் தொகுதியிலும் கொஞ்சம் இருக்கலாம். அது மாதிரி கொஞ்சம் பேருக்கு இருக்கலாம். ஆனால், என்னைப் பொறுத்தவரையிலே என்னுடைய தொகுதியில் உள்ள அந்த 11 டிவிஷனிலே பெரும்பாலும் அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைகள் எல்லாம், தோட்டம், துரவு, காடுகள் எல்லாம் இன்றையதினம் வீட்டுமனைப் பகுதிகளாக மாறி வீடுகள் கட்டிவிட்டார்கள். அதிலே எந்தவிதமான வசதியும், அடிப்படை வசதியே கிடையாது. காரணம், Development Charge கட்டவில்லை என்கிறார்கள். Development Charge கட்டியிருக்கிறார்களே. ஏனென்றால், அதனை 80% கட்டியிருக்கிறார்கள். 70% கட்டியிருக்கிறார்கள். 40% கட்டியிருக்கிறார்கள். Lay out போட்டவர்கள் கட்டாமல்கூட போயிருப்பார்கள். அதனால், ஏதாவது ஒரு வகையில் முறைப்படுத்தி, கோவை மாநகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். அதேமாதிரி மற்ற பகுதிகளிலும் அது இருக்கும். அதையெல்லாம் நீங்கள் முறைப்படுத்தி அதற்கெல்லாம் சாலை வசதி, தண்ணீர் வசதி, தெருவிளக்கு வசதி எல்லாம் ஏற்பாடு செய்து தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, கோவை மாநகரத்தை ஒட்டியுள்ள பல பேரூராட்சிகளிலே இதே நிலைதான் இருக்கிறது. கவுண்டன்பாளையம், வடவள்ளி இங்கெல்லாம் பார்த்தீர்களேயானால் நிறைய வீட்டுமனைப் பகுதிகள் அடிப்படை



வசதிகூட இல்லாமல் இருக்கின்றன. காரணம், unapproved lay–out என்று சொல்வார்கள். அதையெல்லாம் மாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று செங்கல். செங்கல்லைப் பொறுத்தவரைக்கும் சிறு கனிமவள விதிகளைச் சீரமைத்தல் மிகுந்த முக்கியம். செங்கல்லுக்கான மண்ணிற்கு விதிக்கப்பட்டுவரும் சீனியரேஜ் கட்டணம் என்பது நடைமுறையில் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஒரு பெரும் பிரச்சினையாக உள்ளது. இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வாக ஹரியானா, குஜராத், உத்திரப்பிரதேசம், டெல்லி, பஞ்சாப் மற்றும் கேரளா ஆகிய மாநிலங்கள் பின்பற்றி வரும் ஆண்டு ஒட்டுமொத்த உரிமக் கட்டணம் Yearly Consolidated Fee விதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இது ஏற்கெனவே, இங்கு பரிசீலனையில் இருப்பதாகச் சொல்கிறார்கள். முதல்வர் அவர்களின் பரிசீலனையில் இருப்பதாக நினைக்கின்றேன். அதை உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, செங்கல்லுக்கு தற்போது 4 % விற்பனை வரி விதிக்கப்படுகிறது. இது பல சிரமங்களைக் கொடுக்கும் என்று சொல்கிறார்கள். ஏனென்றால், குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற திட்டத்தினை நிறைவேற்ற வேண்டுமென்று முதலமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கெல்லாம் நமக்கு நிறைய செங்கல் தேவைப்படும். அதனாலே அருள்கூர்ந்து அந்த விற்பனை வரியை எடுத்துவிட்டீர்களென்றால், கொஞ்சம் வசதியாக இருக்கும் என்று அவர்கள் எல்லாம் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதைச் செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மிக முக்கியமான ஒரு பிரச்சினை சுற்றுலா. சுற்றுலாவைப் பொறுத்தவரைக்கும் நான் பொதுக் கணக்குக் குழுவிலே பார்த்தேன். சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கு நிறைய திட்டங்கள் கொண்டு வரவேண்டும். போன தடவை முதலமைச்சர் அவர்கள் நிறைய சொல்லியிருக்கிறார்கள். இல்லையென்று சொல்லவில்லை. இதிலே சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய வகையிலே நம்முடைய திட்டங்கள் அமைய வேண்டும். அதற்காக நிறைய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக, நம்முடைய தமிழ்நாட்டுப் பக்கம் என்ன கஷ்டம் என்றால், சுற்றுலா பயணிகள் ஹோட்டலிலே தங்கினார்கள் என்றால் இங்கே வந்து Luxury Tax 25 சதவிகிதம். வேறு அண்டை மாநிலங்களில் எங்கேயும் இந்த அளவு வரி விகிதம் கிடையாது. ஆந்திராவிலே 5 சதவிகிதம். Not on tariff, but on actuals. கர்நாடகாவிலே 12–1/2 சதவிகிதம்,

கேரளாவிலே சில slab–க்கு மேலே போய்விட்டால் 15 சதவிகிதம். ஆனால், நம்முடைய தமிழ்நாட்டிலே மட்டும் not on acutals, tariff–ல் என்ன இருக்கிறதோ அதற்கு 25% போன் ஆட்சியிலே எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்கள். அதைக் குறைக்கவே இல்லை.

முன்னே Expenditure tax போட்ட திரு. மன்மோகன் சிங்கே, மனம் இரங்கி, 20%–ஐ 10% ஆகக் குறைத்தார். ஆனால், அந்த ஆட்சி குறைக்கவில்லை. நீங்கள் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், என்ன கஷ்டம் என்று கேட்பீர்கள். என்ன convention என்றாலும், என்ன ஒரு பிரச்சினையாக இருந்தாலும், convention–ஆக இருந்தாலும், எந்த ஒரு group வந்தாலும் நம் ஊரில் தங்கமாட்டார்கள். நேராக பெங்களூர் போய் விடுவார்கள். இல்லையென்றால், ஆந்திராவுக்குப் போய்விடுவார்கள். அதைத் தவிர்க்க வேண்டும் என்று சொன்னால், இந்த luxury tax 25 சதவிகிதத்தைக் குறைக்க வேண்டும். மற்றபடி விற்பனை வரி 8 சதவிகிதம். எல்லாப் பக்கமும் போடுகிறார்கள். பெரிய விஷயம் என்று நான் கருதவில்லை. எல்லா ஊரிலும் போடுகிறார்கள். நாமும் போடுகிறோம். அதை வேண்டுமானால் மாற்றி, விற்பனை வரியோடு சேர்த்துச் செய்யுங்கள். இந்த luxury tax–ஐக் குறைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-30*

இன்னொன்று, ஏற்கெனவே நான் நம்முடைய நல்வாழ்வுத் துறை அமைச்சரிடம் பேசியிருக்கிறேன். பல்வேறு ஊர்களிலும் கட்டப்பட்ட அரசு மருத்துவமனைக்கு எந்தவிதமான வசதியும் கிடையாது. எந்த ஒரு கலன்களும் கிடையாது. உபகரணங்களும் கிடையாது. Furniture கிடையாது. Equipment கிடையாது. உட்காருவதற்கு பழைய சேரை நான் எங்கேயோ இருந்து தூக்கிக் கொண்டுவந்து போட்டுக்கொண்டு உட்கார்கிறேன் என்று அந்த டாக்டர் சொல்வார். என்னுடைய தொகுதியிலே தொண்டாமுத்தூரிலே எடுத்துக் கொண்டால், 24 படுக்கை வசதி கொண்ட ஒரு மருத்துவமனை, புதிய மருத்துவமனை கட்டினார்கள். நன்றாக இருக்கிறது. மருத்துவமனை பற்றி நான் தவறு சொல்லவில்லை. ஆனால், எந்த வசதியும் இல்லை. மருத்துவர்கள் நான்கு பேரும் பெண்கள். பல ஊர்களிலே என்ன புகார் வரும் என்றால், எங்கள் ஊரில் Lady Doctor இல்லை. ஒரு பெண் மருத்துவர் வேண்டும் என்று கேட்பார்கள். இங்கு அப்படி இல்லை. எங்களுக்கு எப்படியாவது இரண்டு ஆண் மருத்துவரையாவது போடுங்கள் என்ற கோரிக்கை வைக்கிற அளவில் அங்கே இருக்கிறது. ஏற்கெனவே அமைச்சர் அவர்களிடத்திலே



பேசியிருக்கிறேன். அவர் செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். மீண்டும் இங்கே நினைவுபடுத்துவதற்காக நான் சொல்கிறேன். நிறைவேற்றுங்கள். இது ஒரு ஊர் பிரச்சினை அல்ல. பல ஊர்களில் இருக்கிற பிரச்சினை என்பதைச் சொல்ல முன்வந்தேன்.

அதேமாதிரி காவிரி. இன்றைக்கும், நேற்றைக்கும் இரண்டு நல்ல செய்திகள் வந்திருக்கின்றன. நேற்றையதினம் முதலமைச்சர் அவர்கள், இந்த அவையிலே அறிவித்தார்கள். 'நான் பாரதப் பிரதமர் மாண்புமிகு திரு. வாஜ்பாய் அவர்களுக்கும், கர்நாடக முதல்வர் மாண்புமிகு திரு. எஸ்.எம். கிருஷ்ணா அவர்களுக்கும் கடிதம் எழுதுகிறேன்' என்று அறிவித்தார்கள். இன்றையதினம் இன்னொரு நல்ல செய்தி வந்திருக்கிறது. இன்றைக்கு காலையிலே பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், அதிகாரிகள் குழுவோடு, அலுவலர்கள் குழுவோடு டெல்லிக்குச் சென்றிருக்கிறார். அங்கே மாண்புமிகு திரு. எஸ்.எம். கிருஷ்ணா அவர்களை, கர்நாடக முதல்வர் அவர்களைச் சந்திப்பதாக பத்திரிகையில் வந்த செய்தியை நான் பார்த்தேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகைகளிலே வந்திருக்கிற செய்தி தவறான செய்தி. பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், வேறு அலுவல் காரணமாக டெல்லிக்குச் சென்றிருக்கிறார். வாய்ப்புக் கிடைத்தால் நிச்சயமாக கர்நாடக முதலமைச்சரையும் சந்திப்பார். ஆனால், கர்நாடக முதலமைச்சருக்கு நேரம் இருக்குமா என்று தெரியவில்லை. நான் கர்நாடக முதலமைச்சருக்கு அனுப்பிய கடிதத்திற்கு பதில் வந்திருக்கிறது. பெங்களூரில் நம் பொதுப் பணித் துறை அமைச்சரையும், தலைமைச் செயலாளர் அவர்களையும், பொதுப் பணித் துறைச் செயலாளர் அவர்களையும் சந்திப்பதற்கு விரைவில் தேதி குறித்து அனுப்புவதாக, தேதி குறித்துச் சொல்வதாக அவர்கள் பதில் அனுப்பியிருக்கிறார்கள். அதோடு விரைவிலேயே மத்திய அரசு அமைத்துள்ள Monitoring Committee கூட்டம் கூட்டப்பட வேண்டும் என்று நான் பிரதமருக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். தமிழக அரசின் தலைமைச் செயலாளர், மத்திய நீர்வளத் துறைச் செயலாளருக்கு 3 முறை கடிதம் எழுதியிருந்தார். நேற்றுதான் மத்திய நீர்வளத் துறை அமைச்சர் எனக்கு பதில் அனுப்பியிருக்கிறார். என்னுடைய கோரிக்கை ஏற்கப்பட்டு, காவிரி நடுவர் மன்றம் அளித்த இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்துவதைக் கண்காணிக்க அமைக்கப்பட்டுள்ள Monitoring Committee கூட்டம் 6–9–2001 அன்று கூட்டப்படும் என்று பதில் அனுப்பியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு மிக்க நன்றி. பத்திரிகையிலே செய்தி வந்தது. எனக்கே ஆச்சரியமாக இருந்தது. அப்படியிருந்தால், நேற்றைக்கே முதலமைச்சர் சொல்லியிருப்பார்களே என்று நினைத்தேன். என்னமோ பத்திரிகையிலே வந்துவிட்டது என்பதற்காகச் சொன்னேன். அதற்கு முறையாக விளக்கம் கொடுத்திருக்கிறார். அப்படியே இல்லையென்றாலுங்கூட, 6–9–2001 தேதியில் Monitoring Committee கூடுகிறது என்று சொல்லியிருக்கிறார். இடையிலே கர்நாடக முதலமைச்சரும் நேரம் ஒதுக்குவதாகச் சொல்லியிருக்கிறார் என்று சொன்னார். இரண்டுமே நல்ல செய்திகள். நான் வரவேற்கிறேன். என்ன காரணம் இவ்வளவு தூரம் நான் பேசுகிறேன் என்று சொன்னால், இன்னும் கடைமடைப் பகுதிக்கு தண்ணீர் போய்ச் சேரவில்லை என்று புகார் இருக்கிறது. அதனால், அவற்றிற்கெல்லாம் தண்ணீர் போய்ச் சேருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். நிச்சயமாக முதலமைச்சர் அவர்கள் முயன்று செய்வார்கள் என்று நான் திடமாக நம்புகிறேன்.

*பிற்பகல் 12-35*

தமிழ்நாட்டில் காவிரிக்கு அடுத்தபடியாக பெரிய திட்டம் என்று சொன்னால், அது பரம்பிக்குளம்–ஆளியாறு திட்டம். பெரிய திட்டம். காமராஜர் காலத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டம். பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களால் 1961 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அதற்காக அடிக்கல் நாட்டப்பட்டது. அந்தத் திட்டம் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டு நடந்து கொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்தில் மொத்தம் 11 அணைகள் கட்ட வேண்டும். இப்போது 9 அணைகளை கட்டியிருக்கிறோம். இன்னும் இரண்டு அணைகள்தான் பாக்கி. அது என்ன, அந்த இரண்டு அணைகள் அவ்வளவு முக்கியமா என்று கேட்கலாம். நாம் எதிர்பார்த்த தண்ணீர் இப்போது கிடைக்கவில்லை. நமக்கு முதலில் இந்தத் திட்டம் நிறைவேற்றியபோது இருந்த பாசனப் பகுதியைவிட, இன்று பாசனப் பகுதிகள் அதிகமாகிவிட்டன. முதலில் திட்டம் நிறைவேறியபோது பாசன வசதிக்காக 3 மண்டலங்களாகப் பிரித்திருந்தார்கள். அன்றையதினம், ஒரு மண்டலத்திற்குத் தேவை 7–1/2 டி.எம்.சி. இன்றைக்கு இடையிலே வந்து, அது 4 மண்டலங்களாகப் பிரிந்தபோது, அது 9–1/2 டி.எம்.சி.யாக உயர்ந்தது. இன்று மடை விட்டு மடை பாசனம் என்று வந்ததற்குப் பின்னாலே 4 மண்டலங்களாகியும், ஒரு மண்டலத்திற்கு 11 டி.எம்.சி. மொத்தம் 46 டி.எம்.சி. தேவை. அன்று 23 டி.எம்.சி. அல்லது 23–1/2



டி.எம்.சி. தேவை. இன்றைக்கு 46 டி.எம்.சி. தேவைப்படுகிறது. இதற்கெல்லாம் நாம் இப்பொழுது தண்ணீர் தரவேண்டும். அதற்கு என்ன வழி என்று கேட்டால், இருக்கிற வழியிலே, இரண்டிலே ஒன்று ஆனைமலையாறு. அதை மறுக்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். ஆனைமலையாறு, நல்லாறு அணைகள் கட்ட வேண்டும். ஆனைமலையாற்றைப் பொறுத்தவரைக்கும், 2.5 டி.எம்.சி. தண்ணீரைத் தேக்கலாம். எதிர்பார்த்தது 28 டி.எம்.சி. தண்ணீர் வரவில்லை. 22.39 டி.எம்.சி. கிடைக்கிறது. 2–1/2 என்றால் கொஞ்சம் அதிகமாக இருக்கும். அதிலே என்ன ஒரு இடையூறு என்றால், கேரளாவில் இடமலையாறு திட்டத்தை நிறைவேற்றிய பிறகுதான் நீங்கள் ஆனைமலையாற்றில் கட்டவேண்டும் என்று நம்மிடம் சொன்னார்கள். கேரளாவில் இடமலையாறு திட்டம் நிறைவேற்றியாயிற்று. அவர்களாக என்றைக்கும் நேரடியாக இதுகுறித்து எழுதியதாகத் தெரியவில்லை. இதுவரையில் எழுதியதாகத் தெரியவில்லை. அவர்கள் எழுதவில்லையென்றால்கூட நாம் கேட்டு, உங்கள் ஊரில் கட்டியாயிற்று என்று சொல்கிறார்கள்; நாங்கள் எங்கள் ஊரில் ஆனைமலையாற்றில் கட்டுகிறோம் என்று கேட்டு அதற்கான சம்மதம் அவர்களிடம் பெற்று, அந்த ஆனைமலையாறு திட்டத்தை நிறைவேற்றிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நல்லாறு திட்டம் என்பது 7.12 டி.எம்.சி. அங்கே நாம் தேக்கலாம். அதற்கு நீர்ப்பிடிப்புப் பகுதி தனியாகக் கிடையாது. அப்படியென்றால், ஏன் கட்டவேண்டும் என்று கேட்பீர்கள். மேல்நீராறு, கீழ்நீராறு தண்ணீர் நேராக சோலையாறு போய், சோலையாறு வழியாக பரம்பிக்குளம் போகிறது. மழைக்காலங்களில் முழுத் தண்ணீரையும் தேக்க முடியவில்லை. போன வருடம் 4–1/2 டி.எம்.சி. தண்ணீர் வீணாகக் கடலில் போய்விட்டது. இந்த நல்லாறுத் திட்டம் நிறைவேற்றப்படுமானால், மேல்நீராறு, கீழ்நீராறு தண்ணீரெல்லாம் சோலையாற்றுக்குப் போகவேண்டாம். நேராகக் கீழே நல்லாறுக்குக் கொண்டு வரலாம். நல்லாற்றிலிருந்து அப்படியே திருமூர்த்தி அணைக்கு வந்துவிடும். சோலையாறு, சோலையற்றிலிருந்து பரம்பிக்குளம், பரம்பிக்குளத்திலிருந்து திருப்பி 120, 125 கிலோமீட்டர் பயணம் செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. நிறைய அது வீணாகிறது. நல்லாறு கட்டினால் நேராக நல்லாற்றிலிருந்து பாலாற்றில் இணைத்துவிடலாம். பாலாற்றின் குறுக்கே கட்டப்பட்டதுதான் திருமூர்த்தி அணை. அதை மட்டும் நிறைவேற்றினால் இன்னும் நிறையப் பெருக்குத் தண்ணீர் கிடைக்கும். ஒரு பக்கம் அந்தத் திட்டத்தில் பல அதிசயங்களை நீங்கள் பார்க்கலாம். வலது பக்கம்தான் தண்ணீர் பாயும்; இடது பக்கம் பாயாது. அதில் ஏதோ புனிதத்துவம் இருக்கிறதா என்றால், ஒரு புனிதத்துவமும்

இல்லை. அதில் என்னவென்றால், அதிகமாக பகுதிகள் சேரவேண்டும். அதற்கு எப்படிச் செய்தால், நீரை அடுத்த பகுதிக்கு எடுத்துச் செல்லலாம் என்று முயற்சி செய்யப்பட்டது. இன்றைக்கு இடது பக்கம் பல இடங்களில் பாய்கிறது; இல்லையென்று சொல்லவில்லை. நெகமத்துக்குப் பக்கத்தில் பாய்கிறது. அதற்குத் தெற்கே செங்குட்டுபாளையத்தில் பாய்கிறது. பொங்கலூரைத் தாண்டிய பிறகு திருப்பூர், சோமனூர் எல்லாம் போகிறது. இடது பக்கம்தான் எடுத்திருக்கிறார்கள். அதேமாதிரி இடையிலே இருக்கிற பகுதிகளெல்லாம் வானம் பார்த்த பூமி. வளம் கொழிக்கும் பூமியாக இருந்தது ஒரு காலத்தில்; தண்ணீர் இல்லாமல் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறது. குறிப்பாக பொங்கலூர், பல்லடம், சுல்தான்பேட்டை, திருப்பூர், குண்டடம் ஆகிய வானம் பார்த்த இந்தப் பகுதிகளுக்கெல்லாம் தண்ணீர் வழங்க வேண்டும். அதை மட்டும் கட்டி முடித்துவிட்டால் வழங்க முடியும். அந்தத் தண்ணீர் வழங்குவதற்கு நிச்சயமாக நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

P.A.P.–யில் மடைவிட்டு மடை தண்ணீர் பாய்வதில் சிலபேருக்கு சங்கடம் இருக்கிறது. ஏனென்றால் போன முறையே சிலபேருக்குத் தண்ணீர் பாய்ந்திருக்க வேண்டும். இந்தப் புதிய ஏற்பாட்டின்படி மீண்டும் தண்ணீர் திறந்து விட்டாயிற்று. இப்போது தண்ணீர் வரவில்லை, அடுத்த தடவை தண்ணீர் வரும். அங்கெல்லாம் தென்னை காய்ந்து கொண்டிருக்கிறது. அவர்களெல்லாம் என்ன கேட்கிறார்கள் என்றால், மடை விட்டு மடை நல்ல திட்டம் என்று சொன்னீர்கள். நாங்கள் ஏற்றுக்கொள்வது, ஏற்றுக் கொள்ளாதது பற்றி கேட்காமலேயே விட்டுவிட்டீர்கள். பரவாயில்லை; சந்தோஷம். ஆனால், போன தடவை வரவேண்டிய தண்ணீர், போன தடவையும் வரவில்லை; இந்தத் தடவையும் வரவில்லை. எங்களுக்குக் கொஞ்சம் தண்ணீர் விடுங்கள் என்று கேட்கிறார்கள். பொங்கலூர், தேவனம்பாளையம், மஞ்சப்பூர் பகுதிகளிலெல்லாம் தென்னை காய்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அவற்றுக்கெல்லாம் ஓர் உயிர்த் தண்ணீராவது கொடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதுவும், 104 இலை வாய்க்கால்களில் 64 வாய்க்கால்களில்தான் மடை விட்டு மடை தண்ணீர் பாயும். அது என்ன? ஏனென்று கேட்டால், ஆயிரம் ஏக்கருக்கு மேல் இருந்தால்தான் மடை விட்டு மடை பாயுமாம். ஏன், 978 ஏக்கர் இருந்தால் பாயாதா என்று எனக்குப் புரியவில்லை. பல இடங்களில் 978 ஏக்கர், 980 ஏக்கர் இருந்தும்கூட, மடை விட்டு மடை பாய்வதில்லை. அதனாலே, எல்லா வாய்க்கால்களுக்கும், 104 வாய்க்கால்களிலும் ஒரே ஒரு மடை



இருந்தால் தவிர, அந்த 104 வாய்க்கால் பகுதிகளுக்கும் மடை விட்டு மடை பாய்கின்ற அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அத்திக்கடவு–அவினாசித் திட்டம், இந்தத் தேர்தலில் பெரிய அளவில் பேசப்பட்டது. சென்ற 1998–ல் நான் பேசினேன். அதற்காக ஆய்வு நடத்துவதற்காக கடந்த கால அரசு கொஞ்சம் பணம் ஒதுக்கீடு செய்திருந்தது. அதை ஆய்வு செய்வதற்குப் பல பேர் விண்ணப்பம் போட்டிருந்தார்கள். அது எந்த அளவில் இருக்கிறது என்று தெரியவில்லை. எந்த அளவில் இருந்தாலும் அதற்கு சர்ச்சை வேண்டியதில்லை. அதை நிறைவேற்றிட வேண்டும். நிறைவேற்றுகின்ற நேரத்திலே மற்ற பகுதிகளுக்கும் தண்ணீர் கிடைக்க நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். ஏனென்றால், அந்தத் தண்ணீர் பாய்வதே, பாசனத்திற்காக இல்லை; குளங்களை நிரப்புவதற்குத்தான். குளங்களை நிரப்புவது என்றால், காரமடையில் நிரப்பலாம். அவினாசிக்குப் போவது, அன்னூருக்குப் போவது என்றால், காரமடையைத் தாண்டித்தான் செல்லவேண்டும். அவினாசியை நிரப்பட்டும். அன்னூரை நிரப்பட்டும். பெருந்துறைக்குப் போகட்டும். அதற்கு மேல் நான் ஒன்றும் சொல்லவில்லை. அதேமாதிரி பெரியநாயக்கன் பாளையமும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். ஏனென்றால், அது பக்கத்தில்தான் இருக்கிறது. பெரியநாயக்கன் பாளையத்திற்கும் அத்திக்கடவு–அவினாசித் திட்டத்தில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப் பெற்றது)*

*பிற்பகல் 12–40*

*7, 8* மணித்துளிகள். *10* மணித்துளிகள் maximum. நொய்யலைப் பொறுத்தவரைக்கும், கசிவுநீர்க் குட்டையில் தடுப்பு அணைகள் ரொம்பக் குறைவு. தொண்டாமுத்தூர் பகுதியில் ஒன்றுமே இல்லை. ரொம்பவும் குறைவு. தடுப்பு அணைகளைக் கசிவுநீர்க் குட்டைகளில், நொய்யலில் கட்டவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அங்கே தேவராயபுரத்திற்குப் பக்கத்திலே இச்சிக்குழி என்ற ஒரு பகுதி இருக்கிறது. மலை சார்ந்த பகுதி, அந்தப் பகுதி. அங்கேயெல்லாம் வானம் பார்த்த பூமி; தண்ணீரே கிடையாது. அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், இச்சிக்குழியில் ஒரு தடுப்பு அணை கட்டினால், இந்தப் பகுதியிலெல்லாம் நிலத்தடி நீர்மட்டம் உயரும். நாங்களெல்லாம் கொஞ்சம் பிழைத்துக் கொள்வோம் என்று என்னைக் கேட்டார்கள். ரொம்ப நியாயமான கோரிக்கை. பல ஊர்களுக்கு, அந்தப் பகுதியில் இருக்கின்ற

பல்லாயிரக்கணக்கான ஏக்கருக்கு அது பயன்படும். முடிந்தால், பாசனத் திட்டமாகக் கொண்டு வந்தால் ரொம்ப மகிழ்ச்சி அடைவேன். பாசனத் திட்டம் கொண்டு வருவதற்கு வழியில்லையென்றால், நிச்சயமாக அதை ஒரு தடுப்பு அணையாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பெரிய இரண்டு பேரூராட்சிகள் கோவையைச் சுற்றி இருக்கின்றன. வடவள்ளி, கவுண்டம்பாளையம். வடவள்ளி, முன்பு சின்ன ஊராக இருந்தது. இன்றைக்கு ஜனத்தொகை 50,000 பேர். கவுண்டம்பாளையத்தில் என்னுடைய நண்பர் President ஆக இருக்கும்போது, என்ன vote என்று கேட்டேன். 2,000–லிருந்து 3,000 இருக்கும் என்றார். இன்றைக்கு ஜனத்தொகை 60,000 பேர். இரண்டு ஊருக்கும் விடப்படுகின்ற தண்ணீர் மிகவும் குறைவு. 7–1/2 இலட்சம் லிட்டர் வருகிறது வடவள்ளிக்கு. அதேபோல, கவுண்டம்பாளையத்திற்குக் குறைவாக வருகிறது. இரண்டிற்கும் சேர்த்து ஒரு புதிய திட்டம், பவானியிலிருந்து ரூ.34 கோடி செலவில் நிறைவேற்றுவதற்கு ஏற்கெனவே இங்கு ஒரு வரைவுத் திட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த பவானியிலிருந்து தண்ணீர் கொண்டுவர, ரூ.34 கோடி செலவில் நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, முண்டந்துறை திட்டம். இது நான் சென்ற கால ஆட்சியில் அமைச்சராக இருந்தபோது முயற்சி எடுத்ததற்குப் பின்னாலே அதிகாரிகள் எல்லாம் பார்த்து இதை நிறைவேற்றுவதற்கு நிதியும் ஒதுக்கினார்கள். வேலையும் ஆரம்பித்தது. இப்போது வேலை ஏனோ நிற்கிறது. மந்தம். என்னவென்றால், நிதிப் பற்றாக்குறை என்று சொல்கிறார்கள். நிதிப் பற்றாக்குறைதான் உண்மையான காரணம் என்றால் அதற்கு அரசு நிதி வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மிக முக்கியமான பிரச்சினை, எங்களுடைய மாவட்டத்திலே. தென் மாவட்டங்களில் மட்டுமல்ல, பல மாவட்டங்களில் அந்தப் பிரச்சினை உண்டு. ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன. பல்லாயிரக்கணக்கான தொழிலாளிகள் தெருவிலே நிற்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் மீண்டும் வேலை கிடைக்க வேண்டும் என்றால், அந்த ஆலையெல்லாம் இயங்கியாக வேண்டும். என்ன பிரச்சினை என்று கேட்டால், பலவிதமான பிரச்சினை. முன்பு சொன்னார்கள், நூலுக்கு 2% வரி அதுவே அதிகம் என்றார்கள். நூலுக்கு மட்டுமல்ல; பஞ்சுக்கும் 2% வரி. அதுபோக



Excise duty 9%. 9% + 4%, மொத்தம் 13%. இப்போது இந்த நிதிநிலை அறிக்கையிலே அதை 4% வரியாக ஆக்கியிருக்கிறார்கள். மிகவும் அதிகம். தாங்காது. என்ன காரணம் என்று கேட்டீர்களென்றால், சிட்டா நூலுக்கு கேரளாவிலே வரியே கிடையாது. நீங்கள் வேண்டுமானால் கேட்டுப் பாருங்கள். நான் சொல்வது தவறு என்றால், நீங்கள் கேட்டுப்பாருங்கள். சிட்டா நூலுக்கு கேரளாவில் வரியே கிடையாது. அவர்கள் வரி போடுவதைப்போல் நாம் வரி போட வேண்டும் என்ற அவசியம் இல்லை. அந்த வரியில் கொஞ்சம் சலுகை பண்ணலாம். அதேமாதிரி முடிந்தால் மத்திய அரசாங்கத்திடம் கேட்டு, ஆலைகள் நடக்க ஆரம்பிப்பதற்குக் கொஞ்சம் கலால் வரி சலுகை பண்ணலாம். முடிந்தால், மின்சாரக் கட்டணச் சலுகை பண்ணுங்கள் என்று கேட்கவில்லை; கட்டுகிற தவணையை ஏதாவது தள்ளிவைக்க முடியுமா என்று கொஞ்சம் பாருங்கள். ஏனென்றால், அந்தத் தொழிலா[illegible] எல்லாம் அடுப்பு எரிய வேண்டும் என்பதற்காக நான் கே[illegible]றேன். நீங்கள் செய்து தருவீர்கள் என்று நான் நம்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமி[illegible]ரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுடைய துய[illegible] துடைப்பதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் டாக்ட[illegible]ரட்சித் தலைவி அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தவுடன் ஆறு தவணைகளாகக் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அமைச்சருடைய விளக்கத்திற்கு மிகவும் நன்றி. அதேமாதிரி இன்னொரு பிரச்சினை. எங்கள் மாவட்டத்திலும், ஈரோடு மாவட்டத்திலும் ஒரு பெரிய பிரச்சினை. என்னவென்றால், வெண்ணெய். நிறைய வெண்ணெய் எடுப்பார்கள்; விற்பார்கள். இதுவரைக்கும் வெண்ணெய்க்கு வரி இல்லை. வெண்ணெய்க்கு வரி என்றால் brand name உள்ள வெண்ணெய்க்குத்தான் வரி. மற்ற வெண்ணெய்க்கு வரி கிடையாது. இப்பொழுது எல்லா வெண்ணெய்க்கும் வரி போட்டீர்கள். அது ரொம்ப சிரமம். உங்களால் முடியாது. இப்பொழுதும் காதி கிராஃப்டிலே விற்கப்படுகிற வெண்ணெய்க்கு வரி இல்லை என்று சொல்கிறார்கள். இதற்கெல்லாம் அவர்களாலே கணக்கே வைக்க முடியாது. சின்னச் சின்ன வியாபாரிகள் வாங்கி விற்பார்கள். அதுவும் 8% வரி போட்டிருக்கிறீர்கள். அந்த வரியில் சலுகை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதை தள்ளிவைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி, பான் மசாலா, ஜர்தா, குட்கா இவற்றையெல்லாம் தடை பண்ணுகிறேன் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதோடு சேர்த்து வாய்ப் புகையிலையையும் தடை பண்ணுகிறேன் என்று சொல்லியிருக்கிறீர்கள். தடை பண்ணுங்கள், நான் ஒன்றும் புகையிலை உபயோகிப்பவன் அல்ல. ஆனால், என்ன கஷ்டம் என்று கேட்டீர்கள் என்றால், குட்கா, ஜர்தா, பான் மசாலா வேறே. ஆனால், அந்த வாய்ப் புகையிலை chewing tobacco அதில் என்ன பிரச்சினை என்றால், எங்கள் பகுதிகளிலே எல்லாம் அது விளைகிறது. நிறைய விளைகிறது. இன்னும் விளைகிறது. கொஞ்சம் குறைந்து போயிற்று. முன்பெல்லாம் எங்கள் ஊரிலே வெள்ளாமை, புகையிலையாகத்தான் இருக்கும். இப்போது இல்லை. புகையிலை இல்லையென்றால்கூட, பல பகுதிகளிலே விளைகிறது. வியாபாரிகள் நிறைய இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் என்னிடம் அலறுகிறார்கள். திடீரென்று நிறுத்திவிட்டீர்கள் என்றால், இன்னும் பதப்படுத்தவே இல்லை. நம் ஊரிலே அது விற்பது இல்லை. விற்பதற்கு கேரளாவிற்குப் போகிறது. அதனால் கேரளாவில் விற்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். இதற்குத் தடை விதிப்பதைப் பற்றி நான் குறை சொல்லவில்லை. ஆனால், அதில் கொஞ்சம் ஏதாவது ஒரு சலுகை வழங்க வேண்டும். அதேநேரத்தில் சில ஆண்டுகளாவது அவர்கள் பொறுத்திருக்கலாம். ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டுகளாவது அவர்களுக்குக் கால அவகாசம் கொடுக்க வேண்டும். விவசாயிகள் வேறு பயிர்களை எடுத்துக்கொள்வதற்கு அது பயனுள்ளதாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

சீரழிக்கப்பட்டுவிட்ட மாநிலத்தின் நிதிநிலையைச் சீராக்க கருணை மற்றும் நீதியின் வழி நின்று நிதிச் சீர்திருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. நடப்பு நிதியாண்டின் திட்டச் செலவாக ரூ.6,040 கோடிக்கு ஒப்புதல் பெற்றிருப்பதற்கு இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நிதி நெருக்கடி நிலவிய போதும், வடிநிலப் பகுதியில் நெல் கொள்முதல் செய்வதற்கு ஊக்கத் தொகையாக ரூ. 50 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவுக் கடன் வட்டி மற்றும் அபராத வட்டி விவசாயிகளுக்காக திருப்பிச் செலுத்துவதற்கு ரூ.310.50 கோடி ஒதுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இராமேஸ்வரத்தில் புதிய மீன்பிடித் துறைமுகத்தை அமைப்பதற்காக ரூ.53.86 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. கிராமப்புற மகளிரின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்காக 12,619 கிராமங்களில் மகளிர் துப்புரவகங்கள் அமைப்பதற்காக ரூ.92 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு அரசு



மருத்துவமனையிலும் செவிலியர் பயிற்சிப் பள்ளி ஒன்று அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய திட்டங்களை அறிவிப்பதற்கு உரிய துணிச்சலும், அவற்றை எவ்வகையிலும் நிறைவேற்றுவோம் என்ற உறுதியும் இந்த அரசுக்கு இருப்பதை நான் பெரிதும் பாராட்டுகின்றேன். உலக மகா யுத்தத்தின் காரணமாக, அழிந்தொழிந்து, சீரழிந்துபோன ஜப்பான் இன்று பொருளாதாரத்திலே வியத்தகு வெற்றிகளை ஈட்டிவருகிறது. யுத்தப் பேரழிவைவிட கடந்த ஐந்தாண்டு காலத்திலே ஏற்பட்டுவிட்ட சீரழிவைச் சரிப்படுத்துவது இயலாத காரியமல்ல.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணியர்
திண்ணிய ராகப் பெறின்"

என்கிறார் வள்ளுவர். மக்களின் ஆதரவைப் பெற்று மீண்டும் ஆட்சியில் அமர்வேன் என்று உறுதிபூண்டு, களம் புகுந்த முதல்வர், நினைத்ததை முடித்துவிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) இனி நினைப்பதையும் முடிப்பார் என்பதிலே எங்களுக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஏழைகளின் வாழ்வில் ஒளியேற்ற அவர் எடுக்கும் நடவடிக்கைகள் இந்த நிதிநிலை அறிக்கையில் பளிச்சிடுகின்றன. அவற்றை நிறைவேற்றுவதற்கு அரசு மேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளுக்கும் நாங்கள் துணை நிற்போம்.

*பிற்பகல் 12-45*

என் தலைவர் என்று எம்.ஜி.ஆராலும், குலக்கொழுந்து என்று அண்ணாவாலும், பச்சைத் தமிழன் என்று தந்தை பெரியாராலும், கர்மவீரர் என்று பண்டித நேருவாலும், என் வழிகாட்டி என்று எங்கள் அன்புத் தலைவர் மூப்பனார் அவர்களாலும், கருப்பு காந்தி என்று நாட்டு மக்கள் அனைவராலும் ஏற்றிப் போற்றி, பாராட்டிப் புகழப்பட்ட பெருந்தலைவர் காமராஜர் வழிநின்று, ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண பயணம் மேற்கொள்ளும் இந்த அரசுக்குப் பாதுகாப்பாக இருப்போம் என்பதையும் எடுத்துக்கூறி, பாரதியின் புதுமைப் பெண்ணாக விளங்கும் நமது முதல்வரின் அரசு கொண்டு வந்துள்ள இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்போது முக்கியமான விஷயம் ஒன்றை நான் இங்கே பேசவேண்டும். இந்த அவையிலே பல்வேறு நிதிநிலை அறிக்கைகளை இந்த மாநிலத்திலும், மத்தியிலும் தயாரித்து தாக்கல் செய்த பெருமைக்குரிய பொருளாதார நிபுணராக விளங்கிய–யார் என்று நான் சொல்ல வேண்டியதில்லை, உங்களுக்கெல்லாம் தெரியும்–தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள்,

கொங்கு நாட்டுக்குப் பெருமை சேர்த்த அந்தத் தலைவரின் இடத்தில் நின்று நமது நிதியமைச்சர் மாண்புமிகு திரு. பொன்னையன் அவர்கள் அணி செய்கிறார்கள். அவருடைய முதல் நிதிநிலை அறிக்கையே அவருக்குப் பெருமை சேர்த்துவிட்டது.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப அவரிடம் வழங்கப்பட்டுள்ள நிதித் துறையைச் சிறப்பாக நிர்வகிக்க வாழ்த்தி, ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லிவிடுகிறேன். இரண்டு, மூன்று மாண்புமிகு உறுப்பினர்கள்கூட என்னிடம் சொல்லிவிட்டார்கள். அதைப்பற்றி எழுதியும் கொடுத்துவிட்டார்கள். அதைப்பற்றிப் பேசி விடுகிறேன். வேறு ஒன்றும் நினைக்க வேண்டாம். இந்தத் தொகுதி மேம்பாட்டு நிதியைக் கொஞ்சம் உயர்த்த வேண்டுமென்று எல்லா எம்.எல்.ஏ.-க்களும், இரண்டு பக்கம் உள்ளவர்களும் கேட்கிறார்கள். அதைப்பற்றி என்னையும் சொல்லச் சொன்னார்கள். ஒரு கோடி ரூபாயாக உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதையும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, உட்காருங்கள். Time இல்லை.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான விஷயம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பாரதப் பிரதமர் அவர்களுக்கும், கர்நாடக முதலமைச்சர் அவர்களுக்கும் கடிதம் எழுதி வருகிற 6-9-2001-லே பெங்களூரிலே பேச்சுவார்த்தை நடத்துவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியிலே Monitoring Committee கூட்டம் 6-9-2001 அன்று நடைபெற உள்ளது.



**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதை Monitoring Committee கூட்டம் என்று திருத்திக் கொள்கிறேன். இன்றைக்குக்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்திப்பதற்காக தஞ்சை மாவட்டத்திலேயிருந்து ஏகப்பட்ட விவசாயிகள் வந்திருக்கிறார்கள். தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களிலே குறுவைப் பயிர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றன. இதுவரையிலும்கூட நமக்கு 50 டி.எம்.சி. தண்ணீர், கர்நாடக மாநிலம் வழங்க வேண்டியதை அவர்கள் கொடுக்கவில்லை. அதை இடைக்காலத்திலே ஏதாவது கேட்டுப் பெற்று, அந்தப் பயிர்களைப் பாதுகாப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா? இன்றைக்குக்கூட, நிறைய விவசாயிகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்திக்க வேண்டுமென்று வந்திருக்கிறார்கள். ஆகவே, அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலம் நமக்கு வழங்க வேண்டிய காவிரி நீரில் நிறைய பாக்கி இருக்கிறது. அதை எப்படியாவது கேட்டுப் பெறவேண்டும் என்பதற்காகத்தான் நானும் கடிதம் எழுதினேன். கர்நாடக முதலமைச்சர் அவர்களைச் சந்திப்பதற்கு பொதுப் பணித் துறை அமைச்சரையும், தமிழக அரசின் தலைமைச் செயலாளரையும், பொதுப் பணித் துறைச் செயலாளரையும் அனுப்புவதாக நான் ஏற்கெனவே இங்கே கூறியிருக்கிறேன். அவர்களுக்காக நேரம் கேட்டுத்தான் கர்நாடக முதலமைச்சருக்குக் கடிதம் எழுதியிருந்தேன். விரைவில் நேரம் ஒதுக்கப்படும் என்று கர்நாடக முதலமைச்சர் பதில் அனுப்பியிருக்கிறார். ஆகவே, இந்த அரசால் முடிந்த முயற்சிகளை மேற்கொண்டுதான் வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசின் சார்பில் 2001-2002 ஆம் ஆண்டுக்கான, ஒரு வகையிலே இடைக்கால நிதிநிலை அறிக்கையைத் தொடர்ந்து மிச்ச காலத்திற்கான நிதிநிலையையும் வரையறுத்து ஓர் அறிக்கை வைத்திருக்கிறபோது, இந்த அறிக்கை இயல்பாகவே ஏற்கெனவே உள்ள அறிக்கையினுடைய தொடர் கதையாகத்தான் அமைய முடியும்

என்பதையும் நான் அறிந்தவன் என்ற முறையிலேயும் அந்த
அடிப்படையிலே ஏற்கெனவே அமைந்த அறிக்கையினுடைய கருத்துக்கள்
பெருமளவுக்கு சரியான முறையிலே பின்பற்றப்படாமல், பல மாற்றங்கள்
செய்யப்பட்டது காரணமாக சில வகையில் பயன்கள், பயன்பாடுகள்
குறையும் என்பதையும் முதலிலேயே நான் தெரிவிக்கக்
கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கான காரணம், ஒரு குறுகிய காலத்தில்
ஒரு நிதிநிலை அறிக்கை மிக விரைந்து தயாரிக்கப்படுகிறபோது, ஏற்கெனவே
உள்ள அடிப்படைகளைத் தொடர்ந்து காப்பாற்றுவதற்கான ஒரு முயற்சி
மேற்கொள்ளப்பட்டால்தான் அதிலே ஏற்படக்கூடிய குறைகள் அல்லது
செயற்பட இயலாமை என்ற நிலைமை ஏற்படாமல் தவிர்க்க முடியும்.
ஆனால், அதிலே இந்த அரசு ஓரளவுக்குத்தான் அக்கறை காட்டியிருக்கிறது
என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இந்த
அறிக்கையை நான் கண்டிப்பதா அல்லது வரவேற்பதா என்று கேட்டால்,
நொதுமல் நிலையில், ஒரு வகையில் நடுநிலையில் என்னுடைய
எண்ணங்களைப் பரிமாறுவதைத் தவிர கண்டிப்பதற்கும் அதிகக் காரணம்
இல்லை; வரவேற்பதற்கும் நியாயம் இல்லை. வேறு பல கட்சிகளைச்
சார்ந்த தலைவர்கள் பெருமளவில் வரவேற்றார்கள் என்றால், இந்த
அரசுக்குத் தாங்கள் காட்டுகிற ஆதரவு என்ற முறையில் அந்த உணர்வை
அவர்கள் வெளிப்படுத்தினார்கள்; அது அவர்களுடைய உரிமை. நான்
சார்ந்து இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில்
நாங்கள் உணர்ந்துள்ள சில கொள்கைகளை நாங்கள் பின்பற்றி வருகிறோம்.
பின்பற்ற முடியாத நிலைமை ஏற்பட்டால்கூட அந்தக் கொள்கைகளை
நாங்கள் வேண்டுமென்றே கைவிடுவதும் இல்லை; மாற்றிக்கொள்வதும்
இல்லை. கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில், மத்திய அரசு
போன்ற பல்வேறு கட்சிகளினுடைய இணைப்பாகச் செயற்படக்கூடிய
பாராளுமன்றத்திலே இருக்கிற அந்தக் கட்சிகள் உடன்பாடான ஒரு
நிலைக்கு வந்து, ஒரு முடிவை ஏற்றுக்கொண்டுவிடுவார்களேயானால்,
அதற்குப் பின்னர் நாங்கள் சொல்கிற கொள்கைகளை நாங்கள் முழு
அளவில் பின்பற்றக்கூடிய வாய்ப்பு இருக்கும். ஆனால்,
பாராளுமன்றத்திலேயே அந்தக் கொள்கையை அனைத்துக் கட்சிகளும்
ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலைமை ஏற்படாமலும், அரசியல் சட்ட விதிகள்
திருத்தப்படாமலும், உள்ள நிலையிலும் முற்போக்குக் கொள்கை உடைய
கட்சி என்று சொல்லப்படக்கூடிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
கட்சியினுடைய தலைவர் திரு. ஜோதிபாசு அவர்களேகூட, 356–வது
பிரிவைக் கைவிட வேண்டுமென்று நாங்கள் சொன்னபோது
ஏற்றுக்கொள்ளாத ஒரு நிலையிலும், அகில இந்தியாவிலே நீண்டகாலம்



ஏற்றுக்கொள்ளாத நிலையிலும்
ஆட்சி நடத்திய காங்கிரஸ் கட்சியும் ஏற்றுக்கொள்ளாத நிலையிலும்
ஏற்பட்ட தடையின் காரணமாக எடுத்து வைக்கப்படுகிற ஒரு
கொள்கையாகத்தான் எங்களுடைய கருத்து இருக்கிறது. மத்திய
அரசினுடைய போக்கிலே அப்படியொரு நிலைமை இருப்பதை, யாரும்
356–ஆவது விதியைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய நிலைமை
இருப்பதை நாம் மறுப்பதற்கில்லை. ஆனாலும், நான் இந்த அவைக்குத்
தெரிவிக்க விரும்புகிறேன், 356–வது பிரிவைப் பயன்படுத்த வேண்டும்
என்பதை திராவிட முன்னேற்றக் கழகம், ஒரு கட்சி என்ற முறையில்
நாங்கள் அதை எடுத்து வைக்கவில்லை.

இந்த அவையில், 100 நாள் ஆட்சி நடைபெற்றதற்காக, அதிலே
ஏற்பட்ட சாதனைகளுக்காகப் பாராட்டும், சாதனைகளை விளக்குகிற
செய்திகளும் வந்திருக்கின்றன. அது ஒரு ஆளுங்கட்சியினுடைய உரிமை.
அதேநேரத்தில், எதிர்க்கட்சியினராகிய எங்களுக்கு 100 நாளில்
எங்களுடைய வேதனைகள் என்ன என்று சொல்லக்கூடிய உரிமை உண்டு.
அதற்காக நாங்கள் விளம்பரம் செய்யாமல் இருக்கலாம். எங்களுக்கு
ஏற்பட்ட அனுபவத்தை நாங்கள் சொல்லாமல் இருக்கமுடியாது. அப்படி
நான் சொல்லாமல் இருப்பேனேயானால், அது நாட்டுக்கு நான்
ஆற்றக்கூடிய கடமையும் ஆகாது. அதிலே ஒன்று, இந்த அவை மரபு
மீறப்படவில்லை என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்
சொல்வதை நான் ஏற்றுக்கொண்டாலும்கூட, திராவிட முன்னேற்றக்
கழகம் சார்பாக வெற்றி பெற்று இந்த அவையில் வந்து உறுப்பினராக
அமர்ந்து, ஒருமுறை விவாதத்திலே கலந்துகொண்டு தன்னுடைய
கருத்துகளை எடுத்து வைத்த தொழிற்சங்கத் தலைவர் வை. பெருமாள்
அவர்கள் மறைய நேரிட்டு, அவருக்கு உரிய மரியாதையை இந்த அவையில்
நான் செலுத்தும் முறையில், என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஒரு
வாய்ப்பு இல்லாத நிலைமை திராவிட முன்றேற்றக் கழகக் குடும்பத்தில்
உள்ள தோழர்களுக்கிடையில் ஒரு மனக்குறையை ஏற்படுத்தியது என்பதை
நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-55*

அவர் திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந்தார். அதற்கு
முன்னர் எம்.ஜி.ஆர். இடத்திலே பற்றுடைய ஒரு தொண்டராக இருந்தார்.
இருந்தாலும்கூட அதற்கு முன்னர் மாணவப் பருவத்திலேயிருந்து, அறிஞர்
அண்ணாவைப் பின்பற்றுகிறவராக இருந்து, தொழிற்சங்க இயக்கத்திலே
தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, தொ.மு.ச. பேரவையினுடைய பொதுச்
செயலாளராக இருந்து, மிக நல்லமுறையில் தொழிற்சங்கவாதிகளெல்லாம்

பாராட்டுகிற முறையில் அனைத்துத் தொழிற்சங்கவாதிகளுக்கிடையிலும் பல்வேறு கட்சிகளைச் சார்ந்த தலைவர்களுக்கிடையிலும் நன்மதிப்புப் பெற்றவராக விளங்கியவர். அவர் திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய பேரணியிலே கலந்துகொண்டு, களைப்புற்று அந்தக் களைப்பிலிருந்து அவரை மேடையிலே அமர்த்தியிருக்கிறபோது பேரணியிலே ஏற்பட்ட கடுமையான தாக்குதல் நிகழ்ச்சிகளை அவர் செவிமடுத்தபோது அவருக்கு மேலும் அந்தக் களைப்பு அதிகமாயிற்று. உடனே நாங்கள் மருத்துவமனைக்கு அனுப்பினாலும்கூட, ஏற்கெனவே பாதிக்கப்பட்ட உடல்நிலை, இந்தச் செய்தியும் சேர்ந்து, அவரை மருத்துவர்களாலே காப்பாற்றப்பட முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டு அவர்கள் மறைந்தார்கள். அதைப்பற்றிய விவரம் நான் இங்கே பேசவில்லை என்று சொன்னாலும்கூட, அவர்களுடைய மறைவு எங்களையெல்லாம் பெரும் வேதனைக்கு ஆளாக்கிற்று. இங்குள்ள மற்ற நண்பர்களுக்கும்கூட அது ஒரு வருத்தமாகத்தான் இருக்கும். எனவே, அதற்காக என்னுடைய ஆழ்ந்த இரங்கலை இந்தநேரத்தில் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அதேபோல திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், அவருடைய இல்லத்தில் ஜூன் மாதம் 29 ஆம் தேதி இரவு, 30 ஆம் தேதி விடியற்காலை நேரம், காவல் துறையினர் அவரை கைது செய்ய வேண்டுமென்று தீர்மானித்தபடி, அவர்களுடைய இல்லத்திலே புகுந்து–இது ஒருவேளை என்னுடைய நண்பர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு அது மிகச் சாதாரண ஒரு நிகழ்ச்சியாகத் தோன்றக்கூடும்; அவர்கள் அப்படிச் சொன்னார்கள்–கைது செய்தார்கள். என்னைப் பொறுத்தவரையில் அது நானோ, கலைஞரோ அல்லது வேறு யாரோ அரசியலில் எங்களுக்குச் சரி என்று படுகிற வழியில் நீண்டகாலமாக இருப்பவர்கள். சட்டப்படி எங்கள்மீது எடுக்கப்படும் எந்த நடவடிக்கையிலிருந்தும் நாங்கள் தப்பித்துக்கொள்ள வேண்டிய அவசியம் எங்களுக்குக் கிடையாது. ஒருவேளை நாங்கள் சிறைக்கு அனுப்பப்பட்டால் அதுவே எங்களுக்கு ஒரு பெரிய பெருமையாகக்கூட ஆகும். ஆகவே, அதுவல்ல பிரச்சினை. ஆனால் அவர்களைக் கைது செய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கையில் காவல் துறையினர் இரவு 12.30 மணி, 1 மணி அளவிற்கு அவர்கள் வீட்டிற்குச் சென்று எப்படியோ அவர்கள் கதவு திறக்காமல் உறங்கியிருந்த நேரத்தில் கதவை உடைத்து உள்ளே சென்று அதற்குள்ளே ஏதோ விசாரணை இருக்கிறது, அவைகளிலே அந்த உண்மைகள் வெளிவரும் என்றால் நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை. முன்னாள் முதலமைச்சர் அவர்களைக் கைது



செய்ய வேண்டுமெனில் பகல் நேரத்தில் அவருக்குத் தெரிவித்துவிட்டுக் கைது செய்ய முடியாதா? அவர் என்ன அந்தமானுக்கு ஓடிவிடுவாரா? அமெரிக்காவுக்கு ஓடிவிடுவாரா? அவருடன் ஆயிரம் கருத்து மாறுபாடுகள் இருந்தாலும்கூட சட்டப்படி தன்னைக் கைது செய்ய வருகிறபோது ஓடிவிடக்கூடியவர் அல்ல. அவருக்குப் பெருமைக்காக நாங்கள் இதைப் பேசவில்லை. ஓர் அரசாங்கம் அவரைக் கைது செய்யத்தான் வேண்டும் என்று சட்டப்படி கருதுமானால் அதற்கான முறைப்படி செய்திருப்பார்களேயானால், பிரச்சினை அல்ல. இந்த கைது நிகழ்ச்சிக்கு ஓர் ஆண்டிற்கு முன்னாலேயிருந்து மூன்று மாதத்திற்கு ஒருமுறையாகக் கடுமையான சிகிச்சை பெற்றுத்தான் பணிகளை ஆற்றிக்கொண்டிருந்தார். அந்த நிலையிலே அவர் கடுமையாகப் பாதிக்கப்பட்டதன் விளைவாக மேலும் பாதிக்கப்படும் நிலைமை ஏற்பட்டது. நான் இந்த அரசாங்கத்திற்கு வாழ்த்துச் சொல்லுகிறேன். நல்லவேளை அவர்களுடைய உயிருக்கு எதுவும் ஏற்படவில்லை. எதிர்பாராமல் ஏற்பட்டிருக்குமானால்–யாரும் திட்டமிட்டுகூடச் செய்யத் தேவையில்லை–எதிர்பாராமல், அவருக்குள்ள நிலைமை காரணமாக ஒரு சூழ்நிலை தாக்கத்தால் அவர் அதிர்ச்சிக்கு ஆளாகி ஏதேனும் ஒன்று ஆகியிருக்குமானால், தமிழ்நாட்டிலே ஜனநாயகத்திற்கு மிகப் பெரிய ஒரு சோதனையாக அது இருந்திருக்கும். ஒரு கட்சிக்காக நான் இதைப் பேசவில்லை. என் கட்சிக்காகப் பேசவில்லை; நான் கலைஞருக்காகவும் பேசவில்லை. ஆகவே, அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சியிலே இந்த அரசாங்கத்தின் சார்பாகச் சென்ற காவல் துறையினரைச் சார்ந்த சிலபேர் நடந்துகொண்டனர். முழு விசாரணைக்குரிய பகுதிகளுக்குள்ளே நான் செல்லவேயில்லை. உச்ச நீதிமன்றத்திலே கொடுக்கப்பட்ட guidelines திட்டவட்டமாக தமிழ்நாட்டினுடைய Director General of Police அவர்களால், அந்தத் துறையிலே உள்ள அத்தனை அதிகாரிகளுக்கும் அனுப்பப் பட்டிருக்கிறபோது, அதை மீறிச் செய்ய வேண்டிய அவசியம் என்ன வந்தது?

பிற்பகல் 1-00

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது நான் குறுக்கிட விரும்பவில்லை: இருப்பினும் ஒருசிலவற்றை சொல்லியே ஆகவேண்டும். மறைந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. பெருமாள் அவர்கள் எப்படி இறந்தார் என்பதைப் பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கின்றபோது

பேரணியில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களைக் கேள்வியுற்று அதனால் அதிர்ச்சி அடைந்து, அவருடைய உடல்நிலை மோசமானது என்று கூறினார். நான் ஏற்கெனவே வேறு ஓர் உறுப்பினர் பேசியபோது இதே கருத்தைச் சொன்னபோது அதற்கு விளக்கம் அளித்திருக்கின்றேன். அதே விளக்கத்தை இப்போதும் நான் அளிக்கிறேன்.

பேரணியில் எந்த வன்முறைச் சம்பவங்களும் நடைபெறுவதற்கு முன்பாகவே திரு. வை. பெருமாள் மருத்துவமனையில் உடல்நலம் குன்றி அனுமதிக்கப்பட்டார் என்பதுதான் உண்மை. ஆகவே, நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களைக் கேள்விப்பட்டு அதனால் அதிர்ச்சி அடைந்து அவரது உடல்நிலை மோசமானது என்பது உண்மை அல்ல என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

மற்றபடி முன்னாள் முதலமைச்சர் கைது செய்யப்பட்டபோது உச்ச நீதிமன்ற விதிமுறைகளை-guidelines-யை காவல் துறையினர் பின்பற்றவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் குற்றம் சாட்டுகிறார். இவையெல்லாம் விசாரணைக் கமிஷன் விசாரித்துக் கொண்டிருக்கிற விஷயங்கள். ஏற்கெனவே விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டுள்ளது. காவல் துறையினர் Supreme Court guidelines-படி நடந்தார்களா இல்லையா என்பதையெல்லாம் விசாரணைக் கமிஷன் ஆராய்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அதைப்பற்றி இந்த அவையில் பேசுவது இந்த அவையின் சட்ட விதிகளுக்குப் புறம்பான செயல் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த மாண்புமிகு உறுப்பினர் வை. பெருமாள் அவர்கள் ஒரு பழைய இருதய நோயாளி. அவர் ஏற்கெனவே இருதய நோயிற்காக டாக்டர் தணிகாச்சலம் அவர்களிடம் சிகிச்சை பெற்று வந்தவர். அவர் ஆயிஷா மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டபோது sweating அதாவது வியர்த்தது. இருதய நோய் வந்ததாலே வியர்த்துதான் அவர் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். எனவே, இருதய நோயின் காரணமாகத்தான் அவர் அனுமதிக்கப்பட்டாரே தவிர, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியர் அவர்கள் சொல்வதைப்போல வேறு காரணங்களாலே அந்தப் பாதிப்புக்கு அவர் ஆளாகவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்திலே அந்த நேர விவரம் எல்லாம்கூட இருக்கிறது. ஆனால் அந்த விவாதத்திற்குள்ளே நான் செல்ல விரும்பவில்லை. பழைய நோயாளி, ஆகவே போய் விட்டார். பழைய நோயாளிகள்தான்



எல்லோருமே. ஆகவே, பழைய நோயாளிகளாகிய நாம் போய்க் கொண்டுதான் இருப்போம், அதுவல்ல பிரச்சினை. அந்தநேரத்திலே அவருக்கு இந்தச் செய்தி சொல்லப்பட்டு, முதலில் அவர் களைப்படைந்தார், களைப்படைந்தவர் சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்கு அனுப்பப்பட்டார். அங்கே 7-40 மணியிலிருந்து 8-45 வரையில் இருந்தார். அங்கேதான் ஆயிஷா மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டது. அப்போது இந்தச் செய்தியை யாரோ சொன்னார்கள். நானாக இருந்தால் சொல்லக்கூட மாட்டேன். அப்படிச் சொன்ன காரணத்தாலே, ஏற்கெனவே அதிர்ச்சி அடைந்தவருக்கு இதுவும் சேர்ந்து ஒரு வருத்தத்தை ஏற்படுத்தியது. அதுபற்றி பெரிய பிரச்சினை இல்லை. மனிதன் இறந்து போனதற்குப் பிறகு பெரிய பிரச்சினை எதுவும் தேவையில்லை. சிகிச்சை வழங்கப்பட்டது. வழங்கிய சிகிச்சை அவருக்குப் போதுமானதான அளவு அவரைப் பாதுகாக்கக்கூடியதாக இல்லை. அவருக்கு ஏற்கெனவே இருதய நோய் இருந்தது. இருதய நோயில் எத்தனையோ இரகங்கள் இருக்கின்றன. இருதய நோயோடு 40 ஆண்டுகள், 50 ஆண்டுகள் வாழக்கூடியவர்கள் எல்லாம்கூட இருக்கிறார்கள். ஆகவே, அது வேறு பிரச்சினை.

முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களைக் கைது செய்தது குறித்து உச்சநீதிமன்ற guidelines-ஐ காவல் துறை பின்பற்றியதா இல்லையா என்ற அந்தக் கேள்வி அடிப்படையில் விசாரணைக் கமிஷன் இருக்கிறது என்று முதலமைச்சர் அவர்கள் சொல்வதிலே எனக்கு மாறுபாடு இல்லை. நான் விசாரணைக் கமிஷன் ஆகவும் விரும்பவில்லை. நான் பாதிக்கப்பட்டவர்களைச் சார்ந்தவன், இன்னும் சொல்லப்போனால் துன்பப்பட்டவர்களைச் சேர்ந்தவன். அது நியாயமான துன்பமாக இருந்தால், நானும் அதைப் பங்கிட்டுக் கொண்டு, அந்த துன்பத்தைப் பங்கிட்டுக்கொண்டு அந்தத் துன்பத்தை ஏற்றுக்கொள்வேன். நியாயம் இல்லாத வகையில் ஒரு துன்பம் இழைக்கப்பட்டு விட்டது என்பதைத்தான் இந்த அவையிலே சொல்ல வேண்டியுள்ளது. அரசுக்கு ஆயிரம் மாறுபாடு அதுபற்றி இருக்கலாம், கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிக்கு யார் அவர் என்பதுகூட எனக்கு முக்கியம் அல்ல. நிகழ்ச்சிதான் முக்கியம். நான் முதன்முதலில் இந்தச் சட்டமன்றத்தில் 1958 ஆம் ஆண்டு பேசுகின்றபோது, நான் காவல் துறையைச் சேர்ந்த ஓர் அதிகாரியைப் பற்றித்தான் எனக்குக் கிடைத்த விவரங்களை இந்த அவையிலே பேசி, பெரியவர் பக்தவச்சலம் அமைச்சராக இருந்தபோது, அதற்குப் பின்னர், பெருந்தலைவர் காமராஜர் சொல்லி ஒரு விசாரணைக் கமிஷன் போட்டு விசாரித்தார்கள். அந்த

விவரங்களுக்குள்ளேகூட நான் போக விரும்பவில்லை. காவல் துறையிலே உள்ள எல்லோருமே மனிதப் பண்பற்று நடந்துகொள்வார்கள் என்று நான் கருதுகிறவனுமல்ல. என்னுடைய அண்ணன், தம்பி, மாமன், மைத்துனன் என்று பல பேர் காவல் துறையிலே இருக்கிறார்கள். அதுவல்ல பிரச்சினை. ஆனால், அவர்கள் நடந்துகொண்ட அந்த ஒரு குறிப்பிட்ட நிலை ஏற்புடையதுதானா?

*பிற்பகல் 1-05*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து நான் ஏற்கெனவே விரிவான ஓர் அறிக்கையைப் பத்திரிகைகளில் வெளியிட்டிருந்தேன். முன்னாள் முதலமைச்சரைக் கைது செய்தபோது காவல் துறை அதிகாரிகள் Supreme Court Guidelines–படிதான் நடந்து கொண்டார்கள் என்று நான் இப்போதும் உறுதியாகக் கூறுகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அப்படியில்லை, அந்த Supreme Court Guidelines–க்கு எதிராக நடந்து கொண்டார்கள் என்று கூறுகிறார். இப்படி இரு வேறுபட்ட கருத்து இருப்பதால்தான் உண்மையைக் கண்டறிய விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டுள்ளது. ஆகவே, விசாரணைக் கமிஷன் தனது பணியை முடித்து அறிக்கை வெளியிடும் வரை இந்த அவையில் அதைப்பற்றி விவாதிப்பது முறையாகாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேராசிரியர் அவர்களே, தங்களுடைய பேச்சில் உச்ச நீதிமன்றத்தின் விதிமுறைகளை மீறி காவல் துறையினர் நடந்துகொண்டார்கள் என்ற வாக்கியம் வந்தது. அதற்குத்தான் முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். ஆகவே, உச்ச நீதிமன்றத்தின் விதிமுறைகளைக் காவல் துறை மீறியதா, இல்லையா என்பதுதான் விசாரணைக் கமிஷனுக்கு முன்னால் இருக்கிறது. அது விசாரணைக் கமிஷனில் வரட்டும். அதற்குள்ளே போக வேண்டாம்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தினுடைய guidelines–ஐ மீறவில்லை என்று தீர்ப்புச் சொல்லட்டும். எனக்கு ஒன்றும் அதிலே மாறுபாடு இல்லை. ஏனென்றால், தீர்ப்புச் சொல்கிறவர்களுக்கு எல்லா உரிமையும் இருக்கிறது. Guidelines என்ன என்பதையும் அவர்களே பார்க்கட்டும். அதற்குப் பின்னர் அவர்கள் தீர்ப்புச் சொல்லட்டும். அந்தத் தீர்ப்பிலே நான் குறுக்கிடுவதாகத் தாங்கள் கருத வேண்டாம். அந்த அதிகாரம் எனக்கு இருப்பதாகக்கூட நான் நினைப்பது இல்லை. ஆனால், அதையொட்டி



ஏற்பட்ட உணர்வுகள் தமிழ்நாட்டு மக்களை மிகப்பெரிய அளவில் பாதித்தது என்பதை நான் தெரிவிக்காமல் இருக்க முடியாது. பெரும்பான்மையோரை பாதிக்கவில்லை என்று நீங்கள் சொல்லக்கூடும். பெரும்பான்மையோர் பாதிக்கப்படவில்லை. சிறுபான்மையோர்தான் பாதிக்கப்பட்டார்கள் என்றாலும் சிறுபான்மையினருடைய உரிமைக்கும் வாதாடுகிற காலம்தான் இந்தக் காலம். ஆகவே, உணர்வு பாதிக்கப்படுகிற அளவுக்கு ஒரு நிலைமை ஏற்பட்டதை இந்த அவையில் நான் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. அதேபோல, இந்த மாதம் 6–ம் தேதி, தமிழ்நாட்டில் 100 இடங்களிலே ஆங்காங்கே கூட்டம் போட்டு பேசுவதற்காக பேரணி நடைபெற்றது. வழக்கம்போல் நடைபெற்றது. எங்கும் பெரிய பிரச்சினை ஏற்படவில்லை. சென்னையிலே நடைபெற்ற பேரணியிலேதான் பெரிய பிரச்சினை ஏற்பட்டது. அந்தப் பிரச்சினையை ஏற்படுத்துவதற்கு வெறும் காவல் துறை மட்டும் காரணமாக இருந்தால்கூட, காவல் துறை கண்டிப்பாக அப்படி நடக்க முயற்சித்த காரணத்தால், அப்படி ஒரு விளைவு ஏற்பட்டது என்றுகூட என்னால் கருத முடியும். காவல் துறை மட்டுமல்ல, வேறு பலர் அதிலே...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவரவர்களே, நேரம் குறுகலாக இருக்கிறது. மாண்புமிகு பேராசிரியர் அவர்கள், எல்லாம் உணர்ந்தவர்கள். சென்னையிலே நடந்த பேரணி குறித்தும் விசாரணைக் கமிஷன் இருக்கிறது. எனவே, அதற்குள் செல்லாமல், மற்ற கருத்துகளைப் பேசுவது நல்லது எனக் கருதுகிறேன்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விவரங்களுக்குள்ளே போகவில்லை. காவல் துறை மட்டுமே நடவடிக்கை எடுத்திருந்தால்கூட அது வேறு. அதற்கு அப்பால் ஏதாவது நடைபெற்றிருக்குமானால், அப்படி நடைபெற்றதை இந்த அரசு நிச்சயமாக மாற்றி அமைக்கின்ற வகையில் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொண்டால் தவிர, எதிர்காலத்தில் யார் வேண்டுமானாலும், யாரை வேண்டுமானாலும் பயன்படுத்தி, எதை வேண்டுமானாலும் செய்வது என்ற நிலைமை நாட்டுக்கு நல்லதல்ல என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். அதிலேகூட, 7, 8 பேர் உயிரிழந்தார்கள். 200 பேர்களுக்குக் காயம் ஏற்பட்டது. இன்னும் சொல்லப்போனால் வாகனங்கள் உடைக்கப்பட்டன. இதெல்லாம்கூட மொத்தமாக disputable அல்ல. நடந்தது. எப்படி நடந்தது என்பதை நீங்கள் பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவரங்கள்கூட disputable தான். எத்தனை

பேர் மரணம் அடைந்தார்கள் என்ற எண்ணிக்கையில்கூட மாறுபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, இவற்றைப்பற்றி எல்லாம் விரிவாக விசாரிப்பதற்காகத்தான் விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டுள்ளது. எல்லாம் தெரிந்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மீண்டும் மீண்டும் இதைப்பற்றிப் பேசுவது முறையல்ல என்பதை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-10*

**பேராசிரியர் க. அன்பழகன்:** சரியான எண்ணிக்கை சொல்ல முடியாது என்ற காரணத்தால்தான் 7, 8 பேர் என்று நானே சொல்கிறேன். நீங்கள் 6-ஆக வேண்டுமானாலும் சொல்லுங்கள். 9-ஆக வேண்டுமானாலும் சொல்லுங்கள். 3-ஆக வேண்டுமானாலும் சொல்லுங்கள். அதேபோல, வண்டி, வாகனங்கள் எண்ணிக்கை உத்தேசமானதுதான். ஏனென்றால், பாதிக்கப்பட்டோம் என்ற உண்மையைத்தான் நான் இங்கே எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். ஆகவே, இப்படிப்பட்ட போக்கினால் ஏற்பட்ட ஒரு சோதனைக்கிடையிலேதான் இந்த அரசு குறித்து நாங்கள் உரையாட வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். இங்கே நான் முறைப்படி அனைத்தையும் பேசுவதாக இருந்தால் அதிக நேரம் ஆகும் என்பதை நான் அறிவேன். கட்டாயம் பேசியாக வேண்டும் என்பதும் எனக்கு இல்லை. நான் பேசிப் பேசி முடிந்து போனவன் என்று என்னைப் பற்றிக் கருதுகிறவன். இருந்தாலும்கூட இங்கே நண்பர் திரு. பழனிசாமி அவர்கள் சற்றுமுன்னாலே எழுப்பிய அந்தப் பிரச்சினையில், காவிரி நீர் தமிழ்நாட்டுக்கு, தஞ்சை, திருச்சி மாவட்டங்களுக்கு, காவிரி டெல்டா பகுதிகளுக்குக் கிடைப்பதற்கு இந்த அரசு எடுத்துக்கொண்ட முயற்சியை மிகத் தீவிரமாக மேற்கொண்டு அங்கேயுள்ள விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டுமென்பதை நான் இங்கே பேசுகிற வாய்ப்பு கிடைத்த காரணத்தால் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கெனவே மாண்புமிகு வாஜ்பாய் அவர்கள் பிரதமர் என்ற முறையில் அவருடைய தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டதே இப்படி ஒரு dispute சிறு சிறு வேறுபாடுகள் வந்து, நம்முடைய மக்கள், விவசாயிகள் பாதிக்கப்படக்கூடிய நேரத்தில் பிரதமருடைய செல்வாக்கைப் பயன்படுத்தி நமக்கு உரிய நியாயத்தைப் பெறலாம் என்ற அடிப்படையிலேதான் அவருடைய தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டது. அதுபற்றிக்கூட நம்முடைய முதலமைச்சர் அவர்கள்கூடச் சொன்னார்கள். அதை எதிர்த்துத்தான் நான் அப்போது அந்தக் கூட்டணியிலேயிருந்து வெளியேறியதாகச் சொன்னதாக



என்னுடைய நினைவு. ஒரு திட்டத்தைத் தொடங்குகிறபோது எதிர்க்கலாம், மறுக்கலாம். ஆனால் நடைமுறையில் எது இன்றைக்கு இருக்கிறதோ அந்த அடிப்படையில் அதைப் பயன்படுத்தி முழு அளவிற்கு தஞ்சை மாவட்ட விவசாயிகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வலியுறுத்த விரும்புகிறேன்.

அதேபோல, அதற்குச் சற்று நேரம் முன்னர் சென்னை மாநகரத்தினுடைய குடிநீர்ப் பிரச்சினை, கேள்வி நேரத்திலே என்று கருதுகிறேன், அது மிக விரிவாக இங்கே பேசப்பட்டது. இந்தக் குடிநீர்ப் பிரச்சினை தொடர்ந்து நீடித்து வருகிறது. இருந்தாலும் எங்களுடைய முயற்சியை நான் இங்கே குறிப்பிடுவது ஒரு நல்லெண்ண அடிப்படையிலேதான். எம்.ஜி.ஆர். அவர்களோடு, புரட்சி நடிகரோடு, மாறுபட்ட கருத்து, அரசியல் மாறுபாடு எல்லாம் இருந்தாலும்கூட, அவரால் தொடங்கப்பட்ட திட்டம் என்ற காரணத்தால் அந்தத் திட்டத்தைக் கைவிடாமல், கிருஷ்ணா நீர் திட்டம் நிறைவேறிவிடுமானால் சென்னை நகர மக்களுடைய மிக மிக இன்றியமையாத குடிநீர்ப் பிரச்சினை தீரும் என்ற நம்பிக்கையிலேதான் அந்தத் திட்டத்திலே தி.மு.க. அரசு அதிக கவனம் செலுத்தியது. வீராணம் திட்டம் தி.மு.க. அரசைப் பொறுத்தவரையில் ஒருமுறை தொடங்கப்பட்டு அது சரியாக நிறைவேறாமலும், அதற்கு மாறுபாடு ஏற்பட்டு கைவிடப்பட்டு, அதற்குப் பின்னர் மறுபடியும் ஆய்வு செய்யப்பட்டு வந்தாலும்கூட, நான் அறிந்தவரையில் வீராணம் திட்டம் சென்னை நகர மக்களுடைய பிரச்சினையைத் தீர்க்கப் போதுமானதாக அமையவே முடியாது; அமைந்தாலும் பிரச்சினைகள் வரும் என்ற இரண்டு நிலைகளும் இருந்த காரணத்தால் அதிலே தி.மு.க. அரசு அதிக அக்கறை காட்டவில்லை. இன்னும் சொல்லப்போனால், அங்கே, வீராணம் ஏரி பாசனத்தால் விவசாயம் செய்து வாழ்கிற மக்கள் பலநேரம் என்னைச் சந்திக்கிறபோதெல்லாம் இங்கே அந்தத் திட்டம் வந்தால் நாங்கள் பாதிக்கப்படுவோம் என்று சொன்னதன் காரணமாகவும், ஒரு மாறுபட்ட சூழ்நிலையில் அந்தத் திட்டத்தை நாம் ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை என்று, கிருஷ்ணா ஆற்று நீர்த் திட்டமே சென்னை நகரத்துக்கு வாழ்வளிக்கப் போதுமானதாக இருக்கும் என்று நம்பி நாங்கள் செயல்பட்டோம். அதை மேலும் தொடர்ந்து எப்படி நல்லமுறையிலே நிறைவேற்ற முடியுமோ நிறைவேற்ற வேண்டும். அதிலேகூட ஒரு கருத்து மாறுபாடு. தி.மு.க.வோடு ஏற்பட்ட மாறுபாட்டுக்காக, ஆந்திர முதலமைச்சரும் தி.மு.க.வோடு ஒத்துழைத்து மாறுபட்ட ஒரு கருத்தைச் சொன்னதாக இங்கே அவையிலே முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

இருந்தாலும் அது எல்லாம் பிரச்சினை அல்ல என்ற அடிப்படையில், தி.மு.க. தலைவர் கலைஞரும், அதேபோல சென்னை மாநகர மேயர் ஸ்டாலினும், சென்னையிலே வாழ்கிற மக்களுக்குக் கிடைக்க வேண்டிய குடிநீர்பற்றி, அரசியல் கண்ணோட்டத்திலே முதலமைச்சர் சொன்னதால் ஆந்திர மாநில முதலமைச்சர் அதிலே அதிக அக்கறை இல்லாமல் இருக்கக்கூடாது என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிற ஒரு நிலைமை ஏற்பட்டது. அதற்குப் பின்னர் ஆந்திராவைச் சார்ந்த ஓர் அமைச்சர் இங்கே பேசியது, பத்திரிகையில் எல்லாம் வந்திருக்கிறது, கிருஷ்ணா நீரா என்று கேட்கிறார்கள். அது கிருஷ்ணா நீர்தான், இன்ன வழியாக வருகிறது, இன்ன வாய்க்கால் இருந்தால் நேர் வழியாக வரும், அப்படி 10, 12 கிலோ மீட்டர் வாய்க்கால் இல்லை; இருந்தாலும் சுற்று வழியிலே, வேறு அமைப்புகள் மூலமாக அந்தத் தண்ணீரை அந்தப் பெரிய ஏரிக்குக் கொடுத்துதான் அங்கேயிருந்து தண்ணீர் தருகிறோம் என்ற ஒரு விளக்கம் சொல்லியிருந்தார். எப்படியோ நமக்கு தண்ணீர் தேவை. அந்தத் திட்டத்திலே என்ன குறை இருந்தாலும், அந்தக் குறையை விரைவாக, செம்மையாக நிறைவேற்றி அந்தத் தண்ணீரைக் கிடைக்கச் செய்வதுதான் முதல் உதவியாக அமையும் என்று நான் கருதுகிறேன்.

*பிற்பகல் 1-15*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கிருஷ்ணா நதிநீர் திட்டத்தில் என்ன குறையிருந்தாலும் அதைச் சரியாகச் செயல்படுத்தி கிருஷ்ணா நதிநீர் இங்கே கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என்று இங்கே கூறுகிறார். ஆனால் ஏற்கெனவே இந்தத் திட்டம் முடிந்துவிட்டதாகவும் கிருஷ்ணா நதிநீர் சென்னைக்கு வந்துவிட்டதாகவும் அறிவித்துதான் 1996–ல் உள்ளாட்சி அமைப்புத் தேர்தல்களை திமுகழகம் சந்தித்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு விழா நடத்தினார்கள். கிருஷ்ணா நிதிநீர் திட்டம் முடிந்துவிட்டது, சென்னைக்கு கிருஷ்ணா நதிநீர் வந்துவிட்டது என்று சொல்லித்தான் திரு. ஸ்டாலின் அவர்கள் சென்னை மாநகர மேயர் தேர்தலில் நின்று வெற்றியும் பெற்றார். அதன்பிறகு 5 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. இந்த 5 ஆண்டுகளில் ஒரு ஆண்டுகூட ஆந்திரம் தமிழகத்திற்கு குறிப்பாக சென்னைக்கு வழங்க வேண்டிய 12 டி.எம்.சி. அடி கிருஷ்ணா நதிநீர் கிடைக்கப்பெறவில்லை. ஆரம்பத்தில் சொட்டு சொட்டாக வந்த தண்ணீர் கடந்த ஆண்டு மட்டும்தான் ஏறக்குறைய 6 டி.எம்.சி. அடி அளவுக்கு வந்தது. ஆனால் ஒரு ஆண்டில்கூட முழுமையாக 12 டி.எம்.சி. அடி தண்ணீர்



ஒப்பந்தத்தின்படி கிடைக்கப்பெறவில்லை. மீண்டும் தண்ணீர் வரத்து நின்றுவிட்டது. ஆந்திர முதலமைச்சர் நல்ல எண்ணத்துடன் கண்டலேறுவிலிருந்து நான் கேட்டுக்கொண்ட பிறகு தண்ணீர் திறந்துவிட ஏற்பாடு செய்தார். ஆனால் அங்கேயே தண்ணீர் இல்லை. கண்டலேறுவில் தண்ணீர் இல்லை. அதனால் இப்போது தண்ணீர் வருவதும் நின்றுவிட்டது. ஆகவே என்னுடைய கேள்வி என்னவென்றால் 5 ஆண்டுகளுக்கு முன்பே முடிந்துவிட்டதாக தி.மு.க.வினர் பறைசாற்றிய திட்டத்தை இப்போது இந்த அரசு நிறைவேற்ற வேண்டும் என்று பேராசிரியர் கூறுகிறார்களே அதை அவரேதான் விளக்கிக் கூறவேண்டும் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன் அவர்களே, பேராசிரியர் அவர்களே சொல்வார்கள், நீங்கள் உட்காருங்கள்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அரசியல் நோக்கத்திலே பேசவில்லை. ஆனால் கண்டலேறுவில் உள்ள தண்ணீரைக் கொடுப்பதற்கு ஆந்திரா கடமைப்பட்டதில்லை. கண்டலேறுவிற்கு கிருஷ்ணா தண்ணீரைக் கொடுத்து அதன்மூலமாக கண்டலேறு தண்ணீர் நமக்கு வருகிறது. என்ன காரணத்தினாலே என்றால் கண்டலேறுவிலிருந்து விவசாயப் பயன் பெறுபவர்கள் அந்தத் தண்ணீரை நமக்குத் தருவதற்கு எளிதாக ஒத்துக்கொள்ளமாட்டார்கள். அதற்கு ஆந்திர அரசாங்கம் அவர்களுக்குத் தருகிற மனநிறைவு ஏற்படுத்தும்வகையில் கிருஷ்ணா ஆற்றுத் தண்ணீர் இன்ன வழியாக கண்டலேறுவிற்கு வருகிறது. அந்தத் தண்ணீரைத் தருகிறோம் என்று தந்ததாகத்தான் எங்களுக்கு அவர்கள் தெரிவித்தார்கள். அவர்கள் தெரிவித்ததைத்தான் நாங்களும் தெரிவித்தோம். அதை ஆந்திராவைச் சேர்ந்த அந்த அமைச்சரும் தெரிவித்தார். அந்த வாய்க்கால் வழியாக வந்ததா என்று கேட்டால், வரவில்லை என்றே நான் ஒத்துக்கொள்கிறேன். வாய்க்காலே இல்லை அங்கே. ஆக அந்த 13 கிலோ மீட்டர் வாய்க்காலே இல்லாததால் அந்த வாய்க்கால் வழியாக வரவில்லை. ஆனால் வேறு வழியாக வந்தது என்பதை நாமே போய் ஆந்திர அமைச்சரிடத்திலே அந்த வழியாக வந்த தண்ணீரை ஒத்துக்கொள்ள மாட்டேன் என்று சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணா நதியிலிருந்து தண்ணீர் [illegible]

V2(1),3,'01 A01.6.2
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
223949

வேறு வழியாக வாய்க்கால் வழியாகத் தண்ணீர் வந்தாலும் அது எப்படியும் கண்டலேறுவிற்கு வந்து அங்கே இருந்துதான் தமிழ்நாட்டிற்கு வரவேண்டும். இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று main கால்வாய். இன்னொன்று by–pass வழி. எந்த வழியாகக் கிருஷ்ணா நதிநீர் வந்தாலும் அது கண்டலேறுவிற்கு வந்து அதன் பிறகுதான் தமிழ்நாடு எல்லைக்கு வந்து சேருகிறது. அதனால்தான் கண்டலேறுவிலிருந்து தண்ணீர் திறந்துவிட்டார்கள் என்று சொன்னேனே தவிர கண்டலேறுவிலிருந்து ஏதோ தண்ணீர் உற்பத்தியாகி அங்கே இருந்து வருகிறது என்று நான் சொல்லவில்லை. என்னுடைய கேள்வி, திட்டம் முடிந்துவிட்டதாக 1996–லேயே அறிவித்தார்களே, விழா நடத்தினார்களே அதன் பிறகுத் தண்ணீர்...(குறுக்கீடு) பத்திரிகைகளிலும், ஆதாரங்கள் இருக்கின்றன. எல்லாப் பத்திரிகைகளிலும் எல்லா முக்கியப் பத்திரிகைகளிலும் திட்டப் பணிகள் முடிந்துவிட்டதாகத் தி.மு.க. அரசு அன்றையதினம் அறிவித்தது. அதற்காக விழா எடுத்தார்கள். ஒரு விழா அல்ல, இரண்டு விழாக்கள் எடுத்தார்கள். ஒரு விழா 1996–ல்; இன்னொரு விழா 1997–ல் எடுக்கப்பட்டது. ஆந்திர முதலமைச்சர் வெள்ளிக் குடத்தில் இதோ கிருஷ்ணா நதிநீர் என்று தமிழக முதலமைச்சரிடம் கொடுத்தார். (மேசையைத் தட்டும் ஒலி) திட்டம் முடிந்துவிட்டதாகத்தான் அறிவித்தார்கள். ஆனால் ஒப்பந்தப்படி ஒவ்வொரு ஆண்டும் சென்னைக்கு 12 டி.எம்.சி. அடி நீர் கிடைக்க வேண்டும். அது இதுவரை கிடைக்கவில்லை. ஒட்டுமொத்தமாக இந்த 5 ஆண்டுகளை எடுத்துக் கொண்டாலும்கூட 12 டி.எம்.சி. அடி தண்ணீர் இங்கே கிடைக்கவில்லை என்பதுதான் உண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தப் பத்திரிகைச் செய்தியை நானும் படித்தேன். அதில் இன்னொரு செய்தி. அந்த விழா நடக்கும்போது திரு. துரைமுருகன் ஆனந்தக் கண்ணீர்விட்டார் என்றும்கூட செய்தியைப் படித்தேன். (மேசையைத் தட்டும் ஒலி)

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வதில் ஒன்று மாறுபடுகிறேன். கிருஷ்ணா நதித் தண்ணீரைக் கூடுமான வரையிலே சென்னைக்கு by pass–மூலம்–அவர்களே சொன்னார்கள்–முதல் முறையாக முதலமைச்சர் அவர்கள் by pass மூலமாக வந்து சேர்ந்து கண்டலேறுவிற்கு வந்து கண்டலேறுவிலிருந்துதான் கிருஷ்ணா தண்ணீர் வருகிறது என்று ஒப்புக்கொண்டதற்கு முதல் நன்றி.

நாங்கள் விழா எடுக்கிறபோது எல்லா திட்டங்களும் முடிந்துவிட்டன என்று சொல்லி எடுக்கவில்லை. அப்போதுகூட நாங்கள் சொன்னோம்.



இன்னும் வெட்ட வேண்டிய கால்வாய் பாக்கியிருக்கிறது. இருந்தாலும் நிபுலவாகு ஓடை மூலமாக தண்ணீரை இந்தப் பகுதிக்கு திருப்பிக் கொண்டு வந்து கொடுத்திருக்கிறோம் என்று சொன்னோமே தவிர எல்லாம் முடிந்துவிட்டது என்று சொல்லவில்லை என்பதை நான் முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாக்கியிருக்கும்போது விழாவை நடத்தக் கூடாது திரு. துரைமுருகன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீர் கொண்டு வந்து கொடுத்திருக்கிறோம். பாக்கியிருக்கிறதல்ல. தண்ணீர் கொண்டு வந்து கொடுக்க வேண்டும். அதற்காகக் கொண்டு வந்து கொடுத்தோம். இன்னும் சொல்கிறேன், எழுதி வைத்துக் கொள்ளுங்கள், இந்தத் திட்டம் முடிவதற்கு நம்முடைய ஒரிஜினல் திட்டப்படி நடத்த வேண்டுமானால் இன்னும் ஐந்து ஆண்டு காலம், பத்து ஆண்டு காலம் ஆகும். இருந்தாலும், அதுவரையிலும் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் தண்ணீரை by pass–லே கொண்டு வந்து கொடுத்தோம்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தப்பட்ட பத்திரிகை clippings–ஐ எடுக்கச் சொல்லியிருக்கிறேன். உங்கள் அனுமதியோடு பிற்பகல் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதிலுரை அளிக்கும்போது அதை வாசித்துக் காண்பிப்பார். (மேசையைத் தட்டும் ஒலி)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய விவாதம் கிருஷ்ணாவிலிருந்து தண்ணீர் நமக்கு கிடைத்ததா; அல்லவா என்ற அடிப்படையிலேயும், தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்பதற்கும், தொடர்ந்து கிடைப்பதற்கு மேலும் என்ன செய்ய வேண்டும் என்பதற்குமே தவிர, ஏற்கெனவே ஒரு ஆண்டிலே அவர்கள் தருவதாகச் சொன்ன தண்ணீரில் நான்கில் ஒரு பங்கு வந்தது, இன்னொரு முறை ஐந்தில் ஒரு பங்கு வந்தது, இன்னொரு முறை முக்கால் பங்கு வந்தது என்பது பெரிய பிரச்சினையல்ல. இனி என்ன? சென்னை நகர மக்களிடத்திலே வாக்குகள் பெற்ற சட்டமன்ற உறுப்பினர்களிலே நானும் ஒருவன். நான் இந்த சென்னை நகரத்திலே 1944 ஆம் ஆண்டிலேயிருந்து குடியிருந்து தீரவேண்டிய நிலைமையிலே இருப்பவன். ஆகவே, குடிநீர் கிடைக்கவில்லையென்கிறபோது, தெருவுக்குத் தெரு, வீட்டுக்கு வீடு அந்த

மக்கள், எந்த ஆட்சியாக இருந்தாலும், தண்ணீர் கிடைக்காதபோது கண்ணீர்விடும் தாய்மார்கள் என்னென்ன பேசுகிறார்கள் என்பதை நான் பார்க்கிறேன். ஆகவே, அந்தக் கவலை காரணமாகத்தான் நான் சொல்கிறேன்; இந்த வேறுபாடுகள் முக்கியமல்ல என்பது என்னுடைய கருத்து. ஒருவேளை நாங்கள் பொய் சொல்லியிருந்தால்கூட நிறைவேறியதாகப் பொய்யே சொல்லியிருந்தால்கூட, (மேசையைத் தட்டும் ஒலி) நான் பொய்யே சொல்லியிருந்தால்கூட என்று சொல்கிறபோது அதிலே எவ்வளவு வாய்மை இருக்கிறது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற மரபுகள்படி பொய் என்ற வார்த்தையைப் பயன்படுத்தக் கூடாது என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நினைவூட்டுகிறேன்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சரோ, மற்றவர்களோ பேசுவது பற்றி நான் இந்த வார்த்தையைச் சொல்லக் கூடாது. நான் பேசியதைப் பற்றி, நான் சொல்வது உங்களுக்கேகூட மகிழ்ச்சியாக இருக்கும்; வருத்தமாக இருக்காது. எதற்காகச் சொல்கிறேன் என்றால், பயன்தான் முக்கியம். அப்போது ஆந்திர மாநில முதலமைச்சர் திரு. என்.டி. ராமாராவ் அவர்கள் காலத்திலே ஏற்பட்ட உடன்பாடு. அன்றைக்கு எம்.ஜி.ஆர். அவர்களும், பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களுமாக ஏற்படுத்திய உடன்பாடு. அதை எப்படியும் நிறைவேற்ற வேண்டும் என்பதிலேகூட, சிலர் ஆட்சி நடத்திய காலத்திலே வேகப்படுத்தவில்லை என்றெல்லாம்கூட சில விவரங்கள் உண்டு எனினும், அவை எல்லாம்கூட முக்கியமல்ல. இன்றைக்கு முக்கியம் அந்தத் திட்டத்தை முழு அளவிலே பயன்படுத்திக்கொள்ள என்ன வழிவகை செய்ய முடியுமோ அதிலே இந்த அரசு ஈடுபடுவதன் மூலமாக சென்னை நகர மக்களுடைய துயரத்தைக் குறைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இன்னொன்று. இன்றைக்கு நாடு முழுவதும் உள்ள பிரச்சினை, உலகம் முழுவதும் உள்ள பிரச்சினை, குடிநீர்ப் பிரச்சினை, தண்ணீர்ப் பிரச்சினை. நிலத்தடி நீர் மேலும் மேலும் இறங்கிப் போவதாலே ஏற்படுகிற விளைவுகள். எனவே, நாம் ஆழ்ந்து எண்ணிப் பார்ப்போமானால், தமிழ்நாட்டிலே ஒரு நீண்ட காலத் திட்டம் தொடர்ந்து நடைபெற்றால் தவிர தமிழ்நாட்டில் இன்னொரு 5, 10 ஆண்டு காலத்தில் ஏற்படக்கூடிய வறட்சிக்கு நிவாரணமே இருக்காது. அது



காவிரி தண்ணீர் நமக்கு முறையாகக் கிடைத்தால்கூட தொடரும். நாடு முழுவதும் மக்கள் நீரைப் பயன்படுத்துகிற அளவு அதிகமாகிக்கொண்டு வருகிறது. நீர்ப் பயன்பாடு அதிகமாகிக்கொண்டு வருகிறது. நிலத்தடி நீரை எடுத்துப் பயன்படுத்துகிற வாய்ப்பு பெரும்பாலோருக்கு இருக்கிறது; தேவையும்படுகிறது. பழக்கவழக்கத்தாலே நீர் அதிகம் செலவாகிறது. ஆகவே, எத்தனையோ வகைகளில் இந்த நீர்ப் பற்றாக்குறையை மாற்றுவதற்கு, ஏற்கெனவே, தி.மு.க. அரசு காலத்திலேயேகூட சில ஆலோசனைகள் வழங்கப்பட்டாலும்கூட அது தொடர்ந்து நடைபெற வேண்டிய காரியமாக இருக்கிறது. அதிலே, மழைநீர் சேமிப்பு இயக்கம் நடத்துவது என்பது மிக முக்கியமான ஒன்று என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதன் மூலமாகத் தமிழ்நாடு நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டு முகவரமைப்பு ஏற்படுத்தி 25 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கி செய்யப்படுகிற அந்தக் காரியங்களுடைய விளைவாக தமிழ்நாட்டில் ஒரு 5, 10 ஆண்டு காலத்தில் இப்போது ஏற்படுகிற இழப்புகளுடைய வேகம், இப்போது ஆண்டுதோறும் எவ்வளவு நீர் இழப்புக்கு நாம் தொடர்ந்து ஆளாகிக்கொண்டே வருகிறோமோ அது தடுக்கப்பட்டாக வேண்டும். கடலிலே போய்ச் சேருகிற அந்த நீரைத் தடுக்க வேண்டும் என்பது பொதுக் கடமை. கல்வியைப் போல, சுகாதாரத்தைப் போல, இவற்றையெல்லாம் பொதுப் பிரச்சினை என்ற முறையில் அணுகவேண்டுமென்றும் அதிக அளவில் ஒரு இயக்கமாக ஆக்கவேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 1–25*

அதேபோல, நீர் தூய்மைக்கேடு 'water pollution' உலகம் எங்கும் அதிகமாகிக்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டைப் போல, நீர் சற்று குறைவாக இருக்கிற பகுதிகளிலே அந்த 'pollution' பாதிப்பு அதிகமாக ஆகிறது. அதிலும் நண்பர் திரு. லத்தீப் அவர்கள் கூறியதுபோல வேலூர் மாவட்டத்திலே, அங்கே இருக்கிற சில தொழிற்சாலைகளின் காரணமாக மக்கள் குடிக்கிற நீரும், விவசாய நீரும் பாழ்படுகிற ஒரு நிலைமை ஏற்படுகிறது. அதுகுறித்துகூட அவர்கள் பேசுகிறபோது, எப்படியாவது அங்கேயுள்ள தொழில் அதிபர்களை அழைத்துப் பேசி அந்த 'water pollution'–ஐத் தடுக்க தோல் தொழிற்சாலைகள் காரணமாக நீர் மாசுபடுவதைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க, அந்தத் தொழில் அதிபர்களை ஊக்கப்படுத்துவதற்கு, அவர்களைச் செயல்படுத்துவதற்கு வழிகாண வேண்டுமென்று கேட்டார்கள். அது மிக முக்கியமான ஒன்று. இருக்கிற நீரும் பாழ்படுகிறபோது மக்களுடைய வாழ்க்கையிலே பாதிப்பு அதிகமாகிறது.

இன்றைக்குக்கூட, ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் அடிப்படையிலே கடலூர் பகுதியிலே இருக்கிற ஒரு கெமிக்கல் தொழிற்சாலையிலேயிருந்து வெளிப்படுகிற நீர் எவ்வளவு அதிகமான அளவுக்கு நச்சுத்தன்மை உடையதாக இருக்கிறது என்பதனுடைய விளைவை இங்கே கேள்வி நேரத்திலே கேட்டார்கள். அது ‘முழு அளவிலே கட்டுப்படுத்தப் பட்டால்தான் அந்த மக்களுடைய வாழ்க்கை நிலையில் அதிக பாதிப்பு ஏற்படாமல் அவர்களைக் காப்பாற்றலாம். ஒரு பகுதி நீர் கெட்டுப்போனால், பின்னர் மறுபகுதி நீரும் கெட்டுப்போகிற ஒரு தொடர் கதையாக இருக்கிறது. கடற்கரை ஓரத்திலே, ஒரு பகுதியிலே ஏற்படுகிற பாதிப்பு, பின்னர் உள் பகுதிக்கும் வருகிறது. எனவே, அதைத் தடுத்து நிறுத்துவதற்கு கடந்த ஆட்சியிலே கடற்கரை ஓரப் பகுதியில் அதிக அளவுக்கு முந்திரிக் காடுகள் வளர்க்கப்படுமானால் கடற்காற்றால் ஏற்படுகிற மணல் அரிப்பும் இன்னொரு பக்கம் வேறுவிதமாக நிலத்தில் ஏற்படக்கூடிய பாதிப்புகளையும் குறைக்கும் என்ற ஒரு கருத்து அடிப்படையில் கடற்கரை ஓரப் பகுதிகளிலே முந்திரிக் காடு வளர்க்கலாம் என்ற ஒரு கருத்து பேசப்பட்டது. இந்த அரசு அதையும் சேர்த்து, கருதிப்பார்த்து அதை வளர்க்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக நில உச்ச வரம்பைத் தளர்த்த வேண்டும். தளர்த்தினால்தான் முடியும் என்ற கருத்து பேசப்படுகிறது. அதற்கு ஒரு alternative measure ஏதாவது ஒரு மாற்று வழி கண்டுபிடிக்கப்பட வேண்டும். உச்ச வரம்பு என்பது ஒரு கொள்கை அடிப்படையிலே அமைந்து, தொடர்ந்து இந்த நாட்டிலே நிலைபெற்று வந்துகொண்டிருக்கிறது. அந்த உச்ச வரம்புச் சட்டத்தால் தங்களுடைய நிலத்தை இழந்தவர்களும் இருக்கிறார்கள். அடியோடு எல்லோரும் நிலத்தை இழக்காமல் இல்லை. ஒரு காலகட்டத்தில் 30 standard ஏக்கர் என்று வைத்தபோது, பலபேர் அதிலே தங்களுடைய நிலத்தை இழக்கவில்லை. ஆனால், பின்னர் 15 standard ஏக்கர் என்று வந்தபோது, பல பேர் உபரி நிலத்தை இழந்துவிட்டார்கள். இப்போது அதைத் தளர்த்தி 20, 30 standard ஏக்கர் உச்ச வரம்பு வைத்துக்கொள்ளலாம் என்று சொல்கிறபோது, அதனால் நீண்டகால கொள்கைக்கு மாறுபட்டதாகத்தான் ஆகும். இங்கே பேசிய திரு. மணி அவர்களும், மற்றும் இந்த மணி, அந்த மணி, ஆகிய அத்தனை பேரும் பேசியதுபோல, நம்முடைய மாநிலத்திலே பண்ணை விவசாயம் என்ற அடிப்படையிலே அல்ல, பண்ணை முதலாளிகளை உற்பத்தி செய்யக்கூடிய நிலைமைக்கு



ஆளாகிவிடக்கூடும் என்ற அச்சம் இருக்கிற காரணத்தினால், அந்தப் பண்ணைகளை உருவாக்கக் கூடாது. பொதுவாக-பல நேரத்தில் பண்ணைகள் என்றால் வளம் தருகிற நிலம் என்றுதான் அர்த்தம். ஆனால் நடைமுறையிலே அவர்களுடைய வளத்தைப் பெருக்கி, மற்றவர்களுடைய வளத்தைப் போக்குவதுதான் பண்ணையாக ஆகிவந்திருக்கிறது. ஆகவே, அதற்கு இடம் தராமல் இருக்க வேண்டுமென்ற அந்த உச்ச வரம்பைத் தளர்த்துவது என்ற கொள்கையைப் பற்றி தி.மு.க. சார்பாக என்னுடைய எண்ணத்தை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல கடந்த காலத்தில், நூற்றுக்கும் மேற்பட்ட உழவர் சந்தைகள் நடைபெற்றதன் காரணமாக, ஏறத்தாழ 16 கோடி ரூபாய்க்கு மேல் காய்கறிகள் நகர்ப் பகுதிகளுக்கு வந்தன. 16 கோடி ரூபாய்க்கு மேல் வந்த அந்த காய்கறிகளை நகர்ப் பகுதி மக்கள் குறைந்த விலையில், தரமான காய்கறிகளைப் பெறுவதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது. அந்த 16 கோடி ரூபாய்க்கு, 2-1/2 கோடி அல்லது 2-3/4 கோடி கிலோ காய்கறிகள், அவர்கள் அதை வணிகரிடத்தில் விற்று பெறக்கூடிய பலனைவிட அதிகப் பலனை பெறுவதற்கு விவசாயிகளுக்கும் உதவியாக இருந்தது. அந்தத் திட்டத்தை ஏதோ கலைஞர் கருணாநிதி தொடங்கிய திட்டம் என்று அலட்சியப்படுத்தும் முறையால் மெல்ல நமக்குப் பிடிக்காத குழந்தைக்குப் பால் ஊட்ட வேண்டிய நேரத்திலே தவறிவிட்டால் போதும் என்ற வகையில் அப்படியொரு நிலைமை ஏற்பட்டுவிடக்கூடாது. அதற்கு மாற்றாக, கிராமச் சந்தைகளை வளர்ப்பதற்கு வழிகாணப்படும், அதற்குரிய பணிகள் எல்லாம் செய்யப்படும், கிராமச் சந்தைகளுடைய அந்தச் சூழல் நல்ல முறையிலே அமைத்துத் தரப்படும் என்று கூறுவதை ஏற்க முடியவில்லை. கிராமச் சந்தை என்பது வேறு. கிராமச் சந்தை என்பது கிராமங்களிலே வாழ்கிற, 10, 20 கிராமங்களிலே வாழ்கிற மக்களுக்கிடையில், ஒரு கிராமத்தில் விளைந்த பொருட்களை இன்னொரு கிராமத்து மக்களுக்கும், கிராமத்து மக்களுக்கு வேண்டுமான பொருட்களை நகரிலேயிருந்து கொண்டு வந்து தருவதற்கும்தான் பெரும்பான்மையான வெள்ளிச் சந்தை, செவ்வாய்ச் சந்தை, திங்கள் சந்தை எல்லாம் பயன்பட்டுக்கொண்டிருக்கின்றன.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேச்சை நிறைவு செய்கின்றவரை பேரவையின் முன்னனுமதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**பேராசிரியர் க. அன்பழகன்:** உரையை விரைவாக முடிக்க முயற்சிக்கிறேன். உழவர் சந்தை என்பது ஒரு கட்சிக்கு இலாபகரமாக அமையும் சந்தை அல்ல. ஆட்சி, பொதுமக்களுக்கு எப்படிப்பட்ட நன்மைகளைச் செய்ய விரும்புகிறதோ, அதற்கேற்ற ஒரு வாய்ப்பு என்பதை நான் நினைவூட்டினால் அது தவறாகாது. அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்று. நான் அதிகமாக விளக்கமாகச் சொல்லா விட்டாலும்கூட இந்த நிதிநிலை அறிக்கை ஒரு பற்றாக்குறை அடிப்படையில் அமைந்திருக்கும் நிதிநிலை அறிக்கைதான். வேறு வழியே கிடையாது. ஏற்கெனவே உள்ள நிதிநிலை அறிக்கையும் பற்றாக்குறைதான். அதற்கு முன்னால் வந்ததும் பற்றாக்குறைதான். பற்றாக்குறை வளர்ந்து வருகிற வேகம் சற்று அதிகமாகிறது. ஏற்கெனவே 1991–லே 350 கோடி ரூபாய் அளவிலே இருந்த பற்றாக்குறை, இன்றைக்கு 3,500 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்திருக்கிறது என்ற புள்ளிவிவரக் கணக்கைப் பார்க்கிறபோது அந்த 300 கோடி ரூபாயாக, 350 கோடி ரூபாயாக பற்றாக்குறை இருந்தபோது வரவு–செலவினுடைய விகிதம் என்ன, இன்றைய வரவு–செலவு விகிதத்தினுடைய அளவு என்ன என்பதைப் பார்த்தோம் என்றால், அன்றைக்கு மக்களுடைய தேவைகளை நிறைவு செய்வதற்கு நாம் தொட வேண்டியிருந்த பிரச்சினைகள் என்ன, இன்றைக்குத் தொடவேண்டியிருக்கிற பிரச்சினைகள் என்ன என்பதைப் பார்க்கிறபோதோ அன்றைக்கு அவற்றுக்கான cost என்ன, இன்றைக்கு அதே காரியத்திற்கான cost அல்லது அதற்கான செலவு, முதலீடு என்ன என்பதைப் பார்க்கிறபோதோ இது அதிகமாகத்தான் அமையும் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த அரசு, ஏற்கெனவே இருந்த அரசு தன்னுடைய ஆட்சிக் காலத்தில் மின் வாரியத்திலேயும், போக்குவரத்துத் துறையிலேயும், பொது விநியோகத் திட்டத்திலேயும் அதிக இழப்பை ஏற்றுக்கொண்டு நடத்தியதன் காரணமாக, இதிலே 2000 கோடி ரூபாய், அதிலே 4000 கோடி ரூபாய், அதிலே 1500 கோடி ரூபாய் என்று இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னார்கள். இந்த இழப்பு என்பது மக்களிடத்திலே, அடித்தட்டு மக்களிடத்திலே போய்ச் சேர்ந்ததனுடைய விளைவே தவிர, இந்த இழப்பு தனிப்பட்ட முறையில் மேல்மட்டத்திலே ஏற்பட்ட இழப்பு அல்ல.

அரிசி விலை 8 ரூபாய், 9 ரூபாய் அடக்கம் ஆகிறபோது 3-1/2 ரூபாய்க்கு அந்த அரிசி தொடர்ந்து தி.மு.க. ஆட்சியிலே தரப்பட்டது



என்று சொன்னால், ஏறத்தாழ அதிலே நூற்றுக்கு 10 பேர், 15 பேர் வேண்டுமானால் வறுமைக் கோட்டிற்கு மேல் வசதியான குடும்பத்தைச் சார்ந்தவர்களாக இருக்கக்கூடும். நூற்றுக்கு 35 பேர் வறுமைக் கோட்டிலே உள்ளவர்கள் என்ற கணக்கு இருந்தாலும்கூட, அந்த 35 பேருக்கு வழங்கும் அதே சலுகைகளைப் பெற கட்டாயமாக விரும்புகிறவர்கள் நூற்றுக்கு 50 பேராக இருக்கிறார்கள்.

இந்தச் சமுதாயத்திலே பிச்சைக்காரர்களுக்குத்தான் கஞ்சி ஊற்றுவது என்று ஏற்பாடு செய்து கஞ்சி ஊற்றினால்கூட, என் சொந்தக்காரப் பையன்கூட அங்கே போய் கஞ்சி சாப்பிடுவதைத் தவறு என்று நினைக்கவில்லை. அது காலத்தினுடைய போக்கு. ஆகவே, ஏழை மக்களுக்காகத்தான் கைத்தறி வேட்டி, புடவை தருகிறோம் என்று அவர்களுக்கு என்று ஒதுக்கிக் கொடுத்தால்கூட—நான் சொன்னால் தவறாக எண்ணக் கூடாது. ஒரு பஞ்சாயத்து உறுப்பினர்கூடச் சொன்னார், இந்த வேட்டி, புடவை எங்களுக்கே கொடுக்கலாமே என்று. அது நன்றாகத்தானே உள்ளது; நாங்கள்கூட கட்டிக்கொள்ளலாமே என்று சொன்னார். ஆகவே, அது குற்றம் அல்ல; அது ஒரு நிலை. ஏழைப் பிள்ளைகளுக்காக புத்தகங்களை வாங்கி கொடுத்தால் கொஞ்சம் வசதியான வீட்டுப் பையனும் வந்து வாங்கிக் கொண்டுபோய்விடுவான். ஆகவே, அது ஒரு தொடர்கதை. அது ஒன்றும் ஒரு கட்சி ஆட்சியில் மட்டும் நடப்பது என்பதல்ல. ஆகவே, அப்படி ஒரு நிலைமை இருப்பதன் காரணமாக அடித்தட்டு மக்களுக்குச் செய்ய வேண்டிய நன்மைகளை அது சிதறாமலும், அதன் பெயரால் வேறுவிதமான fraud அல்லது ஏமாற்று வேலை அல்லது அதிலேயிருந்து சில ஊழல், ஏற்படாமல் இருப்பதற்காக எல்லோருக்குமே ஒரே விலையில் அரிசி கொடுத்துவிடலாம் என்று வழங்கியது தி.மு.க. அரசு. அதாவது நூற்றுக்கு 20 பேருக்கு அதிக விலை வைத்து விற்றிருந்தால், அதிக விலை வைத்து யாருக்குக் கொடுக்கிறோமோ அவர்கள் வாங்க மாட்டார்கள். யார் குறைந்த விலையிலே வாங்க வேண்டியவர்களோ அவர்கள் பெயரில்தான் இவர்கள் வாங்குவார்கள். ஒரு வேளை நூற்றுக்கு 80 பேருக்கு அதிக விலை; நூற்றுக்கு 20 பேருக்குத்தான் குறைந்த விலையில் என்றால் அந்த மாற்றம் நம்மால் செய்ய முடியாது. ஆகவே, இப்படி ஒரு சிக்கல் இருப்பதன் காரணமாக தி.மு.க. அரசு ஒரு பெரிய இழப்பைத் தாங்கிக்கொண்டு குறைந்த விலையிலே எல்லோருக்குமே நியாயம் கிடைக்கட்டும் என்ற எண்ணத்தோடு அந்தக் காரியத்திலே ஈடுபட்டது.

அதேபோல மின் வாரியத்திலே ஏற்பட்ட இழப்பிலே பெரும் பகுதி—நாம் அவற்றையெல்லாம் தெரிந்தவர்கள் அடிப்படையில் எல்லா

ஆதாரங்களையும் எடுத்துவைத்துப் பேசுவது அவசியம் அல்ல. அதுபற்றி understanding இருப்பதே போதும். நான் பேசி அது பத்திரிகையிலே வரவேண்டும் என்பதுகூட என்னுடைய ஆசை அல்ல.

*பிற்பகல் 1-35*

மின்சார வாரியம், இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலேதான் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கொடுப்பதை ஒரு பெரிய கடமையாக வைத்துக்கொண்டு தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது. அந்த விவசாயிகளிலே வசதியான விவசாயிகள் 100–க்கு 5 பேர், 10 பேர் இருப்பார்கள். அவர்கள் அதைத் தங்களுக்கு வசதியாகப் பயன்படுத்திக்கொள்வார்கள் என்பது வேறு. ஆனால் இந்தியாவிலேயே விவசாயத்திலே முன்னிலைக்கு வர முடியாத அளவு பின்தங்கியிருந்த தமிழகத்தில் அதற்குக் காரணம் நீர்வளக் குறைவு என்பதால் மின்சாரத்தைக் கொடுத்துத்தான் அந்தப் பின்தங்கியிருந்த நிலைமையை மாற்றினோம். ஆகவே, இலவச மின்சாரம்தான் உள்ளபடியே தமிழ்நாட்டிலே விவசாயிகளுக்குக் கற்பக விருட்சமாக, காமதேனுவாக இருந்து கொண்டிருக்கிறது. ஒருவேளை அதை அவர்கள் உணர முடியாமல்கூட இருக்கலாம். நம்முடைய நாட்டிலே நன்கொடையாகக் கொடுக்கப்படுகிற எந்தப் பொருளையும் மதித்து நாம் பழக்கப்பட்டவர்கள் அல்ல. ஆனாலும், நான் ஒரு கணக்குப் போட்டுப் பார்த்தபோது ஒரு விவசாயி, நான்கு ஏக்கர் வைத்திருக்கும் சாதாரண ஒரு விவசாயி–அவர்கள் அதிக வருமானம் உடைய, அதிக வருமானம் வரக்கூடிய நாமக்கல், திருச்செங்கோடு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் அல்ல. சற்று பின்தங்கிய வட்டாரத்திலே உள்ள அந்த விவசாயிக்கு இலவச மின்சாரத்தாலே மட்டும் அவர்களுக்கு ஒரு ஆண்டுக்கு 1500 ரூபாய் 2000 ரூபாய் மிஞ்சும். அவர்களுடைய பிள்ளைகள் படிப்பதற்கு, இலவசமாகச் செய்யப்படுகிற உதவிகளிலே மட்டும் அவர்களுக்கு 3, 4 பிள்ளைகள் இருக்குமானால் 1500 ரூபாய் மிச்சம். ஆகவே, இப்படி பல வகையிலே, அடித்தட்டிலே இருக்கிற விவசாயிகளுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, உழைப்பாளிகளுக்கு இன்னும் சொல்லப்போனால் பாடுபடுகிற இனத்திற்குத்தான் பெரும்பாலும் போய்ச் சேருகிறது; ஆகவே, அந்த இழப்பு என்பது சமுதாயத்திற்காக ஏற்றுக்கொண்ட இழப்பே தவிர வேறு அரசியல் நோக்கத்தால் ஏற்றுக்கொண்ட இழப்பு அல்ல என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

பொது விநியோகத் திட்டத்தைக் குறித்துப் பல முறை ஆய்வு நடத்தப்பட்டிருக்கிறது. இப்போதும் பொது விநியோகத் திட்டம் சீராக,



செம்மையாக நடைபெற வேண்டுமானால், ஏறத்தாழ 1.50 கோடி குடும்ப அட்டைகள் மட்டும் வழங்கவேண்டிய நிலையில் மேலும் 10 இலட்சம் அட்டைகள், 15 இலட்சம் அட்டைகள் தவறான முறையில் யாரோ பெற்று எங்கேயோ இருக்கின்றார்கள் என்ற அதுவும் தொடர் கதையாகத்தான் இருக்கிறது. நாங்களும் 3 ஆண்டுகளாகத் தொடர்ந்து ஆராய்ந்து வந்தோம். அந்த நிலையை மாற்றுவதற்குத் தகுந்த நடவடிக்கையை எடுக்க முடியுமானால் அதை நான் வரவேற்கிறேன்.

அதேபோல பொது விநியோகத் திட்டத்தையும் சீர்படுத்துவதற்கு தொடர்ந்து நாம் முயற்சிக்க வேண்டும். Hospital–லிலே மருந்து கொடுப்பதிலும் ஒவ்வொரு நோயாளியையும் பார்த்து, வேண்டிய மருந்து தரவேண்டிய நிலைமை தினமும் இருப்பதைப்போல இந்தப் பொது விநியோகத் திட்டம் என்பது ஒரு சாதாரண சங்கதி அல்ல. பொது விநியோகத் திட்டம் என்பது மிகப் பெரிய ஒரு பிரச்சினை. பொது விநியோகத் திட்டத்தைவிட complicated process உள்ளது வேறு எதுவும் இல்லை. பொது விநியோகத் திட்டத்திலே நினைத்தால் யார் வேண்டுமானாலும் கை வைத்துவிடலாம். பொது விநியோகத் திட்டத்தில் யார் வேண்டுமானாலும் தவறாகச் செயல்படலாம். அத்தனை மட்டங்களில், அத்தனைப் பணிகள் அதிலே உள்ளடங்கியிருக்கின்றன. ஆகவே, அதைச் சீர்திருத்த வேண்டும். ஏற்கெனவே விலைவாசி உயர்வு அதிகம் ஆகாமல் இருப்பதற்காக தி.மு.க. ஆட்சியிலே தலைமைச் செயலாளருடைய தலைமையில் விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டு, அது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இப்போது சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டோ அல்லது வேறு நிபுணர்களைக் கொண்டோ ஒரு குழு அமைக்கப்படுவதாகத் தெரிவித்திருக்கிறீர்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால், அதே நேரத்திலே விலைவாசி உயர்ந்து போவதைத் தடுப்பதையும் சேர்த்துக் கருதிப் பார்க்க வேண்டும். நேற்றைய தினம் இந்த அவையிலே சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் பொன்முடி அவர்கள் பேசுகின்றபோது இந்த 100 நாட்களில் எத்தனையோ பண்டங்கள் விலை ஏறியிருக்கின்றன என்று தெரிவித்தார்கள். ஒருவேளை நான் நினைக்கிறேன், ஏற்கெனவே தலைமைச் செயலாளர் தலைமையிலே போடப்பட்ட அந்தக் குழு இப்போது செயல்படுகிறதா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. இது ஏற்கெனவே உள்ள நிதிநிலை அறிக்கையிலேகூட அந்தக் குழு பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. எனவே, அதற்கு அந்தக் குழுவைச் செயல்படுத்துவதற்கும், விலைவாசி ஏறாமல் தடுப்பதற்கும் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஒருசில செய்திகளைப் படித்துக்காட்ட விரும்புகிறேன். மன்னிக்க வேண்டும். ஏன் என்றால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் எடுத்துக்கொள்ளுங்கள்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** நன்றி. ஏனென்றால், அதை எடுத்துக்காட்டாவிடில் என்னுடைய கருத்து நிறைவடையாது. நிதிநிலை அறிக்கையிலே 7–வது பாராவிலே மாநிலத்தின் வருவாய்ப் பற்றாக்குறை 1995–96 ஆம் ஆண்டில் ரூபாய் 311 கோடியாக இருந்தது. இப்போது 3922 கோடி ரூபாய் எனும் ஒரு நிலையை அடைந்துள்ளது. இதற்குக் காரணம் சம்பளங்கள், ஓய்வூதியங்கள், வட்டி செலுத்துதல், உதவித் தொகைகள் மற்றும் மானியங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய அரசின் வருவாய்ச் செலவு கடந்த 5 ஆண்டுகளில் இரட்டிப்பானதே ஆகும் என்று இருக்கிறது. இதிலே எதை நாம் கைவிட முடியும்? இந்த நான்கில், சொல்லப்பட்டிருக்கின்ற நான்கில் எதையாவது கைவிட முடியுமா? ஒருவேளை நீங்களே ஆட்சியிலே இருந்திருந்தாலும், திரு. பொன்னையன் அவர்களே–திரு. பொன்னையன் என்று பெயரைச் சொல்வதற்காக மன்னித்துக் கொள்ளுங்கள், எனினும் இளைஞர் அதனால் சொல்லிவிட்டேன்–மந்திரியாக இருந்தாலும் இதிலே எதைக் கைவிட்டுவிட்டு அவர் நிர்வாகத்தை நடத்த முடியும்? ஆகவே, தவிர்க்க முடியாமல் ஏற்பட்டுவிட்ட அந்தச் செலவுகளால்தான் செலவு இரட்டிப்பாயிற்று. மாறாக வருவாய் வரவு இந்த 5 ஆண்டுகளில் மிகவும் குறைந்துவிட்டது. அது பட்ஜெட்டிலே இருக்கிறது. ஆகவே, தவிர்க்க முடியாதது என்பதற்காக இதை எடுத்துக் காட்டுகிறேன். அதைப்போலவே இன்னொரு இடத்திலே மாநில அரசின் வருவாய் வரவில் மத்திய வரிப் பங்கு 1992–93–ல் 20 சதவிகிதமாக இருந்தது. 1999–2000–ல் 16 சதவிகிதமாக குறைந்துள்ளது. 11 ஆம் நிதிக் குழு மத்திய வரிகளில் பகிர்ந்து அளிக்கத்தக்க தொகுப்பில் இருந்து இம்மாநிலத்திற்கு சேர வேண்டிய பங்கின் சதவிகிதத்தை குறைக்குமாறு பரிந்துரை செய்ததன் மூலமாக தமிழ்நாடு போன்ற செவ்வனே செயல்படும் மாநிலத்தை உண்மையில் தண்டித்துள்ளது. இதிலேதான் திரு. பொன்னையன் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன், செவ்வனே செயல்பட்ட மாநிலம்தான் இது.

*பிற்பகல் 1-40*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளை அறிக்கையைச் சற்று ஆழமாகப் படித்தால் உண்மை என்னவென்று தெரியும். புரட்சித் தலைவி அவர்களுடைய



ஆட்சிக் காலத்தில் 1991–96–ல் செவ்வனே நடைபெற்றது. பிறகு, 1996–லிருந்து 2001 வரை தொய்வு ஏற்பட்டு பல குறைகள் இருந்தன என்பதைத்தான் அதிலே அந்த 1991–96 லிருந்து செவ்வனே நடைபெற்றதை ஒட்டித்தான் (மேசையைத் தட்டும் ஒலி) அங்கே டெல்லியிலே அந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு பிளானிங், திட்டக் குழுக் கூட்டத்திற்கு அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சென்றபோது, அவரும் இந்த அடிப்படையில் அங்கு வாதித்ததை தொடர்ந்து தமிழக அரசின் சார்பாக முறையாக நடைபெற்ற அரசுக்கு, முற்போக்காக நடைபெற்ற அரசுக்கு இழப்பு ஏற்படுத்துகிற முறை திட்டக் குழுவினுடைய முறையாக இருக்கக் கூடாது, அதை மறுபரிசிலனை செய்ய வேண்டுமென்று கடிதம் எழுதியிருக்கிறார்கள். இந்த அரசும் அதைத் தொடர்ந்து வலியுறுத்துவதிலே– இதிலே ஒன்றும்...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மன்னிக்க வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேராசிரியர் அவர்களுடைய கட்சிதான் டெல்லியை ஆளுகிறது. அப்படி இருக்கின்றபோது, மாநில சுயாட்சிக் கொள்கையுடைய நீங்கள் மைய அரசு, மாநில அரசுக்குத் தர வேண்டிய இந்த நிதி ஒதுக்கீட்டை ஏன் குறைக்கிறீர்கள் என்று வாதிட்டு இருக்க வேண்டும். போராடி இருக்க வேண்டும். எது எதற்கோ மைய அரசில் இருக்கின்ற உங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்துகிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆட்சிக்குத் தொல்லை தர பயன்படுத்துகிறீர்கள். அதற்கு மாறாக, கடந்த காலத்தில் ஆக்கபூர்வமாக, ஏழை மக்கள் வாழ்கிற தமிழகத்தில் வறுமையைப் போக்க திட்டம் திட்ட வேண்டுமென்று புரட்சித் தலைவி அவர்கள் நினைக்கிறார்கள். அந்த எண்ணத்தில் நீங்கள் ஆக்கப் பணியில் ஈடுபட்டிருப்பீர்களேயானால் உங்களை நாங்கள் பாராட்டியிருப்போம்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம், அந்த நிதிக் கமிஷன் தனி உரிமை கொண்டதாக அமைத்திருக்கிற காரணத்தினால்– Finance Commission is not controlled by the Government–அதற்கு ஒரு தனி உரிமை இருக்கிறது. அந்தக் கமிஷனிடத்திலேயே தொடர்ந்து தமிழக அரசு சார்பாக வாதிட்டிருக்கிறோம். அதைப்போல பிரதமர் இடத்திலேயும் அதைப்பற்றி எடுத்துப் பேசப்பட்டிருக்கிறது. ஒரு நியாயம் என்ற அடிப்படையில் கேட்கப்பட்டிருக்கிறது. தி.மு.க. அங்கே இருக்கிற கூட்டணியிலே

சேர்ந்துள்ள ஒரு கட்சி. நாங்கள் மட்டுமே ஆட்சி நடத்தினால்தான் தமிழ்நாட்டிற்கு வரவேண்டியதைக் கொண்டு வந்திருப்போம்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியல்ல. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருடைய இயக்கம் டெல்லியிலேயே வேறு சில நூதனமான போராட்டங்களைக் கையாண்டு இருக்கலாம். தமிழக மக்களுடைய நலனில் மட்டும்தான் உங்களுக்கு அக்கறை இருக்கிறது என்றால், மாநில சுயாட்சி, அதிக financial power to the State என்பது எல்லாம் உங்களுடைய இயக்கத்தினுடைய கொள்கையாக இருந்திருந்தால், ஒன்று தெலுங்குதேசம் போல அந்த ஆட்சி பீடத்தில் இல்லாமல் வெளியிலே இருந்துகொண்டே மிரட்டி நிதியை வாங்கிக்கொண்டு இருக்கலாம் அல்லது நாங்கள் ஆட்சியை விட்டு வெளியேறி விடுவோம், ராஜினாமா செய்து விடுவோம், நிதியைத் தரவில்லையென்றால் என்று சொல்லி மிரட்டிக்கூட வாங்கிவிடலாம். நிதிக் கமிஷன் என்பது தனிப்பட்ட முறையிலே இருந்தாலும்கூட எல்லாம் மைய அரசினுடைய கட்டுப்பாட்டிற்குள் இருப்பது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு தெரியாத ஒன்று அல்ல.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கடந்த காலத்தில் அவர்களுடைய ஆட்சி செவ்வனே செயல்பட்டது என்று குறிப்பிட்டு இருக்கிறார். ஆனால், கடந்த ஆண்டு தமிழ்நாட்டின் ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டில் மாநில அரசின் நிதிப் பங்கு 35 சதவிகிதமாக இருந்து இருக்க வேண்டும். ஆனால், அது minus 112 சதவிகிதமாக ஆகிவிட்டது. இத்தகைய வீழ்ச்சி கடந்த 3 ஆண்டு காலமாகவே நிலவி வந்துள்ளது என்று மத்திய திட்டக் குழு விமர்சனம் செய்துள்ளது. இதன் காரணமாக, தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி முந்தைய தி.மு.க. ஆட்சி காலத்தில் பெரிதும் சீர்குலைந்தது என்பது கண்கூடு.

*பிற்பகல் 1-45*

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாதம் செய்வது என்ற நோக்கத்தில் என்னுடைய பேச்சை எடுத்துக்கொள்ளக்கூடாது. அப்படியானால் மாண்புமிகு திரு. பொன்னையன் அவர்கள் சொன்ன அந்த ஆலோசனைகளைத் தேவையானபோது, அவர்களிடத்திலே நான் கேட்டுக்கொண்டு, அந்த ஆலோசனைகளைப் பயன்படுத்துவேன் என்று அவருக்குத்



தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசில் எப்படிப் பங்கேற்பது, மத்திய அரசினிடத்திலே எந்தெந்த பிரச்சினைகளுக்கு வாதாடுவது என்பதை அந்தந்தக் கட்சிகள்தான் தீர்மானிக்க வேண்டும். ஒரு வேளை போராடித்தான் தீர வேண்டுமென்றால் அந்த வாய்ப்பு இப்போது உங்களுக்கே வந்திருக்கிறது. நாங்கள்தான் போராட வேண்டுமென்பதில்லை. நீங்களும் போராடலாம். இரண்டு பேரும் அண்ணா பெயரைச் சேர்த்துதான் சொல்கிறோம். ஆகவே அது தொடர்ந்து, நம்முடைய மாநிலத்திற்கான பொது நியாயங்களுக்கு நம்முடைய கட்சி மாறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு, இந்தச் சட்டமன்றத்திலாவது பொதுவான நோக்கு அடிப்படையில் நாம் நம்முடைய கருத்தை எடுத்து வைக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதே நேரத்தில் நான் இதைச் சொல்வதற்குக் காரணம், தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டுவிட்ட, நிதிநிலை வீழ்ச்சி என்பது என்னென்ன வகையில் ஏற்பட்டது என்று இந்த அரசாங்கமும் உணர்ந்து அந்த முறையிலேதான் பல நேரங்களில் கருத்துகளைத் தெரிவித்திருக்கிறது என்பதற்காகத்தானே தவிர வேறல்ல.

இந்த அறிக்கையில் உணவு மானியத்தைப் பற்றிச் சொல்கிறபோதுகூட, அளவுக்கு அதிகமான நிதிச் சுமையை ஏற்றுக் கொண்டு, பொது விநியோகத் திட்டத்தின் வாயிலாக மாநிலத்தின் அனைத்து மக்களுக்கும் உணவுப் பாதுகாப்பு அளிக்கும் ஒரே மாநிலம் தமிழ்நாடு மட்டுமேயாகும் என்று சொல்லப்பட்டுள்ள இதுவும் கடந்த ஆண்டு நாங்கள் அதிகமாக வாங்கி வைத்த நெல்லோ, அரிசியோ அப்போது விவசாயிகளினுடைய டிமாண்டு அடிப்படையில் கட்டாயமாக எங்களுடைய நெல்லை நீங்கள் வாங்காவிட்டால் நாங்கள் நொந்து போய்விடுவோம் என்று தெரிவித்ததன் காரணமாக வாங்கப்பட்டது. பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கிறது. இப்போது வந்திருக்கிற ஒரு அறிக்கையிலேகூட பெரும்பகுதி நல்ல முறையிலே பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கிறது என்பதும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதனுடைய merits of the argument -லே நான் போக விரும்பவில்லை. அந்தப் பிரச்சினையிலேகூட தமிழ்நாட்டு மக்களுக்கு உணவுப் பாதுகாப்பு அளிப்பதிலே நாம் மிகுந்த அக்கறையோடு இருந்திருக்கிறோம் என்பதை நிதிநிலை அறிக்கை பக்கம் 43-லே தெரிவித்திருக்கிறீர்கள். அதுபோல, மறுபுறம் தமிழ்நாடு போன்று சிறப்பாகச் செயலாற்றும் மாநிலங்களுக்கு நிதிப் பகிர்வு வகையில் மத்திய அரசு உரிய நியாயம் வழங்காததால் ஏற்பட்டுள்ள நிலையையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்றும் தெரிவித்திருக்கிறீர்கள், இவற்றிலே எல்லாம் எனக்கு மாறுபாடு எதுவும் இல்லை.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். திட்டக் குழு தந்திருக்கிற ஒரு அறிவிப்பிலே தமிழ்நாடு பல வகைகளிலே பின்தங்கி இருக்கிறது என்று தெரிவித்திருப்பதாகத் தெரிவித்தார்கள். அது ஏற்கெனவே பத்திரிகையிலேகூட வந்திருக்கிறது. இந்தத் திட்டக் குழு அறிக்கை எங்கேயிருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. அவர்கள் சொன்னார்கள். ஒருவேளை அவர்களிடத்திலே பேசுகிறபோது பேசியிருப்பார்கள். இருக்கக்கூடும். எனக்கு ஒன்றும் மாறுபாடு இல்லை. அப்படிச் சொல்லவே மாட்டார்கள் என்று நான் சொல்ல மாட்டேன். ஆனால் திட்டக் குழுவேகூட சில சமயங்களில் சில மாநிலங்களைப் பற்றி புள்ளிவிவரங்களைத் தவறாகச் சொல்லிவிடுகிறார்கள். எனக்கு நிச்சயமாகத் தெரிந்த உண்மையை நான் சொல்கிறேன். ஏதோ தமிழ்நாடு மிகப் பின்தங்கிப் போய்விட்டது என்ற ஒரு கருத்தைத் திட்டக் குழுவிலே யாரேனும் சொல்லி யிருப்பார்களேயானால், இப்போது அவர்கள் தர வேண்டிய பங்குத் தொகையைக் குறைப்பதற்காகச் சொன்ன வாதமாகத்தான் இருக்க வேண்டும். ஏனென்றால் மத்திய திட்டக் குழு வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மக்கள் பற்றி வெளியிட்டுள்ள ஒரு கருத்து, இந்தியாவிலுள்ள மொத்த மக்களில் 1993–94–லே வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ளவர்கள் இந்தியா முழுவதும் 35.97 சதவிகிதம்; அதாவது 36 சதவிகிதம். தமிழ்நாடு 35.03, இங்கே 35 அங்கே 36. தற்போது 1999–2000–ல் வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மக்கள் அகில இந்திய அளவில் 26.10. தமிழ்நாடு அளவில் 21.12. இது ஏற்கெனவே பிளானிங் கமிஷனில் உள்ள ரெக்கார்டு. 26–க்கும் 21–க்கும் எவ்வளவு வேறுபாடு? அகில இந்திய ஆவ்ரேஜ் 26, தமிழ்நாட்டில் 21. ஆக, இதைப்பற்றிச் சொல்கிறபோதுகூட முதலமைச்சர் சொன்னதாக நான் ஒரு கருத்தைப் பார்த்தேன். தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிலிருந்து வெளியே வந்திருக்கிறார்களே தவிர கொஞ்சம்தான் வெளியே வந்திருக்கிறார்கள். முழுவதும் வெளியே வரவில்லை. Level of rising அந்த வறுமைக் கோட்டிற்கு மேற்பட்டு வந்திருப்பது ஓரளவுதான். முழுமையாக வெளிவந்ததாகச் சரியாகக் கருத முடியாது. அப்படி அவர்கள் சொல்வது உண்மையாக இருக்குமானால் இலவச வேட்டி, புடவை எல்லாம் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு மட்டும் கொடுப்பது போதுமானதாகாது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த below poverty line என்பதற்கு கடைபிடிக்கின்ற சில முறைகள் மாநிலத்திற்கும் மைய அரசுக்கும் மாறுபட்டு இருக்கிறது.



மாநில அரசினுடைய கணக்குப்படி 30 சதவிகிதத்திற்கு மேல் வறுமைக் கோட்டினுடைய எல்லைக்குக் கீழே வாழ்கிற ஏழையெளிய மக்கள் தமிழகத்தில் இருக்கிறார்கள். மைய அரசு மேற்கொண்டிருக்கிற அணுகுமுறை, Caloric intake என்று சொல்லி கார்போஹைடிரேட், மாவுச் சத்து என்ன உண்ணுகிறோமோ அதை ஒரு கணக்கில் எடுத்துக்கொண்டு, அந்த அடிப்படையில் தமிழகத்தைப் பொறுத்தவரையில் கஞ்சியைக் குடித்துக்கொண்டிருக்கிறார்கள். இரவிலே சாதம் செய்து காலையிலே அந்தக் கஞ்சியைக் குடித்து, மதியத்திலே கஞ்சியைக் குடித்து, Rice or Ragi or Millet எதுவாக இருந்தாலும் Carbohydrate content is more than 85 to 90%. அதை வைத்துக்கொண்டு தமிழகம் போன்ற பகுதிகளில் வாழ்கிற மக்கள் வறுமைக் கோட்டின் எல்லைக்குக் கீழே இருக்கிறார்கள் என்றால் பட்டி தொட்டிகளிலே வாழ்கிற ஏழையெளிய மக்கள், தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் உழைக்கும் வர்க்கம் எல்லாம் 3 வேளை உணவுகூட உண்ண முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆனால் வடபுலத்தில் அப்படியல்ல. அங்கே சப்பாத்தி சாப்பிடுகிறார்கள். Millet சாப்பிடுகிறார்கள். பாசிப் பயறை முளை கட்டி சாப்பிடுகிறார்கள். சாதாரண மக்கள், பாட்டாளி மக்கள் இருக்கின்ற பகுதிகளில்கூட இப்படி ஒரு நிலை இருக்கிறது. They are taking nutritional food. எனவே, அவர்கள் கடைப்பிடிக்கின்ற அணுகுமுறையே ஒரு தவறான முறை. 21 சதவிகிதம் என்பதே ஒரு தவறான அணுகுமுறை என்று நான் இந்த அவைக்குக் கூற விரும்புகிறேன்.

பிற்பகல் 1-50

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் திரு. பொன்னையன் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதுதான் உண்மை. அந்த நிலைமையிலேயும் தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுடைய எண்ணிக்கை குறைந்து வந்திருக்கிறது என்ற புள்ளிவிவரத்தை மறுக்க முடியாது. அதிலே ஏதாவது வித்தியாசம் இருந்தாலும், அகில இந்திய அளவைவிட இங்கே குறைந்திருக்கிறது. இது ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டு சொன்ன ஒரு கருத்துதான். ஆனால், அந்த அளவு போதாது என்ற கருத்து இன்னொரு கருத்து. மத்திய அரசின் அந்த மீட்டரை வைத்துப் பார்க்கக் கூடாது, நம்முடைய மீட்டரை வைத்துப் பார்க்க வேண்டும் என்பது இன்னொரு கருத்து. எனக்கு அதிலே ஒன்றும் மாறுபாடு இல்லை. எப்படியும், மக்கள் நிலையிலே அவர்கள் அடைய வேண்டிய பலனை அடைந்தால், அதுவரையில் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

அதேபோல, திட்டக் குழுத் துணைத் தலைவர், திரு. கே.சி. பந்த் அவர்கள் திட்டக் குழுக் கூட்டத்திலே உரையாற்றுகின்றபோது சொல்லிய கருத்துகள் பத்திரிகைகளில் வந்திருக்கிறது. தினத்தந்தியில் வந்திருக்கிறது. கல்வி அறிவில் தமிழ்நாடு அண்மையில் பின்தங்கி விட்டது என்று முதல்வர் குறிப்பிட்டது பற்றி விளக்கவே கூறுகிறேன். "During the D.M.K. regime, 39.19% of girls dropped out of schools after primary education. C.M. pointed out, the D.M.K. Government also did not fill up the teachers' vacancies and hence, the quality of education fell drastically." இது முதலமைச்சர் அவர்கள் சொன்ன கருத்து. அதாவது, பிளானிங் கமிஷனிலிருந்து அவர்கள் தெரிந்து சொன்னதாகும். எனக்குத் தெரிந்து இந்த 5 ஆண்டு காலத்தில் கல்வித் துறையில் வளர்ச்சி ஏற்பட்டதற்கான எல்லாப் புள்ளிவிவரங்களும் என்னிடத்தில் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், அன்றைக்கு இருந்த ஐ.ஏ.எஸ். அதிகாரியான துறைச் செயலாளரை அழைத்து இந்தப் புள்ளிவிவரங்களைக் கேட்டாலும் கிடைக்கும். அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னதுபோல, பிளானிங் கமிஷனில் என்ன மீட்டர் வைத்திருக்கிறார்கள் என்று எனக்கும் தெரியாது. ஆனால், அவர்கள் சொன்ன அந்த விவரம் இருக்கிறதே, primary education முடித்து எஸ்.எஸ்.எல்.சி. படிப்பில் சேரும் முன் இடையில் விட்டுவிடுபவர்களுடைய எண்ணிக்கை தமிழ்நாட்டில் அதிகமாகிவிட்டது என்பது சரியல்ல. தமிழ்நாட்டில் அதிகமாகவில்லை, குறைந்து வந்திருக்கிறது. அதாவது 9, 10, 11–வது வயதில் படிப்பைத் தொடர்ந்து பிறகு 14, 15 வயதுக்கு முன்னர், 9th standard வரை அவர்கள் வைத்திருக்கிறார்கள். நாம் புள்ளிவிவரத்தில் தெளிவுக்காக எஸ்.எஸ்.எல்.சி. என்று வைத்திருக்கிறோம். அதை வைத்துப் பார்க்கிறபோது இந்த Drop–out–within the age between 11 and 15 என்ற வகையில் எவ்வளவு என்று பார்த்தால் 1991–92–ல் 50 விழுக்காடு, அடுத்தடுத்த ஆண்டுகளில் முறையே 52, 51, 52, 51, 1996–97–ல் 51, 1997–98–ல் 49, 1998–99–ல் 42, 1999–2000–ல் 41 என்று விழுக்காடு குறைந்து வந்திருக்கிறது. இது இப்போது நான் தயார் செய்தது அல்ல. இது தொடர்ந்து ஆண்டுதோறும் வருகின்ற கல்வி மானியக் குறிப்பு. இந்த ஆண்டும் 2001–2002–க்கும் குறிப்பு வந்திருக்கிறது. அதிலேயும் இருக்கிறது. அதனால்தான் திரு. கே.சி. பந்த் அவர்கள் சொன்னார்கள், கல்வி அறிவில் தமிழகம் கடந்த 1991–ஆம் ஆண்டு 63.7 சதவிகிதம் எழுத்தறிவு வளர்ச்சி கண்டிருந்தது, 2000–2001 ஆம் ஆண்டில் அது 73.47 சதவிகிதமாக உயர்ந்து இருக்கிறது என்று இவ்வாறு திரு. கே.சி. பந்த் தெரிவித்துள்ளார்கள். வேண்டுமென்றால் எழுதிக் கேட்டுக்கொள்ளுங்கள். ஏன் சொன்னார் என்று எனக்குத் தெரியாது.



அவருக்கு என்ன புள்ளிவிவரங்கள் கிடைத்தனவோ தெரியாது. ஆனால் வீழ்ச்சியடையவில்லை என்பது எனக்குத் தெரியும்.

அதேபோல, முதலமைச்சர் அவர்கள் சொன்னதாக பத்திரிகையில் வந்திருக்கிற செய்தி, அது எவ்வளவு உண்மை என்று தெரியாது. ஆசிரியர்கள் நியமனம் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடைபெறாத காரணத்தால் வீழ்ச்சி என்ற செய்தி. கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்ற 5 ஆண்டு காலத்தில் இருந்து மொத்தம் அனைத்துப் பிரிவு ஆசிரியர்களையும் சேர்த்து மொத்தமாக 9946 பேர் நியமிக்கப்பட்டார்கள். ஏன் நியமிக்க முடியவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் தம்பிதுரை அவர்கள் காரணம் சொன்னார்கள். அது வேறு. அடுத்த 5 ஆண்டு காலத்தில் தி.மு.க. ஆட்சியிலும் நீதிமன்றத் தடை எல்லாம் பல முறை வந்தது. அதற்கெல்லாம் விளக்கங்களை அந்தத் துறைச் செயலாளரைக் கேட்டால் அந்தந்தத் தடைகளைப்பற்றிச் சொல்லுவார். இருந்தும் 56,155 ஆசிரியர்களை அனைத்துப் பிரிவுமாக கல்லூரி ஆசிரியர்கள் உட்பட நியமிக்கப்பட்டார்கள். (குறுக்கீடு) நான் சொல்வது fact தானே?

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, fact இருக்கலாம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லும்போது 1991–96–ல் குறைவாகத்தான் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். குறைவாக நியமித்தது உண்மைதான். ஆனால், அதற்கு என்ன காரணம் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்த நேரத்தில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோது, கோர்ட்டுக்குப் போய் நின்றது. ஆனால், 1996–ல் இதுபோல் வழக்குகள் இருந்தும் அதிகமாக நியமித்தோம் என்ற ஒரு கருத்தைச் சொல்ல வருகிறார். அதை ஏற்றுக்கொள்ள முடியாது. காரணம், அந்த நேரத்தில் பல்வேறு நிதி உதவிகள் எல்லாம் பெற்றிருக்கிறார்கள். அதன் காரணமாக, கல்லூரி ஆசிரியர்களையும் சேர்த்து சொல்கிறார்கள். நாங்கள் 9000 பேர்களை நியமிப்போம் என்று சொல்வது, இடைநிலைப் பள்ளி ஆசிரியர்கள், பி.டி. அசிஸ்டன்ட்ஸ். ஆனால், கல்லூரி ஆசிரியர்களைப் பற்றிய புள்ளிவிவரத்தை நாங்கள் இன்னும் எடுக்கவில்லை. அதை எடுத்தால் இன்னும் அதிகமாக வரும்.

பிற்பகல் 1-55

**பேராசிரியர் க. அன்பழகன்:** இடைநிலை ஆசிரியர்கள் மட்டும் என்று சொன்னால்கூட 45,000 பேர் நியமனம் பெற்றனர். ஆக. (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தரைவர் அவர்களே, 3 மாதங்களிலே இன்னும் 10,000 பேரை நியமிக்கப் போகிறோம். அதற்கு வந்திருக்கிறது. 5,000 பேரை நியமிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்துள்ளோம். ஆகவே, இதை ஒரு பெரிய...

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காக திரு. தம்பிதுரை அவர்களுடைய திறமையை, ஆற்றலை, முயற்சியைப் பாராட்டுகிறேன். நல்ல வேளையாக நியமித்தீர்கள், அதற்காகப் பாராட்டுகிறேன். மாண்புமிகு அமைச்சர் திரு. தம்பிதுரை பேர் வாங்கினால், அன்பழகன் பேர் ஒன்றும் நாட்டிலே மறைந்து போகாது. ஆகவே, உங்களுடைய முயற்சியைப் பாராட்டுகிறேன். அது வேறு. நான் சொல்வது, இடையிலே ஏற்பட்ட வீழ்ச்சிக்குக் காரணம், தி.மு.க. ஆட்சியின் செயல்பாடின்மை என்று காட்டுகிற முறையில், திட்டக் குழுவிலேயிருந்து ஒரு கருத்து கூறப்பட்டிருந்தால் நான் அறிந்த காரணத்தினால், அதற்கு மறுப்பு சொல்லவேண்டிய அவசியத்தினால் இதைச் சொன்னேனே தவிர வேறு ஒன்றும் இல்லை.

இன்னும்கூட, யாரும் மறுக்க முடியாத அளவிற்கு ஒரு செய்தியை நான் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். 10–வது தேர்வு எழுதிய மாணவிகள்–ஏனென்றால், 9–வது தேர்வு வரைக்கும் அந்தக் கணக்கிலே வருகிறது. 10–வது தேர்வு எழுதியவர்கள் தொகை திட்டவட்டமாக உள்ளதால் அந்த எண்ணிக்கையை யாரும் தவறாக மாற்றிச் சொல்ல முடியாது–அந்த மாணவிகளுடைய எண்ணிக்கை, 1996–ல் 2,15,020 மாணவிகள் மட்டும், மாணவர்கள் வேறு, 1997–ல் 2,20,474, 1998–ல் 2,30,000, 1999–ல் 2,45,000, 2000–ல் 2,72,000. ஆகவே, அந்த விவரங்களால் regular progress in the educational field இருந்தது தெளிவாகும். ஆகவே, இதெல்லாம் திட்டக் குழுவிற்கு ஒருவேளை தெரியாத காரணத்தால் நம்முடைய மாநிலத்திற்குத் தரக்கூடிய நிதியை, அவர்கள் குறைத்து வழங்க வேண்டிய நிலைமை இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் நான் இந்த வாதத்தை எடுத்து வைத்தேன். நடைமுறையில், கல்வித் துறையிலே ஆயிரம் கடமை ஆற்ற வேண்டியிருக்கிறது. இருந்தாலும்கூட, கடந்த 5 ஆண்டு காலத்தில் தொய்வில்லை என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொண்டு, இன்னும் பல கருத்துகளை நான் சொல்லலாம் என்றாலும்கூட, அவற்றைச் சொல்லி உங்களுடைய நேரத்தை நான் எடுத்துக்கொள்ள விரும்பாத காரணத்தால், தரிசு நிலத்தைப் பற்றி நான் கருதுவதை மற்றொரு முறை பேசலாம் என்று கருதி, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன், வணக்கம்.



## 6. அறிவிப்பு

### சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாலை சட்டமன்றப் பேரவைக் கூட்டம் நடைபெறவிருப்பதால், மாலை 4–30 மணியளவில் சட்டமன்றப் பேரவை மண்டபத்தை ஒட்டியுள்ள பகுதியில், உறுப்பினர்களுக்கு, குறிப்பாக, திரு. துரைமுருகன் அவர்களுக்குச் சிற்றுண்டி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் பிற்பகல் 4–30 மணிக்குக் கூடும். வணக்கம்.*

*பின்னர், பேரவை பிற்பகல் 1–57 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

*பிற்பகல் 4-30*

*பிற்பகல் 4–30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.*

## 5. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2001–2002, பொது விவாதம்–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நிதிநிலை அறிக்கைமீது விவாதம், மாண்புமிகு நிதியமைச்சர் பதிலுரை.*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001–2002 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மற்றும் மாநில அரசின் நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கைமீது கடந்த 5 நாட்களாக நடந்த விவாதத்தில் 42 உறுப்பினர்கள் கலந்துகொண்டு தங்களது மேலான கருத்துகளை எடுத்து இயம்பியிருக்கின்றார்கள். இந்தக் கருத்துகளுக்கு என்னுடைய விளக்கத்தை அளிப்பதற்கு முன்னால், எனக்கு இந்த அரிய வாய்ப்பினை நல்கிய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது உளங்கனிந்த நன்றியினை உரித்தாக்குகின்றேன்.

தமிழகத்தினுடைய முதலமைச்சராகும் தகுதி புரட்சித் தலைவர் அவர்களுடைய வாரிசாகவும், ஏழைகளினுடைய பாதுகாவலராகவும் விளங்குகிற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு மட்டுமே உண்டு

(மேசையைத் தட்டும் ஒலி) என்ற மகத்தான தீர்ப்பினை 2001 ஆம் ஆண்டு மே திங்களில் நடைபெற்ற சட்டமன்றப் பேரவைத் தேர்தலில் மக்கள் வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சூழ்ச்சிகளையும், உண்மைக்கு மாறான பிரச்சாரங்களையும் முறியடித்து, தொலைநோக்கு சிந்தனை நிறைந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களைத் தமிழகத்தின் முதலமைச்சராக பாசமுடன் தேர்ந்தெடுத்துள்ள தமிழக மக்களுக்கு என் உளங்கனிந்த நன்றியினை உரித்தாக்குகின்றேன். தமிழக மக்களுடைய தாயாகவும், ஒளிவிளக்காகவும் விளங்குகின்ற புரட்சித் தலைவி அவர்களின் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு, தனக்கு அளிக்கப்பட்டுள்ள அரிய பொறுப்புகள் என்னென்ன என்பதனை உணர்ந்து, கருத்தோடு அவற்றை நடைமுறைப்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்ற உறுதியினை இந்த அவைக்கு நான் அளிக்கின்றேன்.

முதற்கண், வெள்ளை அறிக்கை பற்றி ஒருசில சுருக்கமான கருத்துகளை எடுத்தியம்ப விழைகின்றேன். Fiscal Deficit என்று கூறப் படுகின்ற மாநில அரசினுடைய மொத்த நிதிப் பற்றாக்குறை, 1991–92 ஆம் ஆண்டில் 1375 கோடி ரூபாயாக இருந்தது. சிறந்த நிதி நிர்வாக நடவடிக்கைகளை டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் நடைமுறைப்படுத்தியதன் காரணத்தால், இது 1995–96–வாக்கில் 1255 கோடி ரூபாயாகக் குறைந்தது. Fiscal Deficit எனப்படும் இந்த நிதிப் பற்றாக்குறை என்பது, மாநிலத்தில் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் அரசு வாங்குகிற மொத்தக் கடனைக் குறிப்பதாகும். ஆகவே, 1255 கோடி ரூபாயில் இருந்து, கடன் சுமை கடந்த 4 ஆண்டு கால தி.மு.க. ஆட்சியில் அரசு இயந்திரத்திற்கு 5782 கோடியாக அவர்களது நிர்வாக அணுகு முறைகளினால் அதிகரித்தது. கடந்த 4 ஆண்டு காலத்தில் மட்டும் மொத்தம் 4626 கோடி ரூபாய் கடன் சுமை அரசுக்கு ஏற்பட்டது. Revenue Deficit எனச் சொல்லப்படும் வருவாய் பற்றாக்குறை, வருவாய்க் கணக்கிலான வரவுகளுக்கும், வருவாய்க் கணக்கிலான செலவுகளுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை, அந்த வித்தியாச விகிதத்தைக் குறிக்கின்றது. Revenue Deficit is the difference between revenue receipts and revenue expenditure. இப்பற்றாக்குறை 1991 ஆம் ஆண்டில் 553 கோடி ரூபாயாக இருந்தது.

*பிற்பகல் 4—35*

டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் சரிய பொருளாதார அணுகுமுறைகள் மேற்கொள்ளப்பட்ட காரணத்தால் இது படிப்படியாக குறைக்கப்பட்டு 1995–96 ஆவது ஆண்டில் 311 கோடி ரூபாய்



என்ற நிலைக்கு குறைக்கப்பட்டது. ஆனால், தி.மு.க.–வினுடைய கடந்த 5 ஆண்டு கால ஆட்சியில் இந்த நிலை மிகவும் மோசமான நிலையை அடைந்து, 2000–2001–ல் 3922 கோடி ரூபாயாக அதிகரித்து, அதாவது 12 மடங்கு இது அதிகரித்துவிட்டது. 1991–96 வரை வருவாய் கணக்கிலான வரவுகள் அதாவது Growth of Revenue Receipts என்பது 16.2 சதவிகிதமாக இருந்தது. ஆனால், கடந்த 5 ஆண்டு காலத்தில் Growth of Revenue Receipts–ஐ பொறுத்தவரைக்கும் 11.7 சதவிகிதமாக குறைந்தது. ஆனால், அதற்கான செலவினங்கள் குறைக்கப்படவில்லை. 1991–92 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் Development Expenditure என்று சொல்லப்படுகின்ற வளர்ச்சிப் பணிகளுக்காக மட்டும் 77.9 சதவிகிதம் செலவிடப்பட்டது. ஆனால், 2000–2001–ல் இது 57.8 சதவிகிதமாக குறைக்கப்பட்டது. 1995–96 ஆம் ஆண்டு இறுதியில் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சி பதவி விலகியபோது அரசிடம் ரொக்கமாக, இருப்பாக இருந்த பணம் 649 கோடி ரூபாய் ஆகும். ஆனால், கடந்த 5 ஆண்டு காலத்தில் தவறான பொருளாதார அணுகுமுறைகள் மேற்கொள்ளப்பட்ட காரணத்தால் இந்த 649 கோடி ரூபாய் மொத்த ரொக்க இருப்பும் முற்றிலுமாக கரைக்கப்பட்டுவிட்டது. அதுமட்டுமல்லாமல், 2000–2001 ஆம் ஆண்டு தொடக்கத்தில் இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து 242 கோடி ரூபாய் அன்றாடச் செலவுக்கே கடன் வாங்க வேண்டிய ஒரு அவல நிலையும் உருவாகிவிட்டது. இதுமாத்திரமல்லாமல் Highways, P.W.D., T.W.A.D. Board போன்ற பலதரப்பட்ட அரசு நிறுவனங்களில் ஒப்பந்தம் எடுத்து பணிகளை முடித்துவிட்டு, அவர்கள் கைக்காசுகளைப் போட்டு பணிகளை முடித்துவிட்டு, பணம் பெறாமல் இருக்கின்ற காண்ட்ராக்ட்காரர்களுக்கு மட்டும் கிட்டத்தட்ட ரூ.700 கோடிக்கு மேல் கொடுக்க வேண்டிய அளவிற்கு அந்தப் பாக்கிக் கடனையும் கடந்த கால ஆட்சிப் பொறுப்பிலிருந்து நீங்கியபோது வைத்துவிட்டுச் சென்று விட்டது. அண்மைக் காலங்களில் மாநில அரசு செலுத்த வேண்டிய கடன் வெகுவாக அதிகரித்துள்ளது. தற்போது மாநில கணக்காயர் அனுப்பியுள்ள அறிக்கையின்படி 31–3–2001 அன்று நமது மாநிலத்திற்கு 29 ஆயிரத்து 8 கோடி ரூபாய் கடன் சுமை உள்ளது. அதுமட்டுமல்ல, இதற்கு வட்டி மட்டும் கிட்டத்தட்ட 3003 கோடி ரூபாய் கட்ட வேண்டிய நிலையிலே நாம் இருக்கிறோம். இத்தகைய முறையற்ற அணுகுமுறை காரணமாக வளர்ச்சிப் பணிகளுக்கு செலவிடப்படவேண்டிய நிதியைச் செலவிடாமல் உற்பத்தி சாரா வருமானச் செலவு என்று சொல்கின்ற non–productive revenue expenditure என்ற வகைக்குப் பெரிதுமாக ஒதுக்கிவிட்ட காரணத்தாலும் இந்த நிலை உருவானது. சென்ற ஆண்டில் capital

expenditure என்னும் மூலதனச் செலவு அரசினுடைய மொத்தச்
செலவிலே 6 சதவிகிதம் மட்டுமே இருந்தது. மூலதனச் செலவுகள்
அனைத்துமே, கடன் வாங்கியே செய்யப்படுகின்றன என்ற நிலையும்
உருவாகியிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் கான்ட்ராக்ட்காரர்களுக்கு தர
வேண்டிய பாக்கிப் பணத்தைக்கூட unpaid bills உரிய காலத்திலே
தரப்படவில்லை என்ற ஒரு நிலையும் அரசுக்கு ஏற்பட்டது. மாண்புமிகு
உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் பேசுகின்றபோதுகூட, மாண்புமிகு
திரு. ஜி.கே. மணி அவர்கள் எடுத்துச் சொன்னதை குறிப்பிட்டுக்காட்டி
மூலதனச் செலவே அதிகம் என்ற நிலை இருந்ததோ என்னவோ என்ற
ஒரு விவாதத்தை எழுப்பினார்கள். அதுகுறித்து ஏற்கெனவே நான்
சொன்னேன். 1992-93 ஆம் ஆண்டிலும், 2000-2001 ஆம் ஆண்டிலும்
உள்ள அந்த Fiscal Deficit நிலையை நான் எடுத்துச் சொல்கின்றபோது
உங்களுக்கு அதில் விளக்கம் கிடைக்கும் என எண்ணுகிறேன். Fiscal
Deficit 2000-2001-ல் 5781 கோடி ரூபாய். அதிலே, 1859 கோடி ரூபாய்
மட்டுமே capital expenditure என்ற அளவிற்கு ஒதுக்கப்பட்டிருந்தது.
அதுவும் முற்றிலும் முழுக்க, முழுக்க from borrowings only. கடன் வாங்கியே
அது ஒதுக்கப்பட்டது.

பிற்பகல் 4-40

அதேபோல, 1999-ல் 5382 கோடி ரூபாய் என்று மொத்த பற்றாக்குறை
இருக்கின்றபோது 982 கோடி ரூபாய் மட்டுமே capital expenditure-க்கு
ஒதுக்கப்பட்டது. முற்றிலும் கடன் என்ற நிலையிலேயே அது
ஒதுக்கப்பட்டது. ஆனால், 1995-96-ல் revenue deficit வெறுமனே 312
கோடி என்று இருந்தபோது capital expenditure என்ற அளவில் மூலதன
செலவு 944 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. Revenue Deficit மிகக்
குறைவாக இருந்தபோதும் 1341 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது.
அதைப்போலவே, 1994-95-ல் 414 கோடி ரூபாய் revenue deficit என்ற
நிலையிலே 1080 கோடி ரூபாய் capital expenditure-க்காக ஒதுக்கப்பட்டது.
இதை நான் கோடிட்டுக் காட்டுவதற்குக் காரணம் in a developing economy
புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ஒரு
பொருளாதாரம் ஆக்கப்பூர்வமான பொருளாதாரமாக ஒட்டுமொத்தப்
பொருளாதார வளர்ச்சியை அனைத்து மட்டத்திலும் உருவாக்கக்கூடிய
ஒரு பொருளாதாரமாக வளர வேண்டும் என்றால் we should concentrate
more for capital expenditure. Revenue deficit-ஐக் குறைக்க வேண்டும். Capital
expenditure-ஐ அதிகப்படுத்த வேண்டும், அதற்குள்ள வருவாய்
வழிவகைகளை நாம் கண்டறிய வேண்டும். அந்த அணுகுமுறையை அந்த



சிரிய பொருளாதார அணுகுமுறையைப் புரட்சித் தலைவி ஆட்சிக்
காலத்தில் மேற்கொண்ட காரணத்தால்தான் capital expenditure were more
between 1991 and 1996 என்ற நிலை இருந்தது. அதற்கு மாறாக, capital
expenditure-ஐவிட revenue expenditure-க்கு அதிக முக்கியத்துவம் காட்டி,
வளர்ச்சித் திட்டங்களைப் புறக்கணித்த காரணத்தினால்தான், கடந்த 5
ஆண்டு கால ஆட்சியிலே, இந்தப் பொருளாதாரத் தொய்வு ஏற்பட்டது
என்பதை மாண்புமிகு உறுப்பினர் அன்புச் சகோதரர் திரு. ஜி.கே. மணி
அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு திரு. சி பொன்னையன்:** நான் முடித்துவிடுகிறேன்.
I don't want to yield. இந்த நிலை ஏற்படுவதற்கு, முன்பு பொறுப்பில்
இருந்த ஆட்சியாளர்கள், பொருளாதார நிர்வாகத்தில்' காட்டிய
மெத்தனமும், நிதி ஆதாரங்களைப் பெருக்குவதில் அவர்களிடம்
காணப்பட்ட அக்கறையின்மையுமே காரணம் என்று தெரிய வருகிறது.
அவர்களுக்கு அத்தகைய அக்கறை உணர்வு இருந்திருக்குமேயானால்
non-productive revenue expenditure எனும் உற்பத்தி சாராப் பணிகளுக்கு
வருவாய்ச் செலவுகளைக் கட்டாயம் அவர்கள் குறைத்திருக்க வேண்டிய
அக்கறையைச் செலுத்தியிருப்பார்கள். வருவாய் வரவுகளில் அவர்கள்
அதிகக் கவனம் செலுத்தியிருக்க வேண்டும். இதை நான் கூறுகின்றபோது
accountability and answerability while implementing finance schemes என்ற
முறையில் கடந்த காலத்தில் ஆட்சியிலே அவர்கள் கடைபிடிக்கவில்லை.
ஒரு கான்ட்ராக்டருக்கு ஒரு தொகை ஒதுக்கப்படுகிறது; ஒரு நீர்ப்பாசனத்
திட்டத்திற்கு ஒரு தொகை ஒதுக்கப்படுகிறது. அப்படி ஆக்கப்பூர்வமான
வளர்ச்சித் திட்டங்களுக்குத் தொகை ஒதுக்கப்படுகின்றபோது, அந்த
நிர்வாகத்தைப் பொறுத்தவரைக்கும் cost management, finance manage-
ment, materials management and inventory management ஆகியவற்றை
ஆக்கப்பூர்வமாக, உன்னிப்பாகக் கவனிக்கின்றபோதுதான் அந்தத் திட்டம்
குறுகிய காலத்திலே ஈடேற முடியும். Cost over-run ஆகாமல், குறிப்பிட்ட
காலத்திலே அது முடிக்கப்பட்டால்தான் திட்டத்தின் பலன் மக்களுக்குச்
சென்று சேரும். அதே நேரத்தில், உங்களுக்குத் தெரியும்-ஒரு திட்டத்தை
இப்போது தீட்டுகிறார்கள். உடனே ஓராண்டிலே முடியக்கூடிய அந்தத்
திட்டத்தை, 3 ஆண்டுகள், 4 ஆண்டுகள் என நீட்டிக்கிறார்கள். ஏன்
அந்தத் திட்டம் நீட்டிக்கப்படுகிறது என்ற ஆய்வினை அரசினுடைய
மேல்மட்டத்திலிருந்து, with will power-political will power, அரசு இயந்திரம்
அதைக் கண்காணித்தால்தான், குறிப்பிட்ட காலத்தில் ஒரு திட்டம்

முடிக்கப்பட வேண்டும் என்று ஒரு ஆணையிட்டு, அதை மானிட்டர் செய்தால்தான் அந்தத் திட்டம் காலத்தில் ஈடேறும். இல்லையென்றால், cost escalation என்ற முறையிலே, விதியிலே இருக்கின்ற சந்து பொந்துகளைப் பயன்படுத்தி, ஆண்டுக்கு 10% cost escalation என்று போட்டு, அந்த cost–ஐ அதனுடைய ஒட்டுமொத்த திட்டச் செலவை அதிகப்படுத்திவிடுகிறார்கள். கடந்த 4 ஆண்டு காலமாக நாட்டிலே இருக்கிற நடப்பு நமக்குத் தெரியும். There has been acute economic recession in the country. There is surplus production and lesser demand for most of the inputs என்ற நிலை இருக்கிற காரணத்தால், அப்படி அதிகப்படியான பொருள்கள் உற்பத்தியாகி, தொழிற்சாலைகளில் உற்பத்தியாகின்ற பொருள்கள் எல்லாம் விற்காத நிலைகூட ஏற்பட்டு, பல பொருள்களுக்கு விலைச் சரிவு ஏற்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும்கூட, ஆண்டுக்கு ஆண்டு 10 சதவிகிதம், அதிலே விலை உயர்வு, விலை உயர்வு என்று காட்டி அந்த முறையிலே திட்டச் செலவுகள், வீண் செலவுகளாக அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. கடந்த 5 ஆண்டு கால ஆட்சியில் அதைக் கண்காணிக்கத் தவறியதும்கூட அந்தத் திட்டச் செலவுகளினுடைய மிகைமைக்கு ஒரு முக்கியக் காரணமாகும்.

*பிற்பகல் 4-45*

Revenue expenditure மட்டுமல்ல, 400 கோடி ரூபாய்க்குள்ள திட்டங்களில் காலதாமதத்தின் காரணமாகவோ அல்லது cost management சரியாக இல்லாத காரணத்தாலோ capital expenditure–லேயே அதிகமாகின்றபோது, அந்த capital expenditure is a non–productive investment என்ற முறையிலே, அது மக்களுடைய வரிப் பணத்தைப் பாழாக்குகின்ற ஒரு அணுகுமுறையாகப் போய்விடுகிறது. கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் அதுவும் இந்தப் பொருளாதாரச் சரிவுகளுக்கு ஒரு காரணமாக அமைந்திருக்கிறது. அதனால்தான் தற்போது நமது மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தொலைநோக்குச் சிந்தனையோடு ஒரு திட்டத்தைத் தீட்டியிருக்கிறார்கள். குறிப்பிட்ட காலத்தே எல்லாப் பணிகளையும் முடித்தாக வேண்டும். அது கோப்புகளாக இருந்தாலும் சரி அல்லது திட்டப் பணிகளாக இருந்தாலும் சரி, a time–bound action is a mandatory must என்ற முறையிலே, குறிப்பிட்ட காலத்தே திட்டங்களை முடித்து, அந்தப் பலன் மக்களுக்குச் சேரவேண்டும்; வீண் பணச் செலவு பணவீக்கத்தை ஏற்படுத்திவிடக் கூடாது என்பதற்காக, புரட்சித் தலைவி அவர்கள், ஒவ்வொரு துறை அதிகாரிகளையும் அழைத்து, அவர்களுடன் கலந்துரையாடி, அந்தத்



துறையிலே உள்ள நுணுக்கங்கள் என்னென்ன, துறைக்குள்ள பிரச்சினைகள் என்னென்ன, அவர்களுக்கு வேண்டிய தேவையான பணம் என்ன, அல்லது man–power குறைவாக இருக்கிறதா; அதற்கு எத்தகைய man–power தேவை, எங்கெங்கு man–power–ஐக் குறைக்க வேண்டும் என்பன பற்றியெல்லாம்கூட பொருளாதார அணுகுமுறையிலே பிரச்சினைகளை அணுகி தக்க ஆணைகளையிட்டு வருகிற காரணத்தால், வரும் ஆண்டுகளில் இதுபோன்ற வீண் செலவுகளைக் குறைத்து, சீரான பொருளாதார நடைமுறைகளை மேற்கொள்வதற்குத் தற்போது வழிவகுத்து இருக்கிறார்கள்.

இந்த ஆண்டு, நான் ஏற்கெனவே கூறியதைப்போல, இதையெல்லாம் கருத்திலேகொண்டு ஏழை மக்களுக்கு வாழ்வில் உய்வினை உருவாக்க வேண்டும்; வறுமைக் கோட்டின் எல்லைக்குக் கீழே வாழ்கின்ற மக்கள் வறுமைப் பிணியிலிருந்து நீங்கி நல்வாழ்வினை எய்திடல் வேண்டும் என்ற அணுகுமுறையை உளமார மேற்கொண்டிருக்கிறார் தமிழகத்தினுடைய நமது முதலமைச்சர் அவர்கள். காலையில் பேசுகிறபோதுகூட சொன்னார்கள் 21% of the people are living below poverty line என மத்திய அரசினுடைய ஒரு கணக்கு சொல்கிறது என்று. தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் நிலைமையே வேறு. The Central Government is following certain guidelines for the country as a whole. ஆனால் தமிழகத்தினை உத்திரப் பிரதேசத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, கங்கை நதி ஓடுகிற காரணத்தால், அது உத்திரப் பிரதேசமாக இருந்தாலும் சரி, பீகாராக இருந்தாலும் சரி, வற்றாத ஜீவநதி, அதையொட்டி எத்தனையோ கால்வாய்கள், உபநதிகள் என்று இருக்கிறபோது, எங்கு பார்த்தாலும் தங்குதடையின்றி, தட்டுப்பாடின்றி தண்ணீர் வசதி இருக்கிற காரணத்தால், கிராமத்து மக்களேகூட–அவர்கள் civilised life இல்லாமல் இருக்கலாம்; ஆனால்–பட்டினி என்ற நிலையிலே, அந்த மாநிலத்திலே இருக்கிற மக்களுக்கு அத்தகைய சூழல் இல்லை. முப்போகம் விளைகின்ற பூமியாக பெரும்பான்மையான பூமி இருக்கிற காரணத்தால் அவர்களுக்கு அந்த நிலை உருவாவதில்லை. அந்தக் கிராமத்தில் அவர்கள் மேற்கொள்கிற பயிர் வகைகள்கூட, ஏழை மக்களுக்கும், பாட்டாளி மக்களுக்கும்கூட balanced food, nutritional food கிடைக்கக்கூடிய அளவிற்கு அத்தகைய பயிர் வகைகளை அவர்கள் பயிர் செய்கிறார்கள். ஆனால், தமிழகத்தில் அப்படியல்ல. தமிழகத்தைப் பொறுத்தவரை உன்னிப்பாக ஆய்ந்து பார்த்தால், 80% மக்கள் கிராமத்தில் இருக்கிறார்கள். தமிழகத்தில் இருக்கிற 56 இலட்சம் பட்டி தொட்டிகளில் கிட்டத்தட்ட 20% நிலம்தான் தண்ணீர்ப் பாய்ச்சலுக்கு உள்ளாக்கப்பட்டு இருக்கிறது. மீதம் இருக்கிற

80% நிலம் மானாவாரி பூமியாக இருக்கிறது. அப்படி மானாவாரி பூமியாக இருக்கிற காரணத்தால் நிலத்தடி நீர் இருப்பதில்லை. பெய்கின்ற மழை நீரை நம்பி விவசாயம் செய்யலாம் என்று எண்ணுகிற சிறு உழவர்களுக்கும்கூட, குறுநில உழவர்களுக்கும்கூட ஏமாற்றம் ஏற்படுகிறது, வானம் பொய்த்துவிடுகிற நேரத்தில். நிலத்தடி நீர் இல்லை. நாளுக்குநாள் நிலத்தடி நீர் மிகமிகக் குறைந்து வருகிறது, தமிழகத்தில். காரணம், கிட்டத்தட்ட 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏரிகள், குளங்கள், குட்டைகள் எல்லாம் ஆக்கிரமிப்பிற்கு உள்ளாக்கப்பட்டோ, தூர் எடுக்கப்படாத காரணத்தாலோ, அதில் தூர் எடுப்பதாகச் சொல்லி, எடுத்து முடித்துவிட்டதாக நிர்வாகச் சீர்கேடுகள் கடந்த காலத்தில் நடந்துவிட்ட காரணத்தாலோ, ஏரிகள், குளங்கள் எல்லாம் இன்று பயன்படாத நிலையில் இருக்கின்றன. பெய்கின்ற மழை நீரை ஆங்காங்கே தேக்கி வைத்தால், அந்த மழை நீர் பூமிக்குள் சென்றுவிடுமேயானால், அங்கேயிருக்கிற நிலத்தடி நீர் மட்டம் ground water level will get increased. அப்படி நிலத்தடி நீரினுடைய அளவு உயருமேயானால், குடிதண்ணீருக்கும் bore well போட்டு தண்ணீர் எடுத்துக்கொள்ளலாம். விவசாயத்திற்கும் bore well மூலமாகவோ, கிணறு மூலமாகவோ தண்ணீர் எடுத்துக்கொள்ளலாம். உழவர்களும் தொடர்ந்து பயிர் செய்ய வாய்ப்புக் கிட்டும். உழவர்களை நம்பியிருக்கிற விவசாயத் தொழிலாளிகளுக்கும் கூலிகளுக்கும் தொடர்ந்து ஆண்டு பூராவும் வேலை கிட்டும். அதனால் gross income என்று சொல்லக்கூடிய மாநிலத்தினுடைய ஒட்டுமொத்த வருவாய் அதிகமாகும். பட்டிதொட்டிகளில் பணப்புழக்கம் மிகும். இதுதான் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தற்போது கடைப்பிடித்துக் கொண்டிருக்கின்ற பொருளாதார அணுகுமுறை.

*பிற்பகல் 4–50*

தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒரு திட்டம் பன்னெடும் ஆண்டுகளாக இருந்து வருகிறது என்று தி.மு.க. உறுப்பினர்கள் சொன்னார்கள். தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான் அதற்கு ஊக்கம் தரப்பட்டது என்று சொன்னார்கள். திட்டம் ஏட்டளவிலே, பேப்பரிலே இருந்து வந்தது. அதுதான் உண்மை. ஆனால், அந்தத் திட்டத்தினுடைய தன்மை என்ன, அதை ஈடேற்ற வேண்டியதினுடைய இன்றியமையாத் தேவை என்ன என்பதனை உழவர்கள் நலன் கருதி கடந்த கால அரசு சிந்தித்துப் பார்க்கத் தவறிவிட்ட காரணத்தால், உழவர்களுக்கு அந்தத் திட்டம் பலனற்ற ஒரு திட்டமாகவே கடந்த காலத்தில் இருந்து வந்தது. ஆனால், புரட்சித் தலைவி அவர்களுடைய எண்ணம் எல்லாம், வறுமைக்



கோட்டிற்குக் கீழே இருக்கின்ற மக்கள், ஒருவேளை உணவுகூட உண்ண முடியாத நிலையிலே இருக்கிற மக்கள், கட்டிய சேலையை மாற்றுவதற்கு மாற்றுச் சேலை வாங்கக்கூட வக்கின்றி, வகையின்றி வறுமையிலே வாழ்கின்ற மக்கள், நல்ல நிலைக்கு வரவேண்டும்; பொருளாதார உய்வினைப் பெற வேண்டுமென்ற துடிப்போடு இலங்குகிற தமிழகத்து முதலமைச்சர் அதற்கு என்னென்ன ஆக்கப்பூர்வமான திட்டங்களை, பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டுமென்று சிந்தித்ததன் விளைவுதான் இந்தத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) Rain Water Harvesting திட்டம், Watershed Management திட்டம் என்ற திட்டங்களையெல்லாம் ஒரு குறிப்பிட்ட கால் அளவிலே நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்ற தீவிர சிந்தனையோடு இந்தத் திட்டங்களை வகுத்திருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரைக்கும் பல்வேறு உறுப்பினர்கள், பல்வேறு இயக்கங்களைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களும் பத்திரிகையாளர்களும், அதைப்போலவே பல்வேறு தொழில் அமைப்புகளைச் சேர்ந்த நிறுவனங்களும் தங்களது பாராட்டுதலை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய இந்த நிதிநிலை அறிக்கைக்கு அளித்திருப்பதற்கு நான் என்னுடைய நன்றியினை காணிக்கையாக்குகின்றேன்.

நான் சொல்ல வருவது, தற்போது அறிவிக்கப்பட்டிருக்கின்ற நிதிநிலை அறிக்கை, This is a budget with a definite direction என்ற முறையிலே, ஒரு குறிக்கோளை எய்திட வேண்டும் என்ற எண்ணத்தோடு, திண்மையோடு இதனை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தற்போது தயாரித்திருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் இந்த 5 ஆண்டு காலத்தில் பல்வேறு ஆக்கப் பணிகளை மேற்கொண்டு, படிப்படியாக முன்னேறி, இந்த 5 ஆண்டு காலத்தில் இந்தியத் துணைக் கண்டத்திலேயே பொருளாதார முன்னேற்றத்தில் வறுமைப் பிணியை ஒழித்திட்ட மாநிலம், below poverty line என்ற நிலையிலே யாருமே இல்லை என்ற நிலையை உருவாக்குகின்ற மாநிலம், அனைத்துத் துறையிலும் ஒரு மேம்பாட்டினை எய்திட்ட மாநிலம், முதன்மையான மாநிலம் என்ற நிலையை அடைய வேண்டும் என்ற அவாவோடு இத்தகைய திட்டங்களைத் தமிழகத்தினுடைய முதலமைச்சர் மேற்கொண்டு வருகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தரிசு நிலத் திட்டங்களைப் பற்றிச் சொல்கின்றபோது, இந்தத் திட்டத்திற்குக் கிட்டத்தட்ட 2,000 கோடி ரூபாய் செலவாகும் என கணக்கிடப்பட்டு இருக்கிறது. தரிசு நிலங்கள் பல்வேறு நிலைகளில் இருக்கின்றன. அறவே தண்ணீரே இல்லாத தரிசு நிலங்கள், சில இடங்களில் போர்வெல் போட்டால் ஓரளவிற்குத் தண்ணீர் கிடைக்கும் என்ற நிலையிலே

இருக்கின்ற நிலங்கள், இராமநாதபுரம் போன்ற பகுதிகளில் போர்வெல் போட்டாலும்கூட சப்-சாயில் கிளே-சாயில் என்ற முறையிலே இருக்கின்ற காரணத்தால் தண்ணீரே கிட்டாத நிலையிலே இருக்கின்ற தரிசு நிலங்கள் என இப்படி 3 வகை தரிசு நிலங்கள் இருக்கின்றன. நான்காவது வகை தரிசு நிலங்கள் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது சொன்னார்கள். கடலோரப் பகுதிகளைப் பொறுத்தவரைக்கும், மணற்பாங்கிலே கடல் அரிப்பைக்கூட தடுக்கக்கூடிய அளவுக்கு cashewnut போட வேண்டுமென்றுகூடச் சொன்னார்கள். இப்படி ஒரு பகுதி இருக்கிறது. இந்த 4 பகுதிகளையும் ஆராய வேண்டுமென்று புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அப்படி அந்த நான்கு விதமான தரிசு நிலங்களையும் நாம் ஆராய்ந்து, எந்தெந்தத் தரிசு நிலத்தில் எந்தெந்தப் பயிர்களைக் கொண்டுவர வேண்டுமென்று நாங்கள் ஒரு முடிவுக்கு வர பல ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு இருக்கிறோம். முக்கியமாக, தற்போது சாதாரண கம்பைப் பயிர் செய்கிறோம்; சோளத்தைப் பயிர் செய்கிறோம். இதுபோன்ற பயிர்களைப் பயிர் செய்கின்றபோது, economic viability will not be there for the farming community. ஏதோ ஓரளவுக்குக் கிடைக்கும். ஆனால் அதோடு சேர்த்து, அதை ஊடு பயிராக வைத்து அவர்களுக்கு உபரி வருமானத்தைத் தரக்கூடிய அளவுக்குப் புதிதாக, South Africa, Nigeria, Kenya, Brazil போன்ற நாடுகளில் எல்லாம் தற்போது இஸ்ரேல் உதவியுடன் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு இருக்கின்ற சில செடி வகைகளைப் பயிர் செய்ய ஓர் ஆய்வினை நாங்கள் பரிசிலித்து வருகிறோம்.

*பிற்பகல் 4—55*

'ஜெட்ரோப்பாஸ்' என்று சொல்லக்கூடிய ஒரு எண்ணெய்வித்து. அது நம் தமிழகத்திலே ஆமணக்குச் செடியைப் போல் இருக்கின்றது. ஆனால் அது காட்டாமணக்குச் செடி வேலியிலே இருக்கிறது. நாம் பார்த்து இருக்கிறோம். அதிலே, high breed is being developed in South Africa. இங்கிருந்து செடியை அங்கே எடுத்துச் சென்று அதை high breed செய்து, அதிலிருந்து வருகின்ற விதையிலிருந்து எண்ணெய் எடுக்கிறார்கள். That oil is a substitute to diesel oil என்று கண்டுபிடிக்கப்பட்டு, அந்த எண்ணெயை இப்போது South Africa-விலே commercial vehicle-க்கு substitute fuel-ஆக உபயோகப்படுத்தி வருகிறார்கள். பிரேசில் நாட்டிலும், அர்ஜென்டைனா நாட்டிலும் அதை அப்படியே தற்போது கடைப்பிடித்து வருகிறார்கள். பிளானிங் கமிஷனுக்கு நாங்கள் சென்றிருந்தபோது, அவர்கள்கூட இந்த ஆலோசனையைச் சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இத்தகைய திட்டங்களைத் தமிழகத்திற்குக் கொண்டு வர வேண்டும் என்பதற்காக, ஆட்சிப் பொறுப்புக்கு நாங்கள் வருவதற்கு முன்னாலேயே, இதுகுறித்த வல்லுநர்கள், கோவையிலே இருக்கின்ற விவசாயப் பல்கலைக் கழகத்திலே விஞ்ஞானியாக முன்பிருந்த டாக்டர் ரங்கசாமி என்பவர், அதைப் போலவே அமெரிக்காவைச் சேர்ந்த Garry Jacob என்ற ஒருவர், இந்தியத் துணைக் கண்டத்திலே கடந்த 15 ஆண்டு காலமாக கிராமப் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு என்னென்ன அணுகுமுறைகளை மேற்கொள்ள வேண்டும், அதைப்போலவே, தத்தளித்துக் கொண்டிருக்கிற ஆப்பிரிக்க நாடுகளினுடைய விவசாயப் பொருளாதாரத்தை மேம்படுத்த என்னென்ன ஆக்கப்பூர்வமான பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்ற ஓர் ஆய்வினை நடத்தினார்கள். அவர்களுடைய ஆலோசனையையும் பெற்று, இதுபோன்ற பயிர் வகைகளை கிராமப்புறப் பொருளாதார மேம்பாட்டிற்காக புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்திலே கொண்டு வருகிறார்கள். அதைப்போலவே, Paradise tree என்று ஒரு மரம் இருக்கிறது. அந்த Paradise tree-ஐப் பொறுத்தவரைக்கும் அதிலேயிருந்து எடுக்கின்ற எண்ணெய் சமையல் எண்ணெயாகவும் பயன்படும், வாகனங்களுக்கு 20% பெட்ரோல் அல்லது டீசலோடு அதைக் கலந்து பயன்படுத்துகின்றபோது substitute for petrol or diesel என்ற முறையிலே பயன்படும். இந்த இரண்டு மரங்களுக்கும் தண்ணீரே தேவையில்லை. ஒரு பொருளை உற்பத்தி செய்கின்றபோது உழவர்களுக்கு எப்போது பணப் பிரச்சினை ஏற்படுகிறது? உற்பத்தி செய்கின்ற அந்தப் பொருளை விற்க முடியாத நேரத்தில், நல்ல விலை கிட்டாத நேரத்தில் இத்தகைய பிரச்சினை உழவர்களுக்கு ஏற்படுகிறது. நான் இதைச் சுட்டிக்காட்டுவதற்குக் காரணம், ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் பேசுகின்றபோது தெரிவித்தார். பேனா உற்பத்தி செய்கின்ற ஒரு தொழிற்சாலைக்குச் சொந்தக்காரர், cost of production என்ன என்பதனை வைத்து, அதற்கு மேல் 20% or 30% profit வைத்துத்தான் அதை விற்கிறார். எந்தப் பொருள் தொழிற்சாலையிலே உற்பத்தியானாலும், உற்பத்திச் செலவிற்கு மேல் இலாபம் என்று ஒன்றை வைத்து விற்பதுதான் உலக அளவிலே இருக்கின்ற Trade and Commerce practice. ஆனால், தமிழகத்தினுடைய 80% மக்கள் வாழ்கிற, அந்த 80% மக்களினுடைய வாழ்க்கைக்கு அச்சாணியாக, ஆணிவேராக விளங்குகிற கிராமப் பொருளாதாரத்திலே இத்தகைய அணுகுமுறை இல்லாத காரணத்தால் பன்னெடும் ஆண்டு காலமாக இதற்கு முக்கியத்துவம் தரப்படாத காரணத்தால், ஒருவர் தக்காளியைப் போடுகிறார். அதிகம் விளைந்துவிடுகிறது. அடுத்த ஆண்டு அங்கேயிருக்கிற 500 விவசாயிகளும் தக்காளியைப் போடுவார்கள். அடுத்த

கிராமம், அடுத்த கிராமம் என்று தமிழகம் பூராவும் தக்காளியைப் போடுவார்கள். கிலோ 5 ரூபாய் என்று விற்கின்ற தக்காளியை அடுத்த ஆண்டு 10 பைசாவிற்குக்கூட உழவர்கள் விற்க முடியாத அளவிற்குப் போய், அழுகி கீழே கொட்ட வேண்டிய நிலை வந்துவிடுகிறது. இதைப்போலத்தான் எல்லா பயிர்களுக்கும் இருக்கின்றன. விவசாயிகள் இப்படி கஷ்டப்படக்கூடாது; விவசாயமும் ஒரு தொழிலைப் போல பேணப்பட வேண்டும். தமிழகத்தினுடைய ஒட்டுமொத்த ஜனத்தொகையில் பெரும்பான்மையான மக்கள் உழவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டும். 'The Rural Economic Development is the backbone of the sound economy' என்று டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு முடிவெடுத்த காரணத்தினால்தான், விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருளை விற்பனை செய்வதற்கு வேளாண் வணிகத் துறை ஒன்றையும் இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதன்முறையாக ஆக்கப்பூர்வமான திட்டத்தோடு புரட்சித் தலைவி அவர்கள் நடைமுறைக்குக் கொண்டுவர இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதை நான் சொல்வதற்குக் காரணம், வேளாண் வணிகத் துறையை ஏற்படுத்திவிட்டு, விற்பனை செய்ய முடியாத பொருளை உற்பத்தி செய்தால் அப்போது விவசாயிகளுக்குப் பலன் கிட்டாது. அதற்காகத்தான், எந்தப் பொருளை உற்பத்தி செய்தால் there will be marketability for the end products என்ற முறையை ஆராய்ந்து, அதில்தான் இந்த 'ஜெட்ரோபாஸ்', 'Paradise tree' அதைப் போலவே, நாம் எல்லோரும் நன்றாக அறிந்தது, ஆனால் யாருமே அதைப் பயன்படுத்தாமல் இருக்கின்ற ஒன்று, Neem Tree, அதாவது வேப்ப மரம். தற்போது தேங்காய்க்கு, தென்னையிலே நோய் வந்துவிட்டது. குருத்து நோயால் தேங்காய் கெட்டுவிட்டது. தென்னை விவசாயிகள் பெரிதும் இன்னலுக்கும் இடர்பாட்டிற்கும் உள்ளாக்கப்பட்டு இருக்கிறார்கள். அதற்கு தற்போது ஒரு மருந்தை கண்டுபிடித்து இருக்கிறார்கள். அந்த மருந்து 'அசார்டிக் டாக்டின்' என்று சொல்லக்கூடிய மருந்து. அதை வேப்ப மரத்தினுடைய வேப்பங்கொட்டையிலிருந்து எடுக்கிறார்கள்.

*பிற்பகல் 5—00*

முருகப்பா குரூப் என்று சொல்லக்கூடிய, டி.ஐ. சைக்கிள் நிறுவனத்திற்குச் சொந்தக்காரர்களும், ஸ்பிக் நிறுவனமும் அமெரிக்க நாட்டினுடைய விஞ்ஞானத்தைப் பயன்படுத்தி அந்த அசார்டிக் டாக்டினை எடுத்திருக்கிறார்கள். அது வேப்பங்கொட்டையிலிருந்து



எடுக்கப்படுகிறது. ஒரு ஏக்கரில் வேப்ப மரத்தை நீங்கள் பயிர் செய்தால் 4 ஆண்டுகளில் அது காய்க்க வந்துவிடுகிறது. ஏக்கருக்கு 30 ஆயிரம் ரூபாய், தற்போது முருகப்பா பாலிடெக்னிக், முருகப்பா குரூப் நிறுவனம் வேப்பங்கொட்டைக்கு மட்டுமே தருகிறார்கள். பயிரிடச் சொல்கிறார்கள். தரிசு நிலத்திலே பயிரிடச் சொல்கிறார்கள். வேப்பங்கொட்டைக்குத் தண்ணீரே தேவையில்லை. இந்தத் தரிசு நிலத் திட்டத்தில் வேப்பங்கொட்டையைப் பொறுத்தவரை, எத்தனை ஆயிரம் ஏக்கரில் அதைப் போட்டாலும் அவ்வளவு வேப்பங்கொட்டையும் பயன்படும் because it is a bio–chemical; it is a bio–manure; it is a bio–pesticide; it is a bio–insecticide. அமெரிக்காவும், வளர்ந்துவிட்ட மேலை நாடுகளும் அதை வாங்கிக்கொள்ள இருக்கிற காரணத்தால், அளப்பரிய அளவிற்கு பல்லாயிரக்கணக்கான ஏக்கரில் வேப்பங்கொட்டையைப் பயிரிடுவதற்கும் இந்தத் திட்டத்தில் கொண்டு வந்திருக்கிறார்கள்.

அதைப் போலவே, ஏற்றுமதி வருவாயைத் தரக்கூடிய உயர்ரக முந்திரி. நம்முடைய தமிழகத்திலே இருக்கிற முந்திரிக்கு export market opportunities are very bleak. ஆனால், நைஜீரிய நாட்டைச் சேர்ந்த ஒரு முந்திரி வகையை தற்போது கொண்டுவந்து, கேரளப் பகுதியிலே பயிரிடுகிறார்கள், ஆந்திராவிலே பயிரிடுகிறார்கள். தமிழகத்திலேயும் சில பகுதிகளிலே பயிரிட ஆரம்பித்திருக்கிறார்கள். கடற்கரைப் பகுதிகளிலே உள்ள தரிசு நிலங்களிலே அவற்றைப் பயிரிடுவதன் மூலமாக உழவர் பெருமக்களுக்கு நல்ல வருமானம் கிட்டும் என்ற நிலையிலே அதனையும் மேற்கொள்ள இருக்கிறோம்.

அதைப்போல, ஆம்லா, என்று சொல்லக்கூடிய நெல்லிக்காய் பற்றி நாங்கள் பிளானிங் கமிஷனுக்குச் சென்றிருந்தபோதுகூடச் சொன்னார்கள். டாபர் கம்பெனியும் சொல்கிறது. கிட்டத்தட்ட 2 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள ஏற்றுமதிக்கு வாய்ப்பு இருக்கிறது. உலக நாடுகளில் நெல்லிக்காய் மருந்தாகப் பயன்படுகிற காரணத்தால் anti–oxidant என்று சொல்லக்கூடிய cellular rejuvenation or anti–ageing process–க்குப் பயன்படுத்தக்கூடிய மருந்துக்குச் செல்கிற காரணத்தால், தமிழகத்தின் தட்பவெப்ப நிலை மிகவும் உகந்ததாக இருக்கிறது என்று சொல்லி, அந்தத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திலே டாக்டர் ரங்கசாமி, Garry Jacob என்பவர்கள் இதுபோன்ற ஆக்கப்பூர்வமான திட்டங்களை அரசுக்குச் சொல்லியுள்ளார்கள். அதை நடைமுறைப்படுத்த வேண்டும். அதன்மூலம் உழவர்களுக்கு வருமானம் பெருக வேண்டும். கிராமப் பொருளாதாரம் மிக வேண்டும். கிராமப் பொருளாதாரத்தை மிகைப்படுத்தி, the gross income of the State–நமது நாட்டினுடைய மக்களினுடைய மொத்த

வருமானம் அதிகமாக வேண்டும். Purchasing power increase ஆக வேண்டும். Purchasing Power increase ஆகிவிட்டால், வாங்கும் சக்தி மக்களுக்கு அதிகமாகிவிட்டால், கடைகளிலே பொருட்கள் எல்லாம் விற்பனை ஆகும். பணப்புழக்கம் தாராளமாக வந்துவிடும். அப்போது அரசுக்கும் வரி வருவாய் மூலம் வருமானம் வரும். Revenue Receipts of the Government will get increased. நான் இவ்வளவும் சுற்றிச் சுற்றிச் சொல்வதற்கு காரணம், Revenue Deficit அதிகமாக இருக்கிறது. அப்படி Revenue Deficit அதிகமாக இருக்கிறபோது Revenue Deficit–ஐக் குறைக்க வழி இல்லையே, ஆசிரியர்களுக்கு சம்பளம், பென்ஷன், அதைப்போல அலுவலர்களுக்கு சம்பளம் என்று சொல்லிக்கொண்டு அதற்கு நாங்கள் தடையாக இல்லை. ஆனால் ஒருபுறம் இதுபோன்ற welfare measures–ஐ நாம் கண்காணிக்கின்ற அதே நேரத்தில், வருவாயைப் பெருக்குவதற்கு நாம் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டாமா? Revenue Receipts–ஐ அதிகமாக்க வேண்டுமென்ற அக்கறை வேண்டாமா? வெறுமனே தொழிற்சாலைகளை வைத்துக்கொண்டு, அதன்மூலமாக மட்டுமே அதிகப்படுத்திவிட முடியுமா என்றால், அது முடியாத காரியம். If it is an export–oriented industry– small scale or large scale or medium scale– அதற்கு sales tax கிடையாது. மத்திய அரசுக்கு income tax கிட்டாது. மாநிலத்திற்கு வருவாய் கிடையாது. அதிகப்படியான மக்களுக்கு வேலைவாய்ப்பும் கிட்டாது. ஆனால் வேலைவாய்ப்பை அதிகமாகத் தருகிற வாய்ப்புள்ள கிராமப்புறப் பொருளாதாரத்தை முன்னேற்ற வேண்டுமென்பதுதான் புரட்சித் தலைவி அவர்களுடைய ஒரு தலையாய கொள்கை. ஆட்சியில்கூட, மத்திய அரசாக இருக்கட்டும், மாநில அரசாக இருக்கட்டும், Primary Sector என்று Agriculture–ஐத்தான் வகுத்திருக்கிறார்கள். ஆனால், இதுகாறும் யாருமே அந்த Primary Sector என்று சொல்லக்கூடிய விவசாயத் துறையின் பக்கம் கண்ணை வைத்துப் பார்த்ததேயில்லை. அது வளர வேண்டும் என்ற எண்ணத்திற்குச் சென்றதேயில்லை. அந்த எண்ணத்தைத் தன் சிந்தனையில் கொண்டு புரட்சித் தலைவி அவர்கள் இந்த உன்னத நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்கள். இத்தோடு அவர்கள் நின்றுவிடவில்லை. Floriculture–உங்களுக்குத் தெரியும். பூக்கள் தற்போது தருமபுரியிலிருந்து பல வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. ஜாஸ்மின் ஏற்றுமதியாகிறது. கிரைசாந்தியம் ஏற்றுமதியாகிறது. மகாபலிபுரம் பக்கத்திலிருந்து ஆர்கிட்ஸ் ஏற்றுமதியாகிறது. கடந்த 5 ஆண்டுகளிலே அரசு அதற்கு எந்தவித ஊக்கமும் தராத காரணத்தால், அது நொடிந்த நிலையிலே இருக்கிறது. பணம் படைத்தவர்கள் மட்டுமே இதை மேற்கொள்கிறார்களேயொழிய, சாதாரண உழவர்களும் அதை மேற்கொண்டு அதையெல்லாம் வாங்கி,



airport–ல் cold chain facilities கொடுத்தால் நல்ல மார்க்கெட் இருக்கிறது என்று சொல்கிறார்கள். கர்நாடக மாநிலத்திலே இதைச் செய்துவிட்டார்கள். தமிழகம் தூங்கிவிட்டது. அது கூடாது. அதற்கு ஆக்கப்பூர்வமான திட்டத்தைத் தர வேண்டும் என்று புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அது தற்போது நடைமுறைக்கு வர இருக்கிறது.

பிற்பகல் 5-05

அதைப்போலவே horticulture என்ற துறை எங்கள் ஆட்சியிலே இருந்தது, இருந்தது என்று பேசுகின்றபோது சொன்னார்கள். பன்னெடும் காலமாக horticulture இருந்துகொண்டுதான் இருக்கிறது. ஆனால் horticulture–லே தமிழகத்திலே இங்கு ஆரஞ்சு உற்பத்தி செய்ய முடியாது. அல்லது ஊட்டி, கொடைக்கானல் போன்ற பகுதிகளில் விளைகின்ற விளைச்சலோ குறைவு. நாட்டிலே பலதரப்பட்ட உழவர்களுக்கும் பலனளிக்கக்கூடிய horticulture என்ன என்பதனை ஆராய்ந்து அந்த அடிப்படையிலே அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே நம் நோக்கம். Banana, நாம் வைத்திருக்கிற வாழைப்பழத்தை எல்லாம் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய முடியாது. Because, அதனுடைய shelf life மிகவும் குறைவு. A kind of bacteria is there in it என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். அதற்கு மாறாக, மராட்டிய மாநிலத்திலே Brazilian Banana என்ற ஒரு வகையைக் கொண்டுவந்து, அதிலே தற்போது கிட்டத்தட்ட பத்தாயிரம் ஏக்கருக்கு மேல் அங்கே பயிர் செய்துவிட்டார்கள். தமிழகத்திலே தற்போது அந்த வகை Brazilian Banana–வைக் கொண்டு வரவேண்டும். ஏற்றுமதிக்குரியதாக இருக்கிறது. பச்சைப் பழம்கூட 20 நாள், 25 நாட்களுக்குக் கெட்டுப்போகாமல் இருக்கக்கூடிய ஒரு வகைப் பழம் அது. அதுபோன்ற வகைகளை இங்கே கொண்டு வரவேண்டும்.

Grapes–திராட்சை உற்பத்திக்கு முக்கியத்துவம் தருகின்றபோது, அதற்கு ஏகப்பட்ட export market இருப்பதை மைய அரசு சொல்கிறது. Planning Commission சொல்கிறது. ஆனால் தமிழக அரசு, கடந்த ஐந்தாண்டு காலத்தில் அப்படி அவர்கள் சொல்லியும் எந்தவித ஊக்குவிப்பும் செய்யாமல், உழவர்களைப் பற்றியே அவர்கள் சிந்திக்காமல் இருந்துவிட்ட காரணத்தால், மைய அரசு சில திட்டங்களை வைத்திருந்தாலும்கூட, அதைக் கொண்டுவந்து தமிழக மண்ணிலே தவழவிடவேண்டும், உழவர்கள் வயிற்றிலே பாலை வார்க்க வேண்டும்,

ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தை வளர்க்கவேண்டும், பணப்புழக்கத்தை மிகைப்படுத்தவேண்டும் என்ற சிந்தனை இல்லாமல் இருந்துவிட்ட காரணத்தால், அந்த உயர்ரக கிரேப், Brazilian Banana, போன்றவற்றைக்கூட தமிழகத்திலே அதிக அளவிலே கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை.

இன்னும்கூட ஒன்று pomegranate–தமிழிலே மாதுளம் பழம். அந்த மாதுளம் பழத்தைப் பொறுத்தவரைக்கும் ஒரு ஏக்கருக்கு 1-1/4 இலட்சம், 'மோகன்' என்று சொல்லக்கூடிய ஒரு வகையை மராட்டிய மாநிலத்திலே பெறுகின்றார்கள். ஏற்றுமதி செய்கின்றார்கள். அதை இப்போது சில விவசாயிகள் தமிழகத்திலே கொண்டுவந்து பயிர் செய்து, அதன் பலனைக் கண்டுகொண்டிருக்கிறார்கள். நமது தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திலே அதையும் கொண்டு வரவேண்டும். இதுபோன்ற horticulture, உழவர்களுக்கு வருவாயைத் தரக்கூடிய அளவிற்கு ஒரு மாதுளைச் செடியை ஒரு ஏக்கருக்குப் போட்டுவிட்டால் கிட்டத்தட்ட 30, 40 விவசாயத் தொழிலாளர்களுக்கு மாதந்தோறும் வேலை கிடைத்துக்கொண்டிருக்கும். வேலைவாய்ப்பைப் பெருக்கும் இப்படிப்பட்ட திட்டத்தைத் தமிழகத்திற்குக் கொண்டு வரவேண்டும். அதன்மூலமாக horticulture, floriculture, pisciculture, அதைப்போலவே இந்த உயர்ந்த மரங்கள், எண்ணெய் வித்து மரங்களை வளர்த்தல் போன்ற திட்டங்கள் மூலமாக கிராமத்திலே உழவர்களுக்கு வருமானத்தைத் தந்து தரிசு நிலங்களையெல்லாம் விளை நிலங்களாக ஆக்கி, அந்த உழவர்கள் கையில் வருமானம் வருகின்றபோது, வாங்கும் சக்தியை அதிகப்படுத்தி அதன்மூலமாக பணப் புழக்கத்தையும், gross income and net income of the State, அதையும் அதிகப்படுத்தி, அதன்மூலமாக கடைகளிலே பொருள்களை வாங்கும் சக்தி, வியாபாரம் தங்குதடையின்றி தாராளமாகக் கடைகளிலே நடக்கின்ற சக்தியையும் அதிகப்படுத்தலாம். கடைகளிலே வியாபாரம் நன்றாக நடந்தால், நமக்கு Sales Tax அதிகம் வரும். அதனால் State revenue will also get increased. அப்போது deficit வராது. Revenue deficit என்பது வராது. இதுதான் ஒரு ஆக்கப்பூர்வமான economic approach. இத்தகைய பொருளாதார முறையைக் கடைப்பிடிக்க வேண்டும். தமிழகத்ினுடைய சீர்கேடான நிதிநிலைமையைச் சீரமைத்து, ஆக்கப்பூர்வமான பணிகளை, திட்டப் பணிகளை, வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள இதுபோன்ற economy–oriented–ஆன ஒரு பொருளாதாரத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற சிந்தனையை புரட்சித் தலைவி அவர்கள் மேற்கொண்ட காரணத்தால் இந்தத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் அல்ல, 50 இலட்சம்



ஏக்கரிலே இந்த ஐந்தாண்டு காலத்திலே நடைமுறைப்படுத்த ஒரு தீவிரத் திட்டமாக, முனைப்பான திட்டமாக, ஒரு முன்னோடித் திட்டமாக புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதையொட்டி இன்னும் ஒன்று. இன்று பட்டிதொட்டிகளில் போய்ப் பார்க்கிறோம். கிராமத்தில் இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் குடிநீர் வசதி இல்லை. அங்கு இருக்கின்ற மக்களுக்குத் தண்ணீர் வசதியோடுகூடிய கழிப்பறை வசதி இல்லை. அதற்குக்கூட மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், தாயுள்ளத்தோடு, ஏழைத் தாய்மார்கள் தத்தளிக்கக்கூடாது என்பதற்காக, பல கோடி ரூபாய் நிதியினை ஒதுக்கி இந்தப் பிரச்சினையை, ஒரு சமுதாயப் பிரச்சினையை அணுகி சுதந்திரம் அடைந்து இத்தனை ஆண்டு காலமாகப் புறக்கணிப்பட்ட அந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள் வயிற்றிலே பாலை வார்க்கும் வகையில் இந்த உன்னதத் திட்டத்தை நடைமுறைப் படுத்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோன்ற திட்டங்கள் எல்லாம் வெற்றிபெற வேண்டும் என்றால், நமக்கு வருமானம் வேண்டும். வருமானத்தைப் பெருக்குவதற்கு, gross income அதிகமாக வேண்டும். Total economic activities–அதை அதிகப்படுத்த வேண்டும். அந்த நோக்கத்தோடுதான் இந்தத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

பிற்பகல் 5-10

தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் அப்படியே வெற்றி பெற்றுவிட முடியாது. அதற்கு நீர் வேண்டும். நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, அதற்காகத்தான் Rain Water Harvesting–percolation –பெய்கின்ற மழை நீரை அந்தந்த இடத்திலேயே slotted bore wells போட்டு–தண்ணீர் ஓடி வருகிறது, ஒரு பள்ளப் பகுதிக்கு வருகிறது, அந்தப் பள்ளப் பகுதியிலே 4 அல்லது 5 slotted bore wells போட்டுவிட்டால், 50 அடி ஆழம், 60 அடி ஆழம் போட்டுவிட்டால், மழை நீர் பூமிக்குச் சென்று விடுகிறது. கிரவுண்டு வாட்டர் லெவல் அதிகமாகிவிடுகிறது. மழை பெய்கின்ற காலத்தில் கடலுக்கு ஓடுகிற தண்ணீரை பூமிக்கு உள்ளே செலுத்தி பாதுகாப்பாக வைத்து மழைக் காலம் நீங்கி, வறட்சிக் காலங்களில் கிணற்று நீராக, borewell நீராகப் பயன்படுத்துகிறபோது உழவுத் தொழில் சிறக்கும், கிராமங்களிலே இருக்கிற குடிநீர்ப் பிரச்சினையும் போகும் என்ற முறையில்தான் அந்த Watershed management, rain water harvesting schemes என்ற உன்னதத் திட்டங்களை, ஒரு பெரிய அளவிலான திட்டங்களை இந்தியத் துணைக் கண்டத்திற்கே முன்னோடித் திட்டங்களாக புரட்சித் தலைவி அவர்கள் தமிழ் மண்ணிலே தற்போது தவழவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, சுய வேலைவாய்ப்பு அடிப்படையிலே, தொழில் முனைவோரின் திறமைகளின் அடிப்படையில் 5 இலட்சம் பெண்களுக்கு 5 ஆண்டுகளில் பயிற்சி அளிக்கக்கூடிய திட்டத்தையும் புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். காரணம் அரசால் எல்லோருக்கும் வேலை தர முடியாது. எல்லோருக்கும் தனியார் துறையில் வேலை கிட்டிவிடும் என்றாலும்கூட, மக்கள் தொகையோடு ஒப்பிடுகிறபோது அது முடியாத காரியம். எனவே, self–employment is the only ultimate opportunity என்ற முறையிலே, சுய வேலைவாய்ப்புத் திட்டம் ஒன்றுதான் குடும்பத்தினுடைய பொருளாதாரத்தை, ஏழைகளுடைய குடும்பப் பொருளாதாரத்தை உய்விக்கும் உன்னதமான திட்டம் என்பது டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய தலையாய எண்ணம். அது உண்மையிலேயே ஒரு வெற்றிகரமான திட்டம். அப்படி சுய வேலைவாய்ப்புத் திட்டத்தை உருவாக்குகின்றபோது, எத்தகைய self–employment schemes, சுய வேலைவாய்ப்புத் தொழில்கள் அவர்களுக்கு வருமானத்தை ஈட்டக்கூடியதாக இருக்கும் என்பதையும் கண்டறிய வேண்டும் என்று ஆணையிட்டு இருக்கிறார்கள். சில கிராமங்களிலே, அந்தந்த ஊர்களிலே இருக்கின்ற மூலப்பொருட்களுக்கேற்ப சுய தொழிலில் ஈடுபடுகிறபோது செய்துமுடித்த பொருட்களை விற்க முடியவில்லையென்றால், ஒரு மாதம், இரண்டு மாதங்கள், மூன்று மாதங்கள் அதில் ஈடுபட்டு, பிறகு சோர்வடைந்துவிடுவார்கள். Self–employment scheme–லே இருக்கிற மகளிர் என்ற முறையிலே எந்தெந்தப் பொருட்களை உற்பத்தி செய்தால் அதற்கு marketability easy–ஆக இருக்கும் என்பதைக் கண்டறிந்து, அதற்கு அரசினுடைய பண உதவியையும் தந்து, அந்தத் திட்டத்தை ஊக்குவிக்க அதிகப்படியான ஒரு அளவிலே ஈடுபட்டிருக்கிறோம். இந்தத் திட்டம் இந்தியாவின் பல மாநிலங்களில் இருக்கலாம். ஆனால், புரட்சித் தலைவி அவர்களுடைய எண்ணம் எல்லாம், ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் ஒரு உன்னதத் திட்டமாக, வருவாயை ஈட்டித் தரும் திட்டமாக, கண்கூடாகப் பலனைக் காணுகிற திட்டமாக அந்தத் திட்டம் மலர வேண்டும் என்று ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் பொருளாதார முன்னேற்றம் மீண்டும் ஏற்படும். அப்படி சுய வேலைவாய்ப்பு மூலமாக அவர்களுக்கு அன்றாடம் வருமானம் வருகிறபோது, purchasing power of the people gets increased; State revenue simultaneously gets increased; Revenue Deficit gets mitigated என்ற முறையிலே ஒரு பொருளாதார அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கோடு, புரட்சித் தலைவி அவர்கள், ஒரு பொருளாதார நிபுணர் என்ற முறையிலே இந்தச்



சிந்தனையை அவர்கள் தற்போது நடைமுறையிலே தவழவிட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு துறை அதிகாரிகளையும் கூப்பிட்டுப் பேசினார்கள். ஒவ்வொரு துறையைச் சேர்ந்த அமைச்சர்களை மட்டுமல்ல, துறையைச் சார்ந்த அனைத்து அதிகாரிகளையும் கூப்பிட்டு, அந்தத் துறையிலே என்னென்ன இருக்கிறது, என்னென்ன பிரச்சினைகள் இருக்கின்றன, என்னென்ன தடைக்கற்கள் இருக்கின்றன, எவற்றைச் சீர்திருத்த வேண்டும், எதனால் இந்தத் துறை நலிந்த நிலையில் இருக்கிறது, இந்தத் துறையை மேம்படுத்த என்னென்ன அணுகுமுறைகளை மேற்கொள்ள வேண்டுமென்று வினாக்களைத் தொடுத்து, அதற்கான விடைகளைப் பெற்று, குறைகள் இருக்கின்ற நேரத்தில் அவர்களுக்கே உரித்தான ஞானத்தை நடைமுறைப்படுத்தி, இந்தக் குறை இருக்கிறது, இனிமேல் இதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன், இந்த அணுகுமுறையை மாற்றியாக வேண்டும், Red tapism இருக்கக்கூடாது, Nepotism இருக்கக்கூடாது, தாமதம் இருக்கக்கூடாது, பணியிலே சிக்கனம் இருக்க வேண்டும் என்ற ஆணைகளையெல்லாம் இட்டியிருக்கிறார்கள். எல்லாத் துறைகளையும், 36 துறைகளையும் அவர்கள் நேரடியாக விசாரித்து ஆணையிட்டிருக்கிற காரணத்தால், நிர்வாகச் சிக்கனம், நிர்வாகச் சீர்திருத்தம், விரைவிலே மக்களுக்குப் பலன் சென்றடையக்கூடிய அணுகுமுறை ஆகியவற்றை, நாட்டினுடைய ஒட்டுமொத்தப் பொருளாதாரம் நல்ல நிலையை அடைய வேண்டுமென்ற நோக்கோடு ஆணைகளாக இட்டிருக்கிறார்கள்.

அதைப் போலவே ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் குடிநீர் வழங்குவதற்காக 690 கோடி ரூபாயினைத் தற்போது புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். இது மிக முக்கியமான ஒன்று. குடிநீர்ப் பிரச்சினை என்பது மனித குலத்தை மிகவும் பாதிக்கின்ற ஒரு பிரச்சினை என்பதைக் கருத்திற்கொண்டு, குடிப்பதற்குக்கூட தண்ணீர் இல்லை என்ற அவல நிலை, சுதந்திரத் தமிழ்நாட்டிலே, சுதந்திர பாரதத்திலே இன்னும் இருக்கிறதே என்ற வேதனையின் காரணமாக, குடிநீர்ப் பிரச்சினையை அறவே ஒழித்திட வேண்டும், இதற்கு என்ன செலவானாலும் பரவாயில்லை, இதற்கு எங்கிருந்து, எப்படி நிதி வேண்டும் என்றாலும் பெற வேண்டும். குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முக்கியமான கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று ஆணையிட்டு, வரும் ஐந்தாண்டு காலத்தில் தண்ணீர்ப் பிரச்சினை உள்ள கிராமமே தமிழகத்தில் இல்லை என்ற நிலையை உருவாக்க வேண்டுமென்ற முறையிலே (மேசையைத் தட்டும் ஒலி) குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான திட்டங்களை புரட்சித் தலைவி அவர்கள் தீட்டியிருக்கிறார்கள்.

*பிற்பகல் 5-15*

நான் ஏற்கெனவே சொன்னேன். மகளிருக்கான ஒருங்கிணைந்த துப்புரவு வளாகங்களை ஏற்படுத்துவதற்கான ஒரு திட்டம். இது ஒரு சாதாரணத் திட்டம் அல்ல. 20 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த social progress வேறு. ஆனால், இன்று சமுதாய மறுமலர்ச்சி உருவாகி இருக்கின்ற நிலையில், பட்டிதொட்டிகளில் வாழ்கின்ற, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த, நலிந்த பிரிவினைச் சார்ந்த ஏழைப் பெண்கள் எல்லாம் படித்த பெண்களாக, பள்ளிப் படிப்பை முடித்துவிட்ட பெண்களாக, கல்லூரிப் படிப்பைக்கூட முடித்துவிட்டு வேலை கிட்டாமல் வீட்டிலே அவதியுறுகின்ற பெண்களாக இருக்கின்ற நிலையைக் கண்ணுற்ற புரட்சித் தலைவி அவர்கள், அவர்களுக்கு மிக அடிப்படைத் தேவையான, மிக இன்றியமையாத் தேவையான, தாய்க்குலத்திற்கு மிகமிக இன்றியமையாத் தேவையான, தண்ணீர் வசதியுடன்கூடிய கழிப்பறை வசதிகூட இல்லாமல் இருக்கிறார்களே என்று மிக்க வேதனையுற்ற தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள், தாயுள்ளத்தோடு விளங்குகிற புரட்சித் தலைவி அவர்கள், தமிழகத்திலே இருக்கிற அனைத்துக் கிராமங்களுக்கும், அங்கே இருக்கின்ற ஏழைப் பெண்களுக்கு, உடனடியாக தண்ணீர் வசதியோடு கூடிய கழிப்பறை வசதியும், அதேபோன்று குளியலறை வசதியும் உள்ள வளாகங்களை உருவாக்க வேண்டுமென்று ஆணையிட்டார்கள். இந்தத் திட்டம்கூட இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதல்முறையாகக் கொண்டு வருகின்ற திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) ஏதோ திட்டம் என்கிற முறையிலே இவையெல்லாம் அறிவிக்கப்படவில்லை. புரட்சித் தலைவி அவர்களைப் பொறுத்தவரையிலே, என்ன செய்ய வேண்டும் என்று எண்ணுகிறாரோ, எதைச் செய்ய வேண்டுமென்று எண்ணுகிறாரோ, அதைத்தான் சொல்வார்கள். எத்துணை தடைகள் வந்தாலும், எத்துணை எதிர்ப்புகள் வந்தாலும், சொன்னதை ஈடேற்றுவதில் அவர்கள் என்றுமே பின்வாங்கமாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அத்தகைய அணுகுமுறையை உடையவர்கள். பெரியார் பிறந்த பூமி இது. தந்தை பெரியாரினுடைய பூமியில், அண்ணாவினுடைய பூமியில், புரட்சித் தலைவருடைய பூமியில், தாழ்த்தப்பட்ட மக்கள் இன்னலில் இருக்கிறார்கள், அந்தத் தாய்க்குலம் இன்னலில் இருக்கிறது என்ற நிலையே இல்லாத ஒரு நிலையை ஐந்தாண்டு காலத்தில் உருவாக்கி, இந்தியத் துணைக் கண்டத்திற்கு ஒரு முன்னுதாரணமாக தமிழகத்தைக் கொண்டு வரவேண்டும் என்ற நோக்கோடு இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள்.



அதைப்போல, சென்னைப் பெருநகருக்குக் குடிநீர் கொண்டு
வருவதற்காகப் பல்வேறு திட்டங்களை அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள்.
காலையில்கூட பேசுகிறபோது பலவிதமான கருத்துகளைச் சொன்னார்கள்.
தற்போது புதிய வீராணம் திட்டம் என்ற ஒரு திட்டத்தை, ரூ.720 போடி
செலவிலே கொண்டு வரவேண்டுமென்ற திட்டத்தை புரட்சித் தலைவி
அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்
தலைவி அவர்கள் கொண்டு வந்த திட்டம் என்ற ஒரே காரணத்திற்காக,
கடந்த 5 ஆண்டு காலம் இருந்த ஆட்சி அந்தத் திட்டத்தைக் கிடப்பிலே.
போட்டுவிட்டதைத் தமிழகத்து மக்கள் நன்றாக அறிவார்கள். தற்போது
பேசுகிறபோது சிலர் தங்களது ஐயக்கிடக்கையினை எடுத்து
இயம்பினார்கள். வீராணத்தை ஒட்டியிருக்கின்ற விவசாய விளை
நிலங்களுக்குத் தண்ணீர் கிட்டாமல் போய்விடுமோ என்ற ஓர் அச்சத்தைச்
சொன்னார்கள். இன்னும் சிலர், வீராணம் ஏரிக்கு வரும் தண்ணீர்
வரத்துப் பகுதிகள் எல்லாம் தூர் வார வேண்டிய நிலையிலே
இருக்கின்றனவே என்பதனைக்கூட எடுத்துச் சொன்னார்கள். இவை
எல்லாம் ஏற்கெனவே புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக்
காலத்திலே ஆய்வு செய்யப்பட்டவை. தற்போது மீண்டும் இவற்றை
எல்லாம் துல்லியமாக ஆய்ந்தார்கள். சம்பந்தப்பட்டவர்களை அழைத்து
வைத்துப் பேசினார்கள். கலந்துரையாடல் செய்தார்கள். இந்த ஐயங்களை
புரட்சித் தலைவி அவர்களே எழுப்பினார்கள். இறுதியிலே திட்டம்
தீட்டப்பட்டது. எங்கெங்கே தண்ணீர் வரத்துப் பகுதிகள்
அடைக்கப்பட்டிருக்கின்றனவோ, அந்த அடைப்புகள் எல்லாம் போர்க்கால
அடிப்படையில், துரித காலத்தில் அகற்றப்பட வேண்டும். தாராளமாக
காவிரித் தண்ணீர் வருகின்ற காலத்தில் வீராணம் ஏரிக்குத் தண்ணீர்
வர வேண்டும் என்பதோடு மட்டுமல்ல, வீராணம் ஏரியினுடைய
கொள்ளளவையும் ஆழப்படுத்த வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள்.
அப்படிக் கொள்ளளவை ஆழப்படுத்துகின்றபோது, அகலப்படுத்துகின்ற
போது அந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஏற்கெனவே அவர்களுக்குத்
தந்து வருகின்ற தண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்படாது என்பதை இந்த
அவைக்கு நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பிலே
கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கெனவே புரட்சித் தலைவி
அவர்கள்கூட இதுபற்றி அவைக்கு எடுத்து இயம்பி இருக்கிறார்கள்.
ஆனால், அந்த வீராணம் திட்டம் ஒன்று மட்டுமே சென்னை மக்களுடைய
குடிநீர்ப் பிரச்சினையை முழுமையாகப் போக்கிவிடும் என்று நானும்
சொல்லமாட்டேன், நீங்களும் எண்ண மாட்டீர்கள்.

*பிற்பகல் 5-20*

வளர்ந்து வருகிற சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரைக்கும் தண்ணீரின் தேவை ஒரு அதிகப்படியான தேவையாக இருக்கின்ற காரணத்தால் இந்தப் பிரச்சினை மீண்டும் எழாதவண்ணம், குறைந்தது 20, 30 ஆண்டுகளுக்கு சென்னையிலே வாழ்கிற மக்களுக்கு, தமிழகத்தினுடைய தலைநகரான சென்னை மாநகரத்துக்கு தண்ணீர் இல்லை என்ற பிரச்சினை உருவாகக்கூடாது என்பதற்காக மேலும் பல ஆக்கபூர்வமான திட்டங்களை புரட்சித் தலைவி அவர்கள் தீட்டியிருக்கிறார்கள். அந்தத் திட்டங்களில் ஒன்றுதான் சென்னை குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்–2. 493 கோடி ரூபாய் செலவிலே அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதைப் போலவே இராமநாதபுரம், தருமபுரி போன்ற வறட்சிப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்குவதற்கு கிட்டத்தட்ட 2000 கோடி ரூபாய் அளவிலே ஒரு பெரும் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த இராமநாதபுரம், தருமபுரி போன்ற வறட்சிப் பகுதிகளிலே, நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, போர்வெல் போட்டு கிணறு வெட்டி அங்கே தண்ணீர் கிடைக்காது. அந்த மக்களுக்கு தண்ணீர் கொடுத்தே ஆகவேண்டும். ஒன்று, கேரளாவிலிருந்து தண்ணீர் வரவேண்டும் அல்லது காவிரியிலேயிருந்து தான் தண்ணீர் செல்ல வேண்டும். ஒரு மாவட்டம், இரண்டு மாவட்டம் அல்ல, கிட்டத்தட்ட நான்கு மாவட்டப் பகுதிகள் நிலத்தடி மண்–களி மண்ணாக இருக்கின்ற காரணத்தால் குடிநீருக்குக் கூட தண்ணீர் இல்லாமல் தத்தளிக்கின்ற அந்த இலட்சக்கணக்கான மக்களுடைய வாழ்க்கைப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்ப்பதற்காக கிட்டத்தட்ட 2000 கோடி ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்படுகிறது. அந்த குடிநீர் திட்டத்தை புரட்சித் தலைவி அவர்கள் நடைமுறைப்படுத்த உள்ளார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, கடந்த ஐந்து ஆண்டு கால ஆட்சியிலே மாநிலத்தினுடைய மொத்த வருமானத்தை, State Income அதிகப்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அவர்கள் எடுக்கத் தவறிவிட்டார்கள். Gross State Domestic Product என்று சொல்லப்படுகின்ற மாநிலத்தின் மொத்த உற்பத்தியை அவர்கள் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டார்கள் என்பதுபற்றி இதுவரைக்கும் நான் அந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் உள்ளிட்ட திட்டங்களைக் குறிப்பிடுகிறபோது அவற்றை நான் எடுத்துச்



சொல்லியிருக்கிறேன். அதைப் போலவே நமது புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் Rural Industries, பெரும் தொழிற்சாலைகள் தேவைதான் நமக்கு. பெரும் தொழிற்சாலைகள் மிக அதிக அளவிலே தேவை. ஃபோர்டு போன்ற தொழிற்சாலைகள், ஹூண்டாய் போன்ற தொழிற்சாலைகள் ஒருபுறம் தேவைதான். ஆனால் அப்படி பெரும் தொழிற்சாலைகள் மூலம் அதிகப்படியான வேலைவாய்ப்புகள் வேலையில்லாத் திண்டாட்டத்தில் தத்தளிக்கின்ற மக்கள் அதிகமாக உள்ள தமிழகத்துக்குக் கிட்டாது என்ற காரணத்தால் Rural Industries, Agro–based Industires ஆகிய தொழில்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். உதாரணமாக ஒன்றைச் சொல்லலாம். தருமபுரி மாவட்டம், வட ஆற்காடு மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம், தென்னாற்காடு மாவட்டம், அதைப்போலவே, அரியலூர், பெரம்பலூர், சேலம், நாமக்கல், ஈரோடு ஆகிய 8, 9 மாவட்டங்களில் இன்று விவசாயிகள் வறண்ட பூமிப் பகுதியாக இருந்தாலும்கூட வருமானம் ஓரளவிற்கு அவர்களுக்கு இருக்கிற காரணத்தால் அங்கே விளைகின்றது குச்சிக் கிழங்கு என்பது உங்களுக்குத் தெரியும். கிட்டத்தட்ட 1100 சேகோ பேக்டரி, பத்து லட்சம், இருபது லட்சம் உள்ள Cottage Industries உழவர்களே போட்டுக்கொண்டிருக்கிறார்கள். அது அங்கு வளர்ந்திருக்கிற காரணத்தால் அங்கே விவசாயிகளுக்கு வேலை கிட்டுகிறது. அந்தத் தொழிலிலும் வேலை கிட்டுகிறது. மழை நீர் அதிகம் தேவையில்லாத பயிரான அந்த குச்சிக் கிழங்கையும் அங்கே உற்பத்தி செய்ய முடிகின்றது. இது போன்று Agro based small scale, cottage, tiny industries–அதிகப்படியான அளவுக்குக் கொண்டு வருவதன் மூலமாக விவசாயத்தையும் தொழிலாக மாற்றி கிராமத்திலேயிருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுடைய வேலைவாய்ப்புகளைப் பெருக்க வேண்டுமென்று புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள்.

அதுபோலவே, சிறு தொழில் வளர்ச்சியிலே மிக முக்கியத்துவம் காட்ட வேண்டும். சிறு தொழில்கள் எல்லாம் கடந்த ஐந்தாண்டு காலத்தில் முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்டுவிட்டன என்ற ஒரு குற்றச்சாட்டையே நான் இங்கே கூறுகிறேன். சிறு தொழில்களைப் புறக்கணித்துவிட்ட காரணத்தால் G.O.75 என்ற ஒரு G.O.–வைக் கொண்டு வந்தார்கள். அந்த G.O.–விலே தமிழகத்தில் சிறு தொழிற்சாலைகளிலே, குறும் தொழிற்சாலைகளிலே உற்பத்தியாகிற பொருள்கள் எல்லாம் தரம் கெட்ட பொருள்கள் அல்லது தரம் குறைந்த பொருள்கள் என்ற ஒரு காரணத்தைச் சொல்லி, வெளி மாநிலத்திலேயிருந்து பொருள்களை வாங்க

வேண்டுமென்ற ஒரு முடிவுக்கு வந்து, G.O.75 என்ற ஒரு G.O.-வைக் கொண்டுவந்து வெளிமாநிலங்களிலிருந்து பொருள்களை வாங்க ஆரம்பித்தார்கள். கர்நாடக மாநிலத்தில், அந்த மாநிலத்திலே உற்பத்தியாகின்ற பொருள்களை அங்குள்ள அரசு நிறுவனங்கள் கட்டாயம் வாங்க வேண்டுமென்ற ஆணை இருக்கிறது.

*பிற்பகல் 5-25*

ஆந்திர மாநிலத்திலே அத்தகைய ஆணை இருக்கிறது. மராட்டிய மாநிலத்திலும் அத்தகைய ஆணை இருக்கிறது. ஆனால் தமிழகத்தில் மட்டும் அந்த நிலையை தளர்த்தி G.O.75 என்ற ஒன்றைக் கொண்டு வந்து இலட்சக்கணக்கான சிறுதொழிலில் ஈடுபட்டிருக்கிற ஏழைகளின் வயிற்றில் அடிக்கிற வகையில் ஆயிரக்கணக்கான சிறு தொழில்கள் மூடப்படுகிற நிலையில் அந்த G.O. கடந்த கால ஆட்சியிலே நடைமுறைப்படுத்தப்பட்டது. அதனால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டது. பணப் புழக்கம் இல்லை என்ற நிலை ஏற்பட்டது. பணத் தட்டுப்பாடு ஏற்பட்டது. அந்தச் சிறு தொழில்களிலிருந்து உற்பத்தியாகின்ற பொருட்கள் அவற்றைத் தமிழக நிறுவனங்களே வாங்கியிருக்குமேயானால் தமிழகத்திலே அந்தப் பணம் புழங்கியிருக்குமேயானால், பணத் தட்டுப்பாடு ஓரளவிற்கு அதன் மூலமாக தமிழகத்தில் குறைக்கப்பட்டிருக்கும். அந்த சிந்தனை இல்லாமல் ஏதோ ஒரு உள்நோக்கத்தோடு வெளி மாநிலங்களிலிருந்து அரசுக்குத் தேவையான பொருட்களை வாங்க வேண்டுமென்று ஆணையிட்டு சிறுதொழில்கள் நசுக்கப்பட்டுவிட்டதால் சிறுதொழில்கள் நசிந்துவிட்டன. அதைப்போலவே சிறுதொழில்களை நம்பி வாழ்கிற ஏழை மக்கள், உழைக்கும் வர்க்கம் பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டார்கள். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே ஒரு முறை இதுபற்றி விளக்கம் சொல்லியிருக்கிறேன். குற்றச்சாட்டு போல சொல்லும்போது, விளக்கம் தான் சொல்ல முடியும். வெளி மாநிலத்திலிருந்து வாங்க வேண்டும் என்பதல்ல. டெண்டர் கேட்கிறபோது நம்முடைய மாநிலத்திலேயோ வெளி மாநிலத்திலேயோ யாராக இருந்தாலும், போடுகிற டெண்டரில் யார் குறைந்த தொகையில் போடுகிறார்களோ அதைத்தான் ஏற்க வேண்டுமென்றும், ஏற்கெனவே இருந்த விதிமுறைப்படி நம்முடைய மாநிலத்திலே உள்ள சிறு தொழில்களுக்கு, மற்றவர்களைவிட ஏறத்தாழ



வாங்க வேண்டும்
15 விழுக்காடு அதிக விலைகொடுத்து அரசாங்கம்
என்றும் ஒரு சலுகை இருந்த காரணத்தினால், அரசின் சில பல துறைகளில்
தங்களுக்கு இழப்பு ஏற்படுவதாகத் தெரிவித்ததன் காரணமாக அது
பரிசீலிக்கப்பட்டதே தவிர, வெளி மாநிலத்திலிருந்து வாங்க
வேண்டுமென்பதற்காக அல்ல.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஒரு வேளை பேராசிரியர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்ட தகவலாக இருக்கலாம். உண்மை அதுவல்ல. (மேசையைத் தட்டும் ஒலி)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். அமைச்சரவையிலே பேசுகிறபோது அதிகாரிகள் எடுத்து வைத்த, அந்தத் துறையினுடைய செயலாளர் எடுத்துவைத்த அந்த விளக்கத்தின் அடிப்படையில்தான் நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, உண்மை நிலை என்ன என்பதை நான் விளக்குவது சரியாக இருக்குமென்று கருதுகிறேன். ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் ஆந்திர மாநிலத்துத் தொழில்களைத்தான் பாதுகாக்க வேண்டும். சிறுதொழில்கள்தான் இலட்சக்கணக்கான மக்களுக்கு, அதிகப்படியான மக்களுக்கு வேலைவாய்ப்பைத் தருவன. அவற்றைப் பாதுகாக்க வேண்டுமென்பது ஆந்திர மாநிலத்தினுடைய கொள்கை, கர்நாடக மாநிலத்தினுடைய கொள்கை, மராட்டிய மாநிலத்தினுடைய கொள்கை, குஜராத் மாநிலத்தினுடைய கொள்கை. Deficit Budget என்று சொல்லிக்கொண்டு பல்லாயிரக்கணக்கான ரூபாய் பற்றாக்குறை பட்ஜெட்டை வைத்துக்கொண்டு, பணக் கஷ்டத்திலே தத்தளிக்கிற தமிழகத்தில், இருக்கின்ற பணமும் வெளி மாநிலத்திற்குப் போனால் பரவாயில்லை என்ற அந்த G.O.-வை ஏன் கொண்டு வந்தார்கள்? அப்படி சிறுதொழில்கள், இங்கே இருக்கிற சிறுதொழில்கள் மூலமாக உற்பத்தியாகின்ற பொருட்களை வாங்காவிட்டால் இங்கே இருக்கிற சிறுதொழில்கள் மூடப்படுகிறபோது அரசுக்கும் வருவாய் போகிறது. அது மட்டுமல்ல, அந்தத் தொழிலை நம்பியிருக்கிற இலட்சக்கணக்கான ஏழைத் தொழிலாளர்களுக்கும், உழைக்கும் வர்க்கத்திற்கும் வேலை போய் விடுகிறது என்ற கவலை ஏன் அரசுக்கு அப்போது இல்லை? இதுதான் வேதனைக்குரிய ஒன்று. (குறுக்கீடு) I am not yielding, Mr. Ponmudi. I am not yielding. இதை நான் சொல்கிறபோது புரட்சித் தலைவி ஆட்சிக்

காலத்திலே 1991–1996 ஆம் ஆண்டு காலத்திலே நாட்டினுடைய ஒட்டுமொத்த தொழில் வளர்ச்சிக்கு ஒருபுறம் பெருந்தொழில்களுக்கு முக்கியத்துவத்தைத் தந்தார்கள். ஆனால் வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும். ஏழைகளுக்கு வேலைவாய்ப்பு கிட்ட வேண்டுமென்ற உன்னத நோக்கோடு சிறுதொழில்களுக்கு அதிகப்படியான முக்கியத்துவத்தைத் தந்தார்கள். அந்த அடிப்படையில் 1991 ஆம் ஆண்டிலே 6.92 சதவிகிதமாக இருந்தது, ஆனால் 1996–2001–லே அது 4.4 சதவிகிதமாக தொழிற்சாலைகளுடைய வளர்ச்சி குறைந்தது. அதுவும்கூட உற்பத்தி செய்கின்ற பொருட்களின் அளவு புரட்சித் தலைவி ஆட்சியினுடைய காலத்திலே ஒட்டுமொத்த தமிழக உற்பத்தியிலே 7.06 சதவிகிதமாக சிறுதொழில்கள் இருந்தன. ஆனால், 1996–2001–ல் வெறுமனே 2.07 சதவீதமாக அது குறைந்துவிட்டது. அதைப்போலவே, சிறு தொழில்கள் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்திலே அவர்கள் கொடுத்த ஊக்கத்தின் காரணமாக 8.29 சதவீதம் பதிவு செய்யப்பட்டன. ஆனால், கடந்த 5 ஆண்டு கால தி.மு.க. ஆட்சியிலே பதிவு செய்யப்பட்ட சிறு தொழில்கள் வெறுமனே 1.97 சதவீதம்தான். இதிலிருந்து எந்த அளவிற்கு கடந்த கால ஆட்சி, இந்தச் சிறுதொழில்களைப் புறக்கணித்தது என்பதை இந்த அவை அறிய வேண்டும் என்பதற்காகத்தான் இதை நான் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

*பிற்பகல் 5—30*

அதைப்போலவே, தற்போது உழவர் பெருமக்களுக்கு மற்றும் சிறு தொழில்களுக்கு மேலும் ஒரு பாதிப்பு ஏற்பட்டு வருகிறது. இந்திய துணைக் கண்டத்திலே, மையத்திலே ஆளுகிற ஆட்சியினர் தவறான பொருளாதார அணுகுமுறையை மேற்கொள்கின்ற காரணத்தால் சிறு தொழில்களை நடத்திக் கொண்டிருக்கிறவர்கள், உழவர் பெருமக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். W.T.O. என்ற அந்த அமைப்பு நடைமுறைக்கு வந்த பிறகு இந்தியாவைப் பொறுத்தவரைக்கும் Developing economy. சீன நாட்டை எடுத்துக்கொண்டால், W.T.O.–வோடு அவர்கள் தொடர்பு கொண்ட போதிலும்கூட, they are protecting their economy according to their existing conditions. அங்கு இருக்கின்ற மக்கள் பெரும்பாலும் கிராமத்தையொட்டிய மக்கள், ஏழை மக்கள், கீழ்நிலையிலே இருக்கின்ற மக்கள், எண்ணிக்கையிலே அதிகமான மக்கள் என்ற காரணத்தினால் அதற்கேற்ப அவர்களுடைய உள்நாட்டு தொழிலுக்கு ஓரளவுக்கு பாதிப்பு ஏற்படாதவண்ணம் அவர்களுடைய வெளிநாட்டுக் கொள்கையை வகுத்திருக்கிறார்கள். ஆனால், இங்கு தி.மு.க. மையத்திலே



ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கிறது. தேயிலை எந்த அளவிற்கு ஒரு முக்கியமான பொருள் என்பது உங்களுக்குத் தெரியும். தேயிலையை நம்பியிருக்கின்ற நீலகிரி மாவட்ட உழவர் பெருமக்கள் எத்தகைய தத்தளிப்புக்கும், தண்டனைக்கும், பாதிப்புக்கும் உங்கள் ஆட்சிக் காலத்திலே ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது நாடு அறிந்த ஒன்று. அதுமட்டுமல்ல, ஏன் அத்தகைய இழிநிலை அவர்களுக்கு ஏற்பட்டது? அத்தகைய அவல நிலை யாரால் உருவாக்கப்பட்டது? தமிழகத்திலே உற்பத்தி ஆகின்ற தேயிலை அல்லது இந்திய துணைக் கண்டத்திலே உற்பத்தி ஆகின்ற தேயிலைக்கு முக்கியத்துவம் தர வேண்டியது மைய அரசினுடைய கடமை. அப்படி முக்கியத்துவம் தருகின்றபோதுதான் அந்தத் தேயிலை விவசாயிகளுக்கும், தேயிலை விவசாயத்தை நம்பியிருக்கின்ற உழைக்கும் தொழிலாளிக்கும் வாழ்க்கை கிட்டும். ஆனால், என்ன காரணத்தினாலோ, எந்த ஆதாய நோக்கோடோ இந்தியாவிலே அதிகப்படியான தேயிலை உற்பத்தி ஆகின்றபோது, வெளிநாடுகளுக்கு அதிகப்படியான தேயிலையை இந்திய துணைக் கண்டத்திலிருந்துதான் நாம் ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறபோது, வெளிநாட்டு தேயிலையை ஏன் இறக்குமதி செய்தார்கள்? அப்படிச் செய்ததற்குக் காரணமாக இருந்தது யார், அங்கு இருக்கின்ற Commerce and Industries Minister அதற்கு பொறுப்பு இல்லையா? இல்லையென்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்ல முடியுமா? (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் என்ன செய்திருக்க வேண்டும்? ஒருவேளை தேயிலை இறக்குமதியிலே இந்திய துணைக் கண்டத்தின் தேயிலை தொழிலை நசுக்கக்கூடிய அளவிற்கு வெளிநாட்டு தேயிலை இந்தியாவிற்கு வரக்கூடாது என்பது உங்களது கொள்கையாக இருந்திருந்தால், அந்தக் கொள்கைக்கு ஒரு வேளை மாறான முடிவு மாண்புமிகு வாஜ்பாய் அவர்களுடைய ஆட்சிக்குத்தான் இருந்திருக்கும் என்றால் அந்த ஆட்சிப் பீடத்திலிருந்து இறங்கி பதவியை இராஜினாமா செய்துவிட்டு நீங்கள் வந்திருக்க வேண்டாமா? (மேசையைத் தட்டும் ஒலி) உழவர்கள் வாழ்விலே உங்களுக்கு அக்கறை இல்லை. தேயிலை தொழிலாளிகளைப் பற்றி நீங்கள் கவலைப்படவில்லை. தென்னை விவசாயிகளைப் பற்றி நீங்கள் கவலைப்படவில்லை. தமிழகத்திலே தென்னை ஏராளமாக உற்பத்தி ஆகிறது. அப்படி தென்னை ஏராளமாக உற்பத்தி ஆகிறபோது, அந்த எண்ணெய் வித்துக்கள் சமையல் எண்ணெய்க்கு பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், வெளிநாட்டிலிருந்து எண்ணெய்யை நீங்கள் இறக்குமதி செய்கிற காரணத்தால் தமிழகத்திலே எண்ணெய் வித்துக்களை உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படவில்லையா? கடலையைப் பயிர் செய்கிறார்கள். எள்ளைப் பயிர் செய்கிறார்கள். சனோலா பயிர்

செய்கிறார்கள். சஃபோலா செடியைப் பயிர் செய்கிறார்கள் உழவர்கள். மேட்டுக் காட்டிலே விளையக்கூடிய பயிர் சஃபோலா, சனோலா இப்படி இருக்கும்போது, இலட்சக்கணக்கான உழவர்கள் வயிற்றிலே அடித்து, இந்திய நாட்டிலே எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியைப் பெருக்கி, எண்ணெய் உற்பத்தியை அதிகப்படுத்தி, இங்கு தேவையான எண்ணெய்யை இங்கே உற்பத்தி செய்யத் தவறிவிட்டு, வெளிநாட்டிலிருந்து ஏன், எதற்காக எந்த ஆதாயம் நோக்கி எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டது? அதற்கு மையத்திலேயிருக்கிற 'Commerce Minister' பொறுப்பு அல்லவா? உங்கள் ஆட்சியல்லவா? (மேசையைத் தட்டும் ஒலி) உழவர்களுடைய நிலையில் நீங்கள் அக்கறை கொண்டிருந்தால், இந்த ஒரு அநியாயம், இந்த ஒரு அநீதி உழவர் பெருமக்களுக்கு இழைக்கப்பட்டிருக்குமா? இதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

*பிற்பகல் 5–35*

அதைப்போலவே, 'Secondary Sector' என்று சொல்லக்கூடிய இரண்டாவது நிலையில் நிதித் துறையின் மூலம் முக்கியத்துவம் தரக்கூடிய பிரிவு 'Manufacturing' உற்பத்தித் துறை. அதிலே முதலாவதாக இருப்பது மின் சக்தித் துறை–Electricity, gas and water supply. The next one is construction. Electriciy–ஐப் பொறுத்தவரைக்கும் உங்களுக்குத் தெரியும், எத்தகைய நிலையில் E.B. தற்போது செயல்படுகிறது என்பது உங்களுக்குத் தெரியும். இன்று Electricity Board–ஐப் பொறுத்தவரைக்கும் கிட்டத்தட்ட 4938 கோடி ரூபாய் ஒட்டுமொத்த இழப்பிலே இயங்குகிற ஒரு அவல நிலை நாடு அறிந்த ஒன்றாகும். அத்தகைய நஷ்டத்திற்கும், இழப்பிற்கும் என்ன காரணம் என்பதை இந்த அவை அந்த வெள்ளை அறிக்கையைப் படித்துவிட்டு, Electricity Board–க்கு என்றே தனியாக ஒரு வெள்ளை அறிக்கை வைக்கப்படவிருக்கிறது. அதையும் படித்துவிட்டு ஆக்கபூர்வமான ஆலோசனைகளை அரசுக்கு நீங்கள் வழங்க வேண்டுமென்றுகூட நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். Electricity Board–ஐப் பொறுத்தவரைக்கும், Line loss என்று சொல்லக்கூடிய அளவுக்கு ஆண்டுக்கு கிட்டத்தட்ட 2000 கோடி ரூபாய் Line loss ஏற்படுகிறது. அதைப்போல, உழவர் பெருமக்களுக்கு இலவச மின்சாரம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு 3208 கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது. இதிலேயிருக்கிற ஒரு உண்மையைக் கண்டறிவதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருகிறார்கள். இதிலே Line loss உண்மையாக எவ்வளவு? In developed countries in any electricity board, the line loss is only 1%, 1.5%. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் 16.5 சதவிகிதம் line loss. ஆனால், நாம் சொல்வோம், மற்ற மாநிலங்களை



ஒப்பிடுகிறபோது, Line loss இங்கு சற்று குறைவு என்று சொல்லலாம். ஆனால், உண்மை நிலை வேறு. Under Metering என்ற முறையிலே மின்சாரம் பல இடங்களில் தொழில்களுக்கு திருடப்படுகின்ற காரணத்தினால் பெரும் நஷ்டம் ஏற்பட்டு வருவதாக தகவல் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு வந்திருக்கிறது. இதுகுறித்து ஆய்வு செய்ய வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, விவசாயிகளுக்கு 3208 கோடி ரூபாய்க்கு மின்சாரத்தை இலவசமாக வழங்குகிறோம் என்று நாம் சொல்கிறோம். ஆனால், உழவர்கள் தலையில் பழியைப் போட்டுவிட்டு ஒருபுறம் மின்சாரம் திருடப்படுகிற நிலை இருப்பதையும் நாங்கள் தற்போது கண்டுபிடித்திருக்கிறோம். விவசாயிகளுக்கு நாம் மின்சாரம் வழங்குவது ஒரு நாளைக்கு எட்டு மணி நேரம் என்று கருதுகிறேன். ஆனால், தமிழகத்தில் இருக்கின்ற கிணறுகள் எல்லாம் ஆழ்கிணறுகளாகப் போய்விட்டன. நான் ஏற்கெனவே சொன்னதுபோல், Ground water level has gone down very badly. அப்படியிருக்கின்றபோது 5 Horse Power Motor தான் நாம் அதிகமாக ஒரு கிணறுக்குப் போடுகிற motor. இரண்டு மணி நேரத்திற்கு மேல் எந்தக் கிணற்றிலேயும் தண்ணீர் இருக்காது. அப்படி இரண்டு மணி நேரம் மட்டும் ஒரு கிணற்றிலே தண்ணீர் எடுப்பதைக் கணக்குப் போட்டு பெருக்கிப் பார்த்தால் 29 சதவிகிதம் உழவர்களுக்காக மின்சாரம் ஒதுக்கப்படுகிறது என்பது மாறி 10 சதவிகிதம் 12 சதவிகிதத்துக்கு மேல் உழவர்களுக்கு நாம் மின்சாரம் தரவில்லை என்ற நிலை வந்துவிடும். இதற்கான ஆய்வுகளை நடத்துவதற்கு புரட்சித் தலைவி தற்போது ஆய்ந்து வருகிறார். எப்படிப்பட்ட தவறுகள் எல்லாம் மின்வாரியத்திலே கடந்த காலத்தில் அதிகமாக நடந்திருக்கிறது என்பதற்கு மேலும் ஒரு உதாரணம். வெளிமாநிலங்களிலிருந்து பொருள்களை வாங்குவதை அதிகமாக ஊக்குவித்திருக்கிறார்கள். அந்த G.O.75 என்று சொல்லக்கூடிய அந்த மந்திரக்கோலை கையிலே வைத்துக்கொண்டு, முறைகேடுகளும் தவறுகளும், எண்ணற்ற அளவிலே கடந்த கால ஆட்சியிலே நடந்துவிட்டது. ஒருவேளை அவையில் இருக்கின்ற உறுப்பினர்களுக்குத் தெரியாமல் இருந்தால்கூட நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக இதை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். பத்திரிகைகளில் நீங்கள் பார்த்திருப்பீர்கள் Small Scale Industries Association ஒரு statement–ஐ, அறிக்கையை விட்டார்கள். வெளிமாநிலங்களிலேயிருந்து, குறிப்பாக பஞ்சாப் மாநிலத்திலிருந்து conductors வாங்குகிற காரணத்தால் அந்த Aluminium conductors வாங்குகிற பணியிலே ஈடுபட்டதிலே பல நூறு கோடி ரூபாய் ஊழல் நடந்திருக்கிறது. அதை நாங்கள் ஆய்வு செய்து வருகிறோம்.

பிற்பகல் 5-40

அதைப்போலவே, புரட்சித் தலைவி ஆட்சிக்காலத்திலே டிரான்ஸ்மிஷன்-அந்த மின் விநியோகப் பணிகளுக்காக வாங்குகிற பொருட்கள்- புரட்சித் தலைவி ஆட்சிக்காலத்திலே வாங்கியது. தமிழகத்திலே 666 கோடி ரூபாய்க்கு வாங்கினார்கள். தமிழகத்திலே கிட்டாத பொருட்கள், இங்கு உற்பத்தியாகாத பொருட்கள் 370 கோடி ரூபாய்க்கு பிற மாநிலங்களிலேயிருந்து வாங்கப்பட்டன. ஆனால், தி.மு.க. ஆட்சிக் காலத்திலே 1,232 கோடி ரூபாய்க்கு அந்த Transmission-க்கு வேண்டிய பொருட்களை வெளி மாநிலங்களிலேயிருந்து வாங்கியிருக்கிறார்கள். அதுவும் தரக்குறைவான பொருட்களை வெளி மாநிலங்களிலேயிருந்து வாங்கியிருக்கிறார்கள். இதனால் ஒருபுறம் தரக்கேடு, இன்னொருபுறம் தரக்கேடான பொருட்கள் அடிக்கடி பழுதாகி விடுகிற காரணத்தால் Recurring expenditure அரசுக்கு இழப்பு என்ற நிலையை கடந்த காலத்திலே உருவாக்கியிருக்கிறார்கள். அதைப்போலவே, 1,232 கோடி ரூபாய்க்கு வெளி மாநிலங்களிலேயிருந்து வாங்கியவர்கள், தமிழகத்திலே வெறுமனே 813 கோடி ரூபாய்க்கு மட்டுமே வாங்கியிருக்கிறார்கள் என்பதனைச் சொல்ல விரும்புகிறேன். புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில், தமிழ்நாட்டிலே கிட்டாத பொருட்கள் 370 கோடி ரூபாய்க்கு வெளி மாநிலங்களிலேயிருந்து வாங்கினார்கள். தமிழகத்திலே 666 கோடி ரூபாய்க்கு இங்குள்ள பொருட்களை வாங்கினார்கள். ஆனால் தி.மு.க. ஆட்சிக் காலத்திலே, கடந்த 4 ஆண்டு காலத்திலே 1,232 கோடி ரூபாய் வெளி மாநிலங்களிலேயிருந்து வாங்கி, தமிழகத்திலே வெறுமனே 813 கோடி ரூபாய்க்கு மட்டுமே வாங்கினார்கள். இதன்மூலமாக, இங்குள்ள சிறுதொழில்களுக்கு இன்னலைத் தந்தார்கள். வருவாய் இழப்பினைத் தந்தார்கள், வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தொழிலாளர்களுக்கு உருவாக்கினார்கள் என்பதனை அவை உணர வேண்டும் என்பதற்காக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக இதை நான் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போலவே சிமென்ட். நாட்டிலே பணப் புழக்கம் இல்லை, பணப் புழக்கம் இல்லை என்று நாம் சொல்வதற்கு ஒரு முக்கியமான காரணம் சிமென்ட். புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில் பணம் தங்குதடையின்றி எங்கு பார்த்தாலும் இருந்தது. பணத் தட்டுப்பாடே இல்லை. பெட்டிக் கடைக்காரருக்கும் பணம் கிடைத்தது. காய்கறி வியாபாரிக்கும் பணம் கிடைத்தது. எந்தத் தொழில் புரிபவருக்கும் பணம் கிடைத்தது. உழைக்கும் மக்களுக்கும் பணம் கிடைத்தது.



பொருளாதாரம் செம்மையாக இருந்தது. புரட்சித் தலைவி அவர்களுடைய செம்மையான பொருளாதார அணுகுமுறை காரணமாக. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், கடந்த 5 ஆண்டுக்கால ஆட்சியில், அந்த ஆட்சி, மக்களைப் பற்றி கவலைப்படாத ஆட்சியாக இருந்த காரணத்தால் சுயநலக் கொள்கைகள் சிலவற்றை நடைமுறைப்படுத்தி ஆதாயத்தோடு அவற்றைச் செயல்படுத்திய காரணத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் பணத் தட்டுப்பாட்டை, பணப் புழக்கமின்மையை தமிழகத்திலே உருவாக்கிவிட்டது அதற்கு ஒரு உதாரணம்தான் சிமென்ட். சிமென்ட் ஒரு நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சியில் எத்தகைய பெரிய பங்கினை வகிக்கிறது என்பது நீங்கள் அனைவரும் அறிந்த ஒன்று. கட்டட வேலை ஒரு மிகப் பெரிய பொருளாதார முன்னேற்றத்தை உருவாக்கக்கூடிய ஒன்று. தி.மு.க. ஆட்சிக் காலத்திலே கட்டட வேலையே இல்லையென்ற ஒரு அவலநிலையை உருவாக்கிவிட்டது, உருவாக்கப்பட்டு விட்டது. கட்டடங்கள் கட்டப்படவில்லை, கட்டடத் தொழிலாளர்களுக்கும் வேலை கிட்டவில்லை. பொருளாதார முடக்கம் ஏற்பட்டு விட்டது என்ற நிலை, இலட்சக்கணக்கான கட்டடத் தொழிலாளர்கள் வேலையில்லாமல் வேலையில்லா திண்டாட்டத்தால் தத்தளிக்கின்ற வேதனையான ஒரு சூழ்நிலை சிமென்ட் கொள்கை மூலமாக கடந்த ஆட்சியாலே ஏற்படுத்தப்பட்டுவிட்டது. புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்திலே வெளிச்சந்தையிலே 1996-ல் விற்கப்பட்டது வெறுமனே ஒரு மூட்டை சிமென்ட் 70 ரூபாயிலேயிருந்து 75 ரூபாய்க்கு. தற்போது நாங்கள் ஒரு ஆய்வினை நடத்தியிருக்கிறோம்.

பிற்பகல் 5-45

உங்களுக்கும்கூடத் தெரியும். சிமென்ட்டைப் பொறுத்தவரையில் அதற்கு மூலப்பொருள் Lime stone ஒன்றுதான். அடுத்து Fuel. Lime stone-ஐப் பொறுத்தவரைக்கும் அரசு நிலத்தை Lease-லே கொடுத்து விடுகிறோம் சிமென்ட் தொழிற்சாலைகளுக்கு. Cost of production cannot get increased year by year for the cement factory. அப்படி ஆக முடியாது. அப்படியிருக்கின்றபோது சிமென்ட்டினுடைய உற்பத்திச் செலவு அதிகமாகிவிட்டது என்று டான்செம் மூலமாகவேகூட ஒரு தப்பான கணக்கை உருவாக்கி, வேண்டிய அதிகாரிகளை வைத்து அப்படிப்பட்ட ஒரு கணக்கை உருவாக்கி, அதையும் ஆதாரமாகக் கொண்டு வெறுமனே 60 ரூபாய் 65 ரூபாய், உச்சகட்டமாக 70 ரூபாய் per bag, ஒரு மூட்டை சிமென்ட் உற்பத்திச் செலவு என்றிருப்பதை மூட்டைக்கு 187-லேயிருந்து 200 ரூபாய் வரைக்கும் விற்கக்கூடிய ஒரு மிக மோசமான ஒரு

முறைகேட்டை (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திலே தவழவிட்டார்கள், கடந்த 5 ஆண்டுகாலத்திலே. நல்ல உள்ளம் படைத்தவர்கள்கூட ஏன் அதை தட்டிக் கேட்காமல் விட்டுவிட்டார்கள் என்று உண்மையிலேயே இந்த அவையே வேதனைப்பட வேண்டும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நான் வேதனைப்படுகின்றேன்.

இன்று தமிழகத்திலே உற்பத்தியாகிற ஒட்டுமொத்த சிமெண்ட் 86 இலட்சம் டன். ஆந்திர மாநிலத்திலிருந்து மட்டும் 26 இலட்சம் டன் சிமெண்ட் தமிழகத்திற்குத் திடீரென கடந்த 3 ஆண்டுகாலமாக வந்துவிட்டது. தமிழகத்தைச் சேர்ந்த ஒரு சிமெண்ட் முதலாளி ஒரு காலத்திலே அந்தக் குறிப்பிட்ட சிமெண்ட் தொழிற்சாலையிலிருந்து வெறுமனே 5 சதவீதப் பங்கை மட்டும் வைத்துக்கொண்டு அதிலிருந்து வெளியேறி சிங்கப்பூருக்குச் சென்று வாழ்ந்து கொண்டிருந்த ஒருவர் திடீரென்று 3 சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு கிட்டத்தட்ட 25 இலட்சம் டன் உற்பத்தி ஆகக்கூடிய சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு ஏகபோக அதிபதியாகிவிட்டார். யாருடைய பினாமிப் பணம் அந்த முதலாளிக்குக் கிடைத்தது என்று தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) திடீரென அவர் பெரும் பணக்காரராகிவிட்டார். அத்தோடு அவர் நின்றுவிடவில்லை. நலிந்த நிலையிலே இருந்தவர் கடந்த 4 ஆண்டுகாலத்தில் தமிழ்நாட்டிலே அதிகப்படியான சிமெண்டை உற்பத்தி செய்யக்கூடிய முதலாளி என்ற உயர்வு நிலைக்குத் திடீரென வந்து, பக்கத்திலே இருக்கிற ஆந்திர மாநிலத்திற்குச் சென்று அங்கே இருக்கின்ற எர்ரகண்ட்லா சிமெண்ட், ராசி சிமெண்ட், கோரமண்டல் சிமெண்ட், பிரியங்கா சிமெண்ட் என்று சொல்லக்கூடிய அந்த சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கெல்லாம் அதிபதியாகிவிட்டார். அவர் அப்படி அங்கு அதிபதியாகி அங்கு உற்பத்தியாகக்கூடிய சிமெண்டை அங்கேயே விற்றுக்கொண்டிருந்தாலும்கூடப் பரவாயில்லை. அந்த சிமெண்ட்டை அந்த 25 இலட்சம் டன் சிமெண்டையும் தமிழகத்திற்குக் கொண்டுவந்து விடுகிறார். இங்கு தமிழகத்திற்குக் கொண்டுவந்ததோடு அவர் நின்று விடவில்லை. தமிழகத்திலேயிருக்கிற ஏனைய மற்ற சிமெண்ட் தொழிற்சாலைகளைச் சேர்ந்தவர்களிடம் செல்கிறார்கள், அங்கு சென்று பார்க்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட சிமெண்ட் தொழிற்சாலையைச் சேர்ந்தவர்கள் நல்ல முறையிலே நியாயத்தோடு எங்களுக்கு இலாபம் வந்தால் போதும் என்று சொல்கிறார்கள். அப்படி நீ சொன்னால், உன் சிமெண்ட் தொழிற்சாலையை மூடவேண்டிவரும் என்று சொல்கிறார்கள். சொல்லிவிட்டு ஆந்திராவிலிருந்து சிமெண்டைக் கொண்டுவந்து மிகக் குறைந்த விலைக்குத் தருவதாகச் சொல்லி ஒரு ஏற்பாட்டை ஆரம்ப



கட்டத்திலே உருவாக்குகிறார்கள். இங்கிருக்கின்ற மீதமுள்ள சிமெண்ட் தொழிற்சாலை அதிபர்களெல்லாம் பயந்துபோய் என்ன செய்வது என்று தெரியாமல், அதிகாரத்திற்கு அஞ்சி, மத்திய அரசிலே பொறுப்பிலே இருக்கின்ற ஒருவர் இவர்களை மிரட்டுகிறார்; மாநில அரசு மூலமாகவும் இவர்கள் மிரட்டப்படுகிறார்கள். இந்த நிலையிலே 100 ரூபாய்க்கு விற்றுக்கொண்டிருந்த சிமெண்டை 90 ரூபாய், 80 ரூபாய் மூட்டை என்று விற்றுக் கொண்டிருந்ததை, 180 ரூபாய், 200 ரூபாய் என்ற விலைக்கு விற்பதற்கு உருவாக்கப்படுகிற அந்த 'cartel'–க்கு வேறு வக்கின்றி, வழியில்லாமல் வேதனையோடு அவர்களும் ஒத்துக்கொள்ளக்கூடிய ஒரு கட்டாயச் சூழ்நிலையை ஆட்சி இயந்திரத்திலே அதிகாரத்திலே இருக்கின்றவர்கள் ஆதாய நோக்கோடு, கட்டாய அணுகுமுறைகளை மேற்கொண்ட காரணத்தினால் இந்த அவல நிலை தமிழகத்திலே உருவாகியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல; அந்த திடீர் பணக்காரரான அந்த சிமெண்ட் ஆலை அதிபர் இருக்கிறாரே அவருக்கு வேண்டிய அதிகார பீடத்திலே இருக்கிறவர்கள் மீதமுள்ள சிமெண்ட் தொழிற்சாலை அதிபர்களைக் கூப்பிட்டு மிரட்டுகிறார்கள். சிமெண்ட் தொழிற்சாலையைப் பொறுத்தவரைக்கும், if they produce 75% of their installed capacity, it can be considered as 100% production. காரணம், 25% fly ash அவர்கள் அதில் சேர்த்துக்கொள்ளலாம். 100 சதவீதம் உற்பத்தி செய்தால் 125 சதவீதம், அதாவது 25 சதவீதம் fly ash என்ற முறையிலே உற்பத்தி செய்ய முடியும்.

பிற்பகல் 5—50

ஆனால் அவர்களைக் கூப்பிட்டுச் சொல்கிறார்கள். எங்களுடைய சிமெண்ட் ஆந்திர மாநிலத்திலேயிருந்து வர இருக்கிறது. அதை நாங்கள் இங்கே விற்க இருக்கிறோம். எனவே, அதற்கு வகை செய்கின்றவகையில் உங்களுக்கு 90 ரூபாய், 80 ரூபாய்க்கு விற்கின்றபோது லாபம் குறைவுதானே, நீங்கள் அதை 180 ரூபாய் 200 ரூபாய் என்று Cartel–ல் மெம்பராகச் சேர்ந்து விற்றுக்கொள்ளுங்கள். அதன்மூலம் பல கோடி ரூபாய் இலாபம் கிடைக்கும்; பெற்றுக் கொள்ளுங்கள். ஆனால், எங்கள் சிமெண்ட்டை விற்பதற்கு உதவியாக இங்கே இருக்கின்ற, உற்பத்தியாகின்ற, தமிழகத்தில் உற்பத்தியாகின்ற சிமெண்ட் உற்பத்தியை உங்கள் தொழிற்சாலைகளில் நீங்கள் குறைத்துக்கொள்ள வேண்டும். நீங்கள் 8 இலட்சம் டன் உற்பத்தி செய்கின்ற ஒரு தொழில் அதிபரைச் சந்தித்து, நீங்கள் 4 இலட்சம் டன் மட்டும்தான் உற்பத்தி செய்யவேண்டும். 80 ரூபாய்க்கு விற்கிற சிமெண்டை நீங்கள் 180 ரூபாய்க்கு விற்றுக்கொள்ளுங்கள். 4 இலட்சம் டன் மட்டும்

உற்பத்தி செய்யுங்கள், மீதி 4 இலட்சம் டன்னை நாங்கள் ஆந்திராவிலிருந்து கொண்டுவருவோம். இப்படிப்பட்ட (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு முறைகேடு, இப்படிப்பட்ட ஒரு கேவலமான, கீழ்த்தரமான, விஞ்ஞான ரீதியிலான ஊழல் (மேசையைத் தட்டும் ஒலி) விஞ்ஞான ரீதியிலான கொள்ளை, இந்தியத் துணைக் கண்டத்திலேயே எந்த மாநிலத்திலேயும் நடந்தது இல்லை. இது தமிழகத்திலே முதன் முறையாக நடந்தது. இதையொட்டி 86 இலட்சம் டன் சிமெண்ட் உற்பத்தி ஒரு ஆண்டுக்கு ஆகிறது. கணக்குப் போட்டுப் பாருங்கள். ஒரு மூட்டைக்கு 120 ரூபாய், 130 ரூபாய்க்கு வேண்டாம். அவர்கள் உற்பத்திச் செலவிலிருந்து மூட்டைக்கு 20 ரூபாய் இலாபம் வைத்துக்கொண்டாலும்கூட 100 ரூபாய் என்று வைத்துக்கொண்டால் 86 இலட்சம் டன் உற்பத்தி ஆகிறபோது 1720 கோடி ரூபாய். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களைக் கவனிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். 1720 கோடி ரூபாய் மக்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் நிச்சயம் கவனிப்பார். சிமெண்ட் வியாபாரமே செய்தவர்கள். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** கவனித்தால் போதாது. அவர் போர்க்கொடி எழுப்பியிருக்க வேண்டும். 86 இலட்சம் டன் சிமென்டை ஒரு டன்னுக்கு 2,000 ரூபாய் இலாபம். ஒரு மூட்டைக்கு 100 ரூபாய், ஒரு மூட்டை என்பது 50 கிலோ, அப்போது ஒரு டன்னுக்கு 2,000 ரூபாய். 86 இலட்சம் டன்னுக்கும் ஆண்டு ஒன்றுக்கு 1720 கோடி ரூபாய் மக்களினுடைய பணம் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களுடைய பணம் கொள்ளையடிக்கப்பட்டதே, சுரண்டப்பட்டதே, விஞ்ஞான ரீதியாகத் திருடப்பட்டதே (மேசையைத் தட்டும் ஒலி) இதை இந்த அவை உணர வேண்டும். தற்போதும் அந்தக் கொடுமை நடந்து கொண்டேயிருக்கிறது. இதை நாம் தடுத்தாக வேண்டும். கட்சி பேதங்களுக்கு அப்பால் நின்று ஒன்றுசேர்ந்து நாம் தடுக்கவில்லை என்றால், தமிழகத்தினுடைய பொருளாதாரம் ஒரு க்ஷீணதிசையை அடைந்து விடக்கூடிய அபாய நிலைக்கு வந்துகொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 1720 கோடி ரூபாய் பணம் தமிழகத்து மக்களுடைய பணம். அதிலே கிட்டத்தட்ட 860 கோடி ரூபாய் பணம் திடீரென்று பணக்காரரான 8 ஆலைகளுக்கு இந்தியாவிலே சொந்தக்காரர் ஆகிவிட்ட அந்த அதிபருக்குச் சென்று சேருகிறதே, அவருக்கு வேண்டியவர்களுக்குச் சென்று சேருகிறதே, Cartel–க்கு உதவுகிற அதிகார பீடத்திற்குச் சென்று சேருகிறதே என்று ஒரு வேதனையான நிலையை நாம் உணர வேண்டும். 1 கோடி, 2 கோடி அல்ல, அந்த 860 கோடி ரூபாய் தமிழகத்திற்கு உள்ள



பணம், அது ஆந்திர மாநிலத்திற்குச் சென்றுவிடுகிறதே, எப்படி பணத் தட்டுப்பாடு தமிழகத்திற்கு இல்லாமல் இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் தமிழகத்திலே பணத் தட்டுப்பாடு ஏற்படுகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த 1720 கோடி ரூபாய் பணம் ஆண்டு ஒன்றுக்கு இந்த சிமென்ட் ஆலைகளுக்குச் செல்கிறதே அந்தப் பணம் மக்களுடைய பணம். மக்களின் கையிலே அந்தப் பணம் இருக்குமேயானால், தாராளமாக பண நடமாட்டம் இருக்கும். பொருளாதார செம்மை இருக்கும். உங்கள் ஆட்சிக்குக்கூட இத்தகைய Revenue deficit ஏற்பட்டிருக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) இதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இதை மாற்றுவதற்கு முன்னாள் முதலமைச்சர் அவர்கள்கூட சிமெண்ட் விலை குறைய வேண்டும் என்ற நோக்கோடோ என்னவோ வெளிநாட்டிலிருந்து சிமென்டை இறக்குமதி செய்யலாம் என்று சொல்லியிருந்தார். பேரவைத் தலைவர் அவர்களே வேடிக்கைக்காகச் சொன்னார் என்று நான் எண்ணுகிறேன். தெரிந்து சொன்னாரோ, தெரியாமல் சொன்னாரோ அல்லது இந்த சிமெண்ட் விவகாரத்தில் அச்சாணியாக ஆணிவேராக இருக்கின்ற அந்த அதிகார பீடம் அவருக்குக் கட்டுப்படாத நிலையில் இருந்ததோ என்னவோ தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். ஒன்றை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். என்ன செய்தார்கள் தெரியுமா, மையத்திலே ஆட்சியை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நமக்கு வேண்டிய நிதியை வாங்குவதற்குப் போராட தயக்கப்படுகிறார்கள்.

*பிற்பகல் 5–55*

மாநில சுயாட்சி கோருகிறவர்கள் மாநிலத்திற்கு அதிக நிதி அதிகாரம் வேண்டும், சர்க்காரியா கமிஷனுடைய பரிந்துரை ஏற்கப்படவேண்டும், இராஜமன்னார் கமிட்டியினுடைய பரிந்துரை ஏற்கப்பட வேண்டும் என்று வாதாடுவதற்குப் பதிலாக தமிழகத்திலே இருக்கின்ற அந்த திடீர் சிமெண்ட் முதலாளிக்குச் சொந்தமான அந்த 8 சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு ஊக்கம் தருகின்றவகையில் import cement–க்கு import duty 25 per cent போட்டுவிட்டார்கள். எண்ணிப்பார்க்க வேண்டும் அவையோரே என்பதற்காகச் சொல்கிறேன், பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாகச் சொல்லிக்கொள்கிறேன். எந்தவகையிலும் ஆந்திராவைச் சேர்ந்த மாண்புமிகு திரு. சந்திரபாபு நாயுடுவாலும் ஒன்றும் செய்ய முடியாது; கர்நாடக முதல்வர் மாண்புமிகு திரு. கிருஷ்ணாவாலும் ஒன்றும் செய்ய முடியாது; வடபுலத்து முதலமைச்சர்களாலும் ஒன்றும் செய்ய முடியாது.

யாராலும் ஒன்றும் செய்ய முடியாது. அந்த அளவிற்கு மைய ஆட்சியிலே அசைக்க முடியாத ஒரு நிலையில் இருந்துகொண்டு அவர்கள் செய்கின்ற அட்டூழியங்கள் என்னவென்றால் (மேசையைத் தட்டும் ஒலி) சிமெண்ட் விலையை, ஆட்சி இயந்திரம் நினைத்தாலும்கூட குறைக்க முடியாது என்ற ஒரு நிலையை இந்த சுதந்திர பாரதத்திலே அரசியல் சட்டத்தையும் மீறி, அதையும் அவர்கள் கையிலே எடுத்துக்கொண்டு ஆட்டிப் படைக்கின்ற ஒரு அவல நிலை இந்தியாவுக்கே ஒரு சவாலாக இருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த import duty 25%, why it was imposed? அப்படி இறக்குமதி சிமெண்ட் வந்துவிட்டால் ஆண்டு ஒன்றுக்கு சுரண்டுகிறார்களே அந்தக் கும்பல் மட்டும் 860 கோடி ரூபாய், அந்தச் சுரண்டலுக்கு வழி இல்லாமல் போய்விடும். இதை தமிழகத்தோடு விட்டார்களா? வடபுலத்தில் எதிர்ப்புக் குரல் வந்தது. உடனே ஒரு தந்திரத்தைக் கையாண்டார்கள். வடபுலத்தில் இருக்கின்ற சிமெண்ட் உற்பத்தியாளர்களையெல்லாம் அழைத்து அவர்களையும் மிரட்டினார்கள். அவர்களை மிரட்டி, the cartel that has started first in Tamil Nadu has been later extended to the whole country. இந்தியத் துணைக் கண்டத்திலே உள்ள எல்லா மாநிலங்களுக்கும் இந்தக் cartel–ஐ விரிவுபடுத்தி, சிமெண்ட் தொழிற்சாலைகளுக்குச் சொந்தமானவர்களும் கொள்ளை அடிக்கிறார்கள். இந்தக் cartel உருவாக்கிய அதிகாரக் கும்பலும் அளவு கடந்து கொள்ளை அடிக்கின்ற ஒரு வேதனையான நிலை. நாள் ஒன்றுக்குக் கிட்டத்தட்ட 3 கோடி ரூபாய் கொள்ளையடிக்கப்படுகிறது. இந்த அவல நிலையை இந்தியத் துணைக் கண்டத்திலே உருவாக்கியிருக்கிறார்கள். அதைச் சரிசெய்தாலே நமக்குள்ள deficit budget பெரும்பான்மையாகக் குறைந்துவிடும். ஆகையால் இந்த முறைகேட்டை, இந்த விஞ்ஞான ரீதியான ஊழலை, மாநில சுயாட்சி வேண்டுமென்று கேட்டுக்கொண்டு ஒருபுறம் மைய அரசிலே பங்கேற்றுக்கொண்டு, சுய ஆதாயத்திற்காகச் செயல்படுகிற (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தமிழினத் துரோக அணுகுமுறையை தமிழக மக்களுக்கு எதிராக, மக்கள் நலனுக்கு எதிராக, தமிழக மக்களுடைய ஒட்டுமொத்த வளர்ச்சிக்குக் குந்தகமாகச் செயல்படுகின்ற இந்த வேதனையை அவை அறிய வேண்டும் என்பதற்காக இதனை நான் அவைக்கு எடுத்துச்சொல்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிமெண்ட் விலை அளவுக்கு அதிகமாக தமிழகத்திலே அப்போது விஞ்ஞான ரீதியிலே ஏற்றப்பட்டது குறித்து நாங்கள் இந்த அவையிலே ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்து, உடனடியாக அது கட்டுப்படுத்தப்பட வேண்டுமென்றும் தமிழக அரசு அதற்குண்டான



நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் வற்புறுத்தி, வற்புறுத்தியதோடு மட்டுமல்லாமல் நாங்களே எங்களுடைய தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக சத்தியமூர்த்தி பவனிலே 200 ரூபாய், 180 ரூபாய் என்று சிமெண்ட் மூட்டைகள் விற்றுக்கொண்டிருந்த நேரத்தில் 120 ரூபாய்க்கு எங்களால் விற்க முடியும் என்று நாங்கள் அதைச் சுட்டிக்காட்டிய பிறகு அப்போதிருந்த முதலமைச்சர் அதற்கு வணிக வரி கட்டினார்களா என்றெல்லாம் எங்களிடம் கேட்டு, எங்களையும் அன்று அவர்கள் இப்படியெல்லாம் கேட்டு, எங்களுடைய ஆர்வத்தைக் குறைத்தார்களேயொழிய, நாங்கள் வியாபாரிகள் அல்ல. ஒரு போராட்டம் நடத்தி, அதற்கு எடுத்துக்காட்டாக அதைச் செய்தோம். இந்த அளவுக்கு தவறு செய்ததை நீங்கள் கண்டுபிடித்திருக்கிறீர்கள். கண்டுபிடித்து யார் எல்லாம் தவறு செய்தார்களோ, தமிழகத்தினுடைய சொத்துக்களையெல்லாம் சுரண்டினார்களோ, அவர்கள்மீது (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து, வழக்குப் பதிவு செய்து, நீங்கள் மீண்டும் அந்தப் பணத்தை–deficit budget, deficit budget என்று சொல்லிக் கொண்டிருக்கிற உங்களுக்கு நிச்சயமாக அது நிம்மதிப் பெருமூச்சு கிடைக்கக்கூடிய அளவிலே-அந்தப் பணத்தை மீட்டுத் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஏற்கெனவே சொல்லிக் கொண்டிருந்தேன். எங்களுக்கு யாரையும் தண்டிக்க வேண்டுமென்பது நோக்கம் அல்ல. தண்டிக்கப்படுகின்ற தமிழக மக்களுக்கு விடுதலையைப் பெற்றுத்தர வேண்டுமென்பதே புரட்சித் தலைவி அவர்களுடைய எண்ணம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நோக்கோடு நாங்கள் செயல்களை மேற்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மைய அரசுக்கும் நாம் இதை எடுத்துச் சொல்லியாக வேண்டும். மைய அரசு இதை உணர்ந்தாக வேண்டும். ஏதோ, அவர்கள் ஆட்சியைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காக அந்த 25 சதவிகிதம் import duty சிமெண்ட்டுக்கு போட்டு, இப்படிப்பட்ட ஒரு பகற்கொள்ளை நடப்பதே மத்திய அரசுக்குத் தெரியாத ஒன்றாக இருக்க முடியாது. அவர்கள் ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக ஒருவேளை அதை இன்னும் தடுக்காமல் இருக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. இந்த நிலை மாற வேண்டும். இந்தியத் துணைக் கண்டத்திலே கட்டடத் தொழிலாளர்களும் கட்டடத் தொழிலும் மாநிலத்தினுடைய ஒட்டுமொத்த வருவாயும் பெரும் இழப்புக்கும், பாதிப்புக்கும் உள்ளாக்கப்பட்டிருக்கின்ற

இந்த cartel, சட்டத்திற்கெல்லாம் மீறிய cartel, தங்களுக்கு ஏற்றவாறு சட்டத்தை வளைத்துக்கொண்டு செயல்படுத்தப்படுகின்ற cartel. price fixing-லேகூட மாநில அரசுக்கு இந்த அதிகாரம் இல்லை. We cannot regulate the cement price. Essential commodities-ல் சிமெண்டைக் கொண்டுவந்திருக்கிறார்கள். The power is not delegated to the State Government. அதுபோல, சிமெண்ட்டுக்கு Price regulation கொண்டுவருவதற்குக்கூட... (குறுக்கீடு)

*பிற்பகல் 6-00*

**டாக்டர் க. பொன்முடி:** A clarification. குற்றச்சாட்டுக்கு பதில் சொல்லவிடவில்லை என்றால் என்ன அர்த்தம்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** I am not yielding. Excuse me, I am not yielding. Let me reply to the Hon. Member first. I am now replying to the Hon. Member Mr. Gnanasekaran. I am not yielding. (Interruption) You should have ended it.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, உட்காருங்கள். அவர் சிமெண்ட் கொள்ளை அடித்தவர்களைப் பற்றிச் சொல்லுகிறார். நீங்கள் எதற்காக எழுந்திருக்கிறீர்கள்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அதைப் போலவே Price regulation என்பதே (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள், நான் பதில் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அமைதியாக அமர வேண்டும். அவைத் தலைவரின் அனுமதியைப் பெற்றுத்தான் யாரும் எழ முடியும், எழுந்து பேச முடியும். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். உறுப்பினர் திரு. ஞானசேகரன் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் கேட்டதற்கு இன்னும் ஒரு பதிலை நான் சொல்ல விரும்புகிறேன். Price fixation என்பதே மைய அரசினுடைய அதிகாரம். அதற்காக 1989 ஆம் ஆண்டு ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. இந்த சிமெண்ட் cartel-ஐ நியாயப்படுத்த வேண்டும் என்பதற்காக, இந்த சிமெண்ட் cartel-ஐத் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்காக, 1989 ஆம் ஆண்டு கொண்டுவந்த அந்த Price regulation சட்டத்திலே price regulate செய்வதற்கு மைய அரசுக்கு அதிகாரம் இருக்கிறது என்று இருக்கிறது. ஆனால், திடீரென்று சிமெண்ட்டுக்கு price regulate



செய்யக்கூடிய அந்த விதியைக்கூட ரத்து செய்துவிட்டார்கள். எனவே, மைய சட்டத்திலே சிமெண்ட் price regulate செய்யக்கூடிய அந்த விதியை ரத்து செய்துவிட்டார்களே, அந்த விதியை மீண்டும் மைய அரசு கொண்டுவந்தால்தான் Price regulation for cement can be brought into effect என்ற நிலையிலே, ஒரு திட்டமிட்ட சதியாக, அகில இந்திய அளவிலே மைய அரசு உதவியோடு இது மேற்கொள்ளப்படுகின்ற காரணத்தால் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இவற்றை நாங்கள் ஆய்ந்து கொண்டிருக்கிறோம். தக்க நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். அதைப்போலவே, முன்னாள் முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கையில்...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, சந்தேகம் இருந்தால் கேளுங்கள். அவர் சிமெண்ட் கொள்ளையைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறார். விரிவாக, விளக்கமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார். அதிலே மத்திய அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப்பற்றிச் சொல்லுகிறார்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே அரசும் சிமெண்ட் தொழிற்சாலையை நடத்திக் கொண்டிருக்கிறது. Cost of production மிகவும் குறைவாக இருக்கிறது. நீங்கள் scientific-ஆக, அறிவியல் ரீதியாக தமிழ்நாடு அரசு தயாரிக்கின்ற சிமெண்ட்டை குறைந்த விலைக்குக் கொடுக்கக்கூடாதா? அப்போதுதான் அதிகாரிகளைச் சரிப்படுத்தினார்கள். நீங்கள் வந்து 3 மாதங்கள் ஆகிறதே, அதைச் சரிப்படுத்தி, விலையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கக்கூடாதா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நல்ல கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். இந்த Cement cartel செம்மையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும், விஞ்ஞான ரீதியாக ஊழலுக்கு உறுதுணையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடுதான், நான் ஏற்கெனவே சொன்னதுபோல, 1989 ஆம் ஆண்டு மைய சட்டத்திலே cement price regulation-க்குள்ள விதிகளை ஒருபுறம் தளர்த்திவிட்டார்கள். இன்னொருபுறம் சிமெண்ட் import-க்கு 25 சதவிகிதம் duty போட்டுவிட்டார்கள். இன்னொருபுறம் TANCEM-லே அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டிய அதிகாரிகளை வைத்து cost of production-ஐ அதிகமாகக் காட்டி, அதை ஒரு காரணமாக

வைத்து இந்த ஊழலைச் செய்திருக்கிறார்கள். இதன்மீது நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

பிற்பகல் 6-05

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றாக இயங்கிக்கொண்டிருந்த, இலாபத்தில் இயங்கிக்கொண்டிருந்த TANCEM நிறுவனத்தை வேண்டுமென்றே முந்தைய ஆட்சியாளர்கள் தங்களுக்கு வேண்டிய ஓர் அதிகாரியை அதற்குப் பொறுப்பாளராக நியமித்து, நன்றாக இயங்கிக்கொண்டிருந்த நிறுவனத்தை வேண்டுமென்றே நலிவடைந்ததாக ஆக்கிவிட்டார்கள். TANCEM was deliberately rendered sick. அதற்கு என்ன காரணம் என்றால், இந்த cement cartel--க்கு அச்சாணியாகத் திகழ்ந்து கொண்டிருப்பவர், TANCEM-ஐயும் sick ஆக்கி, அதை வாங்கிக்கொள்ள வேண்டும், அரசிடமிருந்து வாங்கிக்கொள்ள வேண்டுமென்று திட்டமிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இத்தனை சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு அதிபதியாக இருக்கிற ஒருவர் TANCEM தொழிற்சாலையை வாங்க வேண்டுமென்று ஏன் ஆசைப்பட்டார் என்ற கேள்வி எழக்கூடும். நியாயமான கேள்வி. சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு, உற்பத்திக்கு அடித்தளமே lime stone கிடைக்கின்ற நிலங்கள்தான். தமிழ்நாட்டிலேயே ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் lime stone lands TANCEM-க்குத்தான் சொந்தமாக இருக்கின்றன. TANCEM-ஐ வாங்கினால்தான் lime stone இருக்கின்ற அந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களையும் கையகப்படுத்த முடியும் என்பதற்காகவே, (மேசையைத் தட்டும் ஒலி) வேண்டுமென்றே திட்டமிட்டு, TANCEM நலிவடைந்த இயக்கமாக ஆக்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் குடிநீர்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். பதிலுரை சொல்கிறபோது உறுப்பினர்கள் குறுக்கிட வேண்டாம். அமைச்சர் அவர்கள் உரையை முடித்ததற்குப்பிறகு, விவாதத்திலே கலந்துகொண்ட உறுப்பினர்கள் சந்தேகத்தைக் கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கிடையிலே சென்னைக் குடிநீர் பற்றி முற்பகலிலே பேச முற்பட்டபோது, சில கருத்துப் பரிமாற்றங்கள்



ஏற்பட்டன. அப்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள். 'நான் அப்படிச் சொல்லவில்லை, தற்காலிகமாகத்தான் தண்ணீர் அப்போது விடப்பட்டது' என்று பொருள்படும்படிக் கூறினார்கள். முரசொலி பத்திரிகையிலே வந்த செய்தியை தங்கள் அனுமதியோடு நான் இப்போது படிக்கின்றேன். உங்களுக்குத் தருகிறேன். அதிலே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். "முதல்வர் கலைஞர் அவர்களுடைய முயற்சியால், இந்நிலையில் சென்ற ஆண்டு நமது முதல்வர் கலைஞர் அவர்களுடைய பெருமுயற்சியாலும், ஆழ்ந்த ஈடுபாட்டின் காரணத்தாலும், ஆந்திர முதல்வர் அவர்கள் மிகுந்த ஒத்துழைப்பைத் தந்து, கால்வாய்ப் பணிகளை விரைந்து முடித்து, தண்ணீர் தமிழகத்திற்கு 1996 ஆம் ஆண்டு செப்டம்பர் 29 அன்று வந்து சேர்ந்தது." அதைச் சொல்லிவிட்டு மீண்டும் சொல்கிறார், "அதைத் தொடர்ந்து பெரும் குழாய்க் கற்கள் நிறைந்த பகுதிகளில் செல்கின்றன. எனவே 91 கிலோமீட்டருக்குக் கீழே, 152 கிலோமீட்டர் வரை கசிவு மண் இழப்பு ஏற்படுகிறது. இவையெல்லாம் ஏற்பட்டபோது, இவையெல்லாம் சரி செய்யப்பட்டு, இப்போது கட்டுப்படுத்தப்பட்டு தண்ணீர் நமது எல்லையில் வந்து பாய்கிறது. இரு மாநிலங்களுக்கும் இடையில், குடிநீருக்கென ஏற்பட்டு, மிக விரைவில் பல இடர்பாடுகளுக்கிடையில் முடிக்கப்பட்ட இந்தத் திட்டம் தேசிய ஒருமைப்பாட்டிற்கு ஒரு பெரும் முன்னோடியாகும்" என்று கூறியிருக்கிறார்.

"1996 ஆம் ஆண்டு செப்டம்பரில் ஏற்பட்ட, அதைத் தொடர்ந்து, இரு மாநில குடிநீர்க் கால்வாய் இணைப்பு, மறுபடியும் சீரமைக்கப்பட்டு, 1997 ஜூலை 4 ஆம் நாள் இரவு 9-00 மணியிலிருந்து தொடர்ந்து சிறப்பாகச் செயல்படுகிறது" என்று அவர் கூறியிருக்கிறார்.

அதுமட்டுமல்ல, 'இந்து' பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. 'Andhra Chief Minister, he was happy that the Krishna Water Project could be completed to the satisfaction of Tamil Nadu, if the States were to abide by...' என்று ஆந்திர மாநில முதலமைச்சர் அவர்களும் இதைச் சொல்லியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, இன்னொன்று, முக்கியமானது. இதுபற்றி தி.மு.க. தலைவர் மாண்புமிகு கருணாநிதி அவர்களும் கூறியிருக்கிறார். "என் திருமண நாளை விட நான் அதிக மகிழ்ச்சியடைந்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக நான் ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறேன். சென்னையில் இன்றுமுதல் குடிநீர் இருமடங்கு வழங்கப்படும்" என்று அவர்களும் கூறியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒன்று. "சென்னை, இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற கிருஷ்ணா நதி நீர் பெறும் விழாவில் வரவேற்புரை ஆற்றிய பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் உணர்ச்சிவசப்பட்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தார்." (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது அவர் பேசியதாவது; "முக்கிய வரலாற்று நிகழ்ச்சிகள் நடைபெறும்போதெல்லாம் நான் திரு. கருணாநிதியின் பக்கம் இருந்துள்ளேன். என் வாழ்க்கை இப்போதே முடிந்துவிட்டாலும் பரவாயில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) என் பரம்பரையின் கடைசிச்சொட்டு இரத்தம் உள்ளவரை அவருக்குத் துணையாக இருப்பேன் என்று இந்த வெற்றி குறித்து கண்ணில் நீர் மல்க துரைமுருகன் கூறினார்." இந்தச் செய்தியும் வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 6-10*

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பொன்னையன் அவர்கள் படித்ததிலேயிருந்து, அவர் என்ன உணர்கிறார் என்று நான் அறிய விரும்புகிறேன். திரு. துரைமுருகன் அப்படி உண்மையாக நம்பித்தான் பேசினார் என்பதிலே அவருக்கு ஒன்றும் சந்தேகம் இல்லை. எனக்கும் சந்தேகம் இல்லை. அப்படி நம்பித்தான் பேசினார். என்ன காரணம் என்றால், கண்டலேறு அணையிலேயிருந்து இங்கே வருவதற்கு வாய்க்கால் இருந்தால் தவிர முடியாது. கண்டலேறு அணைக்கு அப்பால், அந்தப் பகுதியிலே, இரண்டு alternative, ஒன்று நாம் வெட்ட வேண்டிய வாய்க்கால், இன்னொன்று வாய்க்கால் வெட்டாவிட்டால் இன்னொரு வழியாக ஓரளவு தண்ணீர் கிடைக்கக்கூடிய ஒரு வாய்ப்பு. அதனாலே, ஆந்திர முதலமைச்சராக இருந்தாலும் சரி, துரைமுருகனாக இருந்தாலும் சரி, கிருஷ்ணா தண்ணீர் கிடைத்துவிட்டது என்ற நம்பிக்கையுடன் பேசிய காரணத்தாலேதான். அவர் அவ்வளவு உணர்ச்சிவசப்பட்டார். இல்லையென்றால், அப்படி உணர்ச்சிவசப்பட மாட்டார்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்களுக்கு, முடியாத திட்டம் முடிந்துவிட்டதாகத் தகவல் கிடைத்திருக்கும் என்று கருதுகின்றேன். அவர் பேசியிருப்பது, இதிலே திட்டப் பணி முற்றிலும் முடிந்துவிட்டது என்று கூறப்பட்டிருக்கிறது. பத்திரிகையிலே வந்திருக்கிறது. அதற்காகத்தான் நான் சொல்கிறேன்.



**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே என்ன தவறு கண்டுபிடித்தார் என்று எனக்குத் தெரியவில்லை. (கூச்சல்-குழப்பம்) அவர் பேசும்போது நாங்கள் உட்கார்ந்து கேட்டோம். நாங்கள் பேசும்போது, கேளுங்கள். இல்லை, 'ஆய்' என்றால், நானும் 'ஆய்' என்று சொல்லிவிட்டுப் போய்விடுகிறேன். அதிலே ஒன்றும் பெரிது கிடையாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காலையிலே சொன்னபோது, இரண்டு சொன்னார்கள். ஒன்று, கண்டலேறுவிலேயிருந்து வந்தாலும்-கண்டலேறுக்குத் தண்ணீர் கிருஷ்ணாவிலிருந்து தண்ணீர் வந்துதான் கண்டலேறுவிலேயிருந்து வருகிறது என்று சொன்னார்கள்; காலையிலே. Thanks சொன்னேன் Chief Minister-க்கு. ஒத்துக் கொண்டீர்கள். இரண்டாவது அவர்கள் சொன்னார்கள், எல்லாத் திட்டமும் முடிந்துபோய்விட்டது என்று துரைமுருகன் பேசினார் என்றார்கள். "அப்படி இருக்காதுங்க" என்று நான் சொன்னேன். "கொண்டுவந்து காட்டுகிறேன்" என்று சொன்னார்கள். இப்பொழுதுகூட, அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், படிக்கும்போது பார்த்தீர்களென்றால், அந்த கண்டலேறு அணையிலேயிருந்து பூண்டி வரையிலே இருக்கிற கால்வாய்க்கு இடையிலே 122 கி.மீ., அங்கெல்லாம் சில பாறைகள் உடைக்க வேண்டியிருந்தது. அந்தப் பணி முடிந்தது என்று பேசியிருக்கிறார் என்று சொல்கிறார்கள். அது நியாயம்தான். கண்டலேறு முதல் பூண்டி கால்வாய் வரையிலே பல இடங்களிலே அதை உடைக்க வேண்டியிருந்தது. நான் அப்போதுகூடச் சொன்னேன். கே.பி.கெனாலிலிருந்து பார்த்தீர்களென்றால், வழியிலே அப்போது 2 இலட்சத்து 60 ஆயிரம் கன மீட்டர் பாறை உடைக்க வேண்டியிருந்தது. எங்கள் ஆட்சியிலே அதை நாங்கள் உடைத்தோம். 1 - 122 கி.மீ. தூரம் வரையில் இருக்கிற கால்வாய்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், இப்போது நீங்கள் பொதுப் பணித் துறை அமைச்சர் அல்ல, உட்காருங்கள். எதற்கு விளக்கம் சொல்கிறீர்கள்? அமைச்சர் அவர்கள் சொன்னது, வேறு ஒன்றும் பிரச்சினை அல்ல. (குறுக்கீடு) உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள். திரு. துரைமுருகன், அமைச்சர் அவர்கள் சொன்னது, அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்து, எந்தப் பணிகளெல்லாம் முடிந்துவிட்டன என்று நீங்கள் எண்ணி, மகிழ்ந்து, என் வாழ்க்கை இன்றோடு முடிந்தாலும் கவலையில்லை என்கிற அளவிற்கு நீங்கள் ஆனந்தப்பட்டீர்களோ, அந்தப் பணிகள் முடியவில்லை என்பதைத்தான் அவர் எடுத்துச் சொல்கிறார்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதும் சொல்கிறேன். நான் அன்றைக்குச் சொன்னது கே.பி. கெனாலிலிருந்து இந்தப் பணிகளைச் சுட்டிக்காட்டி நான் முதலில் சொன்னேன். கால்வாய் வெட்டுகிற பணி under Tunnel பணியெல்லாம் முடிந்து தண்ணீரைக் கொண்டுவந்து கொடுத்திருக்கிறோம், என்று நான் சொன்னேன். அதிலே மாறுபட்ட கருத்து அல்ல. அதையே இப்போதும் சொல்கிறேன். அதைத்தான் அவர் சொல்கிறார். 120-லே beginning. கண்டலேறு முதல் பூண்டி கெனால் வரை இருக்கிற அந்த டைலேஜ்தான் 122 கெனாலில் இருக்கலாம். ஆகையினாலே, எது எப்படியிருந்தாலும், நான் அங்கே பேசிய பேச்சு, அத்தோடு போயிருக்கும். இன்றைக்கு மீண்டும் அதை இந்த மன்றத்திலே record பண்ணியிருக்கிறார். அதற்கு மாண்புமிகு நிதியமைச்சருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 6-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கும் ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறீர்களா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்காலிகமாக கிருஷ்ணா தண்ணீர் கண்டலேறு பகுதிக்கு 3 இலட்சம் ஏக்கர் விவசாயப் பணிக்காக வருகின்ற நீர், கிருஷ்ணா நீர் மட்டுமல்ல, பெண்ணாற்றுத் தண்ணீரும் அங்கே வருகிறது. தண்ணீர் வந்தது, கண்டலேறுவிலிருந்து. (குறுக்கீடு) நான் சொல்கிறேன். (குறுக்கீடு) நான் சொல்லி முடிக்கின்றேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I am not yielding



விட்டிருக்கிறீர்கள். வாழ்நாளே முடிந்துவிட்டது என்றுகூடக் கூறியிருக்கிறீர்கள். திருமண நாளைவிட மகிழ்ச்சியான நாள் என்று உங்களுடைய தலைவர் சொல்லியிருக்கிறார். தற்காலிகமாகக் கொண்டுவந்த தண்ணீருக்கு, அப்படி நீங்கள் எண்ணியிருப்பீர்கள் என்றால், அதற்கு ஆனந்தக் கண்ணீர் விட்டிருக்க மாட்டீர்கள்...

**திரு. துரைமுருகன்:** தற்காலிகம் அல்ல.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அதற்கு ஆனந்தக் கண்ணீர் விட்டிருக்க மாட்டீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், அமைச்சர் அவர்கள் சொல்லி முடிக்கட்டும்.

**திரு. துரைமுருகன்:** வாழ்க்கையில் சில பேருக்கு அதிகமான வாய்ப்பு-

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** I am not yielding. (குறுக்கீடு) அவ்வளவுதான்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழ்க்கையிலே சில பேருக்கு சில சந்தர்ப்பங்களைத் தருகிறார்கள். அப்படி, ஒரு முதலமைச்சர் எனக்கு அந்தச் சந்தர்ப்பத்தைத் தந்தார். அதற்கு நன்றி தெரிவித்தேன். இப்பொழுதுகூட, உள்ளபடியே உங்களுக்கு

ஆண்டில் ரூ.5700 கோடி என்றும், ரூ.409 கோடி அதிக ஒதுக்கீட்டிற்கு திட்ட ஒப்புதல் பெறப்பட்டதாகவும், ஆனால் நடப்பு ஆண்டில் ரூ.5700 கோடியோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, ரூ.6040 கோடியில் வெறுமனே ரூ.340 கோடி மட்டுமே அதிகம் பெறப்பட்டது என்றும் கூறினார்கள். ஓர் ஆண்டிற்கான திட்ட அளவை நிர்ணயிப்பதற்கும், அதற்கு திட்டக் குழுவின் ஒப்புதலைப் பெறுவதற்கும் நிதி ஆதாரங்களைக் காண்பித்தாக வேண்டும். மாநிலத்தின் நிதி நிலைமையை மிக மோசமான நிலைக்கு கடந்த 5 ஆண்டுகாலத்தில் எடுத்துச் சென்றுவிட்ட நிலையில், கூடுதலாக எப்படி திட்ட ஒதுக்கீட்டிற்கு ஒப்புதல் பெற முடியும் என்ற நிலையை அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். முந்தைய அரசு திட்டக் குழுவிற்கு நிதியாதாரங்கள் எனக் காண்பித்தபடி, திட்டச் செலவினை மேற்கொள்ளத் தவறிவிட்டார்கள். நிதியாதாரங்களைத் திரட்டுவதற்கும் தவறிவிட்டார்கள். அதுமட்டுமல்ல, திட்டங்களை நிறைவேற்று வதற்குக்கூட கூடுதலாக கடன் வாங்கவேண்டிய ஓர் அவல நிலையையும் உருவாக்கிவிட்டார்கள். 2000-2001 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீட்டை நிர்ணயம் செய்ய முன்னாள் முதலமைச்சர் அவர்கள் தற்போதைய திட்டக் குழுத் துணைத் தலைவர் திரு. கே.சி. பந்த் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறபோது, மாநிலத்தினுடைய அதிகப்படியான கடன் நிலையைப் பற்றி திரு. கே.சி. பந்த் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். "The Deputy Chairman expressed his concern over the high level of borrowings and impressed upon the State Government, the dependence on borrowings may have to be reduced in view of the growing debt burden of the State Government" எனக் கூறியிருக்கிறார்கள். திட்டக் குழுவினுடைய ஒப்புதல் பெறுவதால் திட்டக் குழுவிடமிருந்து அதிக அளவிற்கு நமக்கு நிதி ஒவ்வொரு தடவையும் கிடைத்துவிடுகிறது என்ற பொருள் அல்ல. திட்டக் குழு ஒரு சிறு அளவிற்குத்தான் கூடுதலான நிதி உதவியைத் தர முடியும். ஆனால், 2000-2001 ஆவது ஆண்டில் மத்திய திட்டக் குழு அந்த Interim Budget-க்கு ஒரு கோடி ரூபாய் கூட கூடுதலாக அப்போது நிதி ஒதுக்கிவிடவில்லை. ஆனால், தற்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருந்த சில உன்னதத் திட்டங்களைப் பாராட்டி, குறிப்பாக கிராமத்திலேயிருக்கிற ஆதிதிராவிட பெண்கள், தொலைதூரப் பள்ளிகளுக்குச் செல்வதிலே அவர்கள் சந்திக்கின்ற இன்னல்களை, இடர்பாடுகளைப் போக்குவதற்கு, அந்தக் குழந்தைகளுக்கு சைக்கிள் வாங்கித் தரவேண்டும் என்பதற்காக புரட்சித் தலைவி அவர்கள் இட்ட ஆணையை அந்தக் குழு பாராட்டியது.



பிற்பகல் 6—20

அதைப்போலவே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட இளைஞர்களுக்கு, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு, அவர்கள் படிக்கின்ற பள்ளிகளுக்குக் கட்டட சீரமைப்பு செய்வது போன்ற பணிகளை அவர்கள் பாராட்டினார்கள். ஒரு விரைவு நடவடிக்கையாக துரித நடவடிக்கையாக, சென்னை குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைத்த முயற்சியைப் பாராட்டி, இதுகாறும் எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு ஒப்புக்கொண்ட தொகையைவிட 40 கோடி ரூபாய், கடந்த 5 ஆண்டு காலத்தில் ஒரு கோடி ரூபாய், ஒரு ஆண்டுகூடப் பெற்றதில்லை; புரட்சித் தலைவியின் சிறப்பான அணுகுமுறையைப் பாராட்டி அவர்கள் தந்தார்கள் என்பதனை (மேசையைத் தட்டும் ஒலி) நான் அவைக்கு எடுத்துக்கூற விழைகின்றேன்.

அதைப்போலவே, 8-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே ஒதுக்கப்பட்ட பணம், மொத்தம் 10,935 கோடி ரூபாய். அதிலே "Achievement in nominal terms and achievement in real terms" என்று சொல்வார்கள். அந்தப் பணம் ஒதுக்கப்பட்ட பிறகு, விலைவாசி உயர்வு ஆகியவற்றையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்த்தபோது, அந்தப் பணம் 5 ஆண்டுகாலத்தில் எந்த நிலையை அடைகிறது என்பதனைக் கணக்கிடுகின்ற அணுகுமுறை ஆகும். அப்படி அந்த அணுகுமுறையிலே, அந்த 10,935 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டபோது, அதிலே Achievement in real terms என்ற முறையில் இருந்தாலும் சரி, nominal terms என்ற முறையில் இருந்தாலும் சரி, கூடுதலாக ஒரு குறையும் ஏற்படாது, சரிசமமாக இருந்தது. அந்த இலக்கினை புரட்சித் தலைவி ஆட்சிக்காலத்திலே 1991-96-லே சிறந்த நிதி நிர்வாகத்தை மேற்கொண்ட காரணத்தினால் அதை அடைந்திருந்தார்கள். ஆனால், கடந்த 5 ஆண்டுகாலத்தில், அந்த 9 வது திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 25000 கோடி ரூபாய் தற்போது அவர்கள் எய்தி இருக்கின்ற சதவிகிதம் கிட்டத்தட்ட 89 சதவிகிதம் மட்டுமே அந்த இலக்கினை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். அதிலும்கூட, இன்னும் 5 ஆயிரம் கோடி ரூபாய் குறைவாக இருந்திருக்கிறது. அந்த அளவிற்கு அவர்கள் நிதி நிர்வாகத்தினைச் சரியாகச் செயல்படுத்தாத காரணத்தினால் ஒரு சிக்கல், சீர்கேடு நிதி நிர்வாகத்தில் ஏற்பட்டிருக்கிறது என்பதை அவைக்கு நான் சொல்ல விரும்புகிறேன். இதுகுறித்துகூட திரு. ஜஸ்வந்த்சிங் சின்ஹா அவர்கள், திட்டக் குழுவின் துணைத் தலைவர், மாநில அரசினுடைய நிதி ஆதாரங்கள் குறித்து கவலை தெரிவித்தார். அப்போது அவர் கூறியது; "The Deputy Chairman expressed concern over negative contribution of State Electricity Board and Road Transport Corporations

and advised the State Government to get the performance of the Public Sector Enterprises reviewed for taking corrective measures so as to reverse the trend" என, அதுகுறித்து அவர்கள் மேற்கொண்ட தவறான பொருளாதார அணுகுமுறைகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதைப்போலவே, மைய அரசைப் பொறுத்தவரைக்கும் மாநில அரசுக்கு ஒதுக்குகின்ற நிதி அவர்கள் செய்கின்ற உதவிகளைப் பொறுத்தவரைக்கும், 8 வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், 10,200 கோடி ரூபாயில் 5,300 கோடி ரூபாய் 52 சதவிகிதம் மைய அரசின் உதவியாகத் தரப்படும் என்று ஐந்தாண்டு திட்ட ஒதுக்கீடு நிர்ணயம் செய்யப்படும்போது முடிவு செய்யப்பட்டது. ஆனால், ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைந்தபோது, மொத்த செலவான ரூபாய் 14,490 கோடியில், மைய அரசினுடைய உதவி ரூபாய் 5290 கோடி, அதாவது 41.21 விழுக்காடாக இருந்தது. நடப்பு ஐந்தாண்டு காலத்தில் 1997–2002–ல் மொத்த திட்ட ஒதுக்கீடான ரூ.25 ஆயிரம் கோடியில் மைய அரசினுடைய பங்கு ரூ.9987.91 கோடியாக இருக்க வேண்டும். இது மொத்த ஒதுக்கீட்டில் 40 விழுக்காடு மட்டுமே. ஆனால், நமக்குக் கிடைத்திருக்கிற நிதியுதவி நடப்பு ஆண்டையும் சேர்த்து7,414 கோடியே 79 இலட்சம் ரூபாய் மட்டுமே. இந்த ஐந்தாண்டுத் திட்டம் முடிவடையும்போது, மைய அரசினுடைய நிதியுதவி 30%–ஐவிடக் குறைவாக இருக்கும் என்ற நிலை உருவாகியிருக்கிறது.

பிற்பகல் 6–25

நான் இதைச் சொல்வதற்குக் காரணம், முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதி அவர்கள், டாக்டர் இராஜமன்னார் தலைமையிலே மைய– மாநில உறவு ஆய்வுக் குழு அமைத்து, அந்த உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமென்று மைய அரசோடு அவ்வப்போது தொடர்புகொண்டு போராடிக் கொண்டுவந்த காலம் கடந்த காலம். தற்போது மைய அரசிலே நீங்கள் இடம் பெற்றிருக்கிறீர்கள். அப்படி இருந்தும்கூட, தற்போது இந்த நிதி ஒதுக்கீடு குறைகிறபோது, நீங்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை. இதற்காக நீங்கள் போராடவில்லை. போராடி மாநிலத்திற்கு அதிக நிதியைப் பெற்று மாநில மேம்பாட்டிற்காக, தமிழ் மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்வுக்காக, நிதியாதாரத்தை நமக்குக் கட்டாயம் மத்திய அரசு தந்தாக வேண்டுமென்ற நிலை நமக்கு இருக்கிறபோது, மைய அரசோடு நீங்கள் தேவையான அளவிற்குப் போராடி நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டீர்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



"You have got an opportunity to be a powerful force at the Centre, but your power should be utilised not to throw us out of power or not to create problems for the lawfully established, democratically established popular Government of our Chief Minister, but your duty should be to get more financial powers to the State" என்ற முறையிலே நீங்கள் செயல்படத் தவறிவிட்டீர்கள். மைய ஆட்சியிலே நீங்கள் இருந்தும், நீங்கள் மைய ஆட்சியிலே வைத்திருக்கிற அதிகாரத்தை, 4–1/2 கோடி தமிழகத்து மக்களுடைய ஏகோபித்த ஆதரவைப் பெற்று ஆட்சிப் பீடத்திற்கு வந்திருக்கிற புரட்சித் தலைவி அவர்களுக்குத் தொல்லை தரவேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்காகவே, மைய ஆட்சியிலே நீங்கள் அந்தப் பதவி சுகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்களேயொழிய, முதலமைச்சராக இருக்கிற புரட்சித் தலைவி அவர்கள் பல தொல்லைகளுக்கும், இன்னல்களுக்கும் உட்படுத்தப்பட வேண்டுமென்ற நிலையை உருவாக்குவதற்கு நீங்கள் அந்தப் பதவி சுகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்களேயொழிய, இந்த ஆட்சி, தமிழகத்திலே புரட்சித் தலைவி தலைமையிலே மலர்வதற்கு முன்னால், புரட்சித் தலைவி இந்த ஆட்சிக்கு வந்துவிடக்கூடாது, இரட்டை இலைச் சின்னத்தைக் காத்துவிடக்கூடாது, தமிழக ஏழை மக்களுக்கு வாழ்வளிக்கக்கூடாது என்ற நோக்கத்தோடு எப்படியும் புரட்சித் தலைவியை அரசியலைவிட்டே ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தோடு, பொய் வழக்குகளைப் போடுவதற்கு, நீதித் துறையிலே தலையிட முயற்சிப்பதற்கும், புரட்சித் தலைவியை அரசியலைவிட்டே அகற்றுவதற்கும், சொல்லொணாத் துன்பங்களையும், துயரங்களையும் தருவதற்கும் மைய அரசின் அதிகாரத்தை நீங்கள் பயன்படுத்தினீர்களேயொழிய தமிழகத்து மக்களுடைய நலனில் உங்களுக்கு அக்கறை இல்லை, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நாட்டினுடைய வளர்ச்சியிலே உங்களுக்கு அக்கறை இல்லை, மாநிலத்திற்கு அதிக Financial powers வேண்டும், பண அதிகாரம் வேண்டும் என்று வாதாடி, போராடி அந்தப் பதவியைக்கூட துச்சமென உதறித் தள்ளி, தமிழக மக்களைக் காப்பாற்றுவதுதான் தமிழினத் தலைவன் என்று சொல்லிக்கொண்டிருக்கிற உங்களுக்கு பொருத்தமாக இருந்திருக்கும் என்ற நிலைகூட இல்லாமல் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழினத் தலைவன் என்பதும், தமிழ்ச் சமுதாயத்திற்குப் பாடுபடுவது என்று சொல்வதெல்லாம் புரட்சித் தலைவியை ஒழிப்பதற்கும், Cement Cartel போன்ற சுயநல ஈடுபாடுகளுக்குப் பயன்படுத்துவதற்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மட்டுமே நீங்கள் உபயோகப்படுத்தினீர்களே அல்லாமல், தமிழகத்து மக்களை நீங்கள் வஞ்சித்துவிட்டீர்கள்; இன்னமும் வஞ்சித்து

வருகிறீர்கள் என்பதை இந்தப் பேரவையின் மூலமாக நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே, மைய அரசைப் பொறுத்தவரைக்கும் Customs Duty, Central Excise, Additional Central Excise, Corporate Tax, Income Tax–என்ற பிரிவுகளில் நாம், கிட்டத்தட்ட தமிழகத்திலிருந்து, இந்த மண்டலத்திலிருந்து 4,469 கோடி ரூபாயை மைய அரசுக்குத் தருகிறோம். ஆனால் தமிழகத்திற்கு, நமக்குக் கிடைத்திருக்கிற ஒட்டுமொத்த உதவித்தொகை 2,901 கோடி மட்டுமே. அதைப்போலவே, நிதிக் குழுவினுடைய பரிந்துரையின்படி 29.5% மட்டுமே, Central Pool, மாநில அரசுகளிடமிருந்து Corporate Tax மூலமாக மைய அரசுக்குச் செல்கிற நிதியிலிருந்து மாநில அரசுகளுக்கு மைய அரசு ஒதுக்குகின்ற பணம் வெறுமனே 29.5% தான். கிட்டத்தட்ட அந்த 70%–ஐ மத்திய அரசு தன்னுடைய செலவுக்கு வைத்துக்கொள்கிறது. அப்படி தன்னுடைய செலவுக்கு வைத்துக்கொண்டு, தாங்கள் நினைத்தவாறு ஒரு வரையறுக்கப்பட்ட சட்ட நிலைகள் இல்லாத காரணத்தால், சில மாநிலங்களை முன்னிலையான மாநிலங்கள் என்றும், தமக்கு வேண்டிய மாநிலங்களை பின்னடைவுக்கு உள்ளாகியிருக்கின்ற மாநிலங்கள் என்றும் சொல்லி, பின்னடைவுக்கு உள்ளாகியிருக்கின்ற மாநிலங்களுக்கு அதிக நிதியை ஒதுக்குகின்ற அணுகுமுறையை மத்திய அரசு கடைபிடித்து வருகிறது. இந்த நிலையினை மாற்றுவதற்கும் டெல்லியிலே இருக்கின்ற தி.மு.க. அமைச்சர்கள், உங்கள் ஆட்சி நடக்கிறது. இதற்கு நீங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இராஜமன்னார் கமிட்டியினுடைய பரிந்துரை இதுதான். சர்க்காரியா கமிஷனுடைய பரிந்துரையும் இதுதான்.

*பிற்பகல் 6–30*

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒவ்வொரு பிரச்சினைக்கும் நடவடிக்கை எடுக்கவில்லை, நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், ஏதோ மத்தியில் உள்ள தி.மு.க. அமைச்சர்கள் எல்லாம் கலெக்டர் போலவும், மற்ற அமைச்சர்களோ தாசில்தார் போலவும் நினைத்துக்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடாது. இந்தக் கருத்துக்கள் தமிழக அரசின் சார்பாக ஏற்கெனவே பிரதமருக்கும் வலியுறுத்தித் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது என்ற அளவுக்கு நான் அறிவேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கூறுவதெல்லாம் மத்திய அரசிலே பதவி



பெறுவதற்கு வாய்ப்பு இல்லாத காரணத்தாலே நாம் திராவிட நாடு என்ற கொள்கையை அந்தக் காலத்தில் வைத்திருந்தோம். பிறகு நாம் மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டும் என்ற கொள்கைக்கு வந்தோம். எப்படியும் போராடி, மாநிலத்திற்கு financial power, legislative power ஆகிய அதிகாரங்களை எல்லாம் பெறவேண்டும் என்பதுதான் நமது மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கை. அந்தக் கொள்கைதான் உங்கள் கொள்கை என்று நீங்களும் கடைபிடித்துக்கொண்டு வருகிறீர்கள். இதற்காகக் குரல் கொடுத்துக்கொண்டே இருந்தீர்கள், டெல்லியிலே பதவியைப் பெறுகிற காலம் வரை. டெல்லியிலே பதவியைப் பெற்றபிறகு, டெல்லியில் ஆட்சிப் பீடத்திற்கு வந்தபிறகு அண்ணாவின் கொள்கையை மறந்துவிட்டீர்களே. (மேசையைத் தட்டும் ஒலி) அங்கு சென்றபிறகு நீங்கள் புரட்சித் தலைவி அவர்களுடைய செல்வாக்கைக் குறைக்க, பழிவாங்க அந்தப் பதவியைப் பயன்படுத்துகிறீர்களே என்ற வேதனையைச் சொல்வதற்காகத்தான் இதை நான் எடுத்துச்சொல்கிறேன்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் சுருக்கமாகத்தான் சொல்ல விரும்புகிறேன். அண்ணா அவர்களுடைய கொள்கைதான் எங்களுடைய கொள்கை. அந்தக் கொள்கை அத்தனையையும் உடனே, மைய அரசாங்கத்திலே ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படையில் இந்தக் கூட்டணி அமையவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் அந்தக் கூட்டணியிலே பங்கு பெற்று இருக்கிறதே தவிர, திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கை திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத்தான். தெலுங்கு தேசக் கட்சிக் கொள்கை தெலுங்கு தேசக் கட்சிக்குத்தான். ஆகவே, முழு அளவுக்கு கூட்டணிக் கட்சிகளின் எல்லாக் கொள்கையையும் மத்திய அரசிலே உள்ளவர்கள் ஏற்றுக்கொண்ட அடிப்படையிலே இந்தக் கூட்டணி அமையவில்லை. இது. இந்த நாட்டிலே ஒரு stable Government வேண்டும் என்ற அடிப்படையிலே தொடங்கிய ஒன்று. அதேபோல சொல்வதாக இருந்தால், இன்றைக்கு இருக்கின்ற பி.ஜே.பி.யோடு, இன்றைய ஆளும் கட்சி உறவு வைத்திருந்ததும் வரலாற்றிலே உண்மை. ஆகவே, கட்சிகளிடையே பல வேறுபாடுகள் உள்ள பிரச்சினையில் ஒரு கருத்தை வலியுறுத்திப் போராடவில்லை என்று சொல்வது அர்த்தம் உள்ள வாதம் ஆகாது.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் மத்தியிலே ஐக்கிய முன்னணி ஆட்சியிலேயும் பங்கு வகித்தது. இப்பொழுது தேசிய முன்னணி ஆட்சியிலும் பங்கு வகிக்கிறது. ஐக்கிய முன்னணி ஆட்சியிலே

பொது வேலைத் திட்டம் ஒன்றை நாங்கள் வைத்திருந்தோம். எல்லோரும் சேர்ந்து எதையெல்லாம் வலியுறுத்தினார்களோ, பலவாறு ஏற்றுக்கொள்ள முடியாத பிரச்சினைகளையும் ஏற்றுக்கொண்டும், இன்னும் சொல்லப்போனால் கம்யூனிஸ்ட் கட்சிகள் பலமாக வலியுறுத்தி அதெல்லாம் சேர்க்கப்பட்டது. அதேபோல இப்பொழுது இருக்கிற தேசிய முன்னணியும்கூட, தேசிய ஜனநாயக அணியிலேகூட ஒரு Common Minimum Programme தயாரிக்கப்பட்டிருக்கிறது. பொது வேலைத் திட்டம் ஒன்றைத் தயாரித்திருக்கிறார்கள். ஏன், இதிலே எல்லாம் உங்களுடைய மாநில சுய ஆட்சிக் கொள்கைதான் எங்களுக்கு முக்கியமானது; அந்த மாநில சுய ஆட்சிக் கொள்கை இதிலே இடம்பெற வேண்டும், 356–ஐ நீக்க வேண்டும்; 311 கூடாது, 312 கூடாது, அகில இந்திய சர்வீஸ் என்றே இருக்கக்கூடாது; அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்கிற அதிகாரம் எங்களுக்கே இருக்க வேண்டுமென்று நீங்கள் கோரி வலியுறுத்தி அதைப் பெற்றிருக்கக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

*பிற்பகல் 6–35*

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் அந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டால், அவர்களுடைய கட்சி ஏற்றுக்கொண்டால், அதற்குப் பின்னர் அக்கொள்கையை எங்களால் வெற்றிபெறச் செய்ய முடியும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் என்ன சொல்ல வந்தார் என்றால், இன்றைக்கு தி.மு.க. மத்திய ஆளும் கூட்டணியிலே அங்கம் வகிக்கிறது. இன்றைக்கு தி.மு.க. என்ன சொன்னாலும் மத்தியிலே நடக்கிறது. இங்கே இருக்கின்ற ஆளுநரை வெளியே அனுப்புங்கள் என்றால் அனுப்புகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே இருக்கின்ற காவல் துறை அதிகாரிகளை டெல்லிக்கு அழையுங்கள் என்றால் அழைக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க. என்ன சொன்னாலும் இன்றைக்கு மத்தியிலே நடக்கிறது. அவர்களுக்கு அவ்வளவு செல்வாக்கு இருக்கின்றபோது, அந்தச் செல்வாக்கைப் பயன்படுத்தி, தமிழ்நாட்டிற்கு Customs Duty, Excise Duty–யிலிருந்து அதிகப் பங்கை வாங்கித் தரக் கூடாதா என்றுதான் நிதியமைச்சர் கேட்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சர் கேட்பதை நானும் ஆதரிக்கிறேன். திராவிட



முன்னேற்றக் கழகம் அதை ஆதரிப்பதிலே எந்தவகையிலும் மாறுபாடு கிடையாது. ஆனால் மத்தியிலே உள்ளவர்கள் தி.மு.க.விலே உள்ளவர்கள் சொல்வதைத்தான் கேட்கிறார்கள் என்று இங்கே முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அவர்களைக் கேட்டாலோ நாங்கள் சொல்வது எதையும் கேட்கவில்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே, இதிலே எது உண்மை என்பது எனக்குத் தெரியாது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய பத்திரிகையிலேயும், தொலைக்காட்சியிலேயும் கயவர்கள் என்று பட்டியல் போட்டிருக்கிறீர்கள். அந்த மனித மிருகங்கள் என்று சொல்லி ஒரு பட்டியல் போட்டிருக்கிறீர்கள். அந்த மனித மிருகங்களிலே நீங்கள் சுட்டிக்காட்டிய 3 பேரைத்தான் அவர்கள் இன்றையதினம் பணி மாற்றம் செய்ய வேண்டுமென்று, மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நீங்கள் சொல்வதை அவர்கள் கேட்கவில்லை என்று சொன்னால், நிச்சயமாக அதைச் செய்ய முடியாது. ஏனென்றால், 3 பேரையும் அந்த முறையிலே அவர்கள் கேட்கவே முடியாது. அதுதான் இன்றைய நிலைமை.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ் மாநில காங்கிரசினுடைய தலைவர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் இந்த அளவு இறங்கி ஒரு கருத்தைச் சொல்வார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஒரு பத்திரிகையிலே ஒவ்வோர் எழுத்தாளரும் ஒவ்வொரு வகையில் எழுதுகிறார்கள். யார் யார் எதை எழுதுகிறார்களோ, அதைப்பொறுத்து வெவ்வேறு விதமான நடை இடம்பெறுகிறது. அது வேறு. பத்திரிகையிலே வருகிற எல்லாச் செய்தியும் திராவிட முன்னேற்றக் கழக தலைமைக் கழகம் சார்பாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகிற செய்தியல்ல. அதைப்போலவே, சிலரைச் சிலர் கண்டிப்பதற்குச் சில சொற்களைப் பயன்படுத்துவார்கள். அதற்கெல்லாம் நாங்கள் பொறுப்பல்ல.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியர் அவர்கள் கூறியதற்கு ஒன்றை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். நான் சொன்னதெல்லாம், டெல்லியிலே நாம் ஆட்சிக்கு வருவோம் என்று அந்தக் காலத்தில் நாம் எண்ணவில்லை. தனி நாடு வேண்டும் என்று கோரிக்கை விடுத்த நாட்கள் ஒன்று. பிறகு மாநிலத்துக்கு அதிக அதிகாரம் வேண்டும், சுயாட்சி வேண்டுமென்ற கோரிக்கை பிற்காலக் கோரிக்கை. அந்த அடிப்படையில் அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும்; நமக்கு

அதிக அதிகாரங்கள் வரவேண்டும் என்ற ஆர்வத் துடிப்போடு, உணர்வுத் துடிப்போடு அண்ணா அவர்களுடைய கொள்கையை நாம் கடைபிடித்து வருகிறோம். அப்படி இருக்கின்றபோது அந்த எண்ணத்தை ஈடேற்றுவதற்கு ஒரு வாய்ப்பு வேண்டும். அந்த வாய்ப்பு எப்படிக் கிடைக்கும்? மைய ஆட்சியிலே இடம் பெறுகிறபோதுதான் அந்த வாய்ப்பு கிடைக்கும். அந்த அரிய வாய்ப்பு தற்போது உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. இந்த வாய்ப்பை நீங்கள் எதற்குப் பயன்படுத்த வேண்டும்? மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னது போல, ஆளுநரை மாற்றுவதற்கும், அதிகாரிகளை மாற்றுவதற்கும் பயன்படுத்துவதற்குப் பதிலாக, மாநிலத்துக்கு அதிகப்படியான பண அதிகாரம் வேண்டுமென்பதற்கு நாம் பயன்படுத்துவோமேயானால் நமது மாநிலத்திற்கு சுபிட்சம் கிடைக்கும். அதிக பொருளாதாரம் கிடைக்கும்.

Ours is a developed State along with Maharashtra and Gujarat when compared with all other States. தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும், our contribution to the Central Government, Central Pool, is very high. ஆனால், வளராத மாநிலங்கள் என்று சொல்லி, பீகாரை, ஒரிஸ்ஸாவை, மத்தியப் பிரதேசத்தை, இராஜஸ்தானை, உத்திரப் பிரதேசத்தை வளரா மாநிலங்கள்–underdeveloped States—என்ற நிலையிலே பன்னெடும் ஆண்டுகளாக வைத்துக்கொண்டு, வளர்ந்த மாநிலங்களுடைய வருவாயை எடுத்து அவர்களுக்கு ஒதுக்கித் தருவதும், தமிழகம் போன்ற மாநிலங்களையெல்லாம் புறக்கணிப்பதும், நமக்குப் போதிய நிதி ஆதாரத்தைத் தராமல், பண அதிகாரத்தை மைய அரசு தன் கையிலே குவித்து வைத்திருப்பதும், தமிழக மக்களுக்கு மைய அரசு இழைக்கின்ற தீங்கு. அந்தத் தீங்கிற்கு நீங்களும் ஏன் உடந்தையாக இருக்கிறீர்கள்? நீங்கள் அதற்காகப் போராட வேண்டாமா என்பதற்காகத்தான் அதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் கவனத்திற்கு மற்றும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.. இது ஒரு முக்கியமான பிரச்சினை. இதை நீங்கள் சாதாரணமாக எடுக்க வேண்டாம் என்பதற்காகச் சொல்கிறேன். இந்த வாய்ப்பைவிட்டால் நீங்கள் அண்ணாவின் கொள்கையை, சத்தான கொள்கையைக் கடைப்பிடிக்கின்ற தீவிரவாதிகள் என்று சொல்லிக்கொண்டிருக்கின்ற காரணத்தால், இதைவிட ஒரு அரிய வாய்ப்பு மீண்டும் உங்களுக்குக் கிட்டாது. மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டுமென்ற நோக்கோடு அதற்காக போராடுவோம். ஒன்று, மாநிலத்திற்கு பண அதிகாரத்தை அதிகமாகத் தந்து நிதியை ஒதுக்கித் தாருங்கள். இல்லையென்றால், நாங்கள் ராஜினாமா செய்வோம் என்று சொல்லி நீங்கள் ராஜினாமா



செய்ய வேண்டும். அப்போதுதான் அண்ணாவின் கொள்கையை நீங்கள் கடைப்பிடித்தவர்களாக இருப்பீர்கள் என்பதற்கு இதை நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 6–40

பத்தாவது நிதிக் குழுவுடன் ஒப்பிடுகையில் பதினோராவது நிதிக் குழு தமிழ்நாட்டிற்கான மைய வரியின் பங்கினை 6.637 விழுக்காட்டிலிருந்து 5.38 விழுக்காடாகக் குறைக்கப் பரிந்துரைத்துள்ளது. இதுவும் அதிலே ஒன்று. இதை முக்கியமாக எல்லோரும் கவனிக்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். மைய அரசினுடைய இந்த அணுகுமுறையை மாற்றுவதற்கு வேண்டிய ஆக்கப் பணிகளிலே நீங்கள் ஈடுபடவேண்டும் என்பதற்காக இதை எடுத்துச் சொல்கிறேன். இதன் விளைவாக, வரும் 5 ஆண்டு காலத்திற்கு மட்டும் தமிழகத்திற்கு மைய அரசு குறைத்து இருக்கின்ற தொகை 2,941 கோடி ரூபாய். அதை நாம் இழக்க வேண்டிய நிலையை உருவாக்கி இருக்கிறார்கள். நாம் அந்தப் பணத்தை இழக்கிறோம். Small scale industries, Cottage industries, Large-scale, Medium scale என்று industries–ஐ வைத்து அதிகப்படியான Corporate Tax, Income Tax–ஐ மைய அரசுக்கு நாம் கொடுத்தும்கூட, வளம் படைத்த, நீர்வளம் படைத்த கங்கை நதி போன்ற நதிகளினுடைய வளம் படைத்த பீகாருக்கும், உத்திரப் பிரதேசத்துக்கும், மத்தியப் பிரதேசத்துக்கும், ஒரிசாவுக்கும் அந்தப் பணத்தை அதிகமாக ஒதுக்குகிறார்களே, அதற்குக் குரல் கொடுக்கின்ற ஆக்கப் பணிகளிலே நீங்கள் டில்லியிலே இருக்க வேண்டுமேயொழிய, எங்களுக்குத் தொல்லை கொடுக்கின்ற, சட்டத்திற்கு மாறான பணிகளில், நீதிதேவதையினுடைய அந்தப் பார்வைக்கு மாறான பணிகளில், புரட்சித் தலைவிக்குத் தொல்லைகள் கொடுக்கின்ற பணிகளில் நீங்கள் ஈடுபட்டுக் கொண்டிருப்பது தமிழகத்துக்கு நல்லதல்ல. தமிழ்ச் சமுதாயத்திற்கு நீங்கள் இழைக்கின்ற நன்மை என்ன (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்காக இதை நான் சொல்கிறேன்.

மைய–மாநில நிதிப் பகிர்வினைத் தீர்மானிக்கும் 10–வது நிதிக் குழு மற்றும் 11–வது நிதிக் குழு பல அளவுகோள்களைக் கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறது. ஒன்று, population–மக்கள் தொகை. இரண்டாவது, per–capita income–தனிநபர் வருமானம். இன்னொன்று Area–பரப்பளவு, இன்னொன்று infrastructure–கட்டமைப்பு வசதியினுடைய அளவு, அடுத்து Tax efforts–வரி வசூலிலே நாம் காட்டுகிற முயற்சிகள், அடுத்தது fiscal discipline. நிதிநிலை பற்றிய ஆக்கப்பூர்வமான அணுகுமுறைகள் என்று

இவற்றை 11–வது நிதிக் குழு வகுத்திருக்கிறது. தமிழகத்துக்கு பாதகமான, புறம்பான முறையிலே இந்த ஒரு வரையறையை உங்களுடைய ஆட்சி, டில்லியிலே இருக்கிற உங்களுடைய மைய ஆட்சி தற்போது வகுத்து இருக்கிறது. Population அடிப்படையில் பார்த்தாலுங்கூட, மக்கள் தொகையைக் குறைக்கின்ற ஆக்கப் பணிகளில் ஈடுபட்டு வருகிற தமிழகத்திற்கு இது பெரும் இழப்பை தருகிறது. அதன் மூலமாக நிதி குறைக்கப்படுகிறது. per–capita income என்ற முறையிலேகூட, தமிழகத்திலே இருக்கிற Ford, Hyundai போன்ற பெரும் தொழிற்சாலைகளைக் கணக்கிட்டு per capita income is being decided by a wrong footing. அவர்கள் எப்படி நிர்ணயிக்கிறார்கள்? தமிழகத்தினுடைய ஒட்டுமொத்த corporate tax income என்ன என்று பார்க்கிறார்கள். Ford மூலமாக வருகிற corporate tax income, Hyundai மூலமாக வருகிற corporate tax income, அதேபோல இருக்கிற Corporate companies, Limited Companies, Holding companies, Public Limited Companies மூலம் வருகிற அந்த corporate income ஒட்டுமொத்தத்தையும் எடுத்து தமிழகத்திலே இருக்கிற அத்தனை மக்கள் தலையிலும் வகுத்து, பட்டினி கிடக்கின்ற மக்கள் தலையிலும் வகுத்து below poverty line – ல் இருக்கின்ற கிட்டத்தட்ட 30 சதவிகித மக்கள் தலையிலே வகுத்து, நம்மை per–capita income–லே, வளர்ந்துவிட்ட மாநிலம் என்று நம்மைச் சொல்லி, நமக்கு அதன்காரணமாக, நீங்கள் வளர்ந்துவிட்ட மாநிலம்; நாம் இப்படி இருக்கின்ற காரணத்தாலோ என்னவோ, பீகார் போன்ற மாநிலங்கள் எல்லாம் they are not at all interested in starting large–scale, medium scale, bigger industries which would give corporate revenue. Corporate revenue கொடுக்கின்ற தொழிற்சாலைகளை அவர்கள் தொடங்கவில்லை. நாம் தொடங்கி முன்னேறிய மாநிலம் என்று இருக்கிறோம். நமக்குத் தண்டனை தருகிறார்கள். அதிலும் நிதியை நமக்குக் குறைத்து விடுகிறார்கள். Area–பரப்பளவை கணக்கிலே எடுக்கிறார்கள். தமிழகம் பரப்பளவிலே சிறியது. அதன்மூலம் நமக்கு வரக்கூடிய நிதி வராத ஒரு நிலை உருவாகிவிட்டது. Infrastructure–அடிப்படை வசதிகள் அதிகமாக செய்து இருக்கிற மாநிலத்திற்கு அவர்கள் நிதி உதவி அதிகம் தருவதில்லை. அந்த அடிப்படையிலும் முன்னேறிய மாநிலம் என்று நம்மை பாதிப்புக்குள்ளாக்கி இருக்கிறார்கள். Tax collection நன்றாகச் செய்கிறோம் என்ற நிலை இருந்தாலும்கூட அதற்காகக் கொடுத்திருந்த விழுக்காடு, விகிதாச்சாரம் 10–லிருந்து 5–ஆகக் குறைத்து, அதிலும் தமிழகத்தின் தலையிலே கையை வைத்து விட்டார்கள். இப்படிப்பட்ட தவறான, தமிழகத்தினுடைய நலனுக்குப் புறம்பான அணுகுமுறைகளை, நிதி ஒதுக்கீட்டினை மைய அரசு கையாளுகிறபோது அதற்கு குரல் கொடுப்பது உங்களுடைய கடமை.



அந்த ஆட்சியினுடைய அங்கமாக நீங்கள் இருக்கிறீர்கள். இந்தத் தீங்கு தமிழகத்திற்கு இழைக்கப்பட்டிருக்கிறது. தமிழக மக்களுக்கு இழைக்கப்பட்டு இருக்கிறது. தமிழ்த் தாய்க்கு இழைக்கப்பட்டிருக்கிறது. அந்தத் துரோகத்தை மைய அரசு செய்திருக்கிறது. மைய அரசிலே நீங்கள் அங்கம் வகிக்கிறீர்கள். அந்தத் துரோகத்தில் உங்களுக்கும் பங்கு உண்டு என்பதனை இந்த அவைக் [illegible]லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 6–45*

அதைப் போலவே, இந்தியக் [illegible]ய்வுத் தணிக்கைக் குழுக்கள் கடந்த ஐந்தாண்டு காலத்தில் நிதி நிர்வாக முறையிலே தவறுகள் எப்படி செய்திருக்கிறார்கள் என்பதற்குப் பலவற்றைக் கூறியிருக்கிறார்கள். ஒரு சிலவற்றை மட்டும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

"Government's failure to furnish enrolment data to Government of India while implementing the scheme for nutritional support to primary education, resulting in foregoing central assistance to the tune of Rs.27.99 crores during 1997" என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

"Sub–stations constructed at a cost of Rs.39 crores remain idle in Tamil Nadu Electricity Board, because of lack of synchronisation in establishment of sub–stations and associated transmission lines" என்ற குறைபாட்டைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். "Delays in completion of sub–stations and associated lines resulted in cost over–run of Rs.51 crores besides loss of anticipated benefit of 863 million units to the value of Rs.49 crores by way of reduction in line loss and additional sale of power" என்றும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதைப் போலவே, "In respect of Tamil Nadu Forest Plantation Corporation Limited, the shortfall in yield of cashew was 20149 matric tonnes resulting in loss of Rs.56.81 crores, due to poor plantation management" என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

இதையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம், இதுபோன்ற பல ஆதாரங்களைக் கடந்த ஐந்தாண்டு காலத்திலே பணம் ஒதுக்கிவிட்டு திட்டம் எப்படி நடைபெறுகிறது என்பதை ஆட்சிப் பீடத்திலே இருக்கிறவர்கள் கண்காணிக்க வேண்டும். அதிகாரிகளை நம்பி மட்டும் நிர்வாகம் நடைபெறுகிறபோது, அரசியல் மூலமாக வருகிற ஆட்சியாளர்களுக்கு அரசு எந்திரத்தில் வேலை இல்லாமல்

போய்விடுகிறது. தவறுகள் நடக்கக்கூடாது, விரைவிலே பணிகள் நடக்க வேண்டும், குறைபாடுகள் இருக்கக்கூடாது என்ற கண்காணிப்பு மேற்கொள்ளப்படாத காரணத்தாலும், முறைகேடுகளுக்கும், குறைபாடுகளுக்கும், கடந்த கால ஆட்சியினுடைய அணுகுமுறை உறுதுணையாக இருந்த காரணத்தாலும் இதுபோன்ற பல்வேறு தவறுகள் நடந்திருப்பதை சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதைப்போலவே, 'வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் உதவியுடன் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் தற்போது தீவிர திட்டங்களை மேற்கொண்டிருக்கிறார்கள். இராமநாதபுரம் குடிநீர்த் திட்டம், ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம், தரிசு நில மேம்பாடுத் திட்டம் போன்ற பெரும் திட்டங்களுக்கு வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் உதவியை நாடுவோம்' என்று ஏற்கெனவே நிதி நிலை அறிக்கையிலே நாங்கள் சொல்லியிருக்கிறோம். தற்போது வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் உதவியுடன் தமிழகத்தில் செயல்படுத்தப்படுகின்ற 14 திட்டங்களில் 8 திட்டங்கள், 1991-96 காலகட்டத்தில் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே தொடங்கப்பட்ட திட்டங்கள். அந்தத் திட்டங்களைத் தொடர்ந்து செவ்வனே விரைவில் முடிப்பதற்கு ஆக்க நடவடிக்கைகளை எடுப்போம் என்ற உறுதியினை அவைக்கு நான் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போலவே இன்னும் ஒன்றுகூட, கடந்த ஐந்தாண்டு காலத்தில் தவறான பொருளாதார அணுகுமுறை மேற்கொள்ளப்பட்ட காரணத்தால் external aid என்று சொல்லக்கூடிய வெளிநாட்டு நிதி நிறுவனங்களுடைய உதவி தமிழகத்திற்குக் கிட்டாத ஒரு துரதிருஷ்டமான அவல நிலை ஏற்பட்டுவிட்டது. ஆனால், செவ்வனே நிதி நிலையைக் கடைப்பிடித்த அண்டை மாநிலங்களான கர்நாடகம், ஆந்திரம் போன்ற மாநிலங்கள்-கர்நாடக மாநிலம் கிட்டத்தட்ட 3 ஆயிரம் கோடி ரூபாயை வெளிநாட்டு உதவியாக வளர்ச்சித் திட்டங்களுக்கு பெற்றது. 7 ஆயிரம் கோடி ரூபாயை அண்டை மாநிலமான ஆந்திர மாநிலம் பெற்றது என்பதனை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 6-50

கிராமப்புற மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களின் மூலமாக நிதிநிலை அறிக்கையில் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யவில்லை என்ற குற்றச்சாட்டைச் சிலர் சொன்னார்கள். ஆனால், பல பத்திரிகைகள், பல மாண்புமிகு உறுப்பினர்கள் அதிகப்படியான நிதி ஒதுக்கீடு



செய்யப்பட்டிருக்கிறது என்று பாராட்டினார்கள். இந்த நிதிநிலை
அறிக்கையிலே குடிநீர்த் திட்டங்களுக்காகவும், பெண்களுக்கான கழிப்பிட
வசதிக்காகவும், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டம் என்ற
முறையிலும், பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களுக்காகவும்,
மீனவர்களுக்காகவும் நீர்ப்பாசனத் திட்டங்களுக்காகவும், கிராமப்புறத்திலே
இருக்கின்ற கிராம நிர்வாக அலுவலர்களுக்காகவும், அண்ணா
மறுமலர்ச்சித் திட்டத்திற்காகவும், தன்னிறைவுத் திட்டத்திற்காகவும்,
கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்திற்காகவும் மட்டுமே 2146 கோடி
ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் சொல்ல விழைகிறேன்.

நான் ஏற்கெனவே சொல்லியவாறு, கடந்த கால ஆட்சியிலே ஒரு
திட்டத்தைத் திட்டிய பிறகு, அந்தத் திட்டம் செவ்வனே நடைபெறுகிறதா,
ஒரு ஆண்டு காலம் அல்லது ஒன்றரை ஆண்டு காலம் ஆன பிறகு 100
கோடி, 200 கோடி ரூபாய்க்கு நிதி ஒதுக்கீடு செய்துவிட்டபிறகு cost
escalation என்ற முறையிலே அணுகுகிறார்களா, திட்டம் எத்தனை
சதவிகிதம் ஈடேற்றப்பட்டிருக்கிறது. திட்டப் பணிகளில் செம்மை
கையாளப்படுகிறதா, என்பதையெல்லாம் ஆய்வு செய்ய வேண்டும்.
அத்தகைய ஆய்வு செய்த பிறகுதான் escalation என்ற முறையிலே 10
சதவிகிதம் escalation என்று வந்தால், அந்த ஆய்வினை நடத்தி ஒரு புதிய
திட்டம்போல் அந்தத் திட்டத்தை மேற்கொண்டு, ஜீரோ பட்ஜெட்டிங்
என்று சொல்வார்கள், அந்த அடிப்படையில் பிரச்சினைகளை அணுகி
இருக்க வேண்டும். கடந்த கால ஆட்சியிலே அதை அணுகாத
காரணத்தால் திட்ட ஒதுக்கீடுகள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு
வீண் விரயங்களாக ஆன ஒரு அவல நிலை உருவாகியிருக்கிறது. அதை
மாற்றுவதற்காக முதன்முறையாக தமிழகத்திலே நமது டாக்டர் புரட்சித்
தலைவி அவர்கள் நிதி ஒதுக்கீடு எதுவாக இருந்தாலும், ஜீரோ பட்ஜெட்டிங்
என்ற முறையிலே அந்தத் திட்டத்தினுடைய தேவை என்ன, தொடர்
திட்டமாக இருந்தால் அந்தத் திட்டம் நீடிக்க வேண்டுமா, அதனால்
பலன் கிட்டுமா, இன்வெஸ்ட்மெண்ட்டிற்கு ஏற்ற திட்டம் கிடைக்குமா,
மக்களுக்குப் பலன் கிடைக்குமா என்பதை ஒவ்வொரு காலகட்டத்திலும்
ஆய்ந்து, cost escalation ஆகாத முறையிலேயும், திட்டச் செலவு வீணாகாத
முறையிலும் திட்டங்களை ஈடேற்றுவதற்கு நாம் நடவடிக்கைகளை
எடுப்பதற்காக தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித்
தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள்.

தற்போது நான் வரி விதிப்பைப் பற்றிச் சொல்ல விழைகிறேன்.
வரிவிதிப்பைப். பொறுத்தவரைக்கும், நாம் தற்போது விதித்திருக்கின்ற

வரி அதிகப்படியாக 135 கோடி ரூபாய்க்கு புதிய வரிகள் என நாம் இந்தச் சட்டப் பேரவையிலே அறிவித்திருக்கிறோம். இது மிகவும் குறைந்த ஒன்று. தவிர்க்க முடியாத ஒன்று என்பதையும், வெள்ளை அறிக்கையிலே படித்த மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் உணர்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இதற்குக்கூட காரணம் இந்த 135 கோடி ரூபாய் வரி விதிப்பு ஏனென்ற வினாவைப் பலர் எழுப்பினார்கள். Uniform Floor Rates என்ற, V.A.T. என்ற அந்த வரிச் சீரமைப்பு முறைகளைக் கட்டாயமாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று உங்கள் மைய அரசுதான் ஆணையிட்டிருக்கிறது. மைய அரசு அப்படி ஆணையிட்டு விட்ட காரணத்தால், Uniform Floor Rates–ஐ மாற்ற முடியாத நிலையிலே நாம் இருக்கிறோம். 40 இனங்களுக்கான வரி விதிப்பு விகிதங்களை உங்கள் ஆட்சிக் காலத்திலேயே, அந்த Uniform Floor Rates–ஐ நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள். சமச்சீர் வரியிலிருந்து விடுபட்ட எஞ்சிய இனங்களை 5.1.2001–ல் டெல்லியிலே நடந்த, மாநில முதலமைச்சர்களுடைய அந்த மாநாட்டில் நிதி அமைச்சர் அவர்கள் தீர்க்கமாக ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள், தற்போது ஒரு தாக்கீதுகூட அனுப்பி இருக்கிறார்கள், 31–7–2001–க்குள் சமச்சீர் வரியை அமல்படுத்த வேண்டும் என்றும், 1–4–2002 முதல் மதிப்பு கூட்டு வரி விதிப்பு முறையை i.e. V.A.T. (Value Added Tax) அமல்படுத்த வேண்டும் என்றும், எடுக்கப்பட்ட முடிவை மாநில அரசுகள் கட்டாயம் ஈடேற்றவேண்டும் என்றும் ஆணித்தரமான ஓர் உத்தரவை அனுப்பியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் தற்போது ஓர் அஞ்சலைக்கூட, ஒரு தாக்கீதைக்கூட மாநில அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்தத் தாக்கீதிலே அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

*பிற்பகல் 6–55*

"I have been asked to advise you that in case there is continued deviation, the Empowered Committee would be constrained to recommend to the Government of India that your State would not be entitled to any Central Plan Assistance or any other assistance from the Central Government, i.e. from 1st September, 2001. In case, no reply is received, it would be presumed that you are still deviating from the scheme and you would be open to action as mentioned above. This may be treated as most urgent" என்று தற்போது டெல்லியிலிருந்து தாக்கீது வந்திருக்கிறது. சமச்சீர் வரியை உங்கள் மைய அரசிலே அவர்கள் ஏற்றுக்கொண்டு மாநிலங்களுக்குத் தாக்கீது தந்திருக்கிறார்கள். நீங்களும் அதிலே அங்கம் வகிக்கிறீர்கள். ஏன் இந்த வரி என்று மாண்புமிகு



உறுப்பினர்கள் பேசுகிறபோது கேட்டார்கள். மாண்புமிகு பேராசிரியர் அவர்களை நான் சொல்லவில்லை. பிறர் பேசுகிறபோது கேட்டார்கள். இதுதான் அதற்கு விளக்கம். மைய அரசு ஒரு கண்டிப்பான உத்தரவை, அந்தக் குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் Uniform Floor Rates–ஐ நடைமுறைப்படுத்தாவிட்டால் மாநில அரசுக்கு, தமிழக அரசுக்குத் தரவேண்டிய நிதியைத் தரமாட்டோம் என்று சொல்லிவிட்ட காரணத்தால், இந்தக் குறைந்தபட்ச வரிச்சுமையை, நாங்கள் விரும்பாத நிலையிலும் மக்கள்மீது, மைய அரசினுடைய ஆணையால் போட வேண்டிய ஒரு சூழ்நிலை வந்திருக்கிறது என்பதை மட்டும் சொல்லிக்கொள்கிறேன்.

இதிலே ஒன்றை மட்டும் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். மைய அரசு வரி விதிப்புக்கு உள்ளாக்கியிருக்கிறது; நாங்கள் அந்த வரி விதிப்பைக் கொண்டுவரவேண்டும் என்றில்லை. மைய அரசு 4% வரியை எது எதற்குப் போட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள் என்றால், அது வறுகடலை. ஏழைகள் உண்ணுகின்ற வறுகடலைக்கு, அந்த வரியைப் போட வேண்டும் என்று கட்டாயப்படுத்தியிருக்கிறார்கள். அதனால், அது சேர்க்கப்பட்டது. கோழித் தீவனத்திற்கான செறிவூட்டும் பொருட்களுக்கும் அந்த வரியைப் போட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். கோழித் தீவனத்திற்கு அந்த வரியைப் போடுகின்றபோது, கோழி முட்டையினுடைய விலை உயர்ந்துவிட வாய்ப்பு இருக்கிறது. வறுகடலையைப் பொறுத்தவரை, பெட்டிக் கடைகளில் வாங்கி உண்ணுகிற ஒரு ஏழை மக்கள் எல்லாம் பொருளாக இருக்கிற காரணத்தினால், அந்த இரண்டு பொருட்களுக்கும் தற்போதைக்கு அந்த வரி விதிப்பு அறிவிப்பை நாங்கள் நிறுத்தி வைக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) temporarily we have stopped. அவ்வளவுதான்....

**பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுப் பேசிய சமச்சீர் வரி விதிப்பு என்பது, எல்லா மாநிலங்களிலேயும் பின்பற்றுவதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கை. நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டாயம் மத்திய அரசுக்கு ஏற்பட்டுவிட்டது. இன்னும் சொல்லப்போனால், மத்திய அரசு, மாநில அரசுகளினுடைய பிரதிநிதிகளை அழைத்து ஏற்கெனவே நடத்திய பல மாநாடுகளில் மாநில அமைச்சர்கள் அந்தக் கூட்டங்களில் பங்குகொண்டு விவாதித்து, நன்மையும், தீமையும்–advantage and disadvantage–எல்லா மாநிலங்களுக்கிடையிலும் சமமாக இருக்க வேண்டும் என்ற ஓர் அடிப்படையில் அந்தச் சமச்சீர் வரி என்பது ஒரு கொள்கையாக

ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதுதானே தவிர, மத்திய சர்க்கார், தனிப்பட்ட முறையில் இந்த வரியை விதிக்க வேண்டும், இந்த வரியை விதிக்கக்கூடாது என்று ஆணையிடுவதாக அந்த முறை வந்ததாக எங்களால் கருத முடியவில்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. எங்கேயும், எதிலேயும், இரட்டை வேடம் போடுகிறது என்பதற்கு இதுவும் ஒரு சான்று. (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய ஆட்சியிலே தி.மு.க.வும் இருக்கிறது. ஆகவே, அவர்கள் மத்திய ஆட்சியில் இருக்கிறார்கள். மத்திய அரசு, குறிப்பிட்ட பொருட்களை அட்டவணை போட்டு, இந்தப் பொருள்களுக்கு நீங்கள் வரி விதிப்பை விதிக்க வேண்டும், வரி விதிப்பைக் குறிப்பிட்ட சதவிகிதம் அதிகரிக்க வேண்டும் என்று ஆணையிடுகிறது. ஆக, மத்தியிலே தி.மு.க. குறிப்பிட்ட பொருள்களுக்கு வரி விதித்தாக வேண்டும் என்று ஆணையிட்டுவிட்டு, மாநிலத்திலே அதே தி.மு.க. 'நீங்கள் ஏன் அதிக வரி போடுகிறீர்கள்' என்று கேட்பதிலே என்ன நியாயம்? (மேசையைத் தட்டும் ஒலி)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்று. நான் ஏன் அந்த வரியைப் போடுகிறீர்கள் என்று தி.மு.க. சார்பாகக் கேட்கவில்லை. கேட்கவும் இல்லை, வலியுறுத்தவும் இல்லை. இரண்டாவது, இந்தச் சமச்சீர் வரி என்பது ஒரு கொள்கை. அந்தக் கொள்கை ஏற்கெனவே பல மாநிலங்களும் ஒப்புக்கொண்ட அடிப்படையில், ஏற்கப்பட்டது. ஆந்திராவிலே ஒரு வரி, தமிழ்நாட்டிலே ஒரு வரி, பாண்டிச்சேரியிலே ஒரு வரி என்று இருக்குமானால், சில மாநிலங்களுக்கு, சில வகையில் இழப்பு ஏற்படுகிறது என்ற முறையில், ஒரு கொள்கை முடிவாக எடுக்கப்பட்டு, பல மாநில முதலமைச்சர்களுடைய ஒப்புதலும் பெற்று, இந்தக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படுகிறது. இப்போதுகூட, பாண்டிச்சேரி அரசு அந்த சமச்சீர் வரியை எங்களால் நடைமுறைப்படுத்த முடியாது என்று சொல்லி, வாதிட்டுக் கொண்டிருப்பதாக நான் பத்திரிகைகளிலே பார்த்தேன். எனக்கு அதைப் பற்றிய விவரம் தெரியாது. இந்தச் சமச்சீர் வரி என்பது, equal tax in all States என்கிற ஒரு கொள்கையை ஏற்றிருப்பதாக நான் கருதுகிறேன்.

*பிற்பகல் 7—00*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Value Added Tax என்பதுதான் இறுதி வடிவம்.



அது 2002–லே நடைமுறைக்கு வந்தாக வேண்டும். அதற்கான அடிப்படை சமச்சீர் வரி என்பது Minimum tax என்ன Uniform Floor Rates, அந்தச் சமச்சீர் வரி is now being treated as the Uniform Floor Rate. இருக்க வேண்டும் என்று 4% is now being treated as the Uniform Floor Rate.

மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதைப் பொறுத்தவரைக்கும் மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்கு ஒரு விளக்கத்தை நான் சொல்ல விழைகிறேன். இது மாநிலங்களே மனமுவந்து ஏற்றுக்கொண்ட ஒன்றல்ல. இது தற்போதைய மைய அரசு, அதனுடைய நிதியமைச்சர், அவர் முடிவு செய்து மாநிலங்களினுடைய நிதியமைச்சர்களுடைய மாநாட்டைப் பல முறைகளில்கூட்டி, இந்தத் திட்டத்தை மாநிலங்களின்மீது திணிக்கின்ற முறையிலே அவர்கள் செயல்பட்டு வருகின்றார்கள். நாங்கள்கூட அண்மையிலே அங்கு சென்றிருந்தோம். இதிலே ஒரு பெரிய ஆபத்தும் இருக்கிறது. Value Added Tax system is said to be a failure in the United States. அமெரிக்க நாட்டிலேயே இது பல பாதிப்புக்கு உள்ளாக்கியிருக்கிறது என்று பல தகவல்கள், ஆதாரங்கள் தற்போது வந்திருக்கின்றன. வளர்ந்த மேநாடுகளில்கூட நடைமுறைப்படுத்தியபிறகு, இந்த Value Added Tax என்பது இறுதியிலே consumers–நுகர்வோர்களைத் தாக்குகிறது என்பது கண்டறியப்பட்டிருக்கிறது. மைய அரசினுடைய ஒரே நோக்கம் என்னவென்றால் Value Added Tax என்று வருகிறபோது, ஒரு பொருளுக்கு, இந்தப் பேனாவுக்கு பத்து ரூபாய் விலை, உற்பத்தி செய்கிற இடத்திலே இருக்கிறது என்றால், உற்பத்தி ஸ்தானத்திலிருந்து wholesaler–க்குச் செல்கிறது. State Stockist–க்குச் செல்கிறது. State Stockist–லிருந்து District wholesaler–க்குச் செல்கிறது. District wholesaler இடமிருந்து Retail Dealer–க்குச் செல்கிறது. அந்த ஒவ்வோர் இடத்திலும், அந்த manufacturer இடத்திலிருந்து State Distributor எடுக்கிறபோது, ஒரு பத்து சதவிகிதம், இருபது சதவிகிதம் அதற்கு கமிஷன் வருகிறது. அவரிடமிருந்து District Distributor–க்குப் போகிற நேரம் அவருக்கு ஒரு பத்து சதவிகிதம் commission வருகிறது. Retailer–க்குப் போகிற நேரத்தில், Retailer ஒரு 20 சதவிகிதம் லாபம் வைத்து விற்கிறார். இந்த லாபங்கள் எல்லாம், அந்த State Distributor–க்கு உள்ள 10 சதவிகிதத்துக்கும் income tax கிடையாது. கணக்குக்கு வருவதில்லை. இந்த District Distributor, Retailer எல்லோருடைய பணமும், overall sales tax turnover அதிகமாக வேண்டும் என்பது அவர்களுடைய நோக்கம். மாநிலத்தைப் பொறுத்தவரையில் ஓரளவிற்கு sales tax revenue will get increased to a certain extent. Tax compliance–sales tax–லே அதிகமாகிற நேரம் அதிகப்படியான லாபம், income tax benefit to the Central Government, அவர்களுடைய சுயநல நோக்கம் எல்லாம் income tax அதிகம் வர வேண்டும், பேனாவுக்கு எதற்காக,

உற்பத்தி செலவு ஒன்று, இந்த உற்பத்திச் செலவுக்கு மேல் மூன்று மட்டத்திலே இந்தப் பொருள் கைமாறுகிறபோது இதனுடைய விலை பலவாக உயர்ந்துவிடுகிறது. ஒவ்வொரு மட்டத்திலும் அதிகம் income tax மைய அரசுக்கு வர வேண்டுமென்ற ஒரே நோக்கோடுதான் மைய நிதி அமைச்சர், மைய அரசு, உங்களது அரசு தற்போது செயல்பட்டு வருகிறது. இதனால் பாதிப்பு யாருக்கு என்றால், இப்படி மூன்று மட்டத்திலும் அவர்கள் Tax போடுகிறபோது அந்த tax burden is eventually passed on to the consumer. நுகர்வோர்களுக்குப் போகிறது. இந்தப் பேனாவை வாங்குகிற அல்லது ஒரு பொருளை வாங்கி உண்ணுகிற மக்களுக்கு, வாங்குகிற மக்களுக்கு அந்த வரிச்சுமை செலுத்தப்பட்டு, VAT காரணமாக, இந்த Uniform Floor Rate–ஆக இருந்தாலும் சரி, இறுதியிலே வருகிற VAT–ஆக இருந்தாலும் சரி, அது விலைவாசியினை உயர்த்தி விடும், விலைவாசி உயர்வுக்கு வித்திட்டுவிடும் என்பதுதான் உண்மை. மாநிலங்களுக்கு விலைவாசி உயர்வால் பாதிப்பு ஏற்பட்டாலும் பரவாயில்லை, டில்லியிலே உட்கார்ந்து ஆட்சி புரிபவர்களுக்கு அந்தத் தாக்கீது பாதிப்பை உருவாக்காது என்ற எண்ணத்தோடு, இந்த Value Added Tax சிஸ்டத்தை அவர்கள் கட்டாயமாக்க வேண்டுமென்று எப்படியோ மாநிலங்களை வற்புறுத்திச் செய்துவிட்டார்கள். நீங்களும் அதற்கு உடந்தையாக இருக்கிறீர்கள். இதனுடைய பாதிப்பு கட்டாயமாக, 40 Item–களில் ஏற்கெனவே சமச்சீர் வரியைக் கொண்டு வந்தீர்கள். விலைவாசி உயர்வுக்கு நீங்கள் 40 Item–களுக்கு சமச்சீர் வரியை Uniform Floor Rate கொண்டு வந்ததும் ஒரு காரணம். விலைவாசி உயர்வுக்கு VAT implementation கட்டாயமாக ஒரு காரணமாக இருக்கும். இதற்கு மைய அரசு பொறுப்பு. மைய அரசிலே அங்கம் வகிக்கிற நீங்களும் பொறுப்பு எனக் கூறிக்கொள்கிறேன்.

*பிற்பகல் 7-05*

மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஏற்கெனவே கூறியதைப் போல, ஏழைகள், பாமர மக்கள் உண்ணுகிற அந்த வறுகடலைக்கு 4 சதவிகிதம் என உயர்த்தப்பட்டிருக்கிற வரி நீக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதைப் போலவே, கோழித் தீவன செறிவூட்டும் பொருள்களுக்கு 4 சதவிகிதமாக உயர்த்தப்பட்ட வரி நீக்கப்படுகிறது என்ற செய்தியினையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பல கோரிக்கைகளை அளித்துள்ளீர்கள். பல



அரிய ஆலோசனைகளையும் நல்கியுள்ளீர்கள். நிதி நிர்வாகத்துக்கு வேண்டிய ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் நல்கியிருக்கிறீர்கள். ஒவ்வொரு தொகுதிக்காகவும் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் உங்களுக்குள்ள குறைபாடுகளை, ஆண்டு பலவாகத் தீர்க்கப்படாத குறைபாடுகளை, கடந்த 5 ஆண்டு கால ஆட்சிக்காலத்தில் ஈடேற்றப்படாத குறைபாடுகளை, புரட்சித் தலைவியினுடைய ஆட்சி தீர்த்து வைக்க வேண்டும் என்ற கோரிக்கையைத் தந்திருக்கிறீர்கள். உங்களுடைய கோரிக்கைகளை எல்லாம் அரசு பரிவுடன் கட்டாயம் பரிசீலித்து, மக்களுக்குத் தொண்டாற்றுகிற பணியிலே நீங்கள் இருக்கிறீர்கள். தமிழக மக்களுடைய விடிவெள்ளியாக விளங்குகிற நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் வாக்களித்த மக்கள், வாக்களிக்காத மக்கள் என்ற பாகுபாடு இல்லாமல், வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற பாகுபாடு இல்லாமல் தமிழகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியே தமிழ்த் தாய் அகம் மகிழும் வளர்ச்சி, அந்த வளர்ச்சியினை எய்திடுவதே தனது நோக்கம் என்று தமிழகத்தினுடைய தாயாக விளங்குகிற புரட்சித் தலைவி, உங்களது கோரிக்கைகளை எல்லாம் பரிவுடன் பரிசீலிப்பார்கள். அதற்கான ஆக்க நடவடிக்கைகளை ஆய்ந்து எடுப்பார்கள் என நான் உறுதி அளிக்கின்றேன்.

அத்திக்கடவு குடிநீர்த் திட்டத்திலே ஒன்றை மட்டும் நான் சொல்ல விட்டுவிட்டேன். அவினாசி–அத்திக்கடவு திட்டம். அந்தக் குடிநீர்த் திட்டத்திலே கிட்டத்தட்ட 242 கோடி ரூபாய் செலவிலே அது பரிசிலனைக்கும் நடைமுறைக்கும் எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மற்ற உறுப்பினர்கள் கொடுத்த கோரிக்கைகள் எல்லாம் கட்டாயமாக புரட்சித் தலைவி அவர்களுடைய ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு, அவை பரிசீலிக்கப்பட்டு உங்களுக்குப் பரிகாரம் கிடைக்க ஆவன செய்யப்படும் என்ற உறுதியினைச் சொல்லி, இந்தப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையினை ஏற்குமாறு மாமன்ற உறுப்பினர்களைப் பணிவோடு கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலை[illegible] பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை மறுநாள் திங்கட்கிழமை (27-8-2001) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 7-07 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

# 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

*29.* *1999-2000* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் இருபத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

*30.* *1999-2000* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

*31.* *1999-2000* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் இருபத்து ஆறாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*23.* உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல். (முதல் பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 25 வரை)

---

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
223949
சென்னை-600 008
நூலகம்